# ராஜ திலகம்

சரித்திர நவீனம்

சாண்டில்யன்

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை – 17.


ராஜதிலகம்
சாண்டில்யன்


சாண்டில்யன்
ராஜ
திலகம்
வானதி பதிப்பகம்

# முன்னுரை

**'ராஜ திலகம்'** என்ற இந்த நூலை மிகுந்த பணிவுடனும் பெருமையுடனும் உலக மக்களின் பார்வைக்குச் சமர்ப்பிக்கிறேன். பணிவுக்குக் காரணம் இதன் உட்பொருள் மிகப் பெரிது என்பது. பெருமைக்குக் காரணம் தமிழர்கள் சிற்பத் திறமையை, கலையின் உயர்வை, என்னால்கூடச் சொல்லிவிட முடியும் என்ற துணிவு. ஏனென்றால் இந்த நூல் காஞ்சி கைலாச நாதர் கோவில், மாமல்லபுரத்துக் கடற்கரை அரங்கன் கோவில், இவ்விரண்டின் நிர்மாணத்தைப் பற்றியது; அவற்றில் பொதிந்து கிடக்கும் சிற்பச் செல்வத்தைப் பற்றியது; அவற்றை நிர்மாணித்த ராஜசிம்ம பல்லவன் என்ற ராஜ சிற்பியைப் பற்றியது; அவன் வாழ்விலும் சிற்பக்கலையிலும் கலந்து கொண்ட அவனது இரு ராணிகளான ரங்கபதாகாதேவியையும், மைவிழிச் செல்வியையும் பற்றியது. இந்த நூலுக்கு மகாகவியும் மகதாசார்யருமான தண்டியின் காவ்யாதர்சம் என்ற அலங்கார சாஸ்திரமும் அணி செய்கிறது.

ராஜதிலகத்தின் கதை ராஜசிம்மன் என்றழைக்கப்பட்ட இரண்டாவது நரசிம்மவர்மன் தந்தையான பரமேசுவரவர்மன் காலத்திலேயே துவங்குகிறது. பல்லவ சக்கரவர்த்தியான பரமேசுவரவர்மன் சாளுக்கிய வேந்தனான விக்கிரமாதித்தன் படையெடுப்பின் காரணமாகத் தனது தலைநகரான காஞ்சியை விட்டு ஓடிவிட்டதாகவும்; பிறகு விளிந்தை என்ற இடத்தில் சாளுக்கிய மன்னன் நண்பனும் கங்க மன்னனுமான பூவிக்கிரமனால் முறியடிக்கப்பட்டதாகவும், அங்கு தனது குலபூஷணமான உக்ரோதயம் என்ற மாணிக்கத்தைப் பூவிக்கிரமனிடம் பறி கொடுத்து விட்டதாகவும் வரலாறு கூறுகிறது. காஞ்சி மண்டலத்தைக் கைக்கொண்ட விக்கிரமாதித்த சத்யாச்ரயன் உறையூர் வரையில் தமிழகத்தை வெற்றி கொண்டானென்றும் ஆனால் பரமேசுவரவர்மன் ஆந்திர நாடு சென்று படை திரட்டி வந்து பெருவளநல்லூரில் விக்கிமாதித்தனை முறியடித்துச் சாளுக்கிய நாட்டுக்குத் துரத்தி விட்டானென்றும் வரலாற்றில் காணப்படுகிறது.

இந்த வரலாற்றுக் குறிப்புக்களைப் பின்னணியாகக் கொண்டு **ராஜதிலகம்** எழுதப்பட்டிருக்கிறது. பரமேசுவரவர்மன் புதல்வனான ராஜசிம்ம பல்லவன் சிற்பக் கலைத்திறனுக்கும், அவன் கைசாலநாதர் கோயிலையும் அரங்கன் கோயிலையும் கட்டியதற்கும், தந்தையின் போர்களில் பங்கு கொண்டதற்கும் சரித்திரச் சான்றுகள் நிரம்ப இருக்கின்றன. அவன் ஆசார்ய தண்டியின் சீடன் என்பதற்கும் கல்வெட்டு இருக்கிறது. கைலாசநாதர் கோவில் கல்வெட்டுகளில் அவனுக்கு இரண்டு ராணிகள் இருந்தார்களென்பதற்கும், அவர்களில் ஒருத்தியின் பெயர் ரங்க பதாகாதேவியென்றும் கண்டிருக்கிறது. இன்னொரு ராணியின் சிறப்புக் கூறப்பட்டிருந்தும் பெயர் அழிந்து விட்டது. அந்த ராணிக்கு மைவிழிச் செல்வி என்று நான் நாமகரணம் செய்திருக்கிறேன்.

ராஜசிம்ம பல்லவனுக்கும் சீனச் சக்கரவர்த்திக்கும் தொடர்பு இருந்ததையும் வரலாறு தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. அவன் 'பான்' இனத்தார் என்ற திபெத்தியர்களையும், அராபியர்களையும் வெற்றி கொண்டதாகவும் வரலாறு இருக்கிறது. அவற்றையும் இந்தக் கதையில் சேர்த்தால் இந்த நூல் இப்பொழுது இருப்பதைவிட இன்னும் பெரிய திண்டு ஆகிவிடுமென்ற காரணத்தால் எழுத வில்லை.

இந்த நூல் திடமான சரித்திர அஸ்திவாரத்தில் புனையப் பட்டிருக்கிறது. எல்லாவற்றுக்கும் அடிக்குறிப்புகள் ஆங்காங்கு தரப்பட்டிருக்கின்றன. சரித்திரத்தில் பிருமாண்டமான பாத்திரங் களான பரமேசுவரவர்மன், ராஜசிம்ம பல்லவன், ஆசார்ய தண்டி, ஸ்ரீராமபுண்யவல்லபர், விக்கிரமாதித்தன், பூவிக்கிரமன், ரங்காபதாகாதேவி, மைவிழிச் செல்வி (இந்தக் கடைசி பெயர் மட்டும் என் கற்பனை) ஆகியோர் உங்கள் முன்பு நிற்கிறார்கள். கற்பனைப் பாத்திரமான யாங்சின்னும் உங்களைக் கவர்ந்து நிற்கிறான் என்று சொன்னால் அது மிகையாகாது என்று நினைக்கிறேன். தவிர இன்னும் அழியாத வண்ணங்களை *1400* ஆண்டுகளாகத் தாங்கியுள்ள கைலாசநாதர் கோவிலும், கடலலைகள் ஒரு காலத்தில் காலை முத்தமிட்டுக் கொண்டிருந்த மாமல்லபுரம் அரங்கன் கோவிலும் உங்கள் கண்கள் முன்பு காட்சியளிக்கின்றன. இடையே ஊடுருவிச் செல்கிறது காதலும், போரும், ராஜதந்திரமும் நிறைந்த ஒரு கதை.

என் கதைகளில் எப்பொழுதும் உள்ள, ஆழ்ந்த படிப்பில்லாத வர்களுக்கு என்மீது வெளிக்கு வெறுப்பையும் உள்ளுக்கு உவகையும் அளிப்பதும், காவ்யம் படித்தவர்களுக்கு என்மீது மதிப்பையும் அளிப்பதுமான காதல் சுவை இந்த நூலிலும் இருக்கிறது. அந்தச்



சுவைக்கு மெருகு கூட்டுகிறது ஆசார்ய தண்டியின் காவ்யாதர்சம். ஒரு காவ்யம் எப்படியிருக்க வேண்டுமென்பதற்கு ஆசார்ய தண்டி காவ்யாதர்சத்தில் எந்தக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியிருக்கிறாரோ அதைச் சிறிதும் இந்தக் கதையில் மீறவில்லை. ஐயோ செக்ஸ் எழுதிவிடுகிறான் என்று சிலர் அழப்போகிறார்களே என்ற அச்சத்திற்காக அந்த ரஸத்தைச் சிறிதும் குறைக்கவும் இல்லை. 'ரஸராஜா' என்று அலங்காரசாஸ்திரம் குறிக்கும் ரஸத்தைக் குறைக்க நான் யார்?

ஆகவே அந்த ரஸத்தை எழுதுவதில் சிறிதும் தடங்கலில்லாமல் பேனாவை ஓட்டியிருக்கிறேன். என் கற்பனை போகுமளவுக்குத் தாராளமாக வர்ணனைகளையும் காதல் கட்டங்களையும் எழுதி யிருக்கிறேன். இன்னும் கொஞ்சம் அதிகமாக எழுத முடிய வில்லையே என்ற குறைதான் எனக்கு. ஆனால் சாஸ்திரம் இடங் கொடாததால் அளவை மீறவில்லை.

இந்த நூலில் வேதாந்தத்தின் பல பகுதிகளையும் ஆங்காங்க நிரம்பத் தந்திருக்கிறேன். அந்தக் காலப் போர் முறைகள், வியூகங்கள் இவையும் கூடிய வரை விவரிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தக் கதையை நீங்கள் ஏற்கனவே வாரா வாரம் 'குமுதத்'தில் படித்திருக்கிறீர்கள். இப்பொழுது 'வானதி'யின் உதவியால் முழு நூலாகப் படிக்கப் போகிறீர்கள். எனது புத்தகங்களைப் பதிப்பிப்பது அவ்வளவு எளிதல்ல. அவை பெரிய பெரிய புத்தகங்களாதலால் பணத்தை விழுங்குவதில் இணையற்றவை. அதற்கெல்லாம் சுணங்காது இந்தப் பெரிய நூல்களை அழகாக வெளியிட்டு வரும் 'வானதி' திருநாவுக்கரசு பாராட்டுக்குரியவர்.

இதைத் தொடர் கதையாக வெளியிட்ட 'குமுத' த்துக்கும், புத்தகமாக வெளியிட்டுள்ள 'வானதி'க்கும், என் நூல்களை விடாது பிடிவாதத்துடன் படித்து வரும் தமிழ் மக்களுக்கும் நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாண்டில்யன்

## BIBLIOGRAPHY


**Kavyadarsa**
-Acharya Dandin

**A History of South India**
-K.A. Nilakanta Sastry

**Foreign Notices of South India**
-K.A. Nilakanta Sastry

***பல்லவர் வரலாறு***
-Dr.M. Rajamanickanar

**History of Tamil Nad**
-Dr.N. Subramaniam

**History of India**
-Dr.B.N. Hari Rao

**History of the Pallavas of South India**
-K. Gopalan

**Cities of Ancient India**
-B.N. Puri

**Administration and Social Life under the Pallavas**
-Dr.C. Meenakshi

**S.I.I.Vol. I-PP. 14-21**
-E. Hultzsch

**The Chinese -Their History and Culture**
-Kenneth Scott Latourette

**Ep.Ind.Vol. X**
-Sten Konow

**Indian Antiquary, Vol. VI**
-Sir W. Elliot

**Indian Antiquary, Vol. VI**
-JAS Burgess

**Portrait Sculpture in South India**
-T.G. Aravamudhan

**Guide to Kanchi**
-M.K. Srinivasan




# ராஜ திலகம்

## 1. மல்லைக்கடலும் மைவிழிச் செல்வியும்

**மை**விழிச் செல்வியின் மையலூட்டும் மதுர விழிகள், மல்லைக் கடலின் ஓரத்தே மணலைத் தட்டித் தட்டித் தாளம் போட்ட மந்த மந்த அலைகளையும், தூரத்தே தூமகேதுகளைப் போல் எழுந்து வானுலாவிய சித்திரைத் திங்களின் முழுமதியைப் பிடிக்க முயன்று கொண்டிருந்த மலை போன்ற இரைகளையும், அத்திரைகளின் ஆணவத்தைத் தடுக்க முயன்று முடியாமல் அந்த அலைகளின் எழுச்சியில் அலைந்தாடிய நாலைந்து நாவாய்களையும், அலைகளின் இரைச்சலையும் அடக்கும் அளவுக்குக் கூக்குரலிட்டும் சிரித்தும் கடலாடிய ஆடவர் பெண்டிர் கூட்டங்களையும் பார்த்துப் பார்த்துப் பரவசமடைந்ததன்றி, அவள் இதயமும் கடல் மல்லைக்குக் காஞ்சி மாநகரமும் இணையாகாது என்று சொல்லிக் கொண்டு பெருமிதப்பட்டு விம்மியதால், வானளாவிநின்ற கருங்கல் தூணை அணைத்து நின்ற அவள் இடது கை சற்றே இடது மார்பகத்தை முன்னைவிட அதிகமாகக் கல்லில் அழுந்தச் செய்தது. அளவோடு எழுந்திருந்த அவள் அழகிய இடது மார்பு கருங்கல்லின் கடினத்தில் உராய்ந்ததால் சற்று வலி எடுத்தாலும், அந்த வலிகூட அந்தச் சமயத்தில், அந்தச் சூழ்நிலையில், பேரின்பமளித்தது அவள் சிந்தனையில் உருவெடுத்த கற்பனைக் கடலுக்கு.

மகாபலிபுரமென்றும் மாமல்லபுரமென்றும் பிரசித்தி பெற்ற கடல் மல்லையின் கடந்தகாலத்தையும் அன்றுதானிருந்த காலத்தையும் நினைத்து ஒப்பிட்டுப் பார்த்த மைவிழிச் செல்வி, பாரதத்தின் சிறந்த துறைமுகப் பட்டினமான மல்லை மாநகர் சங்க காலத்திலிருந்த நிலைக்கு அன்று சிறிதளவும் குறையவில்லையென்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். தொண்டைமான் இளந்திரையன் காலத்தில்

கடியலூர் உருத்திரங்கண்ணனார் பெரும்பாணாற்றுப் படையில் பெருமையுடன் பாடிய 'நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை'யான கடல் அன்றும் தன் கண்முன் விரிந்து கிடந்ததையும் பண்டைக் காலத்தில் அவர் கண்டபடியே மேலைநாட்டுப் புரவிகளையும் வடதிசை வாணிபத்துக்குத் தேவையான இதர பொருள்களையும் கொண்டு வரும் மேல் திசை மரக்கலங்கள் மட்டுமின்றி, சீன நாட்டுக் கப்பல்களும் அன்று ஒன்று சேர்ந்து விட்டதால், சங்க காலத்தை விட ஒருபடி அதிகமாகவே அன்று மல்லைக் கடல் காட்சியளித்ததைச் சிந்தித்துப் பெரிதும் மகிழ்வே செய்தாள் அந்த இளமங்கை. அத்துடன் அன்று தான் கட்டி நின்ற கருங்கல் தூணையும் அதன் உச்சியிலிருந்த மாட விளக்கையும், அதே போல் கடற்கரை நெடுகிலுமிருந்த மற்ற வானளாவிய தூண்களையும் பார்த்த மைவிழிச் செல்வி, யவனர் விளக்குத் தூண்களையே தங்கள் வேள்விகளுக்கு யூதஸ்தம்பங் களாக்கிக் கொண்ட சங்க கால அந்தணரின் யுத்தியைவிட அந்த மண்தனித் தூண்களைக் கல்தனித் தூண்களாகச் செய்து அவற்றின் உச்சிகளில் மரக்கல எச்சரிப்பு விளக்குகளை அமைத்ததுவிட்ட பல்லவ மன்னர்களின் யுக்தி எத்தனை சிறப்பு வாய்ந்தது என்று எண்ணினாலும், அந்தப் பழைய காலத்துப் பைந்தொடிகளின் செல்வச் சிறப்பைப் பற்றி மட்டும் சிறிது பொறாமை கொள்ளவே செய்தாள். கடலில் அந்தக் காலத்தில் புனலாடிய மகளிர் தங்கள் காதிலிட்ட விலையுயர்ந்த குழைகள் மணலில் விழுந்ததைக் கூட லட்சியம் செய்யாமல் போய் விட்டதையும், அவற்றைச் சிச்சிலிப் பறவைகள் உணவுப் பொருளென நினைத்துத் தங்கள் கூர் அலகுகளில் கௌவிக் கொண்டு பறவை களிருக்கும் பனைமரங்களுக்குச் செல்லாமல் அந்தணரிட்ட கடற்கரை வேள்வித் தூண்களின் மேல் வைப்பதையும் வர்ணித்த பெரும் பாணாற்றுப்படையின் வரிகளை எண்ணி எண்ணி, 'இத்துணை செல்வமா அந்தக் காலத்துப் பெண்டிருக்கு? காதணிப் பொன்னையும் மணியையும் அலட்சியம் செய்யும் அளவிற்கு இந்த மல்லை நாட்டில் செல்வம் மண்டிக் கிடந்ததா? எத்தனை அதிர்ஷ்டம் அந்த ஏந்திழைகளுக்கு!" என்று வியந்து கொண்டாள்.

கடல்மல்லையில் அவளுக்கிருந்த காதலாலும் அவள் கடியலூர் உருத்திரங்கண்ணனார் இயற்றிய பெரும்பாணாற்றுப் படையைத் திரும்பத்திரும்பப் படித்திருந்த காரணத்தாலும் சங்கால நிலையையும் தானிருந்த பல்லவர்கால நிலையையும் அடிக்கடி ஒப்பிட்டுப் பார்ப்பது அவளுக்கு வழக்கமாயிருந்ததால், சித்திரா பௌணர்மியை முன்னிட்டு மல்லை மாநகரின் மங்கையரெல்லாம் நிலவொளியில் அலைகடல் நீரில் அமிழ்ந்து அளைந்து துளைந்து சிரித்து சீராடிக் கொண்டிருந் தாலும், அவள் மட்டும் அவர்களோடு கலக்காமலும் நீராடச் செல்லாமலும் மல்லைக்கடலிடம் கொண்ட மையலில் மூழ்கி அதன் இணையிலா அழகைப்பருகுவதிலும் அதன் பெருமையைப் பற்றி நினைத்துப் பெருமிதம் கொள்வதிலுமே காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தாள். ஆகவே, எதிரே திரண்டெழுந்த அலைகள் 'வா வா' வென்று அழைத்தும் அவள் அவற்றை நாடாமல் நின்ற இடத்திலேயே நின்றிருந்தாள்.



இத்தனைக்கும் அன்று மல்லை மாநகரின் கடலாடு காட்சி கண்களை மட்டுமின்றிக் கருத்தையும் பறிப்பதாகவே அமைந் திருந்தது. இளந்திரையன் காலத்திலிருந்த தமிழ் அடிப்படை பல்லவர் காலத்தில் பிராகிருத, சமஸ்கிருத மொழிகளுக்கு இடம் கொடுத்து விட்டதால், சங்க காலத்தின் இந்திர விழாவும் பல்லவர் காலச் சித்ரா பௌர்ணமி விழாவுக்கு இடம் கொடுத்து விட்டது. அமரர் கோன் இந்திரனுக்கு எடுத்த விழாவை அவனுக்கு தாழ்ந்தவனான சந்திரனுக்கு எடுப்பது சரியா என்ற யோசனை, எதுவும் களி வெள்ளத்தில் ஆழும் மக்களுக்கு இல்லையாகையால், கால வெள்ளம் பழைமைகள் பலவற்றை அடித்துக் கொண்டு போவதுபோல் இந்திர விழாவையும் அடித்துக் கொண்டு போய்விட்டது. கால வெள்ளத்தைப் பற்றிச் சிறிதும் கவலைப் படாத பெண்களும் ஆண்களும் ஏராளமாகக் கூடி அன்று மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்து கடலாடிக் கொண்டிருந்தபடியால் மல்லைக் கடல் எல்லையற்ற கூச்சலுக்கு உட்பட்டுக் கிடந்தது கடலில் கூப்பிடு தூரம் வரை மணலடித்திருந்ததன் விளைவாக நீண்ட தூரம் மட்டும் இடுப்பளவு மிஞ்சினால் மார்பளவு ஆழமே இருந்தபடியால் பெண்கள் சிலர் தங்கள் கணவர்களுடன் சற்று தூரம் சென்று நீரில் அமிழ்ந்து, நீரின் மறைவு தூண்டிய வேகத்தில் ஒருவர் மீதொருவர் அர்த்தமுள்ள பார்வைகளை வீசிக் கொண்டதன்றி, அர்த்தமுள்ள இன்பச் செயல்களிலும் ஈடுபடலாயினர். கணவன் மனைவி உறவு ஏற்படாத இளமங்கையர் சிலரும் கணைக்கால் ஆழத்திருந்து இடுப்பளவு ஆழம்வரை தங்கள் பின்னெழில்கள் அசைய அசைய நடந்து சிற்றலைகளின் ஊடே ஆழமான பகுதிக்குச் சென்று கொண்டிருந்த தாலும், அப்படிச் சென்ற அவ்விள மங்கையர் அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்ததாலும், பார்வையின் பொருளைப் புரிந்து கொண்ட அவர்களின் காதலர் சற்று அக்கம் பக்கம் பார்த்துவிட்டு, அப்பெண்களின் ஆடை நனைந்து ஒட்டிக் கிடந்ததால் அளவுக்கு மீறி ஆசைகாட்டிய பின்னழகுகளின் அசைவுக்கு இரையாகி, எது வந்தாலும் வரட்டுமென்று துணிந்து அவர்களைத் தொடர்ந்து அலைகளில் பாய்ந்து சென்றனர். அப்படிச் சென்ற வாலிபரும் இளமங்கையரும் சமய சந்தர்ப்பம் பார்த்து அலைகளில் மூழ்கியும் எழுந்தும் ஆங்காங்கு ஜோடி சேர்ந்து விட்டதால் ஏற்பட்ட அனாவசியச் சிரிப்பொலிகள் பெரும்

இன்பநாதத்தை அலைகளின் இரைச்சலோடு கலக்கவிட்டன. அப்படித் தங்களுடன் கடலாட வந்த காதலர் கைகள் சிற்றிடைகளில் தவழும் போது இடம் கொடுத்த இளமங்கையர், அவர்கள் அத்துமீறும்போது ''உம்! உம்!'', ஓகோ!'' என்று விடுத்த எச்சரிக்கைகள் எத்தனை போலியென்பதை யுணர்ந்த அலைகள் காதல் ஜோடிகளைச் சேர்த்து உருட்டி விட்டுக் கொண்டிருந்தன.

அர்த்தசேது என்று கொண்டாடப்பட்ட மல்லைக் கடல், சேதுவைப் போலவே நீண்ட தூரம் அதிக ஆழமில்லாதிருந்ததாலும் கடலோர நீர்ப்பகுதி குளம்போல் சிற்றலைகள் எழுப்பிக் கொண்டிருந்த தாலும், அதிக தூரம் போக இஷ்டப்படாமல் கரைக்கருகில் இடுப்பளவு நீரிலேயே ஆழ்ந்தாடிய சில இளம் மனைவிமார்கள் தங்கள் கழுத்திலிருந்த மங்கல சூத்திரங்களையும் பொன்னாபரணங்களையும் தேய்த்து விட்டுக் கொண்டபோது, அந்த ஆபரணங்களுக்கும் அவர்கள் விம்மிய மார்பகங்களுக்கும் இடையே புகுந்த அலைகள் சற்று எட்ட நீராடிக் கொண்டிருந்த அவர்கள் கணவன்மார்க்குப் போட்டியாகத் தாங்கள் முளைத்து விட்டதை எண்ணிக் கேலிநகை புரிந்தன. நீராடிய பெண்கள் பலர்மிக மெல்லிய வெண்மைநிற ஆடைகளை அணிந்திருந்ததைக் கண்டுதானோ என்னவோ, உருத்திரங்கண்ணனார் மல்லை மாதரசிகளின் ஆடைகளைக் கொன்றையின் மெல்லிய கொம்புகளிலே தவழும் பனித்திரைக்கு ஒப்பிட்டார். தமிழகத்தின் மெல்லிய ஆடைக்கு அவரது உவமையையும் மீறினார் இந்தக் கதை நிகழும் காலத்திற்குப் பின்னால் வந்த சயங்கொண்டார். காஞ்சியின் மாதர்கள் கலவி மயக்கத்தைக்கற்பனை செய்த சயங்கொண்டார். காஞ்சியின் மாதர்கள் கலவி மயக்கத்தில் தங்கள் கலை (ஆடை) அகன்றுவிடவே கலைமதியின் நிலவே துகிலென எண்ணி அதைப் பிடித்திழுத்து உடுத்து முயன்றதாக இன்பக் கற்பனை எழுப்பினார். இப்படிக் கிறிஸ்துவுக்கு முற்கால யவனரும் எக்காலத்தமிழ்க் கவிகளும் போற்றிப் புகழ்ந்து நிலவு நிகர் வெண்ணிற ஆடைகளை அந்தச் சித்ரா பௌணர்ணமி யன்றும் அணிந்திருந்த கடல் மல்லைக் காரிகைகள் சிலர் தங்கள் அழகுகளை ஆடவர் கண்களிலிருந்து மறைக்க அலைக்குள்ளே அமிழ்ந்தனர். மற்றும் சிலர் எழுந்து நின்று ஆடையை இரட்டையாகச் சுற்றிக்கொள்ள முயன்றனர். ஆயினும் எட்ட நீராடிய வாலிபர்களின் கழுகுக் கண்கள் அந்தச் சந்தர்ப்பங்களைப் பயன் படுத்திக்கொள்ளவே செய்தன.

இதனால் நிலை குலைந்து பெருமூச்சு விட்ட வாலிபரும் பெண்களின் கருத்தைத் தங்கள் பாலிழுக்கவும் தங்கள் திறனைக் காட்டவும் கடலின் ஆழமான பகுதிக்குச் சென்று கைமாறுபோட்டு



அலைகளின் மீது தாவித் தாவிச் செல்லலாயினர். அவர்கள் கரைமீது விட்டுப் போன வீரகேடயங்களையும் வாட்களையும் அலைகள் நாடிச் சென்று மெல்ல மெல்ல நனைத்தன. அரை வட்டமாக அர்த்த சந்திர வடிவத்திலிருந்த அந்த மல்லைக் கடல் நீராடு கட்டத்தில் கரை யோரத்தில் வளைய நின்ற பெரும் தூண்கள் தலையில் விளக்குகளை ஏந்தி, தூர வரும் மரக்கலங்களுக்கு அங்கு துறைமுகமிருப்பதை மட்டுமின்றித் துறை முகத்தருகே பாறைகள் இருப்பதால் எட்டவே நிற்கும்படி சைகையும் செய்யும் வகையில் சுடர்களை ஆட்டிக்காட்டின. அந்தத் தூண்களில் பல்லவ சிற்பிகள் வடித்த யாளிகளும் தங்கள் பயங்கரக் கண்களை நீர்ப்பரப்பின்மீது ஓட்டின. இருள் காலங்களில் அந்தச் சுடர்கள் அலைகளில் பிரதிபலித்துத் தங்கள் பெருமையைக் காட்டுமென்றாலும் அன்றைய முழு நிலவில் தங்கள் ஜம்பம், சாயாததால், மந்த மாருதத்தில் மெல்லச் சலித்துக் கொண்டு நின்றன. சித்ரா பௌர்ணமிக் கூட்டத்தை உத்தேசித்துக் கரையில் பல இடங்களில் நடப்பட்டிருந்த பந்தங்களின் தீப ஜ்வாலைகளும், அவற்றுக்கருகே வைக்கப்பட்டிருந்த உணவுச் சாலைகளும் மல்லைக் கடற்புறத்தையே பெரிய நகரமாக்கிவிட்ட தென்றால், கரையில் தூர அவிழ்த்துவிடப் பட்டிருந்த சில ரதங்களும் அவற்றுக்குப் பக்கத்தில் நின்றிருந்த ரதப் புரவிகளும்,பெண்கள் நீராடிய கரையிலிருந்த யாழ் வகைகளும், சற்று எட்ட நீராடிய மக்கள் கூட்டத்துக்கு இடையில் மேலை நாட்டுப் புரவிகளைத் தாங்கி வந்து கொண்டிருந்த இரண்டொரு படகுகளும், அந்த நகரத்துக்குப் பெரும் அந்தஸ்தையும், இணையிலா கம்பீரத்தையும் அளிக்கவே செய்தன. இதுமட்டுமின்றி அந்த இரவு நேரத்திலும் பரதவர் பலர் தூரத்தே படகுகளைக் கொண்டு சென்று நிலவொளியில் வலை வீசி பிடித்துக் கொண்டிருந்ததால் எந்தக் களிவெறி விழாவிலும் உழைப்பவனுக்கு ஓய்வில்லை என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தனர். அதே சமயத்தில் கரையில் பெரும் அடுப்புக்களை மூட்டிச் சித்ரா பௌர்ணமிச் சித்ரான்னங்களைத் தயாரித்துக் கொண்டிருந்தவர்கள் உழைப்பவ னொரு புறமிருந்தால் உண்பவன் ஒருபுறமிருக்கிறானென்ற உண்மையை வலியுறுத்திக் கொண்டிருந்தனர். அந்த உண்மையை நினைத்து வெகுண்ட அடுப்பின் காட்டுச் சுள்ளிகள் படீரென வெடித்து அக்னிப் பொறிகளை வெளியே வீசிகொண்டிருந்தன.

இந்த மனோகரக் காட்சி முழுமையும் மைவிழிச்செல்வி கவனிக்கவே செய்தாள். அவள் மையல் விழிகளிலிருந்து அந்தக் காட்சியின் அம்சங்கள் அணுவளவும் தப்பவில்லை யென்பதை அவள் முகம் அவ்வப்பொழுது காட்டிக் கொண்டிருந்தது. இளம் கணவன் மனைவிகள் ஜோடி பிரிந்து நீரில் மூழ்கி நெருங்கியதைக் கண்டபோது

அவள் இதயம் படபடத்தது. இளங்கன்னிகைகள் காதலருக்கு ஜாடை காட்டி எட்டச் சென்று அவர்களோடு அலைகளில் உருண்டது அவள் அழகிய கன்னங்களில் வெட்கச் சிவப்பைப் படரவிட்டது. வீரர்களின் வீராவேச நீச்சலும் கரையில் கிடந்த ஆயுதங்களும் அவள் மனத்துக்குப் பேரானந்தத்தை அளித்தன. இக்காட்சிகளால் இதய நெகிழ்ச்சி கொண்ட மைவிழிச்செல்வி, 'காஞ்சி மண்டலத்தில் காதலுக்கும் குறைவில்லை, வீரத்துக்கும் குறைவில்லை, வாழ்க்கையின் தேவையே இவை இரண்டும் தானே?' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு நீர்ப்பகுதியிலிருந்து கண்களை அருகே தெரிந்த மலைப்பாறைக்குத் திருப்பினாள்.

அந்தச் சித்ரா பௌர்ணமி விழாவன்றுகூட, கடலே கோலாகலக் கூச்சலில் அமிழ்ந்திருந்த அந்த இரவு நேரத்தில்கூட, அத்தனை ஒலிகளையும் மீறிக் கல்லுளிச் சத்தம் எட்ட இருந்த பாறைப் பகுதியில் பலமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. அந்தக் கல்லுளிச் சத்தம் காதில் விழ விழ அவள் முகத்தில் இன்பமந்த காசம் படர்ந்தது. பவள இதழ்கள் குவிந்தன ஒரு விநாடி பிறகு அந்த இதழ்கள் அகன்று, ''இத்தனையிலும் அவர் கோவில் கட்டுவதை விடமாட்டார் போலிருக்கிறது! இப்படியொரு இளவலா இந்த நாட்டுக்கு?'' என்ற சொற்களை மெதுவாக உதிர்த்தன. இப்படி நினைத்த வண்ணம் அந்த மலைப் பகுதியை ஊன்றிப் பார்த்தாள் மைவிழிச்செல்வி. அங்கு உயர்ந்த பாறைதான் தெரிந்தது. அதற்கு அப்பால் அவள் பலமுறை கண்டிருந்த பல்லவ இளவல் தெரியவில்லையானாலும் அவர் அந்தத் தருணத்தில் என்ன செய்து கொண்டிருப்பார் என்பதை அகக்கண்ணால் காண முடிந்தது.

பல்லவ இளவலை நினைத்ததும் அவள் கருவிழிகள் புறப்பார்வையை இழந்தன. மல்லைக்கடலின் மோகனக்காட்சி அர்த்தமற்றதாயிற்று அவள் பார்வைக்கு. உள்ளே எழுந்தது இளவலின் ஆஜானுபாகுவான உருவம். இத்தனைக்கும் அவருடன் அவள் பேசியதுக்கூடக் கிடையாது. சதா கல் தச்சனுடன் நின்று கொண்டிருந்த பல்லவ இளவலைக் கடல் நீராட வரும் சமயங்களிலெல்லாம் தூரத்திலிருந்துதான் கண்டிருக்கிறாள் அவள். பல்லவ இளவல் சில சமயங்களில் ராஜரீக ஆடை முழுவதும் அணிந்திருப்பான். இன்னும் சில சமயங்களில் மேலே அங்கி எதுவுமின்றித் தன் வாளிப்பான சரீரத்தைக் காட்டிக் கொண்டு நிற்பான். இதையெல்லாம் அவள் கண்டிருக்கிறாள். கண்டு மனம் துவண்டு மிருக்கிறாள். ஆனால் அந்த இளவல் மட்டும் அவளை ஒருநாள் கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. கல்லைக் கவனிக்கும் அளவுக்குக் கூட அவர் தன்னைக்



கவனிக்காததால், ''கல்லைவிட நான் கேவலமா? அல்லது அவருக்குத்தான் ரசனை கிடையாதா? இல்லை, துறவியா?'' என்று கேட்டுக் கொண்டதால் அவள் கண்களில் கோபமும் துளிர்த்தது ஒரு விநாடி. மீண்டும் கண்களைப் புறநிலைக்குக் கொணர்ந்த அவள், 'இந்த மனோகரக் காட்சியில் காதலர் கலந்து கடலாடும் இந்த நிலையில் இளவலும் நானும் பங்கெடுத்துக்கொண்டால் எத்தனை நன்றாயிருக்கும்! ஏன், அவர் என்னைத் தொடமாட்டாரா?'' என்று சற்றே வினவினாள்.

அதே சமயத்தில் அவள் கேள்விக்குப் பதில் கூறும் வகையில் அவளைப் பலமாக ஒரு கை பின்புறமிருந்து நீண்டியது. திரும்பிப் பார்த்தவள் திக்பிரமை பிடித்து நின்றாள். பல்லவ இளவல் அவள் கையைப் பிடித்திருந்தான் வலிக்கும் அளவுக்கு. அவன் கண்களில் கவலை மண்டிக் கிடந்தது. ''வா இப்படி'' என்று கூறி அவளை இழுத்துச் செல்ல முயன்றான்.

அதுவரை அவனைத் தீண்டத் துடித்த அவள் இதயத்தில் திகில் மூண்டது. ''எங்கே?'' என்று அவள் பதற்றத்துடன் வினவினாள்.

''பேசாதே வா!'' என்ற அதிகாரக்குரல் இளவலிடமிருந்து வெளிவந்தது. அதற்கு மேல் ஏதும் பேசாத அவன் ஒரு பாறையின் மறைவுக்கு அவளைப் பலவந்தமாக அழைத்துச் சென்றான். அங்கு அவளைப் பதுக்கித் தானும் பதுங்கினான்.

''என்ன இது'' என்ற பொய்ச்சீறல் சீறினாள் மைவிழிச்செல்வி.

''அபாயம்.'' இளவலின் குரல் கவலையுடன் ஒலித்தது.

''என்ன அபாயம்?'' என்று கேட்டாள் அவள்.

''அதோ பார்!'' இளவல் ஓரிடத்தைச் சுட்டிக் காட்டினான்.

அவன் காட்டிய இடம் ஒரு தோப்பு. அதன் உள்ளிருந்து பூரணக் கவசமணிந்த மூன்று புரவி வீரர் வெளிவந்தனர். அவர்களைக் கண்டதும் மிதமிஞ்சிய அச்சத்தால் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டாள் இளமங்கை.

அந்த மூவர் உருவில் பெருத்த அபாயம் மல்லை மாநகரை நோக்கி வருவதை உணர்ந்து கொண்ட மைவிழிச் செல்வியின் பூவுடல் பல்லவ இளவலிடம் சற்று அதிகமாகவே இழைந்தது. அப்படி அவள் உடல் இழைந்ததால் பல்லவ சாம்ராஜ்யம் எத்தனை ஆட்டம் காணப்போகிறதென்பதை உணர்ந்த மல்லைக் கடலலைகள் பெரிதாக இரைந்து நகைத்தன.

# 2. இளவல் இட்ட ஆணை

**ம**ல்லைக் கடலோரத்திலே, மலைப்பாறை மறைவிலே மந்த மாருதம் மகிதலத்தைத் தழுவிச் சென்ற மனோகர வேளையிலே மல்லிகைச் சரமணிந்த மைவிழியாளொருத்தியின் மோகனப் பூவுடம்பு தன் மீது சற்றே அழுந்தி இழைந்துங்கூட, அதைப் பற்றிச் சிந்தனையோ சித்த நெகிழ்ச்சியோ உடலின் உத்வேகமோ ஏதுமின்றிப் பல்லவ இளவல் எதிரேயிருந்த தோப்பிலிருந்து வெளிப்போந்த மூன்று வீரர்களை உற்று நோக்கிக் கொண்டேயிருந்தான். மைவிழிச் செல்வியின் மனோநிலையோ அவனிலும் முற்றும் மாறுபட்டு, அவன் சமீபத்திலிருந்த காரணத்தால் அவள் சித்தம் இன்பத்தின் உன்மத்தத்தில் இழைந்து இழைந்து சலனப்பட்டதால் அவள் நாசியிலிருந்து துன்பப் பெருமூச்சொன்றும் வெளிவந்தது. அது மட்டுமின்றி இளவல் சுட்டிக்காட்டிய தோப்பின் முகப்பிலிருந்து வெளிவந்த மூவர் உடையிலிருந்தும் முகத்தோற்றத்திலிருந்தும் அவர்கள் சாளுக்கிய வீரர்களென்பதையும் புரிந்து கொண்டு மைவிழிச் செல்வி, அவர்கள் அத்தனை சுதந்திரமாகப் பல்லவ நாட்டுக்குள் அதுவும் பல்லவர்களின் ஒரே துறைமுகமான மாமல்லபுரத்துக்குள் நுழைந்த துணிவை எண்ணி முதலில் சற்று வியப்படைந்தாலும், அதன் மூலகாரணம் அவளுக்கு அடுத்த விநாடி உதயமாகவே அச்சத்தாலும் அதிர்ச்சியாலும் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டாள். ஆனால் அந்த அச்சத்தையும் அதிர்ச்சியையும் அவளது அழகிய இடையில் அழுந்திக் கிடந்த பல்லவ இளவலின் கைபோக்கடித்ததன்றிச் சுமார் ஓராண்டுக் காலமாக அவள் இதயத்தில் இருந்து கொண்டிருந்த ஆசைக் கனலை அதிகமாகக் கிளப்பி விட்டதால், அவள் அவன் கைக்குள் சற்று அதிகமாகவே புகுந்து இழைந்தாள். அப்படி இழைந்ததால் அவள் பூவுடலின் பக்கப்பகுதி அவன் மார்பின் ஒரு பகுதியில் பதிந்து உராய்ந்து கிடந்தது. ஆனால் இத்தனையையும் பொருட்படுத்தாத பல்லவ இளவல் எதிரேயிருந்த தோப்பிலிருந்து வந்தவர்களை ஊன்றிப் பார்த்தபடியே கேட்டான், ''மைவிழி! அவர்கள் யார் தெரியுமா உனக்கு?'' என்று.

தோப்பிலிருந்து வந்துகொண்டிருந்த சாளுக்கிய வீரர்கள் அளித்த அதிர்ச்சியைவிட அதிக அதிர்ச்சியைப் பல்லவ இளவலின் சொற்கள் அளித்தாலும், அந்த அதிர்ச்சி இன்ப அதிர்ச்சியாயிருந்தது மைவிழிச் செல்விக்கு. தன்னை அவன் ஓராண்டுக் காலமாகத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை என்று மனம் வெதும்பியிருந்த அவள், அவன் தன் பெயரை அறிந்து கொண்டிருப்பதை நினைத்து விவரிக்க இயலாத வியப்புக்கு உள்ளானாள். ஆகவே அவனை நோக்கித் திரும்பி, ''என்



பெயர் தெரியுமா உங்களுக்கு?'' என்று வினவினாள் பவளவாயை மெல்லத் திறந்து.

இளவல் அவள் பவள வாயின் அழகையும் பார்க்கவில்லை. அவற்றின் உள்ளிருந்து சற்றே வெளிப்பட்ட முத்துப் பற்களையும் பார்த்து ரசித்தானில்லை. அவள் தலையிலிருந்த இரட்டை வட முத்துச் சரம், அவள் அவனை நோக்கித் திரும்பிய வேகத்தில் அவன் மார்பில் உராய்ந்ததைக் கூடக் கவனிக்கவில்லை. நேரே சாளுக்கிய வீரர்களைப் பார்த்த வண்ணம், ''தெரியும்'' என்று ஒற்றைச் சொல்லாலேயே பதில் கூறினான்.

திரும்பிய வேகத்தில் தனது கன்னமொன்று அவன் தோளில் பட்டதால் அந்தத் தோளின் திண்மையையும் கடினத்தையும் கண்ட மைவிழி, 'அப்பா! கருங்கல் மாதிரி ஒரு கையா? அதனால் தான் சதா கருங்கல்லைக் கட்டிக்கொண்டு காலங் கழிக்கிறார் இவர்' என்று உள்ளூரச் சொல்லிக்கொண்டாள். ஆனால் வெளிக்கு, ''எப்படித் தெரியும்?'' என்ற ஒரு கேள்வியைச் சாதாரணமாகக் கேட்டாள்.

பல்லவ இளவல் அவளை நோக்கித் திரும்பினான். அவள் முகம் ஏற்கெனவே அவனை நோக்கித் திரும்பியிருந்ததால் அவள் கண்களை உற்று நோக்கவும் செய்தான். இரும்பினும் வலிய கண்கள் அவள் கண்களைக் கவர்ந்து நின்றன. அவன் வலிய இதழ்களில் ஒரு புன் முறுவல் தவழ்ந்து கிடந்தது. ''நான் இந்நாட்டு இளவரச னல்லவா?'' என்று வினவினான் அவன் ஏளனம் தொனித்த குரலில்.

''ஆம்'' என்றாள் மைவிழிச் செல்வி, எதற்காக அவன் அதைச் சொல்கிறான் என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல்.

''அதனால் தான் கடலாட வரும் பெண்களெல்லாம் என்னை உற்றுப் பார்க்கிறார்கள்'' என்று கூறிய இளவல் லேசாக நகைத்தான்.

மைவிழிச் செல்வியின் விழிகளில் சினம் துளிர்ந்தது. ''யாரைக் குறிப்பிடுகிறீர்கள்?'' என்ற கேள்வியிலும் சினம் ஒலித்தது.

''யார் என்னை உற்றுப் பார்த்தார்களோ அவர்களை.''

''அப்படிப் பலபேர் உங்களை உற்றுப் பார்த்திருக்கிறார்களோ?''

''இருக்கலாம்.''

''அத்தனை பேர் பெயர்களையும் விசாரித்து வைத்திருக் கிறீர்களா?'' இந்தக் கேள்வி நல்ல உஷ்ணத்துடன் வெளி வந்தது மைவிழிச் செல்வியின் இதழ்களிலிருந்து.

பல்லவ இளவல் மீண்டும் இளநகை கொண்டான். ''எல்லோர் பெயரையும் விசாரிக்க அவசியமில்லை. அதிகமாக உற்றுப்

பார்க்கிறவர், அடிக்கடி வருபவர், அருகில் வந்து எதையும் கேட்க, அஞ்சுபவர், அத்தகைய ஒருவர் பெயரை மட்டும் விசாரித்தறிந்தேன்!'' என்றான் அந்த இளநகையின் ஊடே.

அவன் தன்னைத் தான் குறிப்பிடுகிறானென்பதைச் சந்தேக மறப் புரிந்துகொண்ட மைவிழியின் மனத்தில் இன்ப எண்ணங்கள் மலர்ந்து பரந்தன பெரிதாக. அவன் தன்னை அடியோடு பார்க்கவில்லையென்று நினைத்தது எத்தனை தவறென்பதைப் புரிந்து கொண்டாள் அவள். அத்துடன், ''இவர் நான் வந்து போவதை மட்டுந்தான் பார்த்திருப்பாரா? கடலாடுவதையும் கண்டிருப்பாரா?'' என்று உள்ளூர எண்ணியதால் அவள் இதயத்தைச் சொல்ல வொண்ணா வெட்கமும் ஆட்கொண்டது. 'அப்படியானால் நான் ஆடை களைந்தது, அலையில் அமிழ்ந்தது, எழுந்தது, நீந்தியது எல்லாவற்றையுந்தானே பார்த்திருப்பார்? ஐயோ! வெட்கக் கேடே!' என்று நினைத்து இல்லாத சங்கடத்தை இருப்பதுபோல் பாவித்து இன்ப எண்ணங்களை அதிகமாகவே எழுப்பிக் கொண்டாள் இதயத்தில். இந்த எண்ணங்கள் உள்ளே எழுந்து மோதவே அவள் தன் கண்களை அவன் கண்களிலிருந்து விடுவித்துக் கொண்டு சற்றுக் கீழே தாழ்த்தி, ''என் பெயரை அறிய அத்தனை அவசிய மென்னவோ?'' என்று கேட்டாள் இன்பம் துளிர்த்த குரலில்.

இளவரசன் சொன்னான் மெதுவாக, 'கடமையளித்த அவசியம்'' என்று.

''என்ன கடமை?'' வியப்புடன் எழுந்தது அவள் கேள்வி.

''குடிமக்கள் அனைவரையும் புரிந்துகொள்ள வேண்டியது இளவரசன் கடமை'' என்றான் இளவல்.

மைவிழி இகழ்ச்சியுடன் நகைத்தாள். ''அதுவும் என் பெயரைப் புரிந்துகொள்ள வேண்டியது முக்கிய கடமை போலிருக்கிறது'' என்று கேட்ட அவள் கேள்வியிலும் இகழ்ச்சி நன்றாகவே தொனித்தது.

''ஆம்.'' பதில் சர்வ சாதாரணமாக வந்தது பல்லவ இளவலிடமிருந்து.

''ஏனோ?''

''இளவரசனைத் தூரத்தில் நின்று உற்றுப் பார்ப்பதற்குக் காரணமிருக்கலாம்.''

''என்ன காரணமோ?''

''கண்காணிப்பாய் இருக்கலாம்.''

''உங்களை வேவு பார்த்தேனென்று சொல்கிறீர்களா?''



''ஏனிருக்கக் கூடாது? இப்பொழுது காஞ்சி மண்டலமெங்கும் சாளுக்கிய ஒற்றர்கள் உலாவுகிறார்கள்.''

இதைக் கேட்டதும் அதிகம் வெகுண்டாள் மைவிழி. ''நான் பெண்'' என்று கூறவும் செய்தாள்.

''அதனாலென்ன?'' இளவலின் கேள்வி சர்வ சாதாரணமாயிருந்தது.

''பெண்கள் வேவு பார்ப்பார்களா?''

''ஏன் கூடாது?''

''முடியுமா?''

பெண்களால் முடியாதது உலகத்தில் என்ன இருக்கிறது?''

இளநங்கையின் வேல்விழிகள் கோபக் கனலை வீசின அவனை நோக்கி. அவனிடமிருந்து விலக முயன்றாள் அவள். ஆனால் அவன் கை அவள் இடையை இரும்புப் பிடியாகப் பிடித்திருந்தது. ''விடுங்கள் என்னை'' என்று திமிறினாள். திமிறல் இம்மியளவும் பயனளிக்காதது மட்டுமின்றி இடை சிறிது கன்னிச் சிவந்து வலிக்கவும் செய்தது. ''நான் வேவுகாரி! விடுங்கள் என்னை'' என்று மீண்டும் இரைந்தாள் அவள்.

''விடுவதற்கில்லை'' என்று சிரித்தான் இளவல்.

''ஏன்?'' என்று கேட்டாள் மைவிழி.

''நீதான் வேவுகாரியாயிற்றே உன்னை விட்டால் நீ ஓடி விட்டால்?'' என்று கேட்டான் அவன்.

''ஓடுவானேன்? உங்களிடம் பயமா எனக்கு?'' என்று வினவினாள் மைவிழி சினத்துடன்.

''பயமென்று யார் சொன்னது? பயமிருந்தால் இளவரசனைக் கண்காணிக்கத் துணிவிருக்குமா?'' என்று சொல்லிக் கொண்டே போன இளவல் சட்டென்ற வேடிக்கைப்பேச்சை நிறுத்தி, ''சரி சரி. அதோ பார். அந்த வீரர்கள் கடற்கரை முகப்புக்குவந்து விட்டார்கள்'' என்று சுட்டிக் காட்டிவிட்டு மீண்டும் அவர்களை நோக்கினான். மைவிழியும் தனது சினத்தைச் சிறிது மட்டுப் படுத்திக் கொண்டு வந்த வீரர்களைக் கவனித்தாள்.

வீரர் மூவரும் தங்கள் புரவிகளை ஒரே சீராக நடத்திக் கொண்டு கடற்கரை முகப்புக்கு வந்ததும் சட்டென்று நின்றனர். அப்படி நின்றதும், நடுவிலிருந்தவன் ஏதோ சைகை செய்ய, பக்கங்களிலிருந்த இரு வீரர்கள் தங்கள் புரவிகளின் பக்கவாட்டுகளில் செருகப் பட்டிருந்த கொம்புகளை எடுத்துப் பலமாக மூன்று முறை விட்டுவிட்டு ஊதவே, அக்கொம்பின் ஒலி கேட்டு அது வரை நீராடிக் கொண்டிருந்த ஆடவரும்

பெண்டிரும் நீராட்டத்தை நிறுத்திக் கரையைக் கவனிக்கலாயினர். கரையில் அண்டாக்களில் சித்திரான்னம் சமைத்துக் கொண்டிருந்தவர்கள் தங்கள் அலுவல்களை நிறுத்திப் புரவி வீரரைப் பார்த்து அஞ்சி நின்றனர். வீரர்கள் யாரென்பதை உணர்ந்துகொண்ட சில ஆடவர்கள் கடலினின்று கரையேறி வந்து தங்கள் ஆடைகளை உடுக்க விரைந்தனர். வீரர்களாயிருந்தவர்கள் தரைமீது கிடத்தப்பட்டிருந்த வாட்களையும், கேடயங்களையும் நாடி அவற்றைக் கையிலெடுத்துக் கொண்டு உருவிப் பிடித்த வாட்களுடனும், நனைந்த உடையுடனும் மேனியுடனும், புரவி வீரர் மூவர் இருக்குமிடம் நோக்கி விரைந்தனர்.

தூரத்தே கடலில் கைமாறு போட்டு நீந்திக் கொண்டு இளமங்கையருடன் துளைந்து கொண்டுமிருந்த வாலிபர்கள் கரையை நோக்கிச் சிற்றலைகளைத் தாண்டித்தாண்டி ஓடி வந்தனர். திடீரென வீரர்களிடமும் மற்றோரிடமும் துரிதப்பட்டு விட்ட நடவடிக்கைகளைப் பார்த்த பெண்டிரும் நீராட்டத்தை முடித்துக் கொண்டு பாறையின் மறைவிடங்களுக்குச் சென்று ஆடைகளை அணிந்த வண்ணம் புரவிவீரர் மூவரையும் பார்த்துப் பிரமிப்படைந்தனர். மீன் பிடித்துக் கொண்டிருந்த பரதவர்கூடத் தங்கள் தங்கள் வலைகளை இழுத்துச் சுருட்டிப் படகுகளில் தள்ளிக் கொண்டு படகுகளைக் கரைக்குக் கொண்டு வர முற்பட்டனர். வெளிநாட்டுக் கப்பல்களில் இருந்து ஏற்கனவே கொண்டு வரப்பட்ட அரபுப் புரவிகள் சில கரையில் குதித்து குதிகால்களை மணலில் தேய்த்துக் கனைத்தன. ஆடைகளை அணிந்து முடித்துக் கொண்ட பெண்கள் சிலர் தரையிலிருந்த தங்கள் யாழ்களைக் கையிலெடுத்துக் கொண்டு புரவி வீரரின் அடுத்த நடவடிக்கையை ஆவலுடனும் அச்சத்துடனும் நோக்கிக் கொண்டு நின்றனர்.

மல்லைக் கடலில் நீராடிய அந்த மாந்தரனைவருக்கும் புரவி வீரர் மூவரும் சாளுக்கிய வீரர்கள் என்பது புரிந்திருந்தாலும், சுமார் ஒரு மாத காலமாகச் சாளுக்கியர்கள் படையெடுப்புப் பற்றி வதந்திகளை பல உலாவி வந்ததாலும், ஏதோ விருப்பமற்ற செய்தியை வெளியிடவே அந்த வீரர்கள் வந்திருக்கிறார்களென்பதை உணர்ந்து கொண்டார்கள். ஆனால் அந்தச் செய்தி அவர்கள் ஊக்கத்துக்கும் அப்பாற்பட்டதாயிருக்குமென்பதை மட்டும் அவர்கள் அணுவளவும் அறியாததால் நடுவிலிருந்த புரவி வீரன் அறிவித்த செய்தியைக் கேட்டதும் அனைவருக்கும் திக்பிரமையே ஏற்பட்டது. பக்கத்தி லிருந்த வீரர்கள் கொம்புகளை எடுத்து ஊதியதை அடுத்து, கடலாடியவர்கள் அருகில் கூட்டமாக வந்ததும் நடுவிலிருந்த வீரன் தன் ஒரு கையை உயர்த்திக் கூறினான் : ''பல்லவர் குடிமக்களே! இன்று முதல் நீங்கள் சாளுக்கிய



வேந்தரின் குடிமக்கள். சாளுக்கிய மன்னர் - மன்னர், ரணரசிகன், *ராசமல்லன், விக்கிரமாதித்தமகாப்பிரபு நேற்றிரவு காஞ்சி மாநகருக்குள் பிரவேசித்துவிட்டார். காஞ்சி மண்டலம் இனி சாளுக்கியரின் ஆணைக்குட்பட்டது. ஆகவே மாமல்லபுரத்து வாசிகளான நீங்களனைவரும் உங்கள் இல்லங் களுக்கு அமைதியாகச் செல்லுங்கள். பின்னால் வரும் சாளுக்கியர் படைநகர ஆதிக்கத்தை ஏற்கும் வரை வீடுகளைவிட்டு வெளியே வரவேண்டாம்.'' இதை அவன் சொல்லி முடித்ததும் மீண்டும் கொம்புகள் இருமுறை ஊதப்பட்டன. பிறகு அப்புரவி வீரர் மூவரும் கடற்கரையிலிருந்து கூப்பிடு தூரத்திலிருந்த தெருக்களை நோக்கி விரைந்தனர். அதே சமயத்தில் காஞ்சி மல்லைப் பாதையில் பெரும் டங்கா ஒன்று விடாமல் சப்தித்தது. அத்துடன் குதிரைப் படை ஒன்றின் சீரான குளம்பொலிகள் கேட்கத் தொடங்கின.

சித்ரா பௌர்ணமியைக் கொண்டாடவும், கடலாடவும் யாழிசை கூட்டிப் பாடவும் கரையோர மலைப்பாறை மறைவுகளில் ஜோடி பிரிந்து தங்கி, மகிழவும் திட்டம் போட்டு வந்திருந்த மக்கள் அனைவரும் அச்செய்தி கேட்டுத் திகைப்படைந்து நின்றனர். சாளுக்கியப் படையெடுப்பைபப்பற்றி வதந்தியிருந்ததை அவர்கள் அறிந்திருந்தார்களேயொழிய அத்தனை விரைவில் சாளுக்கிய விக்கிரமாதித்தன் காஞ்சிக்குள் புகுந்து விடுவான் என்பதை அவர்கள் எள்ளளவும் எண்ணிப் பார்க்காததால் ஏதோ நம்பத்தகாத விந்தை நடந்து விட்டதாகவே அவர்களுக்குத் தோன்றியது. சில நிமிடங்கள் அப்படியே பிரமை பிடித்து நின்ற அந்த மக்கள் கூட்டம் மெல்ல மெல்ல எட்ட இருந்த நகரப் பகுதியை நோக்கி நகரலாயிற்று. அத்தனைக்கும் அந்த மக்களிடம் எந்தப் பீதியும் இல்லை. நிதானமாக, அமைதியாக எந்தக் குழப்பமும் இல்லாமல் ஆண் பெண்கள் தங்கள் இருப்பிடங்களை நோக்கி நடக்கலாயினர்.

அந்த அமைதியையும் கட்டுப்பாட்டையும் நோக்கிய பல்லவ இளவல் தன் குடிமக்களைப்பார்த்துப் பெருமிதம்கொண்டான். இப்படியொரு வீர சமுதாயத்தைச் சிருஷ்டித்த தமிழ்ப் பரம்பரையை எண்ணியதால், சாளுக்கிய வீரன் விடுத்த துன்பச் செய்தியைக்

* *புகழ் மிக்க மாமல்லன் பெயரனான பரமேசுவரவர்மனைப் புறமுதுகிட்டோடச் செய்ததனால் விக்ரமாதித்தன் 'ராச மல்லன்' என்று பட்டப் பெயரைப் புனைந்து கொண்டான் என கட்வல் பட்டயம் கூறுகிறது - 'தென்னாட்டுப் போர்க்களங்கள்', பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை - பக்கம் 135.*

கேட்டபோது அவன் இதழ்களில் சிறிதும் கடுமை கலக்காத ஒரு புன்முறுவல் தேங்கி நின்றது. அந்தப் புன்முறுவலைக் கண்ட மைவிழியின் இதயம் திடுக்கிட்டது. கண்கள் கனலைக் கக்கின. ''காஞ்சி எதிரிகள் வசமாகி விட்டதாம்,'' என்றாள். சொற்களிலும் நெருப்புப் பொறி பறந்தது.

'ஆம்.'' இளவலின் பதில் சாதாரணமாக வந்தது.

''அப்படியானால் உங்கள் தந்தை சிறைப்பட்டிருக்க வேண்டும்'' என்றாள் மைவிழி.

''இருக்காது'' என்று திட்டவட்டமாகச் சொன்ன பல்லவ இளவல் கடற்கரையிலிருந்த மக்கள் கூட்டம் முழுதும் கலைந்து விட்டதைக் கண்டதும் அவளை நோக்கி ''மைவிழி!'' என்று மெல்ல அழைத்தான்.

''ஏன்!'' மைவிழியின் குரலில் வெறுப்பிருந்தது. தனது தலைநகர் எதிரியின் வசமாகி விட்டதைக் கேட்டுங்கூடச் சிறிதும் பதைபதைப்பைக் காட்டாத அவன் உண்மையில் வீரன்தானா என்ற சந்தேகம் அவள் மனத்தில் உதயமாயிற்று.

ஆனால் பல்லவ இளவல் அவள் முகத்தில் தெரிந்த வெறுப்பைச் சிறிதும் கவனித்தானில்லை. ஏதோ கனவிலிருப்பவன் போல் பேசத் தொடங்கினான். 'கவனமாகக் கேள் மைவிழி! சாளுக்கிய வீரர்கள் வெளிவந்த தோப்பிற்குள் செல். அவர்கள் வந்த வழியிலல்ல, கடற்கரையோரமாகத் தோப்பைச் சுற்றிச் செல் செல்லும்போது தோப்புக்குள் கவனித்துக் கொண்டே செல். எந்த இடத்தில் தனி விளக்கு ஒன்று தெரிகிறதோ அந்த இடத்தில் தோப்புக் குள் புகுந்து விளக்கு இருக்குமிடத்தை அடைந்துவிடு. அங்கு ஒரு சிறு குடிசையின் முகப்பில் மூன்று பேர் உட்கார்ந்திருப்பார்கள். அவர்களை நீ சந்தித்து அவர்களைக் கடிகைக்குப் போக நான் உத்தரவிட்ட தாகச் சொல்'' என்று கூறினான். அவன் குரலில் ஆணையிடும் தோரணையிருந்தது. அதைச் சொன்ன அவன் கம்பீரமாக நிமிர்ந்து எழுந்தும், நின்றான்.

பதிலேதும் சொல்லவில்லை மைவிழி. பேசாமல் அவன் கூறிய வழியே நடந்தாள். சுமார் அரை நாழிகைப் பயணத்திற்குப் பிறகு தோப்பின் உள்ளே நட்ட நடுவில் சிறு விளக்கு ஒன்று மின்னியது. தோப்புக்குள் நுழைந்து அதை நாடிச் சென்றவள் அங்கிருந்த மூவரையும் கண்டாள். ஆனால் அந்த மூவரில் தன்னை வரவேற்க எழுந்திருந்த மனிதனைக் கண்டதும் திக்பிரமை பிடித்துச் சிலையேன நின்று விட்டாள். அவன் அவளை நோக்கி இரண்டடி எடுத்து வைத்ததும் அவள் பிராணனே போய்விடும் போலிருந்தது.

# 3. நிலவுக்கு அழகு தரும் நிலவு

கடற்கரையோரமாகத் தலைகளில் குலைகளைத் தாங்கி வரிசை வரிசையாக வளர்ந்திருந்த தென்னை மரங்களும் அவற்றை அடுத்து அணிவகுத்து நிற்கும் காலாட்படையைப் போல் சற்று உள்ளடங்கிச் செங்குத்தாகவும் ஒரே சீராகவும் இடம் விட்டு இடம்விட்டுக் காட்சியளித்த சவுக்கு மரங்களும், இவ்விரண்டு மரக்கூட்டங்களையும் ஆங்காங்கு இடையிடையே பிரித்துவிட்டுச் செவ்விய பழங்களை மரகத இலைகளுக்குள்ளிருந்து வெளியிலாட்டி ஜாலங்காட்டிய முந்திரி மரங்களும் கொண்ட அந்த அடர்ந்த தோப்புக்குள் புகுந்து மிகுந்த கஷ்டப்பட்டு விளக்கிருந்த இடத்துக்கு வந்த மைவிழி, எதிரே தன்னை வரவேற்க எழுந்த மூவருள் நடுவிலிருந்த மனிதனைக் கண்டதும் நடுக்கமும் அதிர்ச்சியும் அடைந்தாளென்றால் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. அந்த இடத்தில் அவள் யாரை எதிர்பார்த் திருந்தாலும் தனது சொந்தத் தந்தையை எதிர்பார்க்கவில்லை யாகையால் அவரே தன்னை வரவேற்க எழுந்ததும், எழுந்து இரண்டடி எடுத்து வைத்து முன்னே வந்ததும், என்ன செய்வது ஏது செய்வது என்று விளங்கவில்லை மைவிழிக்கு. ஆகவே அவள் தன் மைவிழிகளைச் சட்டென்று நிலத்தில் தாழ்த்தி நிலைகுலைந்து நின்று விட்டாள் பல விநாடிகள்.

அந்த அடர்ந்த தோப்பை முழுமதி சிரமப்பட்டே ஊடுருவி யிருந்ததால் சில இடங்களில் நிலவுப் பாளங்களும் சில இடங்களில் சவுக்கு தென்னைகளின் நிழல்களளித்த நல்ல கடுமையான இருட்டுத் திட்டுகளும் கலந்து கிடந்ததால், பார்வைக்கு அழகையும் பயங்கரத்தை யும் சேர்த்தே சிருஷ்டித்த இயற்கை, அந்த இடத்தில், அதே நேரத்தில், மைவிழிக்கு மட்டும் பயங்கரத்தை மட்டுமே சிருஷ்டித்திருந்தது. அவளை நெருங்க இரண்டடி எடுத்து வைத்த அவள் தந்தை, ''நீயா!'' என்று வியப்பு ஒலித்த வினா ஒன்றைத் தொடுத்ததும் பயத்தால் வெலவெலத்துப் போனாள் மல்லை நகர்க் கட்டழகி. ஆகவே அவள் பதிலேதும் சொல்லாமல், 'ஆமாம்' என்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டுமே அசைத்தாள். அதிர்ச்சி அவள் சிந்தையைச் சிதற வைத்திருந்தது. அச்சம் அவள் மனத்தைப் பிரளயத்தின் இருட்டைப் போல் சூழ்ந்திருந்தது.

உண்மையில் மைவிழி அச்சப்படும் சுபாவமுள்ளவளல்ல. விளக்கு வைத்த பின்பு கடலோரத்தில் உலவாதவளுமல்ல. எந்தத் தோப்புக்குள் அவள் அன்று வந்தாளோ அந்தத் தோப்பும் அவளுக்குப்

புதிதல்ல. அந்த மல்லைக் கடற்புரத்தில் அவள் அறியாத இடம் ஏதுமில்லை. கலந்துபழகாத மனிதர்யாருமில்லை. எத்தனையோ இரவுகளில் அவள் அந்தத் தோப்பின் முகப்பில் கரையில் மோதிக் கொண்டிருந்த அலைகளில் காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருக் கிறாள். அதே கரையில் வலைகளைப் பிரித்துப் போட்டுக் கொண்டு சிக்கெடுத்த பரதவரோடும் அவர்கள் மனைவிமாரோடும் உட்கார்ந்து கொண்டு அவர்கள் சொல்லும் கடற்கதைகளைக் கேட்டிருக்கிறாள். கடலின் ஆழம், அதன் அமைப்பு, ரேகைகள், கடல்சூழ்குதல், படகு செலுத்துவதன் மர்மங்கள் ஆகிய பலவற்றைப் பரதவரும் அவர்கள் மாதரும் சொல்லக் கேட்டுப் பரவசமடைந்திருக்கிறாள்.

பாதி நாட்கள் கீழ்த்திசையிலிருந்தும் மேல் திசையிலிருந்தும் வந்து தூரத்தே தங்கியிருந்த மரக்கலங்களிலிருந்து படகுகளில் வந்த நானாவிதமான மனித இனங்களைப் பார்த்துக் கொண்டே இரவில் நீண்ட நேரம் தோப்பின் பக்கத்தில் அவள் நின்றதும் உண்டு. செங்குத்துக் குல்லாய்களை அணிந்த செந்நிற அராபியர், கட்டைக் கரியினும் கரியஉடலைத் தாங்கிய நெட்டை நீக்ரோக்கள், குள்ளமாயிருந்தாலும் மின்னிய சிறு கண்களுடைய சீனர்கள், இவர்கள் கூட்டம் கூட்டமாக இறக்குமதிப் பொருள்களுடன் கரைக்கு வந்து, அங்கிருந்து நகர உட்பகுதியிலிருந்த அங்காடிக்குச் செல்வதைப் பார்த்திருக்கிறாள். சில அராபியர்கள் கரையோரமாகவே கூடாரங்களை அமைத்துக் கொண்டு நாட்கணக்கில் தங்கி மல்லைக் கடலிலிருந்து பாரதத்தின் இணையிலா வெண்ணிற ஆடைகளையும் முத்து, பவளம், வைர வைடூரியங்கள் முதலியவற்றையும் வாங்கிச் செல்வதையும் பார்த்திருக்கிறாள். இத்தனையிலும் மாமல்லபுரத்தின் கரையிலும் சரி, நகரத்துக்குள்ளும் சரி, சதா காவலர் நடமாட்டம் இருந்ததால் யாரும் எந்தப் பயமுமின்றி எங்கும் நடமாட முடிந்தது. பல்லவ சாம்ராஜ்யத்தில் இருந்த பாதுகாப்பின் காரணமாக எந்த நேரத்திலும் பொது நந்தவனங்களுக்கும் பொதுத் தோப்புகளுக்கும் பூரண ஆபரணமணிந்த யுவதிகள் போக முடிந்ததால் மக்கள் அதை சாம்ராஜ்யத்தோடு இணைத்துப் பேசினார்கள். இந்த நிலையின் விளைவாகவும் கடற்கரையில் கொண்டிருந்த காதலின் காரண மாகவும் சுயமான நெஞ்சுரத்தாலும் மைவிழி பல நாட்கள் இரவில் கடற்கரை ஓரத்தில் நீண்ட நேரத்தைக் கழித்திருக்கிறாள்.

இத்தனை சுதந்திரத்தை அளித்த அவள் தந்தை சில கட்டுப் பாடுகளையும் ஏற்படுத்தியிருந்தார். முதல் ஜாம முடிவுக்குள் அவள் வீட்டுக்குத் தவறாமல் திரும்பிவிடவேண்டும் என்றும் கண்ட புருஷர்களுடன் பேசக்கூடாதென்றும் கடுமையாகத் திட்ட



மிட்டிருந்தார். பெண்ணின் பெயருக்கோ குலத்துக்கோ எந்தவித இழுக்கு வந்தாலும் பிராணனைவிட்டுவிடக்கூடிய அளவுக்கு மானியான அவள் தந்தை இந்தக் கட்டு திட்டங்களை ஒரு நாள்கூடத் தளர்த்தியதில்லை. ஆகவே அன்று அந்த அடர்ந்த தோப்புக்குள் ஒரு ஜாமம் ஓடி இரண்டாம் ஜாமம் துவங்கிவிட்ட சமயத்தில் தன்னெதிரில், அதுவும் அந்த அடர்ந்த தோப்பின் மத்தியில் வந்து நின்ற மகளைப் பார்த்ததும் விவரிக்க இயலாத உணர்ச்சிகள் உள்ளத்தை உடைக்கவே மலைத்து நின்றுவிட்டார் அவள் தந்தை. அவர் அப்படிமலைத்து நின்றது அவள் அச்சத்தை அதிகமாகக் கிளறவே, அவள் மௌனமே சாதித்து மைவிழிகளை நிலத்தில் ஓட்டினாள். அந்தச் சமயத்தில் அவள் தைரியமெல்லாம் எங்கோ எட்டாதூரத்துக்குப் பறந்து போய் விட்டது.

இப்படித் திகைத்து நின்ற இருவரில் முதலில் சுயநினைவுக்கு வந்த மைவிழியின் தந்தை சற்றுத் திடமாக, நிமிர்ந்து நின்று தன்னைத் திடப்படுத்திக் கொண்டார். பிறகு யாரோ மூன்றாவது பேர்வழியை வினவுவதுபோல், ''இளவரசர் உத்தரவு என்ன?'' என்று வினவினார். அவர் குரலில் கடுமை இருந்தது. உள்ளே ஏதோ பெரும் துன்பச் சுமை ஏறிவிட்டதையும் குரலின் பாரம் நன்றாகச் சுட்டிக் காட்டியது.

அவர் குரலில் இருந்த துன்பச் சுமையை மைவிழி கவனிக்கவே செய்தாள். அதன் காரணமும் அவளுக்குப் புரிந்திருந்தது. தன்னை இளவரசன் தூது அனுப்ப வேண்டுமானால் தன்னுடன் அவனுக்கு நெருங்கிய நட்பு ஏற்பட்டிருக்க வேண்டுமென்று தன்னைப் பற்றித் தந்தை விபரீத கற்பனை செய்து கொண்டு விட்டாரென்பதை அவள் சந்தேகமறத் தெரிந்து கொண்டாள். ஆகவே அந்த சந்தேகத்தை நிவர்த்திக்கத் துவங்கி மெல்ல, ''அப்பா!'' என்று அழைத்தாள் ஈனமான குரலில்.

''என்ன?'' வறண்ட குரலில் எழுந்தது அவள் தந்தையின் கேள்வி.

''எனக்கு இளவரசரைத் தெரியாது. இன்றுதான் பார்த்தேன் அவரை'' என்றாள் மெதுவாக.

அவள் தந்தையின் முகம் உணர்ச்சியற்றுக் கல்லாயிருந்தது. ''அதைப்பற்றி நான் ஏதும் கேட்கவில்லை. கேட்ட கேள்வி வேறு'' என்றார் அவர்.

''நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்'' என்றாள் மைவிழி. துக்கத்தில் அவள் தொண்டை அடைத்துக் கொண்டிருந்ததைச் சொற்களின் ஒலி நிரூபித்தது.

''ஆம்'' என்றார் தந்தை.

''என்ன ஆம்?''

''இத்தனை நாள் தவறாகத்தான் புரிந்து கொண்டிருந்தேன்.''

''இப்பொழுது?''

''என் கண்களை நீ திறந்து விட்டாய்.''

இதைக் கேட்ட மைவிழியின் திகில் பறந்தது. ''அப்பா!'' என்று சற்று உரக்கவே கூவி, சீற்றம் ததும்பிய விழிகளை அவர் முகத்தில் நிலைக்கவிட்டாள்.

உணர்ச்சி சிறிதுமற்ற தந்தையின் விழிகளை அவள் விழிகள் தைரியத்துடன் சந்தித்தன. தந்தையின் உதடுகளில் பெரும் வெறுப்பு மண்டிக்கிடந்ததையும் அவள் கவனித்தாள் ''நீ சொல்ல வேண்டியதைச் சொல்லிவிடு'' என்ற தந்தையின் குரலிலும் அந்த வெறுப்பு தொனிப்பதை அவள் உணர்ந்தாள். இருப்பினும் துணிவை வரவழைத்துக் கொண்டு, ''விபரீதமான நிலையில் மல்லை சிக்கிக் கிடக்கிறது இப்பொழுது'' என்று சுட்டிக் காட்டினாள்.

''நமது நிலைமைக்கும் அதற்கும் வேறுபாடில்லை'' என்றார் அவள் தந்தை.

''விபரீத காலங்களில் சாதாரண மனித தர்மத்துக்கும் இடமில்லை'' என்று அவள் கூறினாள் சினம் சிறிதும் தணியாத குரலில்.

''அதை நீ புரிந்து கொண்டது மகிழ்ச்சியைத் தருகிறது.'' தந்தையின் குரலில் இகழ்ச்சியும் வெறுப்பும் கலந்து ஒலித்தன.

''அதனால் தான் இளவரசர் உங்களிடம் தூது போகச் சொன்னதும் ஒப்புக் கொண்டேன்.''

சற்று சிந்தனையிலிறங்கினார் அவள் தந்தை, பிறகு கேட்டார். ''இளவரசர் உன்னைத் தூது அனுப்பிய காரணம்?'' என்று.

தந்தை சிந்திக்கத் தொடங்கியதும் அவர் குரல் சிறிது பதனப்பட்டு விட்டதைக் கண்ட மைவிழி தைரியமாகவே விஷயத்தை விளக்க முற்பட்டு கூறினாள்: ''மூன்று சாளுக்கிய வீரர்கள் இந்தத் தோப்பிலிருந்து கரையருகே வந்து கொம்பு ஊதினார்கள். காஞ்சி சாளுக்கியர் வசமாகி விட்டதாக அறிவித்து, கடலாடிக் கொண்டிருந்த வர்களை நகருக்குள் செல்ல உத்தரவிட்டார்கள். அத்தனை பேரும் போய்விட்டார்கள்.''

காஞ்சி சாளுக்கியர் வசமாகிவிட்ட செய்தி அவள் தந்தைக்கோ தந்தையுடனிருந்த மற்ற இருவருக்கோ எந்தவித வியப்பையும் அளிக்காததைக் கண்டு ஆச்சரியப்பட்டாள் மைவிழி. 'இவர்களுக்கு முன்பே சாளுக்கியர் படையெடுப்பு விவரங்களும் முடிவும் தெரியுமா? தெரிந்திருந்தால் இளவரசருக்கும் தெரிந்திருக்க வேண்டும். தெரிந்துமா



தலைநகரைக் காக்க விரையாமல் கோவில் கட்டுவதில் காலத்தை விரயம் செய்து கொண்டிருந்தார் இளவரசர்!' என்று எண்ணலானாள். அந்த எண்ணங்களால் சிறிது குழம்பவும் செய்தாள். அந்த குழப்பத்தில் விறுவிறு என்று தந்தை விடுத்த கேள்விகளால் இக்கட்டில் சிக்கிக் கொண்டாள் எதிர்பாராதவிதமாக.

''அத்தனை பேர் போனபோது நீ மட்டும் ஏன் கடற்கரையை விட்டுப் போகவில்லை?'' என்று வினவினார் அவள் தந்தை.

''நான் கடற்கரையிலில்லை'' என்றாள் மைவிழி ஏதோ யோசனையில்.

''எங்கிருந்தாய்?''

''மலைப்பாறை மறைவில்.''

''அங்கிருந்து இல்லத்திற்கு ஓடிவிடுவதுதானே?''

''முடியவில்லை. இளவரசர் என் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தார்'' என்று மைவிழி சட்டென்று பேச்சை நிறுத்தினாள். இந்தப் பதிலைச் சொன்ன பிறகுதான் அவளுக்குத் தான் என்ன சொல்லிவிட்டோம் என்பது புரிந்தது. புரிந்ததால் அச்சம் துளிர்த்த கண்களால் தந்தையை நோக்கினாள்.

தந்தையின் முகம் பழைய நிலையை அடைந்து மல்லையின் மலைப்பாறைகளைவிட அதிகக் கடினப்பட்டு உறைந்துவிட்டது. ''சரி, இளவரசர் ஆணை என்ன?'' என்று வினவினார் சீற்றத்துடன்.

''உங்கள் மூவரையும் கடிகைக்குப் போகச் சொன்னார். அங்கு சந்திப்பதாகக் கூறினார்'' என்று பதிலிறுத்த மைவிழி தன் தந்தையுட னிருந்த மற்ற இருவராவது நிலைமையைச் சரியாகப் புரிந்து கொண்டு தனக்கு ஆதரவு தரமாட்டார்களா என்று ஏக்கத்தில் அவர்களை நோக்கினாள். அந்த இருவரில் ஒருவர் தமிழகத்துப் புலவர் பாணியில் முண்டாகம் மேலே பெரும் சரிகைத் துப்பட்டாவும் அணிந்திருந்தார். அவர் முகத்தில் குறுக்கே தீட்டப்பட்டிருந்த சந்தனக் கோடுகளும் புருவத்தின் இடையிலிருந்த குங்குமப் பொட்டும் அவர் வீர சைவர் என்பதைச் சுட்டிக் காட்டின. இன்னொருவர் சீன நாட்டவர். குள்ளமாகவும் சற்றுத் தடித்துமிருந்த உடலுடனும் சப்பை மூக்குடனும் பளிச்சென்று மின்னிய சின்னஞ் சிறு கண்களுடனும் காட்சியளித்தார். உதட்டோரம் சென்று கீழே மடிந்து கிடந்த அவர் மீசை முகத்துக்குப் பயங்கரத்தை அளித்தது அந்த இருவர் பார்வையிலுங்கூடத் தனக்கு ஆதரவும் ஏதுமில்லாததைப் புரிந்து கொண்டாள் மைவிழி. அதனால் உண்டான கிலேசத்தால் பெருமூச்சொன்றையும் வெளியிட்டாள்.

ஆனால் அவள் நிலையைக் கண்டு சிறிதும் பச்சாதாபத்தைக் காட்டாத அவள் தந்தை, ''சரி, வாருங்கள் போவோம் கடிகைக்கு, இங்கு இனி வேலையில்லை'' என்று கூறிக் கொண்டு கிளம்ப முற்பட்டார்.

மற்ற இருவரில் புலவர் போலிருந்தவர், ''இவளை எங்கு கொண்டு போய் விடுவது?'' என்று வினவினார்.

''போகுமிடம் அவளுக்குத் தெரியும். அவளே போவாள்'' என்றார் அவள் தந்தை:

''காலம் கெட்டுக் கிடக்கிறது,'' என்றார் புலவர் போன்றவர்.

''ஆம்!''

''எதற்கும் இவளுக்குத் துணையாக நம்மில் ஒருவர் போனால் என்ன?''

''தேவையில்லை'' என்று கூறிய அவள் தந்தை, ''சரி, புறப்படுங்கள். இந்தத் தோப்பை எதிரிகள் சல்லடை போடுவதற்குள் நாம் போய்விடுவோம்'' என்று கூற மூவரும் புறப்பட்டனர்.

இதை கண்ட மைவிழி தந்தையை மறித்து, ''அப்பா! என்னைத் தனியாக விட்டுச் செல்லாதீர்கள். இருங்கள், தங்களுடன் நானும் வருகிறேன்'' என்று கெஞ்சினாள்.

அவள் கையைப் பலமாக இழுத்துப் பக்கத்திலிருந்த மணல் மேட்டில் தள்ளிய அவள் தந்தை, ''பயப்படாதே மைவிழி! சீக்கிரம் இளவரசர் துணைக்கு வருவார்'' என்று கூறிவிட்டு மற்றவர்கள் பின் தொடரத் தோப்புக்குள் புகுந்து வெகு வேகமாகச் சென்றுவிட்டார்.

மணல் மேட்டில் வனதேவதையைப் போல் கிடந்தாள் மைவிழி. எத்தனை பெரிய அவமானம் தன்னை அந்த இரவில் அடைந்து விட்டதென்பதை எண்ணிப் பார்த்த அவள் மணல் மேட்டில் மெல்ல எழுந்து உட்கார்ந்து, தோப்பை வெறித்துப் பார்த்தாள். குடிசை முகப்பிலிருந்த விளக்கின் சுடர்கூட மந்த மாருதத்தில் சலனப்பட்டு அவளைப் பார்த்து நகைப்பதுபோல் இருந்தது அலைந்த அவள் சிந்தைக்கு. இளவரசனை இனித் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை என்று பிரதிக்ஞையும் செய்து கொண்டாள் மனதுக்குள். அந்தப் பிரதிக்ஞையை உடைக்கவோ என்னவோ சற்றுத் தூரத்தில் சவுக்குகளின் இடையில் இளவரசன் அவளை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் அவள் உள்ளம் கொதித்தது. எழுந்து நின்றாள் அவள் அந்த மணற் குன்றின் மீது கம்பீரமாக. இளவரசன் மணல் மேட்டருகே வந்ததும் சற்று எட்டவே நின்று அவளை உற்றுப் பார்த்தான் நிலவின் கிரணங்களில் நீராடிய அவள் உடல் மோகனாகரமாயிருந்தது. நிலவுக்கும் அழகு தரும் நிலவு இவள்'' என்று மனத்துள் கூறிக் கொண்டே இளவரசன் அவளை மெல்ல நெருங்கவும் முற்பட்டான்.

# 4. மையலும் மன்னர் குலமும்

**ம**ணல் மேட்டுக்கருகே வந்ததும், எட்டவே சில விநாடிகள் நின்று தன்னை உற்று நோக்கிய பல்லவ இளவல் மீண்டும் ராஜநடை போட்டு மெல்ல மெல்லத் தன்னை நெருங்க முற்பட்டதைக் கண்ட மைவிழிச் செல்வி, விவரிக்க இயலாத வேதனைக்கும் சங்கடத்துக்கும் சினத்துக்கும் உட்பட்டாளாதலால், அவள் கண்கள் கனலைக் கக்கியதன்றி அவள் அழகிய உதடுகளும், ''நில்லுங்கள் அப்படியே'' என்று சுடு சொற்களை உதிர்த்தன.

கால்களுக்குத் திடீரென்று யாரோ விலங்குகளைப் பூட்டியது போல் அந்தச் சொற்கள் பல்லவ இளவலின் நடையைத் தேக்கி விடவே, சட்டென்று நின்றுவிட்ட அவன் தனது கண்களை மணற்குன்றின் மேல் நின்றிருந்த மங்கை மீது மீண்டும் ஓட விட்டான். தன் கால்களுக்கு விலங்கிடும் வல்லமை அவள் விசித்திர அழகுக்கு எப்படி ஏற்பட்டது என்று சிந்திக்கவும் தொடங்கினான். பாவம், பல்லவ இளவல் எத்தனை அபாக்கியன்! கம்பன் பிறப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்பு பிறந்து விட்டானே! இல்லையேல் மகாகவி கம்பன் தாரைதேர்ந்தெடுத்த பெண்களை 'விலங்கு மெல்லியல்' என்று வர்ணித்திருப்பதைப் படித்திருப்பானல்லவா? படித்திருந்தால் அற்புத அழகுக்கு எந்த ஆண்டவனையும் விலங்கிட்டு அசைவற்று நின்றுவிடச் செய்யும் விசித்திர சக்தி உண்டென்பதைப் புரிந்து கொண்டிருப்பானல்லவா? கம்ப காவியத்திற்கு முன் அவன் பிறந்தாலென்ன, உணர்ச்சியைத் தூண்டும் அந்த ஓவியப் பாவையை மீண்டும் பார்த்துப் பிரமித்து அசைவற்று நின்றான் பல்லவ இளவல் அந்த நேரத்தில்.

நிலவுக் கதிர்கள் அவள் உடலெங்கும் தழுவி செல்ல, நிலவுக்கு அழகு செய்யும் நிலவென யார் மனத்தையும் மயக்கும் மோகன வடிவத்துடன் நின்றிருந்தாள் மைவிழி அந்த மணல் மேட்டின் மீது. வாரிவிட்டு எடுத்துக் கட்டப்பட்டிருந்த வார்குழலின் பின் ஜடை முன்புறம் நின்றிருந்த பல்லவ இளவலின் கண்களுக்குத் தெரியா விட்டாலும், வகிடு எடுத்து அழகாகச் சீவப்பட்ட கரிய குழலின் முன்னுச்சியும் அதிலிருந்து அலைந்து நுதலின் மேல் பகுதியை அடிக்கடி தடவிக் கொடுத்த இரண்டொரு மயிரிழைகளும் அவன் விழிகளுக்கு நன்றாகவே தெரிந்ததால், அவை தன்னை வாவாவென்று அழைப்பதாகவேமனத்தில் கற்பனை செய்து கொண்டான் அவன். முன்னுச்சியைத் தடவிய மயிர்களை அடுத்துப் பிறைமதியென விரிந்த நுதலும், நுதலின் கீழே வளைந்து கிடந்த புருவ விற்களும், அவற்றின் கீழே சதா மை தீட்டப்பட்டவை போல் கறுத்து, திறந்து திறந்து மூடும்

முத்துச் சிப்பிகளெனக் காட்சியளித்த இமைப் பகுதிகளும், அவன் கண்களையென்ன கருத்தையும் கவர்ந்தன. அந்த இமைகளெனும் சிமிழ்களுக்கிடையேபளிச்சிட்ட கருமணிகள் இரண்டு சினத்துடன் தன்னை நோக்கினாலும், அவற்றின் கருமையிலும் ஒரு நீரோட்டமும் ஒளியும் கலந்து, சினத்திலும் அவற்றுக்கு இணையிலா அழகையும் கவர்ச்சியையும் அளித்ததைக் கண்ட இளவல், 'வைரத்தில் கறுப்பு ஜாதி என்பது ஒன்று இருந்தால் இப்படித்தான் இருக்கும்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அந்த இரு கண்களுக்கும் இடையில் நுதலிலிருந்து இறங்கிய நாசி அதிக தீர்க்கமாக இல்லாமல் தேவையான அளவுக்கு இருந்ததையும், கன்னங்கள் மட்டும் மிகமிக வழ வழப்பாகவும் செழித்துக் கிடந்ததையும் கண்ட இளவரசன், அந்தக் கன்னங்களில் ஒன்றை, தலையிலிருந்து இறங்கி முத்தமிட்டுக் கொண்டிருந்த இரட்டை முத்துச்சரம் எத்தனை அதிர்ஷ்டம் வாய்ந்தது என்று எண்ணிப் பார்த்தான். அந்தக் கன்னங்களின் அழகுகளைத் தூக்கியடிக்கும் அவள் மதுர அதரங்களின்சிவப்பையும் அவையிரண்டும் குவிந்த போது தெரிந்த நீரோட்டத்தையும் கண்டு, 'பல்லவ வம்சத்தின் இணையிலாச் சொத்தும், என் தந்தையின் மார்பிலுள்ள ஆரத்தில் பதிந்து ஆடுவதும் ஆன உக்ரோதயம் என்ற ஜீவ மாணிக்கங் கூட இவள் அழகிய அதரங்களுக்கு ஈடாகாது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அந்த மாணிக்க அதரங்கள் அவனுக்கு மதி மயக்கம் அளித்தனவென்றால், அவள் சங்குக் கழுத்தும், கழுத்தின் கீழே அவனை நோக்கிச் சினத்துடன் சீலை மறைவிலிருந்தே முறைத்த இரட்டை அழகுகளும் அவன் சிந்தையை அடியோடு நிலைகுலைய அடித்தன. அதுவரை அவன் பார்வையைப் பொறுத்துக் கொண்டிருந்த மைவிழி சட்டென்று மணல் மேட்டில் தன் கையை ஒரு புறம் ஊன்றிக் கால்களையும் சற்று நெருக்கிக் கொண்டு அரைவாசி சாய்த்த வண்ணம் உட்கார்ந்தாள்.

அவள் செய்த தவறு அதுதான். அப்படி அவள் மணல் மேட்டில் உட்கார்ந்து ஒருபுறம் சாய்ந்து இடது கையை மணலிலும் ஊன்றிக் கொண்டதால், நின்ற நிலையிலிருந்ததைவிட அதிக ஊகங்களுக்கு அவள் அழகு இடம் கொடுக்கலாயிற்று. கட்டு மீறிய மனத்தை ஒரு கட்டுக்குக் கொண்டுவர முயன்ற இளவரசன், அவள் பாதங்கள் மீதும் காலிலிருந்த சதங்கைகள் மீதும் கண்களை ஓடவிட்டான். இருப்பினும் கண்களுக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை. மேலே நோக்கின பண்பாட்டையும் மீறி.

கண்களையும் மனத்தின் கற்பனையையும் கட்ட முடியாத இளவரசன் சொற்களால் தன்னைச் சரிப்படுத்திக் கொள்ள முயன்று ''மைவிழி'' என்று மெல்லப் பேச்சைத் துவக்கினான்.



சற்றுச் சாய்ந்து உட்கார்ந்த நிலையிலும் கல்லில் செதுக்கப்பட்ட சிற்பம் போலவே காணப்பட்ட மைவிழி தலையை நிமிரவில்லை இளவரசனின் கண்கள் தன் உடலை ஊடுருவியதால் பெரிதும் நிலை குலைந்து மணலை நோக்கியவாறு கேட்டாள், ''என்ன?'' என்று.

அந்தக் கேள்விக்கு அவன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சில விநாடிகள் திணறினான். அதிகச் சதை பிடிக்காமல் மெல்லியதாயிருந்தாலும் இரும்பு போலிருந்த அவன் உடல் சற்றுச் சங்கடத்துடன் அசைந்தது. சதா தைரியலட்சுமி தாண்டவமாடும் அவன் கண்களில்கூட அதைரியமே தெரிந்தது அப்பொழுது. *வில் வித்தையில் நிகரற்றவனென்று பிரசித்தி பெற்ற பல்லவ இளவலின் நீள்கரங்கள் அன்று ஒன்றையொன்று பற்றிக் கொண்டன. உறுதியான கால்களும் அசைந்து சவுக்குத் தோப்பு மணலில் கோடுகளைப் போட்டன. மகாவீரனானபல்லவ இளவல் தன் முன்பு மனம் திண்டாட இதயம் சிதைந்து நிற்பதை வேறு சமயத்தில் மைவிழி பார்த்திருந்தால் அப்படியே குழைந்து போயிருப்பாள். ஆனால் அந்த இரவில் தந்தையின் சுடு சொற்களால், சொற்கள் விளைவித்த அவமானத்தால், அவள் இதயம் நைந்திருந்ததால் அவன் சங்கடத்தை சிறிதும் லட்சியம் செய்யாமலே, ''என்ன?'' என்று இரண்டாம் முறையும் பழைய கேள்வியைத் திருப்பினாள் சீற்றத்துடன்.

அவன் மேலும் மௌனமே சாதித்தான். அவள் சாய்ந்து உட்கார்ந்திருந்த இடத்திற்கருகே வந்து சற்றுத் தள்ளி மணலில் அவளுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு உட்கார்ந்தான். பிறகு அவளைத் திரும்பியும் பார்க்காமல் சற்றுத் தூரத்தில் அரைவாசி எழுப்பப் பட்டிருந்த மண்டபத்தைப் பார்த்தான். அதன் தூணொன்றாக அமைக்கப்பட்டு முன்னங்கால்கள் இரண்டைத் தூக்கிக் கொண்டு பின்னங்கால்களால் நின்று பெருவிழிகளால் பயங்கரப் பார்வை பார்த்த யாளியையும் பார்த்தான். அந்த யாளியைப் பார்த்ததும் அவன் சிந்தையிலிருந்த வேதனை சிறிது விலகியிருக்க வேண்டும். அந்த யாளியில் அவன் கண்ட சிற்பத் திறன் சிந்தைக்குச் சிறிது அமைதி அளித்திருக்க வேண்டும். அதன் விளைவாக அடுத்து எழுந்த அவன் கேள்வி நிதானமாகவே எழுந்தது. ''உன் தந்தை எங்கே?'' என்று கேட்டான் அவன் மெதுவாக.

---

* *May Rajasimha the conqueror in battle, the wonderful Archer (Chitramuka) protect the earth - Rajasimheswara Inscription - by E. HULTSCH, Ph. D. Published in 1886-87.*

மைவிழிக்கு அவன் முதுகைக் காட்டிக் கொண்டிருந்ததால் அவள் சாய்ந்த நிலை நீங்கிச் சற்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். அவன்மீது அத்தனை கோபமிருந்த சமயத்திலும் அவன் கழுத்தும் முதுகும் எத்தனை உயரம் வாய்ந்தவை என்பதைக் கவனிக்கத் தவறவில்லை அவள். தலையில் வெட்டிவிடப்பட்ட மயிரின் முரட்டுத்தனத்தையும் கவனிக்கவே செய்தாள். அவற்றில் மீண்டும் தன் மனம் ஈடுபடாம லிருக்க எட்ட இருந்த மண்டபத்தை அவளும் கவனித்துக் கொண்டே சொன்னாள், ''நீங்கள் போகச் சொன்ன இடத்துக்குப் போய்விட்டார்'' என்று.

''மற்ற இருவர்?'' இரண்டாவது கேள்வியும் உணர்ச்சி எதையும் காட்டாமல் எழுந்தது பல்லவ இளவலிடமிருந்து.

''தந்தையைத் தொடர்ந்து சென்றார்கள்.'' மைவிழியின் மனத்துள் உணர்ச்சிகள் பொங்கிக் கொண்டிருந்தாலும் குரலில் ஏதும் தெரியவில்லை.

''உன்னைத் தனியாகவா விட்டுச் சென்றார்கள்?''

''ஆம்.''

இதுவரை சாதாரணமாகக் கேள்வி கேட்டுவந்த இளவரசன் திடீரென்று உட்கார்ந்த நிலையிலேயே அவளை நோக்கித் திரும்பினான். ''மிக அழகாயிருக்கிறது'' என்று சீற்றம் மிகுந்த சொற்கள் அவன் உதடுகளிலிருந்து உதிர்ந்தன.

முகத்தை நிமிர்ந்து அவனை நன்றாக நோக்கினாள் மைவிழி. ''எது அழகாயிருக்கிறது?'' என்றும் வினவினாள் இகழ்ச்சியுடன்.

''இரவு நேரத்தில், யாருமற்ற தோப்பில், வயது வந்த பெண்ணை ஒரு தந்தை தனியாக விட்டுப் போவது'' என்றான் பல்லவ இளவல்.

அவன் குரலில் தந்தையின்மீது வெறுப்பும் கோபமும் ஒலித்ததைக் கவனித்தாள் மைவிழி. ''தனியாக விடவில்லை பல்லவ மகாபிரபு'' என்று இகழ்ச்சியுடன் அவளும் பதில் சொன்னாள்.

''யாரைத் துணைவிட்டுப் போனாரோ?'' இளவல் சொற்களிலும் இகழ்ச்சி ஒலித்தது.

''துணை விட்டுப் போகவில்லை.''

''அப்படியானால்?''

''துணை வரும் என்று சொன்னார்.''

''யார்?''



''இளவரசர் துணைக்கு வருவார் என்று சொல்லிப் போனார்.'' இதைச் சொன்ன மைவிழி வேதனையுடன் தலையைக் குனிந்து கொண்டாள். குந்தி உட்கார்ந்த நிலையில் மணலை அவள் கண்கள் வெறித்துப் பார்த்தன. இளவரசன் மதியிலும் மெல்ல உண்மை உதயமானதால் அவன் திடுக்கிட்டான். இருப்பினும், அவள் அகப்பட்டுக் கொண்ட விபரீத நிலை எத்தனை தூரம் போயிருக்கிற தென்பதை உணரவும், அவள் தந்தையின் மன வேகத்தை முழுதும் புரிந்து கொள்ளவும் முயன்ற இளவல் கேட்டான், ''நான் வருவேனென்பது அவருக்கு எப்படித் தெரியும்'' என்று. அவன் உள்ளம் குமுறினாலும் குரல் அதைக்காட்ட வில்லை.

மைவிழி தலையை மெல்ல நிமிர்ந்தாள். அவள் அழகிய விழிகளும் சீற்றத்தைக் கக்கின. ''மனித சுபாவம், அதுவும் மன்னர் குலத்தின் சுபாவம் அவருக்கு நன்றாகத் தெரியும்'' என்று கூறிய மைவிழியின் சொற்கள் மிகுந்த வெறுப்புடனும் கோபத்துடனும் உதிர்ந்தன.

பல்லவ இளவல் அவளை நன்றாக ஏறெடுத்து நோக்கினான். ''மன்னர்குலம் அத்தனை மோசமானதா?'' என்று வினவினான் சற்று இரைந்தே.

''ஆம்'' என்றாள் மைவிழி.

''உனக்கு எப்படித் தெரியுமோ? சேச்சே! அனாவசியக் கேள்வி. உன் தந்தை போல் உனக்கும் மனித சுபாவம் தெரிந்திருக்க வேண்டும்'' என்ற பல்லவ இளவல் நகைத்தான் மெதுவாக.

மைவிழியின் இதழ்களிலும் இகழ்ச்சி நகை அரும்பியது. ''மனித சுபாவத்தை நான் புதிதாக அறியத் தேவையில்லை. அதற்காகப் பெரிய ஆராய்ச்சியும் தேவையில்லை. அதிலும் மன்னர்களைப் பற்றி அறிய அதிக முயற்சி தேவையில்லை.''

''ஏன்?''

''சான்றுகள் இருக்கின்றன பல்லாண்டு பல்லாண்டுகளாய்.''

''என்ன சான்றுகள்?''

''வரலாற்றுச் சான்றுகள். இரண்டு மூன்று மனைவிமார்களும் மற்றும் பலஆசை நாயகிகளும் ஒவ்வொரு மன்னனுக்கும் இருந்திருக்கிறார்கள்.''

இளவரசன் சிந்தித்தான் சிறிதுநேரம். ''நீ கூறுவது உண்மைதான். ஆனால் எல்லா மன்னரும் அப்படியிருந்ததில்லை. ராமபிரானைப் போன்ற மன்னர்களும் இருந்திருக்கிறார்கள்'' என்று சுட்டிக் காட்டினான் மெல்ல.

மைவிழி இகழ்ச்சியாக நகைத்தாள். "அத்தகைய லட்சிய மன்னர் வரிசையில் நீங்களும் ஒருவர் போலிருக்கிறது?" என்று கேட்கவும் செய்தாள் ஏளனத்துடன்.

"ஆம். அதற்கும் சான்றுகள் உண்டு" என்றான் இளவரசன்.

"என்ன சான்றுகள்?" வியப்பு மண்டிய விழிகளால் இளவரசனை நோக்கினாள் மைவிழி.

அவளைத் தைரியத்துடன் நோக்கினான் பல்லவஇளவல். அவன் சொற்களும் தங்கு தடையின்றி வெளிவந்தன. "என் மனம் கண்ணியத்தை நாடாவிட்டால் மல்லைக் கடலுக்குத் தினம் தினம் வந்து கொண்டிருந்த உன்னைக் கண்களால் கவனிப்பதோடு நின்றிருக்க மாட்டேன். என் எண்ணங்கள் பரிசுத்தமாயிரா விட்டால், நான் பாராததாக நினைத்துக் கொண்டு 'கூர்ந்து கூர்ந்து என்னை நோக்கிய உன்னை நான் என்றோ அணுகியிருப்பேன். அணுகி ஆசை வார்த்தைகள் பேசியிருப்பேன். உன் தந்தையை அறிந்த நான் உன் இல்லத்துக்கு அடிக்கடி வந்து உன் தந்தையைப் பார்க்கும் காரணத்தை வைத்துக் கொண்டு உன்னைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்திருப்பேன். நீ தனித்து இரவுகளில் பரதவர் கூத்தையும் கொம்மாளத்தையும் பார்க்கப் போன நாட்களில் நானும் தற்செயலாக அங்கு வந்தது போல் வந்திருப்பேன். வந்து உன்னுடன் உட்கார்ந்து பரதவர் ஆடும் காதற் கூத்துக்களை ரசித்திருப்பேன். நீ கடலாடிய சமயங்களில் நானும் கடலாடி அலைகளில் மூழ்கி உன்னருகில் நெருங்கி வந்திருப்பேன். இப்படிப் படிப்படியாகப் பரிச்சயம் செய்து கொண்டிருப்பேன். இது எதையுமே நான் செய்யவில்லை. ஏன்?" என்று கேட்டுச் சற்று நிதானிக்கவும் செய்தான் பல்லவ இளவல்.

அவன் சொல்வதில் பேருண்மைகள் இருப்பதைக் கவனித்த அவள் சிறிது அச்சம் கொண்டாள். இரவில் தனித்து வந்த தன்னை இஷ்டப்பட்டிருந்தால், அவனுக்கிருக்கும் சக்திக்கு, அதிகாரத்துக்கு, ஆணவத்துக்கு அவன் என்றோ தன்னைத் தூக்கிக் கொண்டு போயிருக்கலாமென்று நினைத்தாள். அதை நினைத்த போது அவளுக்கு அவனிடத்தில் பெரும் மதிப்பு ஏற்பட்டது. தவிர, அத்தனை உணர்ச்சிகளையும் அடக்கிக் கொண்ட அவனிடம் பரிதாபமும் ஏற்பட்டது. 'ஏன் இவர் என்னைத் தூக்கி கொண்டு போகவில்லை?' என்ற கேள்வியையும் உள்ளூர அவள் கேட்டுக் கொண்டாள். 'தூக்கிக் கொண்டு போயிருந்தால்...?' என்று கேள்வியைத் துவக்கிய அவள் மனம் கேள்வியை நீட்ட முடியாமல் வெட்கத்திலும் பெரும் சங்கடத்திலும் சிக்கிக் கொண்டது.



மீண்டும் தலையைக் குனிந்து முழந்தாள்களைக் கையால் கட்டிக் கொண்டு அவற்றில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். நீண்ட நேரம் அவள் ஏதும் பேசவில்லை. எத்தனை கண்ணிய புருஷனை எப்படி எப்படி எண்ணிவிட்டேன் என்று நினைத்து நினைத்து நெஞ்சுருகினாள் அவள். அத்தனை நெஞ்சுருக்கத்தில் அவளுக்கு அவன் மீதிருந்த வேட்கை அதிகப்பட்டது. 'மன்னர் குலத்தில் எத்தனை சிறந்தவர்களிருக்கிறார்கள்! உதாரணமாக இவரே இருக்கிறாரே?' என்று ஏதேதோ எண்ணினாள். தன்னைப் பெரிதும் வெறுத்துக் கொள்ளவும் செய்தாள். 'தந்தையும் போய்விட்டார், அடுத்து இவர் என்ன செய்யப் போகிறார்? இந்த மணற் குன்றிலேயே இரவை ஓட்டிவிட முடியுமா?' என்று சில கேள்விகளையும் எழுப்பிக் கொண்டாள்.

அந்தக் கேள்விகளுக்கும் அவள் வேட்கைக்கும் விடை கூறுவது போல் அடுத்து நேர்ந்தது அவளுக்கு வியப்பையும் திகைப்பையும் ஒருங்கே தரும் ஒரு நிகழ்ச்சி. திடீரென உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்த பல்லவ இளவல் ஒரே எட்டில் அவளை அடைந்து தனது இருகைகளாலும் அவளை வாரித் தூக்கிக் கொண்டு அடுத்திருந்த குடிசையை நோக்கி ஓடி அதற்குள்ளே நுழைந்து விட்டான். நுழையும்போது குடிசையின் முகப்பிலிருந்த விளக்கையும் ஊதி விட்டான். மைவிழி வெலவெலத்துப் போனாள். மையலைப் பற்றியும் மன்னர் குலத்தைப் பற்றியும் தான் நினைத்தது எத்தனை சரியென்பதை மறுபடியும் எண்ணினாள். எண்ணி எண்ணி ஏங்கினாள். விஷயம் அத்துடன் நிற்கவில்லை. அவள் முற்றிலும் எதிர்பாராத விபரீத நிகழ்ச்சிகள் மிகத் துரிதமாகத் துவங்கின.

## 5. பல்லவ நாட்டு மண்

**ப**ல்லவ இளவல் முற்றும் எதிர் பாராத விதமாகத் திடீரெனத் தன்னை அணுகியதாலும், பலமான கரங்களால் தன்னைத் தூக்கி விட்டதாலும் திகைப்படைந்த மைவிழிச் செல்வி, அவன் தன்னைத் தூக்கிக் கொண்டு குடிசைக்குள் நுழைந்ததன்றிக் குடிசை விளக்கையும் ஊதிவிட்டதையும் கண்டதும் விவரிக்க இயலாத பலவித உணர்ச்சிகளுக்கு இலக்கானாள் தன்னைத் தூக்கிய போது மணலுக்கும் தனது கால்களுக்கும் இடையே பாய்ந்த அவன் வலது கையின் உரமும் முதுகைத் தாங்கிக் கொண்ட இடது கையின் லாவகமும் அத்தனை திகைப்பிலும் தனக்குச் சிறிது இன்ப உணர்ச்சிகளை ஊட்டியதையும், தன்னைத் தூக்கிய பிறகு அவன் வயிற்றில் அழுந்திவிட்ட தனது பின்னெழில்களிலொன்று சங்கடமான லாகிரியைச் சித்தத்தில் உலாவ

விட்டதையும் உணர்ந்த மைவிழிச் செல்வி தனது மன வலிமையைப் பற்றிப் பலத்த சந்தேகங் கொண்டாள்.

அவன் தன்னைத் தூக்கிக்கொண்டு மணல் மேட்டில் இறங்கிய போது மிதமிஞ்சிய கோபத்தின் காரணமாக, 'இடது கையால் அவன் தோளைப் பற்றிக் கொள்ள இஷ்டப்படாமல் கையைப் பலவீனமாகக் கீழேயே தொங்கவிட்டு விட்டதால், அவன் ஓடிய வேகத்தில் அழுந்திய தன் உடலின் எழுச்சி எழிலொன்று அவன் மார்புடன் ஒருமுறை மோதியதன் விளைவாகத் தன் மனத்தில் அனாவசியமாகக் களிவெறி ஏறுவதையும் உணர்ந்தாள் அக்காரிகை. ஆனால் அவன் குடிசைக்குள் நுழைந்ததும் நுழைந்து விளக்கை ஊதியதும் அந்த உணர்ச்சிக ளெல்லாம் திடீரெனப் பறந்து அச்சத்துக்கு இடங்கொடுக்கவே அவன் கையலிருந்து சற்றுத் திமிறினாள் அவள் கீழே இறங்குவதற்காக. இரும்புக் கரங்கள் அவளை அசைய வொட்டாமல் பற்றி நின்றன. அதே நிலையில் இளவரசன் பல வினாடிகள் நின்றுவிட்டுப் பிறகு தொப்பென்று அவளைக் கீழேபோட்டான். காலை முடக்கிக் கொண்டு தரையில் விழுந்து எழுந்த அவள் சீற்றத்துடன் பேசத் துவங்கியபோது அவள் கழுத்தைத் தன் இடது கையால் வளைத்து வலது கையால் அவள் வாயைப் பொத்திய பல்லவ இளவல், ''ஏதும் பேசாதே, சற்றுப் பொறு!'' என்று அதிகாரத்துடன் கூறிவிட்டுப் பூனைபோல் நடந்து வெளியே சென்றுவிட்டான்.

மைவிழிச் செல்வி குடிசையின் தரையில் உட்கார்ந்து கொண்டு ஏதேதோ யோசிக்கலானாள். இளவரசரின் துரித நடவடிக்கை களிலிருந்தும் போக்கிலிருந்தும் அவன் எண்ணத்தில் ஏதும் கெடுதலில்லை என்பதும் ஏதோ அபாயத்தை அவன் எதிர் பார்க்கிறா னென்பதும் அவளுக்கு மெள்ள மெள்ளப் புலனாகவே அவன்மீது கொண்டிருந்த தவறான சந்தேகத்தையும் சீற்றத்தையும் ஓரளவு தணித்துக் கொண்டாளானாலும், நள்ளிரவு நெருங்கும் நேரத்தில் குடிசையில் அவனுடன் தனித்திருப்பது பெரும் பயத்தையே அளித்தது அவளுக்கு. எந்த இளவரசன் தன்னைத் தொடமாட்டானா என்று பலநாள் ஏங்கிக் கொண்டிருந்தாளோ அந்த இளவரசன் உண்மையாகவே தொட்டுவிட்ட சமயத்தில், தொட்டுத் தூக்கியும் வந்து விட்ட வேதனையில் இன்பத்துடன் அதிகக் கிலிக்கும் உட்பட்டாள் மைவிழிச் செல்வி. 'நாம் அற்புதம், பேரின்பம் என்று நினைக்கும் நிகழ்ச்சிகள் உண்மையாக கிட்டும்போது ஏன் இத்தகைய அதிர்ச்சி ஏற்படுகிறது?' என்று தன்னைத்தானே வினவிக் கொள்ளவும் செய்தாள் அவள். அந்த நேரத்தில், 'எத்தனை நாட்கள் இவரை மறைவிலிருந்து பார்த்திருக் கிறேன்? எத்தனை நாட்கள் இவருடன் கடலாட மாட்டோமா,



இணைந்து விளையாட மாட்டோமா என்று ஏங்கியிருக்கிறேன். எத்தனை நாள் இவருடன் தனிமையிலிருக்க எனது இதயம் துடித்திருக்கிறது? அதே இதயம் இந்தத் தனிமையில் ஏன் இப்படி அஞ்சுகிறது? அவரிடமிருந்து ஏன் விலகி ஓடப் பார்க்கிறது?' என்று கேள்விமீது கேள்வியாகச் சிந்தையில் எழுப்பிக் கொண்டாள். 'இத்தனைக்கும் காரணம் சமுதாயம், சம்பிரதாயம். நாலுபேர் பார்க்கத் திருமணம் என்று நடந்து விட்டால் இப்பொழுது என் மனத்தில் பயத்துக்கு பதில் எத்தனை துணிவிருக்கும்?' என்றும் தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள். தனக்கு இருக்கக்கூடிய துணிவையும் துணிவினால் இயங்கக்கூடிய நிகழ்ச்சிகளையம் எண்ணியதால் பெரும் நாணமடைந்து அவள் முகம் சிவந்தது. அந்தச் சிவப்பைப் திரும்பி வந்து கொண்டிருந்த பல்லவ இளவல் பார்த்துவிடப் போகிறானென்ற அச்சத்தில் குடிசையின் மையிருட்டு அந்தச் சிவப்பை மறைத்திருந்தது.

அந்தச் சமயத்தில் மீண்டும் குடிசைக்குள் வந்த பல்லவ இளவல், ''மைவிழி!'' என்று மெல்ல அழைத்தான்.

அதுவரை இருந்த எண்ணத்தால் ஏற்பட்ட துணிவெல்லாம் பறந்தது மைவிழியின் சித்தத்திலிருந்து. ''ஏன்?'' என்று அச்சத்தின் ஒலி கலந்த சொல்லொன்று மெல்ல வெளிவந்தது அவள் வாயிலிருந்து.

''எழுந்திரு'' என்றான் பல்லவ இளவல்.

''எதற்கு?'' மைவிழிச் செல்வியின் கேள்வி சந்தேகத்துடன் எழுந்தது.

''சொன்னதைச் செய், பதில் பேசாதே!'' இளவலின் குரலில் உத்தரவின் திட்டம் இருந்தது.

மைவிழிச் செல்வி மெல்ல எழுந்திருந்தாள். ''இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?'' என்று வினவினாள்.

அவன் உடனடியாகப் பதில் சொல்லாமல் சிறிது யோசித்தான். கடைசியாகத் தடுமாற்றத்துடன் சொன்னான். ''விதி வசத்தால் இன்றிரவில் நாமிருவரும் தனித்து விடப்பட்டிருக்கிறோம்'' என்று.

''விதி வசத்தாலா, முன்னேற்பாட்டினாலா?'' என்று கேட்டாள் மைவிழி.

''இதில் என்ன முன்னேற்பாடு இருக்க முடியும்?''

''இல்லையேல் என் தந்தையிடம் என்னை ஏன் தூதனுப்ப வேண்டும்?''

''தந்தையிடம் தூது செல்ல மகளைவிட நம்பிக்கையானவர் யார் இருக்க முடியும்?''

''தங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானது எப்படி என்று என் தந்தை சந்தேகிப்பாரென்பது உங்களுக்குத் தெரியாதா?''

''அதை யோசிக்க அவகாசமில்லை. சாளுக்கியரின் திடீர் வரவு என் ஏற்பாடுகளை மாற்றிவிட்டது. இருப்பினும் என்னை எத்தனையோ நாட்களாகப் புரிந்து கொண்டவரும், பல்லவர்களின் சிறந்த வீரரும் உயர்ந்த மனிதருமான உன் தந்தை இந்திரவர்மர், சாதாரண மனிதர்களின் அற்ப எண்ணங்களுக்கு இடங் கொடுப்பாரென நான் எதிர்பார்க்க வில்லை.''

''வேறு என்ன எதிர்பார்த்தீர்கள்?''

''உன்னைக் காஞ்சிக்கு உடன் அழைத்துச் செல்வார் என்று எதிர்பார்த்தேன்.''

இதைக் கேட்ட மைவிழிச் செல்வியின் ஆத்திரம் அதிக மாகவே, ''பொய், பொய், சுத்தப் பொய்'' என்று கூவினாள்.

இளவலின் பதில் திட்டமாக வந்தது ஒரே சீரான குரலில். ''மைவிழி! நான் சொல்வது பொய்யென்று எவரும் கூறியதில்லை: கூறியிருந்தால் பிழைத்திருக்கவும் முடியாது. நீ அதற்கு விதிவிலக்கு. வீரரான உன் தந்தை அவரது இளவரசன் மீது தவறான எண்ணங் கொள்ளமாட்டார் என்று நினைத்ததாலேயே உன்னைத் தூது அனுப்பினேன். கால தாமதத்தால் விளையக்கூடிய விபரீதங்களைத் தடுக்கவும் பக்கத்திலிருந்த உன்னை அவசரமாகத் தூது அனுப்புவது அவசியமாயிற்று. ஆனால் உன் தந்தை வீண் சந்தேகத்தால் உன்னை இங்கேயே விட்டுப் போனார். நீ இங்கிருப்பது எனக்குத் தெரியாததால் நான் வந்தேன்.''

மைவிழி அவன் சொற்களை நம்பவில்லை. ''இந்தக் குடிசையில் உங்களுக்கு என்ன வேலை இந்த இரவில்?'' என்று வினவினாள் கோபத்துடன்.

இளவரசன் புன்முறுவல் கொண்டான். இருட்டு புன்முறுவலை மறைத்தாலும் சொற்களில் நகைப்பு தொனிக்கவே செய்தது. ''இந்தக் கேள்வியை உன் தந்தையிடமே கேட்டிருக்கலாமே'' என்றான் இளவல்.

அப்பொழுதுதான் இந்தக் குடிசை ஏதோ காரணமாகப் போடப்பட்டிருக்கிறது என்ற உண்மை மைவிழிக்குப் புரிந்தது. 'ஆமாம். என் தந்தை எதற்காக வீட்டைவிட்டு இங்கு வந்து இரவில் இன்னும் இருவருடன் உட்கார்ந்திருந்தார்?'' என்று தன்னைத்தானே கேட்டுக் கொள்ளவும் செய்தாள்.



அவள் மனத்திலோடிய எண்ணங்களை இளவல் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஆகவே, ''இப்பொழுது உண்மை உதயமாகிறது உன் இதயத்தில். பல்லவ நாட்டு மாவீரர்களில் ஒருவரான உன் தந்தை இரவில் இக்குடிசைக்கு வரலாமென்றால் இளவரசனும் வரலாமல்லவா? சொந்தப் பெண் குடிசைக்கு வருவாளென்பதை அவர் உணராவிட்டால் அந்தப் பெண்ணை நிர்க்கதியாக விட்டுப் போக மாட்டாரென்றும் பெண் அங்கு இருக்கமாட்டாளென்றும் இளவரசனும் எண்ணலாமல்லவா?'' என்று வினவவும் செய்தான் அவன்.

மைவிழியின் மனத்தில் பெருத்த குழப்பம் ஏற்பட்டது. இளவரசன் சொன்னதில் உண்மையிருப்பதைப் புரிந்து கொண்டாள் அவள். தனக்குப் புலனாகாத பல மர்மங்கள் அவன் வரவில் புதைந்து கிடப்பதை உணர்ந்தும் கொண்டாள். அவற்றைப் பற்றி அறியக் கேட்டாள், ''மாமல்லபுரத்தில் மாளிகைகள் இருக்க, நீங்களும் தந்தையும் கூடிப் பேச இந்த மண் குடிசை எதற்கு?'' என்று.

பல்லவ இளவல் குடிசையின் வாயில் முகப்புக்கு நடந்து சென்று வெளியில் எட்டிப் பார்த்தான் ஒரு வினாடி. மீண்டும் உள்ளே வந்து குடிசையின் முகப்பில் இருமுறை உலாவினான். பிறகு திடீரெனக் கேட்டான்: ''மைவிழி! மண் குடிசையைப் பற்றிக் கேட்டாய். மலைப் பாறைகளைப் பற்றிக் கேட்க வில்லையே?''

''மலைப் பாறையா!''

''ஆம்.''

''அதற்கும் குடிசைக்கு சம்பந்தமென்ன?''

''பல்லவன் மகன் மண் குடிசைக்கு வரும் காரணம் கேட்டாய். பல்லவ சாம்ராஜ்யம் ஆட்டங் கொடுக்கும்போது அதன் இளவரசன் மலைப் பாறையை உடைத்துக் கோயில் கட்டிக் கொண்டிருக்கிறானே, அதற்குக் காரணம் கேட்கவில்லையே! நீ?'' என்றான் பல்லவ இளவல்.

அதுவும் விந்தையாகத்தான் இருந்தது அவளுக்கு. ''ஆம். ஆம். அதைக் கேட்கவில்லைதான்''என்றாள்.

பல்லவ இளவல் சில வினாடிகள் மௌனம் சாதித்துவிட்டுப் பேசத் துவங்கினான். ''இவற்றையெல்லாம் அறிய, பல்லவ சாம்ராஜ்யாதிபதியான பரமேசுவர வர்மருடைய உள்ளத்தை நீ அறியவேண்டும். அவருடைய மகன் ராஜசிம்ம பல்லவனுடைய மனத்தையும் நீ அறியவேண்டும். சாளுக்கிய விக்கிரமாதித்தன் படையெடுத்து வருகிறதை அறிந்தபோதும் கோவில் திருப்பணிக்கு மகனை அர்ப்பணித்த பரமேசுவர பல்லவ மகாப்பிரபுவின் பரந்த

பக்தியை நீ உணர வேண்டும். சாளுக்கிய விக்கரமாதித்தன் காஞ்சியைத் தாக்குவதனால் காஞ்சியின் கலைச்செல்வம் அழிந்து விடுமே என்பதற்காகத் தலைநகரைத் துறந்து வெளியேறிவிட்ட பல்லவ மன்னனின் கலை உள்ளத்தையும் தியாகத்தையும் நீ அறிந்து கொள்ளவேண்டும். போருக்குச் செல்லத் துடிக்கும் கரங்களைத் தந்தை சொல்லுக்காகக் கட்டி வைத்துக் கொண்டு சிற்பியுடன் கடல் மல்லையில் காலங் கழித்து வரும் ராஜசிம்ம பல்லவனின் மனக் குமுறலையும் நீ உணர வேண்டும். இத்தனையும் புரிந்து கொள்வது எளிதல்ல மைவிழி. வீரர்களுக்கே புரியாத விந்தை காஞ்சியில் நடந்திருக்கிறது. சரித்திரம் அறியாத விசித்திரத்தை பரமேசுவர பல்லவர் சிருஷ்டித்திருக்கிறார். அவர் இன்று செய்திருக்கும் தியாகத்தையும் உலகம் உணருமோ உணராதோ தெரியாது. அவர் காத்துள்ள சிற்பச் செல்வங்கள், அவர் ஆணையால் நான் கட்டி முடிக்கப் போகும் கோவில்கள் உணரும்...'' என்று உணர்ச்சியுடன் பேசிக் கொண்டு போன ராஜசிம்ம பல்லவன் சற்றுத் துன்ப பெருமூச் செறிந்தான்.

''அப்படியானால் இன்னும் கோயில் கட்ட உத்தேசமா?'' என்று வினவினாள் மைவிழி வியப்புடன்

''ஆம்.'' ராஜசிம்மனின் பதில் திட்டமாக வந்தது.

''பல்லவர் தலைநகர் விக்கிரமாதித்தன் வசமாகிவிட்டதே.''

''ஆம்.''

''அவன் உங்களைக் கோயில் கட்ட அனுமதிப்பானா?''

''அவன் அனுமதி தேவையில்லை.''

''ஏன்?''

ராஜசிம்ம பல்லவன் சிறிது யோசித்துவிட்டுச் சொன்னான். ''போர் இன்னும் முடியவில்லை'' என்று. அவன் குரலில் நல்ல உறுதி இருந்தது.

''இன்னும் போர் நடக்குமா?'' என்று கேட்டாள் மைவிழி.

''இப்பொழுதுதான் போர் ஆரம்பம்'' என்றான் இளவரசன். அதைச் சொன்ன போது அவன் கையொன்று அவள் தோளை நாடி இறுகப் பிடித்தது. அவன் பிடியின் வலி தாங்க முடியாததால், ''அப்பா!'' என்று மைவிழி முனகினாள்.

பல்லவ இளவல் சட்டென்று கையை எடுத்துக் கொண்டான். ''மைவிழி! அரசியலையும் போர்களையும் சொல்லி உன்னை அச்சுறுத்த நான் விரும்பவில்லை. எனக்கு இன்று மாலை வரை அரசியல் பாரமும் கோவில் கட்டும் பாரமும் தானிருந்து வந்தன. இப்பொழுது உன்னைக்



காக்கும் பாரமும் வந்து சேர்ந்தது'' என்று கூறி பல்லவ இளவல், ''இந்தக் குடிசையைப் பற்றிய விஷயத்தையும் விளக்குகிறேன். சாளுக்கிய விக்கிரமாதித்தன் காஞ்சிமீது படை எடுக்கத் தீர்மானித்த விஷயம் முன்பே எங்களுக்குத் தெரியும். சாளுக்கிய நாட்டில் சதா உலாவிக் கொண்டிருக்கும் நமது ஒற்றர்கள் இரண்டு மாதங்களுக்கு முன்பே படையெடுப்பு விவரங்களைத் தெரிவித்தார்கள். படையெடுப்பு காஞ்சியை அணுகினாலும் என்னை மாமல்லபுரத்தை விட்டு விலகக் கூடாதென்றும் *ஜலசயனன் கோவிலைக் கட்டுமாறும் தந்தை பணித்தார். ஆகவே அப்பணியில் ஈடுபட்டிருந்தேன். காஞ்சியை எதிரிகள் அணுகினால் தாம் காஞ்சியை விட்டுப் போய் விடுவதாக முன்னமே தந்தை அறிவித்திருந்தார் எனக்குப் பிறகு படையெடுப்பு துவங்கியது. சாளுக்கிய ஒற்றர்கள் இங்கு உலாவலானார்கள், ஆகவே நானும் உன் தந்தையும் ரகசியத்தில் பேசவும் மற்ற ஏற்பாடுகளைச் செய்யவும் இந்தக் குடிசையை அமைத்தோம். இங்கு எத்தனையோ இரவுகள் படுத்திருக்கிறேன்'' என்று சொன்னான்.

''இந்தக் குடிசையிலா!'' என்று வியப்புடன் கேட்டாள் மைவிழிச் செல்வி.

''ஆம்.''

''உங்கள் மாளிகையை விட இது உயர்ந்ததா?''

''எத்தனையோ உயர்ந்தது. இங்கு பணி மக்கள் தொந்தரவில்லை. வீண்படாடோபமில்லை. சுதந்திரமிருக்கிறது. சுற்றிலும் இயற்கையிருக்கிறது.''

''தலை கடினமாயிருக்காது?''

''பஞ்சணையின் மென்மையைவிட இந்தத் தரையின் கடினத்தை நான் விரும்புகிறேன்.''

மைவிழி மௌனம் சாதித்தாள் ஒரு வினாடி, பிறகு கேட்டாள்; ''இந்தத் தரையில் என்ன விசேஷம்?''

அதுவரை குடிசை முகப்பிலிருந்த இளவரசன் உள்ளேவந்து அவள் தோளில் அன்புடன் இடது கையை வைத்தான். அவள் காதில் சொன்னான், ''இது பல்லவநாட்டுத்தரை, பல்லவநாட்டு மண். இதை நான் நேசிக்கிறேன்'' என்று.

---

* கடல் அலைகள் காலில் மோத அரங்கன்படுத்த கோயிலாதலால் அதற்கு ஜலசயனம் என்று பெயர். மாமல்லபுரத்துக்குள்ளிருக்கும் இன்னொரு கோயிலில் அரங்கன் பூமியில் படுத்திருப்பதால் அதற்குத் தலசயனம் என்றுபெயர்.

அவள் குரல் குழைந்து கிடந்தது. குனிந்து அவன் பேசிய போது அவள் காதில் அவன் உதடுகளிலொன்று லேசாகப் பட்டது. அவள் உணர்ச்சிகள் புரண்டுகொண்டிருந்தன. அவன் உணர்ச்சிகளும் கட்டு மீறியிருக்க வேண்டும். அவன் இரு கைகளும் அவளைச் சுற்றி வளைத்தன. "இந்தத் தரை கடினமா மைவிழி? பார்க்கிறாயா?" என்று மிக ரகசியமாகக் கேட்டான் ராஜசிம்ம பல்லவன். மல்லைக் கடலலைகளின் இரைச்சலைவிட அவன் உணர்ச்சிகள் பெரிதாக இரைந்து கொண்டிருப்பதை உணர்ந்த மைவிழிச் செல்வி மெல்ல மெல்ல சொர்க்கத்தை நோக்கி இழுக்கப் பட்டாள்.

## 6. களவியல்! காணாத படகு!

ஒரு மனிதன் நல்லவனா கெட்டவனா என்பதைச் சோதனைக் காலம்தான் நிரூபிக்கிறது. அவன் மனம் உரமுள்ளதா உளுத்துப் போனதா என்பதற்கு சோதனை வேளையில் தான் அத்தாட்சி கிடைக்கிறது. குணத்தைப் பாகுபாடு செய்யும் அத்தகைய பெரும் சோதனையில் அந்தச் சித்ரா பௌர்ணமி இரவில், குடிசையின் இருளளித்த மறைவில் சிக்கிக் கிடந்தான் பரமேசுவர பல்லவனின் புதல்வன்.

நீண்ட மெல்லிய உரமான அவனது கைகளிரண்டும் மைவிழிச் செல்வியின் பூவுடலைச் சுற்றி இழைந்த போது, இழைந்து இழுத்தபோது, தான் பாராளும் மன்னன் மைந்தனென்பதையும், அவள் சாதாரண குடியிற் பிறந்த தனது ஒற்றனான இந்திரவர்மன் மகளென்பதையும் அறவே மறந்தான். அங்கு பதவி மறைந்தது, சகலமும் மறைந்தது. இன்ப உணர்ச்சிகள் பெரும் அலைகளென எழுந்து, மல்லைக் கடலலைகள் பௌர்ணமியன்று கரையின் மணலை மூடி மறைப்பது போல் மற்ற உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் அடியோடு மறைத்து விட்டதால், பல்லவ இளவல் அவள் உடலைத் தன்னை நோக்கிச் சற்று நெருங்கியே இழுத்தான். அவனது இடது கை அவள் முதுகின் மேல் பாகத்திலும் வலது கை அவள் மெல்லிய இடையிலும் அழுந்தியபோது அவள் பட்டு உடலின் வழவழப்பினால் தன் கைகள் நிற்காது வழுக்கி விடுமோ என்று சந்தேகித்தான் பல்லவ இளவல்.

அவன் கைகள் லேசாக அவளை நெருக்க முயன்றாலும் அதற்கு மனம் துணிவு கொடுக்காதலால், இருவர் உடலும் பட்டும் படாததுமாக இருந்தாலும், ஓரிரு அசைவுகளின்போது அவன் மார்பில் பட்டுவிட்ட கவர்ச்சிகள் அவனைக் கதிகலங்க அடித்துக் கொண்டிருந்தன. அவள் பூவுடலை எத்தனையோ நாள் பாறை மறைவிலிருந்து அவன் பாராத



சமயங்களில் அவன் பார்த்திருந்தாலும், அவள் உடலின் வளைவுகளையும் எழுச்சிகளையும் எழுச்சி தாழ்ச்சிகளையும் அவன் தனது சிற்பமொன்றில் வடித்திருந்தாலும், தன்னை நெருங்கிவிட்ட அதே பூவுடல், தான் கண்களால் காண முடியாத காரிருளில் தன்னை எத்தனை தூரம் அலைக்கழிக்கிறது என்பதை எண்ணிப் பெரிதும் வியந்தான் பல்லவ இளவல். அதன் விளைவாகவும், உணர்ச்சிகளைத் தாள முடியாத காரணத்தாலும் மெல்லப் பெருமூச்சும் விட்டான்.

பல்லவ இளவலை விடப் பத்து மடங்கு அதிக உணர்ச்சி வசப்பட்டிருந்தாள் மைவிழிச் செல்வி. அவன் கரங்கள் இரண்டும் தன்னை வளைத்தபோதும், பின்புறம் முதுகிலும் இடையிலும் பதிந்த போதும் அவளுக்கு ஏற்பட்ட உணர்ச்சி வேகமும் கிலியும் விவரிக்க இயலாததாயிருந்தன. அவனுடைய இரண்டு உள்ளங் கைகள் தன் முதுகிலும் இடையிலும் பதிந்த போது அந்தக் கைகளின் கடினத்தை அனுபவித்த மைவிழிச் செல்வி, அவைதன் முதுகுப் பகுதியில் தவழ்ந்து தன்னைச் சுற்ற முற்பட்டதும் மெல்ல மெல்லப் பீதி தன் சித்தத்தை விட்டு அகலுவதையும், வேறு உணர்ச்சிகள் தலை காட்டுவதையும் உணர்ந்ததால் ஒரு முறை அவள் மெய் சிலிர்க்கவும் செய்தாள். மறுகணம் தன் உடல் ஏதோ காந்தத்தால் இழுக்கப்பட்டது போல் அவனை நோக்கி மெல்லச் சாய்வதைக் கண்ட அவள், தன் உடலும் சித்தமும் ஏன் தன் சுவாதீனத்திலில்லை என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டு விடை காணாமல் தவித்தாள்.

தரையில் நன்றாக ஊன்றியிருந்த கால்கூட மெல்லத்துவண்டு விடுவது போன்ற பிரமை அவளுக்கு ஏற்பட்டது. அந்தக் குடிசை கடற்கரைத் தோப்பில் அமைக்கப்பட்டிருந்தாலும், அதன் தரை வெறும் மணலாயில்லாமல் சாணமும் செம்மண்ணும் சேர்த்து மெழுகப்பட்ட காரணத்தால் உரத்த கட்டாந்தரையாயிருந்ததையும், லேசாகக் கலக்கப்பட்ட செங்கல் தூள்கள் பல இடங்களில் பெயர்ந்து காலில் குத்துவதையும் கவனித்த அவள், "இந்தக் கட்டாந்தரையில், கட்டாந்தரையின் கடினத்தில், இவர் படுப்பது விந்தையல்ல. இந்த இரும்புக் கரங்களுக்கேற்றபடி உடலுந்தானே இரும்பாயிருக்கும்? இரும்பைக் கட்டாந்தரை என்ன செய்துவிடும்?" என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள். ஆனால் அந்தக் கேள்வி அர்த்தமற்றதென்பதையும் புரிந்து கொண்டாள். அந்த இரும்புக் கரங்கள் தனக்கு அந்தச் சமயத்தில் எத்தனை இன்பத்தை வாரி இறைக்கின்றன என்பதைப் புரிந்து கொண்டதால் அவளும் பெருமூச்செறிந்தாள். பெரும் இக்கட்டான நிலையிலிருந்து மனத்தைத் திருப்பக் குடிசைக்கு வெளியே நோக்கினாள்.

இரண்டாம் ஜாமம் முடிந்து கொண்டிருந்ததால் வெளியே பால் நிலவு பட்டப் பகல் போல் காய்ந்து கொண்டிருந்தது. மணல் மேட்டுக்கு அப்புறத்திலிருந்த இரண்டு முந்திரி மரத்தில், வெளியே நீட்டிய சில முந்திரிப் பழங்கள் மஞ்சளும் சிவப்பும் கலந்த தங்கள் வழவழத்த மேனிகளை அவளை நோக்கிக் காட்டி, 'உன் மேனியும் எங்கள் மேனி போலத்தானே மைவிழி?' என்று கேட்டன. செங்குத்தாகக் கண்ணுக் கெட்டிய தூரம்வரை வளர்ந்திருந்த சவுக்கு மரங்கள் பல்லவ இளவலைப் போலவே உரமாக நின்று தன்னைநோக்குவதை கண்ட மைவிழியின் சித்தத்தில் உன்மத்தமே நிரம்பி நின்றது. மந்த மாருதம் அந்தக் குடிசைக்குள்ளும் புகுந்து அவள் சீலையை ஆட்டி அகற்ற முயன்று கொண்டிருந்ததால் அவளுக்கு அந்த இன்பக் காற்றின் மீது கோபமே ஏற்பட்டது. மற்ற இடங்களில் நிசப்தமும் சூழ்ந்து மல்லைக் கடல் அலைகளின் சப்தம் அதிகமாகிக் கொண்டிருந்ததால் கடலே தன்னை அதட்டுவதைப் போன்ற பிரமைக்கு உள்ளானாள் மைவிழி. இத்தகைய மனத் தடுமாற்றத்தால் அவள் உடல் துவண்டது.

துவண்ட உடலைத் தாங்கின பல்லவ இளவலின் கைகள் பலமாக, அவள் கண் சென்ற இடங்களில் அவன் கண்களும் சென்றிருக்க வேண்டும். ஆகவே மெல்ல அவள் காதுக்கருகில் குனிந்து, ''மைவிழி! வெளியே பார்த்தாயா?'' என்று வினவினான்.

உதடுகளுக்குப் பதில் சொல்லும் திராணியில்லாததால் ஒரு 'உம்'' மாத்திரம் கொட்டினாள் மைவிழி.

''பால் நிலவு காய்கிறது'' என்று சொன்னான் பல்லவ இளவல் ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காக, கைகள் அவள் உடலில் தவழ்ந்தன. ஒரு கை இடைக்குக் கீழே சற்று இறங்கி அங்கிருந்த திட்டில் தடைப்பட்டு நின்றது.

மைவிழி பதிலேதும் சொல்லவில்லை. அவன் கைகள் தவழத் தவழ அவள் உணர்ச்சிகள் கட்டு மீறிப் போய்க் கொண்டிருப்பதை உணர்ந்தான். அவனே மேலும் சொன்னான், ''இந்தப் பால்நிலவில் சாதாரண சமயமாயிருந்தால் கடல் மல்லையில் சித்ரா பௌர்ணமிக் கொண்டாட்டம் இன்னும் நடந்து கொண்டிருக்கும்'' என்று.

''ஆம்'' மெல்ல சிரமப்பட்டு உதிர்ந்தது அந்த ஒலி அவள் உதடுகளிலிருந்து.

''இளங்காளைகளும் பெண்களும் கடலில் துளைவதை நிறுத்த மாட்டார்கள். இளம் கணவரும் மனைவிமார்களும் மணலில் படுத்துக் கிடப்பார்கள். சிலர் யாழ் வாசிப்பார்கள். சிலர் கறங்காடுவார்கள். இம்மல்லைக் கடல் பகுதி பெண்கள் சிரிப்பாலும், யாழ்களின்



இன்னிசைப்பாலும் சிறப்புற்றிருக்கும். ஓடிப் பிடித்து மணலில் விளையாடும் பெண்களின் அழகைப் பார்த்துக் கடலரசன் மகிழ்வான். சில காதலர்கள் கடலோரத்தை வெறுப்பதுண்டு...'' என்று ஏதோ முணுமுணுத்த பல்லவ இளவல் சட்டென்று பேச்சை நிறுத்தினான்.

மைவிழிச் செல்வியும் உணர்ச்சி வெள்ளத்திலிருந்து தன்னை அறுத்துக் கொள்ள விரும்பி, ''ஏன் நிறுத்திவிட்டீர்கள்?'' என்று மெல்ல வினவினாள்.

''எதை?''

''சில காதலர்கள் கடலோரத்தை வெறுப்பார்கள் என்றீர்களே?'' என்று வினவினாள்.

''ஆம், சொன்னேன்'' என்றான் பல்லவ இளவல்.

''வேறு எதை விரும்புவார்களோ?'' என்று வினவினாள் மைவிழி விடாமல்.

''சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள்?''

''சில காதலர்கள்.''

''உம்.''

''இந்தப் தோப்பின் மறைவையே நாடுவார்கள்...''

ஏன் கேட்டோம் என்று ஆகிவிட்டது மைவிழிச் செல்விக்கு அந்தக் காட்சியை, காதலர்களின் திருட்டுத் தனத்தை. எண்ணிப் பார்த்ததால் பெரும் உணர்ச்சிகள் அவளை ஊடுருவின. ''இதிலென்ன தவறு, புதுமை? களவியல் தமிழ் இலக்கியம் கண்ட மரபுதானே?'' என்று தன்னைச் சமாதானப் படுத்திக் கொள்ள முயன்றாள்.

இலக்கிய அறிவு அவளுக்கு அந்தச் சமயத்தில் கைகொடுக்க வில்லை. அவளையும் மீறி அவள் கையொன்று அவன் தோளின் மீது எழுந்து பதிந்தது. ''அந்தக் காதலர்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?'' என்று மெல்ல வினவினாள்.

''பார்த்திருக்கிறேன்'' என்றான் பல்லவ இளவல் சங்கடத்துடன்.

''சே! வெட்கக் கேடு!'' என்றாள் அவள்.

''இதிலென்ன வெட்கமிருக்கிறது?'' என்று கேட்டான் அவன்.

''காதலர்களின் தனிமையைக் கண்ணியமுள்ளவர்கள் பார்க்க மாட்டார்கள்.''

''இதில் கண்ணியத்துக்கு என்ன குறைவிருக்கிறது?'' என்று வினவிய பல்லவ இளவலுக்கு அவள் கேள்வியின் உள்ளர்த்தம்

புலனாகவே, ''சே, சே! அத்தனை மதி கெட்டவனென்றா நினைத்து விட்டாய் என்னை?'' என்று வினவியதோடு ''மைவிழி நான் எனது குடிமக்களை நேசிக்கிறேன். அவர்கள் இன்பப்படுவதைப் பார்த்து நானும் இன்பப்படுகிறேன். நான் சிருஷ்டிக்க முயலும் கருங்கற் சிற்பங்களில் எத்தனை சிருங்கார லீலைகளை அமைக்கப் போகிறேன் தெரியுமா? அவற்றில் மனித விகாரத்தையா மக்கள் பார்க்கப் போகிறார்கள்? இல்லை. இல்லை. மனித உல்லாசத்தை, மனிதன் மன மகிழ்ச்சியைக் காண்பார்கள்! சிற்பக் கலை போல் சிருங்காரமும் ஒரு கலை. அப்படிப் பார்க்கிறேன் நான் இளங்காதலர்களை. எனக்கு அதில் மனவிகாரம் ஏதுமில்லை. அவர்கள் தனிமையை நான் நேரடியாகக் காண்பதில்லை, ஊகிக்கிறேன்'' என்று சுட்டிக் காட்டினான்.

மைவிழிச் செல்வி அவனைச் சற்று அதிகமாக நெருங்கினாள். ''உங்களுக்கு ஊகம் அதிகம் போலிருக்கிறது'' என்று மெல்ல வினவவும் செய்தாள்.

''ஆம்''

''கற்பனைச் சிங்கார லீலைகளைக் கல்லில் வடிப்பீர்கள் போலிருக்கிறது?''

''ஆம்.''

''கல்லில் வடிப்பதோடு நிறுத்திக் கொள்ளுங்கள் இளவரசே!'' இதைச் சொன்ன அவள் குரல் தழுதழுத்துக் கிடந்தது.

அந்தத் தழுதழுத்த இன்பக் குரலால் பெரிதும் நிலை குலைந்து தான் பல்லவ இளவல். மெல்ல அவன் கைகள் அவளை அருகே இழுத்தன. அவள் மார்பு தன் மார்பை லேசாகத் தொடுவதை அவன் உணர்ந்தான். பொருள் சிறப்புள்ள *பாரவியின் 'கிராதார்ஜுனீயம்' அவன் சிந்தையில் வலம் வந்தது. பாசுபதம் பெற அர்ஜுனன் தவத்துக்குச் செல்லுமுன்பு அவனை நோக்கிய திரௌபதி, ''வெற்றியுடன் நீங்கள் திரும்பும்போது எனது மார்பு இரண்டும் வலி எடுக்கும் அளவுக்கு உங்களை இறுகத் தழுவுவேன்'' என்று சொன்னதாகக் கவிதீட்டிய பாரவி, பெண்வேட்கையின் உச்சத்தை எத்தனை அழகாக வர்ணித்திருக்கிறானென்பதை எண்ணிப் பார்த்தான். 'இவள் அப்படி என்னைத் தழுவா விட்டாலும் நானே இந்தக் கட்டழகியை இழுத்து அணைத்து விட்டாலென்ன?' என்று உள்ளூர நினைத்ததால் அவன் மனமும் கள்வெறி கொண்டது. தமிழர்

* *பாரவேரர்த்த கௌரவம் என்று மகாகவி பாரவிக்கு வடமொழி இலக்கியம் சிறப்புக் கூறும்.*



களவியுலும் இதை அனுமதிப்பதால் தவறென்ன என்றும் தன்னைக் கேட்டுக் கொண்டான். 'மன்னர் குலத்துக்குக் காந்தர்வம் அனுமதிக்கப் பட்டதுதானே?' என்றும் எண்ணினான் பல்லவ இளவல் உணர்ச்சிகள் இரைந்த அந்த வேளையில் அவன் வடமொழி இலக்கியம், தமிழ் இலக்கியம், சாஸ்திரம், புராணம் எல்லாவற்றிலும் தனக்கு ஆதரவு தேடிக் கொண்டான்.

இப்படித் தேடிய ஆதரவின் விளைவாக் கொண்ட துணிவால் அவள் தோளிலிருந்த பட்டாடையைச் சிறிது அகற்றவும் முயன்றான். அந்த முயற்சியில் அவன் கை தடைப்பட்டு நின்றது. அந்தப் பருவப் பெண்ணின் நிராதரவான நிலை அவன் எழுப்பிய உணர்ச்சிகளைச் சற்று தேக்கவும் செய்தது. இவள் தந்தை பல்லவ சாம்ராஜ்ய நன்மைக்காகக் காஞ்சி சென்றிருக்கிறார். அவரது வஞ்சியை வஞ்சிப்பது, அவள் தனிமையைப் பயன்படுத்தி இனிமையை நுகர்வது, எத்தனை கயமை என்று எண்ணினான். அதனால் கையை அவள் தோளில் இருந்து எடுக்கவும் செய்தான். மெல்ல மெல்ல அவன் மல்லை வந்த காரணமும் கடமையும் மனத்தில் பேருருவம் எடுக்கலாயின. அவன் இன்னொரு கையும் அவள் இடையை அடுத்த எழுச்சியிலிருந்து அகன்றது.

திடீரென அவன் போக்கில் ஏற்பட்ட மாறுதலைக் கவனிக்கவே செய்தாள் அவள். ''ஏன் இப்படி மாறிவிட்டார்?'' என்றும் உள்ளூர நினைத்தாள். அவள் மட்டும் அவன் தோளில் வைத்த கையை எடுக்கவில்லை. அந்த நிலையில் கேட்டாள் ''இளவரசருக்கு ஏதோ புது நினைவு ஏற்பட்டிருக்கிறது போலிருக்கிறது?'' என்று.

''ஆம்.'' இளவரசன் குரல் கடினமாக வந்தது.

''என்னவோ?''

''கடமையைப் பற்றிய நினைப்பு.''

''யார் கடமை?''

''என் கடமை?''

''அதற்கென்ன வந்து விட்டது இப்போது?''

''ஆபத்து.''

''என்ன ஆபத்து?''

''உன்னைப் பார்த்து உன் மோகன வடிவத்தில் சித்தத்தைப் பறி கொடுத்து உட்கார்ந்திருந்த சமயத்தில் தோப்பின் உள்ளே நெடுந் தூரத்தில் பலர் நடமாடும் ஒலிகள் கேட்டன. மாளிகையில் என்னைத் தேடிக் காணாத சாளுக்கிய வீரர்கள் தோப்பைச் சல்லடை போட

முற்பட்டு விட்டதை உணர்ந்தேன். அதனால் தான் உன்னை மறைக்க இந்தக் குடிசைக்குத் தூக்கி ஓடி வந்தேன். விளக்கையும் அணைத்தேன். பிறகு வெளியில் சென்று பார்த்து வந்தேன். தேடிய வீரர்கள் குடிசைப் பக்கம் வராது போய்விடவே திரும்பி வந்தேன்...''

மைவிழி கேட்டாள் சற்றுச் சந்தேகத்துடன்: ''இனிமேல் எதிரிகள் நம்மைத் தேட மாட்டார்களா?''

''தேடுவார்கள்.''

''அப்படியானால் நாம் அடுத்துச் செய்ய வேண்டியது. என்ன?''

இளவல் சிறிது நேரம் சிந்தித்தான். ''மைவிழி! குடிசையின் கோடிக்குச் செல்...'' என்றான்.

''உம்.''

''சென்று இந்த ஆடையை...''

''உம்.''

''களைந்து விடு.''

இதைக் கேட்டதும் மார்பில் இரண்டு கைகளையும் குறுக்கே கட்டிக் கொண்ட மைவிழி, ''ஓகோ! அப்படியா?'' என்று கேட்டாள் கோபத்துடனும் ஏளனத்துடனும். ''உங்கள் உண்மைச் சொரூபம் நன்றாக வெளியாகிறது. இதோ நான் போகிறேன்'' என்று கூறிக் கொண்டு அவனைத் தாண்டி வெளியே ஓட முயன்றாள்.

அவனது இரும்புக் கரம் அவளைப் பிடித்து நிறுத்தியது. ''குடிசைக்குள் பரதவர் உடைகள் இருக்கின்றன. ஒன்றை எடுத்து அணிந்துகொள். நான் வெளியில் இருக்கிறேன், பிறகு நானும் அவர்கள் உடைகளிலொன்றை அணிந்து கொள்கிறேன். தப்ப அதுதான் வழி. சொல்கிறபடி செய் போ'' என்று அதட்டிய இளவல் அவளைக் குடிசைக்குள் தள்ளிவிட்டு வெளியே சென்றான்.

சற்று நேரத்துக்கெல்லாம் பரதவர் உடையணிந்து இருவரும் வெளிப் போந்ததும் குடிசை மீதிருந்த வலையொன்றை எடுத்துத் தோள்மீது போட்டுக் கொண்டான் இளவரசன். ''வா, மல்லைக் கடலின் கரையின் ஒரு வளைவில் படகொன்றை வைத்திருக்கிறேன்'' என்று கூறிய இளவல் அவளைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு தோப்பின் ஊடே ஓடினான். கடல் உள்ளே நன்றாக வளைந்து கிடந்த இடத்துக்கு வந்தான். வந்தவன் பிரமித்து நின்றான் ஒரு விநாடி. அங்கு தரையில் கட்டிவைத்திருந்த படகைக் காணவில்லை.

# 7. ஆளைப் பிடிக்கும் வலை

மல்லைக் கடல் அந்த இடத்தில் நன்றாக வளைந்து கிடந்ததன்றி, தோப்பின் உள்ளும் சிறிது புகுந்திருந்ததால் அதன் மூன்று பக்கங்களிலுமிருந்த அடர்த்தியான சவுக்கு அந்த இடத்துக்குப் போதிய மறைவை அளித்திருந்ததைக் கண்ட மைவிழிச் செல்வி, படகுகளை ரகசியமாக மறைத்து வைக்க அதைவிடச் சிறந்த இடம் ஏதும் இருக்க முடியாதென்பதை உணர்ந்து கொண்டாள். நினைவு தெரிந்த நாட்களாகத் தான் மல்லைக் கடல் பகுதியில் திரிந்திருந்தும் தான் அந்த மறைவிடத்தை மட்டும் பார்த்திராததையும், ஓராண்டுக்கு முன்பே வந்த பல்லவ இளவல் எப்படியோ அதைக் கண்டுபிடித்து, படகுக்கு அதை ரகசிய மறைவிடமாக வைத்திருந்ததையும் எண்ணி வியந்தாள். அந்த வியப்பைச் சொற்களிலும் காட்டி, ''இப்படியொரு இடமிருப்பது இன்று வரை எனக்குத் தெரியாது'' என்று கூறவும் செய்தாள் மல்லை அழகி.

அவள் வியப்பையோ வியப்புடன் உதிர்த்த சொற்களையோ பல்லவ இளவல் கவனித்ததாகத் தெரியவில்லை. அதுவரை அவளது கையைப் பற்றி நின்றவன் அதை விட்டுவிட்டு அந்தக் கடல் வளைவில் சிறிது தூரம் நடந்து சவுக்குத் தோப்புக்குள் எட்டிப்பார்த்தான். பிறகு சிந்தனையுடன் திரும்பி வந்துகரையில் தனது படகைக் கட்டுவதற்காக வைத்திருந்த பெரும் சவுக்கு முளையை ஊன்றிப் பார்த்தான். அதனருகேயிருந்த மணல் பகுதியையும் ஊன்றி ஊன்றி ஆராய்ந்தான் பல விநாடிகள். பிறகு நிமிர்ந்து தூரத்தே தெரிந்த நீராடும் கட்டத்தையும், தான் கோயில் கட்ட முயன்று கொண்டிருந்த மலைப்பாறைப் பகுதியையும் கவனித்தான். அந்த மலையில் அப்பொழுது உயிர் பெற்றுக் கொண்டிருந்த இரண்டு யாளித்தூண்கள் நிலவு வெளிச்சத்தில் யாளிகளைக் காட்டாமல் தூரப் பார்வைக்கு வெறும் கருங்கற்களாகத் தெரிந்தன. கரையோர வளைவில் வரிசையாக நின்ற வேள்வித் தூண்கள் சிலவற்றில் தீபமிருந்தாலும், எண்ணெய் விட இருக்க வேண்டிய காவலர் அன்று இரா(த)க் காவலராக ஆகிவிட்டதால் பல தூண்களின் விளக்குகள் அணைந்திருந்தன. கடற்கரை நகரப் பகுதி நிசப்தமாயிருந்தது. அந்த நிசப்தத்தின் காரணமாகக் கடலோர மலைப் பகுதி பயங்கரமாகத் தெரிந்தது.

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு பல நிமிடங்கள் மௌனமாக நின்றுவிட்ட பல்லவ இளவலைப் பார்த்து, ''ஏதோ யோசனையில் ஆழ்ந்திருக்கிறீர்கள் போலிருக்கிறது'' என்றாள் மைவிழி.

ராஜசிம்ம பல்லவன் தனது கண்களை அவளை நோக்கித் திரும்பினான். ''ஆம் மைவிழி. யோசனைதான் செய்கிறேன். இங்கிருந்து வெளியேற வேறு வழி யோசிக்கிறேன்'' என்றான்;

''இங்கு ஒரு படகு இருந்ததாகச் சொன்னீர்களே?'' என்று கேட்டாள் மைவிழி.

''சொன்னேன், நீ முதலில் சொன்னாயல்லவா இப்படியொரு இடமிருப்பது உனக்குத் தெரியாதென்று? உனக்கு மட்டுமல்ல. மல்லைவாசிகளில் முக்கால்வாசிப் பேருக்குத் தெரியாது. பல நாட்கள் வரை எனக்கும் தெரியாது. சாளுக்கியர் படையெடுக்கப் போகும் வதந்திகள் ஏற்பட்டதும் கோவிலுக்குத் தூண்களெழுப்பும் நேரம் போக மீதி நேரத்தில் மல்லையின் அமைப்பு பூராவையும் அறிந்து கொள்ள நீண்ட நேரம் கடல் பகுதியில் உலாவினேன். பரதவர்களுடன் திரிந்தேன். அப்படித் திரிந்த ஒரு நாள் இதைக் கண்டேன். கண்டதும் உன் தந்தையையும் அழைத்து வந்து இதைக் காட்டினேன். இதற்குச் சற்றுத் தென் கிழக்கில் தோப்புக்குள் குடிசை அமைத்தோம். இங்கு படகுத் தளையமைத்து எனக்கென்று சொந்தமாக ஒரு படகும் தயாரித்தோம். படகு தயாரித்ததும் யாருக்கும் தெரியாது. யாங்சின் தனிப்பட்ட மரங்களை வெட்டி அந்தப் படகைத் தயாரித்தான். அதில் போர்க் கலங்களையும் அதைத்தான். சிறிய படகுதான். ஆனால் பத்துப் படகுகள் வளைத்தாலும் அதைப் பிடிக்க முடியாது அத்தனை வேகமுடையது. ஆயுத பலமுள்ளது. அந்தப் படகுதான் இப்பொழுது காணவில்லை...'' என்று கூறிய பல்லவ இளவல் பெருமூச்செறிந்தான்.

''யாங் சின் யார்? நேற்று என் தந்தையுடன் இருந்தானே, அந்தச் சீனனா?''

''ஆம்.''

''அவன் எப்படி உங்களுக்கு அறிமுகமானான்?''

''சீனாவிலிருந்து என்னிடம் ஒரு காரியமாக வந்தான்'' என்று மேலும் ஏதோ சொல்லப் போன ராஜசிம்ம பல்லவனை இடைமறித்த மைவிழி, ''என்ன! சீனாவிலிருந்தா! உங்களிடம் காரியமாக வந்தானா?'' என்று வியப்பு உச்சத்தை அடைந்த குரலில் வினவினாள்.

அவள் வியப்பைக் கவனித்த ராஜசிம்ம பல்லவன் புன்முறுவல் கோட்டினான். அவள் கையின் மேல் பாகத்தைத் தனது கையால் சற்று அழுந்தப் பிடித்துத் தன்னிடம் அவளை இழுத்துக் கொண்டான். ''ஏன் மைவிழி! சீனாவிலிருந்து ஒருவன் பாரதம் வருவது வியப்பான விஷயமா? அல்லது என்னைத் தேடி வருவதுதான் விந்தையா?'' என்று வினவவும் செய்தான்.



''சீனா எங்கோ இருப்பதாகச் சொல்கிறார்களே...'' என்றாள் மைவிழி.

''ஆம்.''

''நீண்ட தூரமாமே? அங்கிருந்து வருவதென்றால் எளிதா?''

''முயற்சியுள்ளவனுக்கு எளிது. துணிவு உள்ளவனுக்கு எளிது. பயங்கொள்ளிக்கும் உரமற்றவனுக்கும் அது கஷ்டம். இந்த நாட்டிலுள்ளவர்கள் இந்த உலகத்தில் எட்டாத இடமில்லை. இங்கிருந்து சீனா சென்ற புத்த பிக்ஷுக்கள் கணக்கிலடங்காதவர்கள். இங்கிருந்து நாம் மதத்தைக் கொண்டு சென்றோம். நாகரிகத்தைக் கொண்டு சென்றோம். கலைகளைக் கொண்டு சென்றோம். நமது முன்னோர்களின் மரக் கலங்கள், பெரிய பெரிய மரக் கலங்கள், மூவாயிரம் பேர், குதிரைகள் ஆடுமாடுகள் அனைத்தையும் கொள்ளக் கூடிய தனி மரக் கலங்கள் சீனத்துக்குச் சென்றிருக்கின்றன. பிறகுதான் சீனர் இங்கு வர ஆரம்பித்தனர். சீனர் வந்தனர், அராபியர் வந்தனர், யவனர் வந்தனர். அவர்கள் வரவால், வாணிபத்தால், இந்தப் பாரதமே உலகமாயிற்று. அன்று அது சாத்தியமானால் இன்று ஏன் சாத்தியமில்லை?'' என்று சொல்லிக் கொண்டு போன ராஜசிம்ம பல்லவன் சிறிது மௌனம் சாதித்து எதிரேயிருந்த நீள் கடலை ஆராய்ந்து விட்டு மீண்டும் சொன்னான். ''அத்தகைய நாடு இது மைவிழி! இப்பொழுது யவனர் வருகை குறைந்துவிட்டது. அராபியர் வருகையும் வட நாட்டோடு நின்றுவிட்டது. ஆனால் சீனர் வருகை குறையவில்லை'' என்று.

அரச குமாரனின் ஆவேசத்தைக் கவனித்தாள் மைவிழி. பாரதத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்ததும் அவன் குரலில் ஒலித்த உணர்ச்சி வேகத்தையும் கவனிக்கவே செய்தாள். அவன் உணர்ச்சி வேகம் அவளையும் ஆட்கொண்டதால் அவள் பேசவில்லை. பல்லவ இளவல் சொன்னான், ''அதுவும் சீனர் வருகை பல்லவ நாட்டில் அதிகப்பட்டுவிட்டது'' என்று.

''காரணம்?'' ஏதோ கேட்க வேண்டுமென்பதற்காக மைவிழி கேட்டாள்.

''காரணம் இரு பல்லவ மன்னர்களின் பெயர்கள். என் பெயர் கொண்டவரும் அவரது தந்தையும்'' என்றான் ராஜசிம்மன்.

''உங்கள் பெயர் கொண்டவரா?''

''ஆம். நரசிம்ம பல்லவர். இந்தத் துறைமுக நகரம் யார் பெயரால் விளங்குகிறதோ அந்த மாமல்லர். மைவிழி! உனக்குத் தெரியாதிருக்கலாம், எனக்கு முதலில் வைத்த பெயர் நரசிம்மன் தான்.''

''ஓகோ!''

''என் தந்தை கோவில்களைக் கட்டுவதற்காகவே நான் பிறந்திருப்பதாக நினைத்தார். ஆகவே அந்த முதலாம் நரசிம்மனைப் போல் இந்த இரண்டாவது நரசிம்மனும் இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார் அதனால் எனக்கு நரசிம்மன் என்று பெயர் வைத்தார். ஆனால் என் தாய் சூட்டிய பெயரான ராஜசிம்மன் தான் நிலைத்தது. உலகம் அறிந்த பெயர் ராஜசிம்மனாயிற்று. என் தந்தை* கூரத்தில் தமிழகத்தின் முதல் கோயிலைச் சிவபிரானுக்கு அமைத்தார். இங்கு அவர் உத்தரவின்மேல் நான் சில கோவில்களைக் கட்டிக் கொண்டிருக் கிறேன்...'' என்ற ராஜசிம்மனின் கையொன்று மைவிழியைப்பலமாக அணைத்தது. ''மைவிழி! பல்லவர்கள் பெருமை உலகெங்கும் பரவியுள்ளது. அதுவும் இந்த ராஜசிம்மன் பெருமை அதிகமாகப் பரவியிருக்கிறது. அதைக் கேட்ட சீன மன்னர் இந்த யாங் சின்னை என்னிடம் அனுப்பியிருக்கிறார்...'' என்று மேலும் ஏதோ சொல்லப் போன பல்லவ இளவலை இடை மறித்த மைவிழி, 'என்ன! சீன மன்னர் உங்களிடம் இவனை அனுப்பினாரா!'' என்று வினவினாள்.

மாமல்லபுரம் எதிரிகள் கைவசப்பட்டிருந்த அந்த நேரத்திலும், தப்பும் சாதனமான படகு காணாமற்போன அந்த வேளையிலும், சிறிது நகைத்தான் ராஜசிம்மபல்லவன். ''ஏன் மைவிழி, அத்தனை பிரசித்தி எனக்கு இருக்கமுடியாதா?'' என்று கேட்டான்.

''இல்லை, அதற்குச் சொல்லவில்லை...'' என்று இழுத்தாள் அவள்.

''உன் சந்தேகம் விளங்குகிறது எனக்கு. ஆனால் உண்மை அதுதான். ராஜசிம்மனை வீரனாக அறிந்தவர்களைவிடச் சிற்பியாக அறிந்தவர்கள் அதிகம். பல்லவ இளவரசன் ஒருவன் சிற்ப சாஸ்திரத்தில் வல்லவன், கோவில்களைக் கட்டுவதில் நிபுணன் என்பது எப்படியோ சீன மன்னருக்குத் தெரிந்திருக்கிறது. ஆகவே அவர் என்னிடம் இங்கு சீனருக்கு ஒரு கோவில் கட்ட வேண்டி அரச குலத்தானொருவனையே அனுப்பியிருக்கிறார். யாங்சின் சீன மன்னர் மரபைச் சேர்ந்தவன். சீனாவை ஆண்ட சூயிபரம்பரையை ஸ்தாபித்த யாங் சின் பெயரை இவனுக்கு வைத்திருக்கிறார்கள்.* இவன் இங்கு வந்து ஆறு

* *Sri C. Srinivasachari in History and Institutions of the Pallavas -P 15.*

* *The Chinese: Their History and Culture by Kenneth Scott Latourette - p. 187*



மாதங்களுக்கு மேலாகிறது. சீனர்களுக்கு ஒரு கோவில் கட்ட ஒப்புக் கொண்டிருக்கிறேன். எனக்காக உயிரைத் தியாகம் செய்வான்'' என்று விளக்கினான் பல்லவ இளவல்.

மைவிழியின் கண்கள் அவனைப் பக்கவாட்டிலிருந்து ஏறெடுத்துப் பார்த்தன. அவள் பூவுடல் அவன் உடலுடன் இழைந்தது. அவன் அவளைச் சற்றுத் திருப்பி எட்ட நிறுத்திப் பார்த்தான். ''பரதவர் குலத்தில் இப்படியொரு பெண்ணிருந்தால் நான் அவளைத் தவிர வேறு யாரையும் விரும்பமாட்டேன். அந்த முரட்டு ஆடை உனக்குப் பொருத்துகிறது!'' என்று கூறினான்.

''உங்களுக்கு மட்டுமென்ன? வேடம் நன்றாகத்தானிருக்கிறது. அந்த வலையை நீங்கள் தோளில் போட்டிருக்கும் அழகுஒன்று போதுமே!'' என்றாள் மைவிழி.

ராஜசிம்ம பல்லவன் சிறிது நகைத்தான். ''இந்த வலை மீன்களை மட்டும்தான் பிடிக்கும்'' என்றும் கூறினான். அவன் பார்வையில் விஷமம் சொட்டியது.

''வேறு எதைப் பிடிக்காது?'' என்று கேட்டாள்.

''யாரை என்று கேள்'' என்றான் பல்லவ இளவல்.

''யாரை?''

''மனிதரைப் பிடிக்காது.''

''மனிதரைப் பிடிக்கும் வலையும் உண்டா?''

''உண்டு.''

''அதைப் பார்த்திருக்கிறீர்களா?''

''பார்த்திருக்கிறேன். பார்த்துக் கொண்டு இருக்கிறேன்.''

அவன் தன்னைப் பற்றி ஏதோ சொல்கிறானென்பது அவளுக்குப் புரிந்தது. ஆகவே திட்டமாக எதுவென்பது தெரியாததால் ''எதைப் பார்க்கிறீர்கள், பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று அவன் சொற்களையே திருப்பினாள்.

''உட்கார், சொல்கிறேன்'' என்ற ராஜசிம்ம பல்லவன் படகுத் தளைக்கருகில் உட்கார்ந்து அவளையும் உட்காரவைத்தான்.

''உட்கார இது சமயமா?'' என்று கேட்டாள் மைவிழி அவனை நோக்கி.

''வேறு செய்ய ஏதுமில்லை இப்பொழுது. படகும் போய் விட்டது'' என்றான் ராஜசிம்மன் நிதானமாக.

''எதிரிகள் இங்கு வந்தால்?'' என்று கேட்டாள் மல்லைக் கட்டழகி.

''வர மாட்டார்கள்.''

''ஏனோ?''

''இதைக் கண்டு பிடிக்க எனக்கே நாள் பிடித்தது. புதிதாக இன்று வந்துள்ள எதிரிகள் இந்த இடத்தைக் கண்டுபிடிக்க முடியாது.''

''அப்படியானால் படகை யார் கொண்டு போயிருப்பார்கள்?''

''எனது நண்பர்களாகத்தானிருக்கும்'' என்றான் திட்டமாக ராஜசிம்மன். அப்படி வெளிக்குச் சொன்னானே தவிர, உள்ளூர அவனுக்கே தவிர வேறு யாருக்கும் தெரியாதென்பது உண்மைதான். ஆனால் அதற்காகத் 'தேடினால் அகப்படாத இடமுமல்ல இது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். ஆனால் படகை எடுத்தவர்கள் யாராயிருந்தாலும் இங்கிருந்தால் தன்னை இத்தனை நேரம் சூழ்ந்திருப்பார்களென்பதையும், அப்படிச் சூழாததால் எதிரிகள் யாரும் அருகிலில்லை யென்பதையும் புரிந்து கொண்டான். ஆகவே, எதிரே தனது கைக்குள் சிக்கியிருந்த மைவிழியை நோக்கி, ''மைவிழி! மனிதனைப் பிடிக்கிற வலையைப் பற்றிச் சொன்னேனல்லவா?'' என்று துவங்கினான்.

அவன் கைகள் தன்னை வட்டமிடுவதை உணர்ந்தாள் மைவிழி. எதிரும் புதிருமாக உட்கார்ந்திருந்த அந்த நிலை அவளுக்குப் பெரும் சங்கடமாயிருந்தது. அவன் காலொன்று தர்ம சங்கடமான நிலையில் அவள் மீது பதிந்திருந்தது. இந்த நிலையில், ''ஆம் ஆம்... சொன்னீர்கள்'' என்றாள் அவள்.

''அதைப் பார்த்திருக்கிறேன் என்று சொன்னேன்.''

''ஆம்.''

''பார்த்துக் கொண்டேயிருப்பதாகவும் சொன்னேன்.''

''ஊம்?''

''உன் கண் வலை!''

இதைச் சொன்ன அவன் அவள் கண்களை உற்றுநோக்கினான். அவள் மைவிழிகள் மணலை நோக்கிக் கொண்டிருந்தன அப்படித் தாழ்ந்த நிலையிலும் இமைகளின் கறுப்பும், விழிகளின் கோடியில் மை தீட்டப்பட்டதைப் போலக் காணப்பட்ட இயற்கையும் அவனைத் திணற வைத்தன. அவன் கைகள் அவள் உடலை விட்டுக் கன்னங்களைப் பற்றி முகத்தைத் தூக்கின. ''பார் என்னை மைவிழி'' என்ற சொற்கள் அவனிடமிருந்து மெதுவாக மந்திரம்போல் உதிர்ந்தன.



அவள் பார்த்தாள். ஆளைப்பிடிக்கும் கண் வலைகள் இரண்டும் மெல்ல விரித்தன.

விரிந்தன விழிகள், விரிந்தன இதழ்கள், சொர்க்கமும் விரிந்திருக்கும் வேறு குறுக்கீடு இல்லாதிருந்தால்.

# 8. வீரபாகு

முழுமதியின் வெண் கதிர்கள் அளித்த சுந்தரச் சூழ்நிலையில் மைவிழியின் கண்கள் விரித்த காமவலையில் வழுவழுத்தும் நெளிந்தும் எழுந்தும் தாழ்ந்தும் கிடந்த அவள் உடற் கூறுகள் வீசிய மோகனால் திரங்களில் ராஜசிம்ம பல்லவனின் ஐம்பொறிகளும் சிக்கிக்கிடந்ததால், தோப்புக்குள்ளிருந்து வெளிப்போந்து அதன் முகப்பில் நின்றுவிட்ட இரு வீரர்களை அவன் கவனிக்க இயலாது போயிற்று. புல்லசைந்தாலும் கேட்கக்கூடிய பல்லவ இளவலின் பாம்புச் செவிகள் கூட அந்தச் சமயத்தில் கேட்கும் சக்தியை இழந்திருந்ததால், அந்த வீரர்களின் பாதக் குறடுகள் மணலில் சர்சர் என்று எழுப்பிய ஒலியை வாங்கி அவன் சிந்தைக்கு அனுப்பாது போகவே, அந்த வீரர்கள் வந்தது, சில விநாடிகள் உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றது எதுவுமே இளவரசனுக்குத் தெரியவில்லை. காமத்துக்கு கண்ணில்லை என்பதுதான் பழமொழி. செவியுமில்லை என்பது அந்த வேளையில் திட்டமாகத் தெரிந்தது அத்தகைய நிலையில் வந்த வீரரில் ஒருவன், ''யார் நீங்கள்?'' என்று கேட்ட பிறகே பூவுலகத்துக்கு வந்த பல்லவ இளவல் மெள்ளத் திரும்பி அவர்களை நோக்கினான்.

அவர்கள் இருவரும் பூர்ண ஆயுதம் தரித்திருந்த போதிலும் ஒருவன் மட்டும் மார்பில் தரித்திருந்த வீரச் சங்கிலியும் கையில் தரித்திருந்த வீரக் கங்கணமும் அவன் சாதாரண வீரனல்லன் என்பதையும் படைத் தலைவனாகவோ உப தளபதியாகவோ இருக்க வேண்டுமென்பதையும் உணர்த்தின. அவன் இருந்த இடத்திலிருந்து மற்றவன் நாலடி தள்ளி நின்றிருந்த தோரணையிலிருந்தும் அவன் தரித்திருந்த உடையிலிருந்தும் அவன் சாதாரண வீரனென்பதையும் புரிந்து கொண்டான் இளவரசன். இருவர் பதவியும் எப்படி யிருந்தாலும் அவர்களிருவரும் சாளுக்கிய வீரர்களென்பது சந்தேக மறத் தெரிந்தபடியால் அவர்களிருவரையும் எப்படிச் சமாளிப்பது என்ற யோசனை சித்தத்தில் உலாவ மெள்ள உட்கார்ந்த நிலையி லிருந்து எழுந்து நின்றான் பல்லவ இளவல்.

மைவிழியின் நிலைமை பரம சங்கடமாயிருந்தது. எதிரி வீரர்கள். கடைசியில் இளவரசனைக் கண்டுபிடித்து விட்டார்களே யென்ற

பீதியுடன் அவனும் தானும் நெருங்கிக் குலாவியதை அவர்கள் நீண்ட நேரம் பார்த்திருப்பார்களோ என்ற எண்ணத்தால் சொல்லவொண்ணா வெட்கமும் அவளை ஆட்கொண்டது. ஆகவே சற்றுச் சங்கடத்துடனேயே எழுந்த மைவிழி தனது ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டாள். பரதவர் ஆடை அவளுக்குச் சரியாகப் பொருந்தாததன் காரணமாக அதைப்பல இடங்களில் இழுத்து விட்டுக் கொண்டு தலையையும் தலைப்பால் மறைத்துக் கொண்டு இளவரசன் பின்னால் சற்று மறைந்து நின்றாள். நின்று அவன் தோள்புறத்திலிருந்து சிரமப்பட்டு எட்டிச் சாளுக்கிய வீரர்களைப் பார்க்கவும் செய்தாள்.

சாளுக்கியர் இருவரில் தளபதியைப் போல் தோற்றமளித்தவன் சில விநாடிகள் ஊன்றிப் பல்லவ இளவலைக் கவனித்தான். இளவலுக்கு அப்பால் நின்ற இளங்கட்டழகி மீதும் கண்களை ஓடவிட்டான். சிறிது மௌனத்துக்குப் பிறகு மீண்டும் முதல் கேள்வியைத் திருப்பினான் ''யார் நீங்கள்?'' என்று.

பல்லவ இளவல் சிறிதும் தாமதமின்றித் தனது தோளிலிருந்த வலையைத் தொட்டுக் காட்டி, ''இதுவே பதில் சொல்லும்'' என்றான்.

''என்ன பதில் சொல்லும்?'' என்று கேட்டான் எதிரி வீரன்.

''நாங்கள் பரதவர் என்பதைச் சொல்லும்'' என்றான் பல்லவ இளவல். அத்துடன் திரும்பி மைவிழியை நோக்கி, ''என்ன?'' என்றும் வினவிக் கண்ணைச் சிமிட்டினான்.

ஆம், ஆம் என்பதைக் குறிக்க இருமுறை தலையை மட்டும் ஆட்டினாள் மைவிழி. இந்த வேடிக்கையைக் கவனித்த சாளுக்கிய வீரன், நீங்களிருவரும் பரதவரானால் இங்கு ஏன் வந்தீர்கள்? உங்கள் இருப்பிடங்கள் அதோ இருக்கின்றனவே'' என்று தொலைதூரத்திலிருந்த குடில்களின் கூட்டத்தைக் கையால் சுட்டிக்காட்டினான்.

இளவரசன் இதழ்களில் இளநகை அரும்பியது. ''தங்களுக்குத் தெரியாததல்ல...'' என்றும் இழுத்தான் மெல்ல, இளநகையின் ஊடே.

''எது தெரியும் எனக்கு?''

''நாங்கள் தனியாக வந்து விட்ட காரணம்?''

''புரியும்படி சொல்.''

''எங்களிருவருக்கும் திருமணம் ஆகவில்லை.'' இந்த உண்மையைச் சற்று இடக்காகச் சொன்னான் இளவரசன்.

இதைக் கேட்ட சாளுக்கியன் பெரிதாக நகைத்தான் ''அப்படியா!'' என்றும் கேட்டான் விஷமத்துடன்.



''ஆமாம் பிரபு!'' மிக வணக்கத்துடன் பதில் சொன்னான் பல்லவ இளவல்.

சாளுக்கியன் சிறிது சிந்தித்தான். பிறகு கேட்டான், ''உன் பெயர் என்ன?'' என்று.

''கைலாசன்'' என்று சிறிதும் சிந்தியாமல் சட்டென்றுபதில் கூறினான் பல்லவ இளவல்.

''சரி! கைலாசா! இந்தப் பகுதியில் உன்னைத் தவிர யாராவது வந்தார்களா?'' என்று கேட்டான் சாளுக்கியன்.

''இல்லை, பிரபு.''

''எத்தனை நேரமாக இங்கிருக்கிறாய் நீ?''

''இரண்டு ஜாமமாக இருக்கிறேன்.''

''யாருமே வரவில்லையா இங்கு?''

''இல்லை'' என்ற இளவரசன், ''பிரபு! இந்த இடமிருப்பது மல்லை மாநகரில் பெரும்பாலோருக்குத் தெரியாது'' என்றும் கூறினான்.

''தவறு கைலாசா! ஒருவனுக்குத் தெரியும்.''

''யாருக்கு?''

''பல்லவ இளவரசன் ராஜசிம்மனுக்கு.''

இதைக் கேட்டதும் இளவரசனுக்கு அதிர்ச்சி ஏற்பட்டாலும் அதை வெளிக்குக் காட்டாமலே கேட்டான், ''அவருக்கு எதற்காக இந்த இடம் தெரிய வேண்டும்?'' என்று.

''ஒளியும் இடமெல்லாம் அவனுக்குத் தெரியும்.''

''எப்படி அத்தனை நிச்சயமாகச் சொல்லுகிறீர்கள் பிரபு!''

''இல்லாவிட்டால் நாங்கள் படையெடுப்பதை அறிந்தும் உங்கள் அரசனும் போருக்கு வரவில்லை. இளவரசனும் வரவில்லை. அரசன் ஓடிவிட்டான் காஞ்சியை விட்டு. இளவரசன் ஓட முயல்கிறான் மல்லையை விட்டு'' என்று கூறிய சாளுக்கியன் பெரிதாக நகைத்தான்.

''அப்படியா, பிரபு!'' என்று ஏதுமறியாதவன் போல் வினவினான் இளவல்.

''ஆம், உங்கள் இளவரசனைத் தான் தேடிக் கொண்டிருக்கிறேன் நான்'' என்றான் சாளுக்கியன்.

''தாங்கள் யார் பிரபு?''

''சாளுக்கியரின் பிரதம உபதளபதி. இன்று மல்லை என் கைவசமிருக்கிறது.''

''பிரபுவின் பெயர்?''

''வீரபாகு.''

''பெயரைக் கேட்டாலே பயமாயிருக்கிறது பிரபு.''

''உனக்கு மட்டுமா பயம்? என் வீரர்கள் அனைவருக்கும் பயம். குடி மக்களுக்கும் பயம். உங்கள் இளவரசன் என் கைகளில் அகப்படட்டும்...''

''அகப்பட்டால்?''

''அவன் நடுங்குவதையும் காண்பாய்'' என்று வீரபாகு சற்றுத் தன் மார்பை உயர்த்திப் பக்கத்திலிருந்த வீரனைத் தன் கண்களால் அசட்டையாகப் பார்த்தான்.

இளவரசன் அவனை மேலும் பேச்சுக்கிழுத்து, ''பிரபு! உங்கள் வீராவேசத்தைக் காண எனக்கே நடுக்கமாயிருக்கிறது. சரி, நீங்கள் எங்கு தங்கியிருக்கிறீர்கள்?'' என்று வினவினான்.

''எதற்குக் கேட்கிறாய்?'' என்று கேட்டான் வீரபாகு.

''நான், தினம் கடலாடுகிறேன். தங்களுக்கு அன்றாடம் மீன்களைக் கொண்டு வர முடியும்'' என்று தனது தோளிலிருந்த வலையைத் தட்டிக் காட்டினான்.

வீரபாகுவின் கண்கள் ஆவலைக் காட்டின. அவன் பெருதடுகளை நாக்குச் சிறிது தடவியது. ''மல்லைக் கடலின் மீன்களைப் பற்றிக் கேட்டிருக்கிறேன்'' என்று கூறிவிட்டு, ''கைலாசா! காஞ்சி செல்லும் பெருஞ்சாலைக்குச் சற்று முன்பாக ராஜ வீதியிருக்கிறதல்லவா?'' என்று கேட்டான்.

''ஆம். அங்குதான் இளவரசர் மாளிகையும் இருக்கிறது என்றான் இளவரசன்.

''அதில்தான் நான் தங்கியிருக்கிறேன். மீன்களைக் கொண்டு வா. அது தவிர இளவரசன் அகப்பட்டால் அவனையும் கொண்டு வா'' என்று உத்தரவிட்டான் வீரபாகு.

''சரி பிரபு! உங்கள் படை வீரர்கள் இருக்கும் விடுதிகளைச் சொன்னால் அங்கும் மீன்களைக் கொண்டு செல்கிறேன்.''

''வேலையற்ற மகேந்திர பல்லவன் குடைந்த மலைக்குகையில் முக்கிய உபதளபதிகள் இருக்கிறார்கள். மற்றபடி படை ஆங்காங்கு காவல் காக்கிறது.''



''அப்படியானால் உங்கள் உபதளபதிகளையும்...''

''கவனித்துக் கொள். அது கிடக்கட்டும். இளவரசனைவிட்டு விடாதே.''

''விடமாட்டேன்.''

''உன்னிடமிருந்து தப்ப விடாதே.''

''என்னிடமிருந்து அவர் தப்ப முடியாது பிரபு.''

''இதுவரை இருவர் உரையாடலையும் ஏதும் பேசாமல் கவனித்துக் கொண்டிருந்த சாதாரண சாளுக்கிய வீரன், ''தளபதி!' என்று மெல்ல அழைத்தான்.

''ஏன்?'' என்று கேட்டு அவனை நோக்கித் திரும்பினான் தளபதி.

''இவன் கேட்கும் கேள்விகளைப் பார்த்தால் சந்தேகமா யிருக்கிறது'' என்றான் வீரன்.

''என்ன சந்தேகம்?'' இகழ்ச்சிடன் எழுந்தது உப தளபதியின் கேள்வி.

''இவன் படைப் பிரிவுகள் இருக்குமிடம் உப தளபதிகள் இருக்குமிடம் எல்லாவற்றையும் கேட்கிறான்.''

''கேட்டாலென்ன?''

''சாதாரண பரதவன் கேட்கக்கூடிய கேள்விகளல்ல இவை'' என்று சுட்டிக் காட்டினான் வீரன்.

''மீன் பிடிப்பவன், வணிக நிமித்தம் கேட்கிறான்'' என்று வீரபாகு பதில் கூறினாலும் அவன் சித்தத்தில் சிறிது சந்தேகம் எழவே செய்தது. மீண்டும் இளவரசனைக் கூர்ந்து நோக்கினான். அந்தச் சமயத்தில் வீரன் மீண்டும் சொன்னான், ''சாதாரண பரதவனிடம் இத்தனை தூரம் நாம் பேசவேண்டிய அவசியமில்லை'' என்று.

''யார் சொன்னது?''

''மன்னரே தங்களை எச்சரித்திருக்கிறார்'' என்று வீரன் தான் அத்துமீறிப் பேசிவிட்டதை உணர்ந்து சற்றுப் பின் வாங்கினான் வீரபாகுவின் அருகாமையிலிருந்து.

வீரபாகு மீண்டும் இளவரசனை உற்று நோக்கினான். பிறகு அவனுக்குப் பின்னாலிருந்த மைவிழியை நோக்கி, ''இப்படி வா, முன்னால்'' என்றழைத்தான்.

மைவிழி தயங்கினாள். வீரபாகுவின் பார்வை அவளுக்குப் பயத்தை அளித்தது; அவள் பயத்தைத் துடைத்தன இளவலின் சொற்கள். ''பயப்படாதே வா. நம்மை ஆளும் தளபதி நம்மைக் காக்கும்

பொறுப்பை ஏற்றிருப்பவர், ஏதும் செய்ய மாட்டார் பயப்படாமல் வா முன்னால்'' என்று இளவல் ஊக்கவே அவள் மெள்ள இளவலுக்கு முன்புறம் வந்தாள்.

வீரபாகுவின் கண்கள் அவளை வெறித்து நோக்கின. இணையற்ற அவள் அழகு அந்த நிலவொளியில் அவன் சித்தத்தையும் சிதைத்தது. ''பரதவகுலத்திலும் இத்தகைய மாணிக்கம் இருக்கிறது'' என்று கூறினான் மெல்ல, அவன் நாவின் நுனி சற்று வெளிப் போந்து உதடுகளைத் துடைத்தது.

வீரபாகுவின் உள்ளத்திலோடிய உணர்ச்சிகளைப் பல்லவ இளவல் கவனிக்கவே செய்தான். இருந்தும் எத்தகைய உணர்ச்சியையும் காட்டாமல், ''நாங்கள் ஓடும் கடலில் முத்துக்களும் மாணிக்கங்களும் இல்லையா?'' என்று கூறினான்.

''காஞ்சி மண்டலத்தில் எல்லோரும் புலவர்கள் போலிருக் கிறது!'' என்றான் வீரபாகு.

''பிரபு சொல்வது விளங்கவில்லை'' என்றான் ராஜசிம்மன்.

''உங்கள் இளவரசன் பெரும் சிற்பியென்றும் பெரும் புலவனென்றும் சொல்லுகிறார்கள். உனக்கும் அந்தப் புலமை இருப்பதாகத் தெரிகிறது'' என்று வீரபாகு, ''கைலாசா! உனக்குக் கவி மனம் இருக்கிறது. நல்ல ரசிப்புத் தன்மையும் இருக்கிறது'' என்றும் சொன்னான்.

''பிரபு, அனாவசியமாக இந்த அடிமையைப் புகழ்கிறீர்கள்'' என்று அடக்கத்தைக் காட்டினான் ராஜசிம்மன்.

''அனாவசியமாகப் புகழவில்லை. நீ பிடித்திருக்கும் இந்தக் கட்டழகி குடிசையில் இருக்கத் தகுந்தவளல்ல'' என்றான் வீரபாகு.

''ஆம்.'' இளவரசன் உள்ளத்தில் சினம் தலை தூக்கியது.

''மாளிகையில் இருக்கத் தகுந்தவள்'' என்றான் வீரபாகு,

''ஆம்.''

''இளவரசன் மாளிகையில் இருக்கத் தகுந்தவள்.''

''நன்றாகச் சொன்னீர்கள்.''

''அங்கு இவளை அழைத்துச் செல்கிறேன்'' என்ற வீரபாகு திடீரென மைவிழியை நோக்கித் துரிதமாக இரண்டடி எடுத்து வைத்தான்.

அவனைத் தொடர்ந்து வந்த அவனது வீரன், ''பிரபு! பிரபு. அவள் பரதவர் பெண்ணல்ல! அதோ பாருங்கள்'' என்று கூவி மைவிழியின் தலையில் தொங்கிய முத்துச்சரத்தைக் காட்டினான்!



வீரபாகுவின் விபரீதச் செயலால் திக்பிரமை பிடித்திருந்த மைவிழி தன்தலையிலிருந்த ஆடை நழுவி விட்டதையோ, முத்துச்சரம் வெளிப்பட்டதையோ கவனிக்கவில்லை. வீரன் சுட்டிக் காட்டியதும் அதைக் கவனித்த வீரபாகு, ''அப்படியா! பிடி இவர்களை'' என்று கூறியதன்றி வேகமாக இளவலையும் மைவிழியையும் நெருங்கவும் செய்தான். அவனது வீரனும் அவனைத் தொடர்ந்து உருவிய வாளுடன் ஓடிவந்தான்.

மைவிழி அச்சத்தால் வெலவெலத்துப் போனாள். கத்தியோ கேடயமோ இல்லாமல் இளவரசன் என்ன செய்ய முடியுமென்று திகைத்தாள் அவள். ஆனால் அவள் முற்றும் எதிர்பாராத துரித நிகழ்ச்சிகள் தொடங்கின. இளவரசன் தோளிலிருந்த வலை திடீரெனப் பரந்து விரிந்து பாய்ந்தது இரு சாளுக்கியர் மீதும். பல்லவ இளவலின் வலது கரம் கண்ணிமைக்கும் நேரத்தில் நீண்ட முஷ்டி பிடித்து வீரபாகுவின் முகத்திலும் வீரன் முகத்திலும் இருமுறை பாய்ந்தது.

வலையில் திடீரெனச் சிக்கிவிட்டதாலும் உடனடியாக இடியென இறங்கிய முஷ்டியின் அடியாலும் நிலை குலைந்த இருசாளுக்கிய வீரரும் மணலில் வலையுடன் சாய்ந்ததை ஒரு கணம் இளவரசன் நின்று கவனித்தான். பிறகு மைவிழியை நோக்கித் திரும்பிப் புன்முறுவல் கோட்டினான். சாளுக்கிய வீரர் இருவரின் பரிதாப நிலையைக் கண்டு புன்முறுவல் பூத்தது பல்லவ இளவல் மட்டுமல்ல, தோப்பின் முகப்பில் மறைந்து நின்ற மற்றொருவனும் புன்முறுவல் கொண்டான்.

## 9. ஆதிவராகன் குகையில்

மல்லைக் கடலின் பெரும் சுறாக்களை இழுப்பதற்காகப் பெரிதாகவும் கடினமாகவும் பின்னப்பட்டிருந்த வலைக்குள் சிக்கி, பல்லவ இளவலின் முஷ்டித்தாக்குதலால் நினைவு குலைந்து, மணலில் விழுந்து கிடந்த அந்த இருவரையும் பார்த்த மைவிழி திக்பிரமை பிடித்து நின்றாள் பலவிநாடிகள். அத்தகைய பெருவலையை இரண்டு பரதவர்களாக இழுத்துச் செல்வதையும், கடலின் வீசும்போதுகூட இருவராகவே வீசுவதையும் கண்டிருந்த மைவிழிச் செல்விக்கு, இளையபல்லவன் தன்னந்தனியாக மிக அனாயாசமாக அதை எடுத்து எதிரி வீரர்கள் மீது வீசி விட்டதே பெருவியப்பாக இருந்தது.

''இந்த மெல்லிய கரங்களுக்கு இத்தனை வலிமையா?' என்று அவள் பிரமித்த அடுத்த விநாடி அவன் முஷ்டி மின்னலென இருமுறை பாய்ந்து விட்டதையும், அதற்குப் பின் எதிரி வீரர் இருவரும் மணலில்

படுத்துக் கிடந்ததையும் பார்த்ததும் அவளுடைய வியப்பு உச்ச நிலையை அடைந்தது. அடியால் நினைவிழந்து விழுந்து கிடந்த இருவரையும் உற்று நோக்கிய பல்லவ இளவலின் இதழ்களில் சிறு முறுவல் விளையாடுவதைப் பார்த்ததும் இளவரசனுக்குச் சிற்பத் திறமையோடு கொலைக் குணமும் சிறிது உண்டு போலிருக்கிறது என்ற நினைத்தாள் கடல் மல்லைக் கட்டழகி. இந்த நினைப்புகளின் விளைவாக அவர்களையும் பார்த்து எதிரேயிருந்த தோப்பையும் நோக்கினாள். தோப்பின் முகப்பில் சீனனான யாங் சின் புன் முறுவலுடன் நின்றிருந்தான்.

மல்லைக் கடலின் அந்த வளைவில் நடந்த நிகழ்ச்சிகள் அவனுக்குப் பேரானந்தத்தை அளித்து இருக்க வேண்டுமென்பது அவன் முகபாவத்திலிருந்து நன்றாகத் தெரிந்தது. ஓசைப்படாமல் பூனைபோல் நடந்து இரு சாளுக்கிய வீரரும் வலையில் சிக்கிக் கிடந்த இடத்துக்கு வந்த சீனன் அவர்களை உற்று நோக்கிப் பல்லவ இளவலையும் ஏறெடுத்து நோக்கினான். அப்படி நோக்கிய அவன் சிறு விழிகளில் பெருமை இருந்தது. ஆனந்தம் இருந்தது அவனது இதழ்கள் அகன்று குண்டுக் கன்னங்களின் புடைப்பை அதிகப் படுத்தியபோது உதடுகளில் ஓடி வாய்ப்புறம் கீழ்நோக்கி மடிந்திருந்த மீசை தலைகீழாகத் திரும்பிவிட்ட ''ப'' வைப் போல் உருவெடுத்து, சற்றுப் பயங்கரமான புன்முறுவலை இதழ்களில் படரவிட்டது. அந்தப் புன்முறுவலுடன் பல்லவ இளவலை ஏறெடுத்து நோக்கிய யாங் சின் தனது இரு கைகளையும் தட்டி *''செ-லி-நா- லோ-செங்-சியாபா-தோ பா-மோ'' என்ற தனித்தனிச் சொற்களைக் கூட்டி ஏதோ சொன்னான். பிறகு மரியாதையுடன் வணங்கி, கீழே கிடந்த இருவரையும் தன் கையால் சுட்டிக் காட்டி இன்னும் சில தனிச் சொற்களைச் சீன மொழியில் கூறினான்.

யாங் சின்னின் பார்வையிலிருந்த குதூகலமும் இதழ்களில் துளிர்த்த குரூரப் புன்முறுவலும் தெரிந்ததேயொழிய அவன் என்ன சொல்கிறானென்பது புரியாததால், ''இவன் என்ன சொல்கிறான்?'' என்று பல்லவ இளவலை விசாரித்தாள் மைவிழி.

---

* *இந்தச் சொற்கள் ஸ்ரீநரசிம்ம போத்தவர்மன் என்ற பெயரைக் குறிக்கும். இரண்டாம் நரசிம்மவர்மனான ராஜசிம்மனை இப்படிச் சீனர்கள் அழைத்தார்கள்.*

* *Foreign Notices of South India' -By Sri K.A. Nilakanta Sastry - P. 117.*



பல்லவ இளவல் அவளை நோக்கிப் புன்முறுவல் கோட்டி, ''ஒன்றுமில்லை. முதலில் சீன பாஷையில் என் பெயரைச் சொன்னான்'' என்று கூறினான்.

''உங்கள் பெயரையா?'' வியப்புடன் வினவினாள் மைவிழி.

''செ-லி என்றால் ஸ்ரீ, நா-லோ-செங்-கியா என்றால் நரசிம்ம, பா-தோ-பா-மோ- என்றால் போத்தவர்மன். மொத்தமும் கூட்டினால் ஸ்ரீநரசிம்ம போத்தவர்மன்'' என்று விளக்கினான் பல்லவ இளவல்.

''நீங்கள் இன்னும் மன்னராகவில்லையே? போத்தரசர் என்ற பெயர் பல்லவ மன்னர்களுக்குத்தானே பொருந்தும்?'' என்று கேட்டாள் மைவிழி.

''ஆம், இருப்பினும் இவர்கள் என்னை அப்படித்தான் அழைக்கிறார்கள்.''

''ஆமாம்! உங்களுக்குச் சீனமொழி தெரியுமா?''

''சிறிது தெரியும்''

''இன்னும் என்ன மொழி தெரியும்?''

''அராபிய மொழி தெரியும். கொஞ்சம் இமயத்திலுள்ள திபெத் வாசிகள் மொழிகள் தெரியும்.''

''உலக மொழிகள் அனைத்தும் தெரியுமென்று சொல்லுங்கள்.''

ராஜசிம்மப் பல்லவன் சிறிது சிந்தித்துவிட்டுச் சொன்னான். ''மைவிழி! இந்த மல்லைக்கடல் துறைமுகத்தில் உலகத்தின் பல பக்கத்திலிருந்தும் வணிகர்கள் வந்து இறங்குகிறார்கள். அவர்களில் பலர் முதலாம் மகேந்திர பல்லவரும் முதலாம் நரசிம்ம பல்லவரும் சிருஷ்டித்த குடைவரைக் கோயில்களையும் சிற்பங்களையும் மண்டபங்களையும் பார்த்து மகிழ்கிறார்கள். அவற்றைப் பற்றிச் சிலர், என்னிடம் விளக்கம் கேட்கிறார்கள். சொல்லுகிறேன். இன்னும் சிலர் நான் அமைக்கும் சிற்பங்களைப் பற்றிக் கேட்கிறார்கள், விளக்கு கிறேன். அவர்களுடன் பேசிப் பேசி மொழி அறிவு வந்துவிடுகிறது'' என்று மொழிகளைக் கற்றது பெரும் தவறு போன்ற குரலில் கூறினான். மேலும் கூறினான் ராஜசிம்மன்: ''மைவிழிச் செல்வி! மனிதர்களுக்குத் தான் மொழி வேற்றுமை இருக்கிறது. சிற்பங்களுக்கு இல்லை. அவற்றுக்கு ஒரே மொழி கலை சொல்லும் மொழி. எந்த நாட்டுச் சிற்பமும் இன்னொரு நாட்டுச் சிற்பத்தைக் கண்டு பொறாமை கொள்வதில்லை. அவற்றை வைத்து மனிதன் போராடுகிறான். ஆனால் சீனர் நமது சிற்பங்களை மதிக்கிறார்கள். நம் கலைகளை மதிக்கிறார்கள். அவர்களுக்கும் நமது கோவில்களைப் போல் கோவில் வேண்டுமென்று விரும்புகிறார்கள். சீனரை நான் பெரிதும் மதிக்கிறேன்.''

இதைக் கேட்ட மைவிழி சில விநாடிகள் மெய்மறந்து நின்றாள். ராஜசிம்ம பல்லவனின் நெடுநோக்கு அவள் சித்தத்தை மயக்கியிருந்தது. பாரதத்தின் பிற்காலத்திய மாபெரும் சக்கரவர்த்தி முன்பு தான் நிற்பதை உணர்ந்தாள். அத்தகைய ஒரு வீரன், அத்தகைய ஒரு மேதை, தன் மையலில் சிக்கிவிட்டதை நினைத்து மயிர்க்கூச் செறிந்தாள். யாங் சின் மறுபடியும் சூச்சூ என்று சூ கொட்டி சகசக வென்று ஏதோ சொன்னதுமே சுயநிலைக்கு வந்தாள். "இவன் இன்னும் ஏதோ சொல்கிறானே?" என்றும் வினவினாள்.

இளவல் அவளை நோக்கித் திரும்பி, "ஒன்றுமில்லை, இவர்களைக் கொன்று விடட்டுமா என்று கேட்கிறான்" என்றான்.

மைவிழிக்குத் தூக்கிவாரிப் போட்டது. "நீங்கள் என்ன பதில் சொன்னீர்கள்?" என்று கேட்டாள்.

"இன்னும் ஏதும் சொல்லவில்லை."

"என்ன சொல்லப் போகிறீர்கள்?"

"கொல்ல வேண்டாமென்று சொல்லப் போகிறேன். வேறென்ன எதிர்பார்க்கிறாய்?"

மைவிழி மெல்ல சாந்தப் பெருமூச்சுவிட்டாள். அந்தச் சமயத்தில் மெல்ல சுயநினைவுக்கு வந்துவிட்ட சாளுக்கிய உபதளபதியும் அவனது வீரனும் வலையிலிருந்து மீள அப்படியும் இப்படியும் அசங்கி, கைகளை விடுவித்விடுத்துக் கொள்ள முயன்று முடியாமல் தத்தளித்தார்கள். அவர்களது தத்தளிப்பைப் பார்த்து சூசகூ என்று சீனன் மகிழ்ந்தான். அத்துடன் ஏதோ சீனமொழியில் சொல்லவும் சொன்னான்.

"என்ன சொல்கிறான்?" என்று கேட்டாள் மைவிழி மறுபடியும்.

"வலைக்குள் அகப்படும் சுறாக்களைவிட இவர்கள் நன்றாகத் துடிப்பதாகக் கூறுகிறான்" என்று விளக்கிய பல்லவ இளவல், "யாங்சின்! இவர்களை என்ன செய்யலாம்?" என்று வினவினான்.

யாங் சின் வலைக்குள்ளிருந்தவர்களை நோக்கிக் கையைக் காட்டி, கடலையும் சுட்டிக் காட்டினான்.

மைவிழி மீண்டும் குறுக்கிட்டாள். "நீங்கள் தமிழில் சொல்வது இவனுக்குப் புரியும் போலிருக்கிறதே?" என்றும் கேட்டாள்.

"புரியும். கொஞ்சம் கொஞ்சம் பேசவும் தெரியும்" என்று பல்லவ இளவல் கூறிவிட்டு, "இவர்களை வலையுடன் கடலில் எறிந்துவிட யோசனை சொல்கிறான்" எனறும் விளக்கினான்.

இந்தச் சொற்கள் விழுந்தது மைவிழியின் காதில் மட்டுமல்ல, வீரபாகுவின் காதிலும் கேட்டது. அதன் வலைக்குள் தத்தளித்த படி



கூவினான், "வீரபாகு எதிரியின் தளபதி! பெரிய வீரன், அவனைக் கடலில் எறிவது அதர்மம்" என்று.

சீனன் கடலையும் காட்டி வாயால் சங் என்று ஒலி எழுப்பி, பற்களையும் கடித்துக் காட்டினான். வீரபாகுவுக்கு அவன் சொல்வது புரிந்ததோ, புரிந்ததாக நடித்தானோ தெரியாது. "ஆம் ஆம். கடலில் எங்களை எறிந்தால் சுறாக்கள் சுறுக்சுறுக்கென்று கடித்துத் தின்றுவிடும்' என்று கூவினான்.

ராஜசிம்ம பல்லவன் அவனை நோக்கி, "உங்களை யாரும் கடலில் எறியப் போவதில்லை. கவலைப்படாதே" என்று கூறி விட்டு சீனனைப் பார்த்து, "யாங் சின்! இவர்களிடமுள்ள ஆயுதங்களை எடுத்துக் கொள். இவர்களைக் காலிலிருந்து மார்பு வரை வலைக்குள் அடைத்து அசையாமல் கட்டிவிடு. இவர்களை விடுவிக்க யாராவது இரு பரதவரை அனுப்புவோம் காலையில்" என்று உத்தரவிட்டான்.

யாங்சின் தலையை இருமுறை ஆட்டினான். ஆமோதிப்பதற்கு அறிகுறியாக. பிறகு இளவரசனிட்ட உத்தரவை நிறைவேற்றும் பணியில் இறங்கினான். அவன் எத்தனை திறமையுடன் எத்தனை லாவகமாகத் தனது பணியை நிறைவேற்றினான் என்பதைக் கவனித்த மைவிழி வியப்பினால் தனது விழிகளை அகலத் திறந்தாள். "அப்பா! இந்த சீனன் மகா சூரன்!" என்றும் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

சீனன் முதலில் வீரபாகுவுக்கருகில் உட்கார்ந்து தலையிலிருந்து இடுப்புவரை மூடியிருந்த வலையை லேசாகப் பிரித்து, சிறிது உயரத் தூக்கித் தனது கையை விட்டு உபதளபதியின் வாளை மெல்ல உறையிலிருந்து உருவி இழுத்து வெளியே எடுத்தான். அதே மாதிரி வீரன் பக்கமும் சென்று அவனது வாளையும் எடுத்துக் கொண்டான். இரண்டு வாட்களையும் இளவரசனிடம் கொடுத்து விட்டு இருவர் மீதிருந்த வலையை நன்றாக நீக்கி இருவரையும் எழுந்திருக்கக் கட்டளையிட்டான். இருவரும் எழுந்து நின்று கைகால்கள் உதறிக் கொண்டதும் சீனன் வலையை நன்றாகச் சுற்றிலும் விசிறி, சிடுக்கெடுத்துப் பிரிக்கலானான்.

அதைக் கண்ட வீரபாகுவின் முகத்தில் கனல் துளிர்த்தது. "ஒரு வீரனை இன்னொரு வீரன் நடத்தும் முறை இதுவல்ல" என்று சீறினான் இளவரசனை நோக்கி

"நான் வீரனென்பதை ஒப்புக் கொள்கிறீர்கள் போலிருக்கிறது!" என்றான் பல்லவ இளவல் புன்முறுவல் கோட்டி.

"நீங்கள் பல்லவ இளவரசர் என்பதை நீங்களும் அதோ அந்தப் பெண்ணும் சற்று முன்பு பேசியதிலிருந்து புரிந்து கொண்டேன்" என்றான் வீரபாகு.

''அப்பொழுதே விழித்துக் கொண்டு விட்டீர்களா?'' என்று கேட்டான் இளவரசன்.

''விழித்துக் கொண்டு விட்டேன். ஆனால் விழித்துக் கொண்டதாகக் காட்டவில்லை. உள்ள நிலையை எதிர்க்கு உணர்ந்த வீரபாகு அப்படியொன்றும் முட்டாளல்ல.'' இந்த வாசகத்தைச் சொன்ன வீரபாகுவின் முகத்தில் சற்றுத் தற்பெருமை தெரிந்தது.

இளவரசன் இளநகை கொண்டான். தனது கையிலிருந்த இருவாட்களையம் திருப்பிப் பார்த்தான் இருமுறை. அதைக் கண்ட வீரபாகு. ''அந்த வாட்களில் ஒன்றை இப்படிக் கொடுங்கள். இந்த வீரபாகு யாரென்பதைக் காட்டுகிறேன்'' என்று வீராவேசமாகப் பேசினான்.

இளவரசன் இதழ்களில் இளநகை நன்றாக விரிந்தது. ''யாரென்பது எனக்கு முன்னமே தெரியும்'' என்றும் சொன்னான்.

''யாரென்று தெரியும்?''

''நிராயுதபாணியாக நான் இருந்தபோது என்மீது வாளை உருவிய வீரனென்பது தெரியும்?''

''அப்பொழுது நீங்கள் இளவசரன் என்பது தெரியாது.''

''அப்படியானால் நிராயுதபாணிகளான பரதவர் மீது வாள் வீசக் கூடிய வீரராயிருக்க வேண்டும். அதைத் தவிர...''

''தவிர...?''

''அழகான பெண்களைக் கண்டால் பல்லிளிக்கும் வீரனென்பதும் புரிகிறது'' என்ற பல்லவ இளவல், ''வீரபாகு! உன் அதிர்ஷ்டம் இவளை நோக்கி அடியெடுத்து வைத்த போது என்னிடம் வாள் இல்லை. இருந்தால் உன் மீது வலை பாய்ந்திருக்காது. வாள் பாய்ந்திருக்கும். நீ எதிரிப் படைகளின் உபதளபதி என்பதாலும் உன்னைப் போன்ற ஓர் அசடனைக் கொல்வதில் அர்த்தமில்லை யென்பதாலும் உன்னை உயிருடன் விடுகிறேன். இப்பொழுது நீங்களிருவரும் வலையில் பிணைக்கப்படுவீர்கள். நாளைக் காலை யில் உங்களை விடுவிக்க யாராவது இருவரை அனுப்புகிறேன்'' என்று கூறிவிட்டு அலுவலைச் சீக்கிரம் முடிக்குமாறு சீனனுக்குச் சமிக்ஞை காட்டினான்.

அவர்கள் சம்பாஷணையை அணுவளவும் கவனிக்காமல் வலையின் சிடுக்கை எடுத்து நன்றாக வலையை மணலில் பிரித்து விட்ட யாங் சின் வீரபாகுவையும் அவனது வீரனையும் நோக்கி வலையில் வந்து அமருமாறு சைகை காட்டி, கேலியுடன் தலையும் வணங்கினான். வேறு வழியின்றி வீரபாகுவும் அவனது வீரனும் வலைக்கு நடுவில்



வந்ததும் யாங் சின் அவர்களை ஒவ்வொருவராக அக்கம் பக்கத்தில் படுக்க வைத்து வலையை மார்புவரை தூக்கி மூடினான். பிறகு அவர் களுக்குக் கீழிருந்த வலையின் பகுதியையும் எடுத்து மேல் பகுதியுடன் இணைத்துக் காட்டினான். இப்படிக் காலிலிருந்து மார்பு வரை அவர்களை வலையிலடைத்துவிட்ட சீனன் அவ்விருவர் கைவிரல் களையும் வலையின் துளைகளில் பின்னிக் கட்டினான். பிறகு எழுந்து நின்று இளவரசரிடம் அலுவல் முடிந்து விட்டதென்பதைக் கூறினான்.

இளவரசன் மேற்கொண்டு தாமதிக்காமல் சில கேள்விகளைக் கேட்டான். ''படகு எங்கே?'' என்று முதல் கேள்வியை வீச, ''கடல் வளைவின் மறுபுறத்தின் மறைவில் இருக்கிறது'' என்றான் சீனன்.

''மற்ற இருவர் எங்கே?''

''கடிகைக்குப் போய் விட்டார்கள்.''

''நீ ஏன் போகவில்லை?''

''உங்களை விட்டு அகலக் கூடாது என்பது சீனச் சக்கரவர்த்தியின் உத்தரவு.''

மைவிழிக்கு ஏதுமே புரியவில்லை. கடைசியாக இளவரசன், ''சரி, வா போவோம்! இனி இங்கு தாமதிப்பதிற்கில்லை'' என்று தமிழில் அழைத்தபின்புதான் அவள் சற்று நிம்மதியடைந்தாள். அந்த நிம்மதியில் ''எங்கு போவது?'' என்று கேட்டாள்.

''உப தளபதிகள் தங்கியிருக்கும் குடைவரை மண்டபத்துக்கு.''

''எதிரிகளிருக்கும் குகைக்கா?'' என்று கேட்டாள் மைவிழி அச்சத்துடன்.

''ஆம்.''

''சிங்கத்தின் குகைக்குள் தலையிடுவது உசிதமா??

''இருப்பது சிங்கமா என்பது ஒரு கேள்வி. சொல்வது யார் என்பது இன்னொரு கேள்வி'' என்ற பல்லவ இளவல் மைவிழியும் சீனனும் பின் தொடர மல்லைக் கடலோரம் நடந்து நகரத்துக்குள் நுழைந்தான்.

நகரத்தில் காவல் பலமாயிருந்தது. எதிரிப் படைகள் பெரும் வீதிகளில் சதா நடமாடிக் கெண்டிருந்தன. இதைச் சற்றுத் தூரத்திலிருந்தே கவனித்து விட்ட ராஜசிம்மன் மலைப்பாறை வழிகளிலும் அடர்ந்த தோப்புகளின் வழியாகவும் சுற்றிச் சென்று ஆதிவராகக் குகையை அடைந்தான். குகை திறந்திருந்தது. மிகுந்த எச்சரிக்கையுடன் உள்ளே நுழைந்தான் பல்லவ இளவல். உள்ளே உப தளபதிகள் யாருமில்லை. சிறு விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. அந்த விளக்குக்கு எதிரே தனித்த ஒரு வீரன் மட்டும் நின்றிருந்தான். அவன் நின்றிருந்த தோரணை ராஜ தோரணையா யிருந்தது.

# 10. புதியவன் பதிலும் பல்லவன் திகிலும்

**ஆ**திவராகன் குகையென்று பிரசித்தி பெற்ற அந்தக் குடைவரைக் கோயிலுக்குள் நுழைந்த ராஜசிம்ம பல்லவன் அங்கு யாரோ நின்றிருந்ததைக் கண்டதும் சட்டென்று சிறிது பின்வாங்கி, குகை வாயிலின் ஒரு புறத்தில் ஒதுங்கி நின்று கொண்டான். இரவின் மூன்றாம் ஜாமத்தில்கூட விடாது தீவிழி விழித்து எரிந்து கொண்டிருந்த தூங்கா விளக்கு, மலையைக் குகை போல் குடைந்து முதலாம் நரசிம்ம பல்லவனால் நிர்மாணிக்கப்பட்ட அந்தக் கோயிலின் உட்புறம் நன்றாகத் துலங்கும்படி செய்திருந்ததன் விளைவாக, வாயிற்படிக்கு நேர் எதிரில் மலையின் உட்சுவரில் சிற்பி நிர்மாணித்திருந்த ஆதிவராகப் பெருமான் திருவுருவம் மட்டுமின்றி அக்கம் பக்கத்தில் செதுக்கப்பட்டு உயிருள்ளவை போல் காணப்பட்ட மற்ற பிம்பங்களும் தெள்ளெனத் தெரிந்தன. ஒரு கையால் அவனி தேவியை அணைத்து உயரத் தூக்கி வைத்துக் கொண்டும் இன்னொரு கையால் அவள் பாதத்தைப் பிடித்துக் கொண்டும், இருகரங்களில் சங்கு சக்கரம் ஏந்திக் கொண்டும் காட்சியளித்த பரந்தாமனான ஆதிவராகனின் சீரிய பார்வையில் உக்கிரமும் சாந்தியும் கலந்து கிடந்தன. தரையில் ஊன்றிய நாரணனின் இடது திருவடியும் ஆதிசேஷன் தலையைப் பீடமாக்கிக் கொண்ட வலது கழலிணையும் அசுரனிடம் பொருது மீண்ட புராண நிகழ்ச்சிக்குச் சான்று கூறும் தோரணையில் காட்சியளித்தன் ஆதிவராகனின் சீறிய தோற்றத்துக்கு அணை போடும் ஆற்றலுடையவளாக, அசுரனுடன் பொருது மீண்ட சீற்றத்தைத் தணிக்கும் கருணை சொரூபமாக, அருள் சுரக்கும் வெட்கக் கண்களுடன் பெருமானின் கரங்களில் வளைந்து கிடந்தாள் பூமிப் பிராட்டி. எம்பெருமான் திருவடிக்குத் தலை கொடுத்திருந்த ஆதி சேடனும் அவனருகிலிருந்த நாககன்னிகையும் தங்களுக்குக் கிடைத்த திருவடி சாயுஜ்யத்தில் மெய் மறந்திருந்தார்கள்.

ஆதிவராகன் அருள் தோற்றத்தின் விளைவாக மெய் மறந்திருந்தது ஆதிசேடன் மட்டுமல்ல, அந்தக் கோயிலுக்குள் ஆதிவராகன் முன்பு ராஜ தோரணையுடன் நின்றிருந்த அந்த மனிதனும் மெய் மறந்திருந்தான். மார்பில் இரு கைகளையும் கட்டிச் கொண்டு கால்களிரண்டையும் லேசாக அகற்றிக் கொண்டு ஆஜானுபாகுவாக நின்றிருந்த அம்மனிதனின் தலை நிமிர்ந்திருந்ததால் அவன் எம்பெருமான் உருவத்தை அணு அணுவாக ஆராய்வதை உணர்ந்தான் வாயிற்படியின் மூலையிலிருந்த பல்லவ இளவல். நிமிர்ந்த அந்த மனிதனின் தலையின் சுருண்ட பின்புறக் குழல்கள் அவன் கழுத்தை மறைத்துத் தோள்களைத் தொட்டுக் கொண்டிருந்தாலும் வீரமிருந்த



தாகத் தோன்றியது ராஜ சிம்மனுக்கு. அளவோடு சிறுத்த இடுப்பும், அதற்கு மேலும் கீழும் உறுதியுடனிருந்த உடற்கூறுகளும் இடை விடாத யோகப் பயிற்சிக்குச் சான்று கூறின. கால்கள் ஏதோ இரும்பால் செய்யப் பட்டதை போல் இருந்த தோரணை அவன் திடத்தைச் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்தது. அவன் தன்னைப் போலவே அதிகச் சதைப் பிடிப்பு இல்லாதிருந்தாலும் பலத்தில் தனக்கு எந்தவிதத்திலும் குறைந்தவனல்லனென்பதை ராஜசிம்மன் உணர்ந்து கொண்டான். இத்தனையிலும் அந்த மனிதன் தன்னைப் போல் வாலிபன் அல்ல என்பதும், நடுத்தர வயதை எட்டியவன் என்பதும் தலையின் பரிமாணத்திலிருந்தும், லேசாகப் புலப்பட்ட கன்னத்தின் முதிர்ச்சி யிலிருந்தும் புரிந்தது பல்லவ இளவலுக்கு. இப்படி அவன் அந்த மனிதனை அணு அணுவாக எடை போட்டுக் கொண்டிருந்த சமயத்தில் அந்த மனிதன் லேசாகத் திரும்பி உட்பாறையின் வலது பக்கத்திலிருந்த மூன்று சிற்பங்களைக் கவனித்தான்.

அவன் அப்படி அரைவாசிதிரும்பியதால், அவன் முகம் தூங்கா விளக்கில் நன்றாகத் தெரிந்தது நன்றாக தீட்டப்பட்ட ஈட்டிகளின் முனைகளைவிடப் பிரகாசித்த கண்கள் அந்தச் சிற்பங்களை வியப்புடனும் ஓரளவு சீற்றத்துடனும் நோக்கின. கூரிய அவன் நாசியும், விசாலமான நெற்றியும், அவனுக்களித்திருந்த ராஜ தோரணையைக் கடுமையுடனிருந்த உதடுகளும் உறுதிப்படுத்தின. எதிரே தெரிந்த மூன்று சிற்பங்களை நோக்கிய போது, அந்த இதழ்களில் வெறுப்புக் கலந்த பயங்கரப் புன்முறுவலொன்றும் தவழ்ந்தது. சிற்பங்களை அமைத்திருந்த லாவகத்தால் சிற்பங்கள் அந்த மனிதனை நோக்கு கின்றனவா அல்லது அந்த மனிதன் சிற்பங்களை நோக்குகிறானா என்பது புரியவில்லை. மலைப் பாறையில் குடையப்பட்டிருந்த மூன்று சிற்பங்களில் ஆண் சிற்பம் மகேந்திர பல்லவனென்பதையும் அந்த மனிதன் உணர்ந்து கொண்டிருக்க வேண்டுமென்பதை அவன் விட்ட பெருமூச்சு நிரூபித்தது.

தலையில் கவிழ்க்கப்பட்ட கிரீடத்துடனும் அக்கம் பக்கத் தோள்களைச் சடை போல் தொட்ட முடியுடனும் எதிரே குச்சு போல் இடுப்பிலிருந்து இறங்கிய ஆடையின் பட்டைக் கச்சத்துடனும் காணப்பட்ட மகேந்திர பல்லவனின் முகத்தில் தெரிந்த கம்பீரம், அந்த மனிதனை வியக்க வைத்ததா அல்லது கொதிக்க வைத்ததா என்பது அவன் முக பாவத்திலிருந்து புரியவில்லை. பாறையின் ஒரு பகுதியாகக் கம்பீரத்தின் அடையாளமாக மகிஷியொருத்தியின் கையைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்த மகேந்திர பல்லவனின் இடையில் சற்றுப்

பின்புறமாக இருந்த கத்தியையும் அந்த மனிதன் கவனிக்கத் தவறவில்லை. கத்தியைக் கவனித்த அந்த மனிதனின் கண்கள் கோபத்தால் ஜொலித்தன. அவன் கையொன்று அவனது இடைக் கச்சையில் நீண்டு தொங்கிக் கொண்டிருந்த கத்தியின் முகப்பைத் தடவியது. மகேந்திர பல்லவன் பாறையிலிருந்து சிறிது நகர்ந்தாலும் வாளை உருவ அந்த மனிதன் தயாராயிருந்ததாகத் தோன்றியது வாயிலின் மூலையிலிருந்த பல்லவ இளவலுக்கு.

மகேந்திர பல்லவன் மகிஷிகளிருவரும் மகுடமணிந்து அழகின் அடையாளமாகத் திகழ்ந்தனர். இருவரின் ஒடிந்த இடைகளும் உருட்டிவிடப் பட்ட மார்புகளும், காலில் துலங்கிய சிலம்புகளும் அவர்களிருவரையும் இரட்டைப் பிறப்புக்களைப் போல் காட்டின. அந்தக் காலத்துச் சிற்பங்கள் பலவற்றைப் போல் அந்த மகிஷிகள் இருவரில் ஒருத்தியே ஆடையணிந்திருந்தாள். அந்த இரு சிற்பங்களை நீண்ட நேரம் பார்க்கவில்லை அந்த மனிதன். அந்தக் குகையில் நின்றிருந்த அவன், இடப்புறப் பாறைச் சுவரில் செதுக்கப் பட்டிருந்த சிம்ம விஷ்ணுவின் சிலையையோ, கஜலட்சுமியின் சிலையையோ திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. ஆதிவராகப் பெருமானை வணங்கிய பிறகு மீண்டும் மீண்டும் பல்லவ சக்கரவர்த்தியையும் மகிஷிகளிருவரையுமே கவனித்தான். அந்தச்சமயத்தில் ராஜசிம்மனின் கையிலிருந்த கத்தியொன்று வாயிலின் மூலையில் லேசாக உராயவே மெல்லத் திரும்பினான் அவன் வாயிலை நோக்கி. அப்படித் திரும்பியபோது விளக்குக்கு முன்னிலிருந்து அவன் அகன்றுவிடவே, விளக்கு வெளிச்சம் ராஜசிம்ம பல்லவன் மீது நன்றாக விழுந்தது.

தலையில் முண்டாசுடனும் இடுப்பில் வரிந்து கட்டப்பட்ட வேஷ்டியுடனும் காதில் வளைந்த குண்டலத்துடனும் பரதவர் கோலத்துடன் இரு கைகளிலும் இரு வாட்களைப் பிடித்துக் கொண்டிருந்த ராஜசிம்ம பல்லவனை அந்த மனிதன் கண்கள் ஒரு முறை அளவெடுத்தன. அந்தக் கண்களில் அச்சம் லவலேச முமில்லாததையும் ஏதோ விநோதமான சிற்பத்தைப் பார்க்கும் தோரணையில் அவை தன் மீது பதிந்ததையும் கண்ட பல்லவ இளவல், அந்த மனிதன் யாராயிருந்தாலும் சுயவலுவில் அபாரமான நம்பிக்கை உள்ளவன் என்பதை உணர்ந்து கொண்டான். தன் கைகளிலிருந்த இரு வாள்களைக் கூட அவன் ஒரு பொருட்டாக மதிக்காததையும், அவன் பார்வை தன்னையும் தாண்டிச் சற்று எட்ட இருந்த சீனன் மீதும் மைவிழி மீதும் நிலைத்ததையுங்கூடப் பார்த்த ராஜசிம்மன் அவனை ஏதும் கேட்காமலே நின்றான் சில விநாடிகள்.



அந்த மனிதனே முதலில் மௌனத்தைக் கலைத்து, "யார் நீ?" என்று வினவினான் மெல்ல.

"கடல் மல்லைப் பரதவன்" என்றான் பல்லவ இளவல் மெல்ல.

அந்த மனிதனின் இதழ்களில் முறுவல் அரும்பியது. "அந்தச் சீனன் யார்? அந்தப் பெண் யார்?" என்று அடுத்த கேள்விகள் தொடர்ந்தன சர்வ சாதாரணமாக.

"சீனன் எனது நண்பன்" என்று விடையிறுத்த பல்லவ இளவல், மைவிழியை எப்படி அறிமுகப்படுத்துவது என்பதை அறியாமல் சற்றுத் திணறினான்.

அந்தத் திணறலைக் சூட்சும புத்திசாலியான அந்த மனிதன் கவனித்திருக்க வேண்டும். "புரிகிறது" என்று மட்டும் சொன்னான் புன்முறுவலின் ஊடே.

ராஜசிம்ம பல்லவனின் கண்களும் சிறிது வியப்பைக் காட்டின. 'என்ன புரிகிறது உங்களுக்கு?"

"அந்தப் பெண் யாரென்பதைச் சொல்வதில் உனக்குச் சங்கடமிருப்பது புரிகிறது" என்று அந்த மனிதன் லேசாக நகைத்தான்.

அந்த மனிதனின் சொற்களையும் சிரிப்பையும் பின்னாலிருந்த சீனன் கவனித்ததால் அவர்களிருவருமிருந்த இடத்தை நோக்கி வரவும் தொடங்கினான். அவன் காலோசையைக் கேட்ட ராஜசிம்மன் தன் வாட்கரமொன்றால் சைகை செய்து பின்னாலேயே அவனைத் தங்கும்படி உத்தரவிட்டான். பிறகு எதிரில் அரச தோரணையுடன் நின்றிருந்தவனை நோக்கி, "அந்தப் பெண்ணைப் பற்றிச் சொல்வதில் எனக்குச் சங்கடமேதும் இல்லை" என்றான்.

அந்த மனிதன் உதடுகளிலிருந்த புன்முறுவல் சிறிதும் மறையவில்லை. "அப்படியானால் உங்கள் உறவு ஊரறிந்த உறவா யிருக்க வேண்டும்" என்றான்.

"அப்படியொன்றுமில்லை." சற்று நிதானத்தைக் கைவிட்டுக் கூறினான் ராஜசிம்மன்.

"அப்படியில்லாதிருந்தால் நீ முன்பு காட்டிய சங்கடத்துக்கு நியாயமிருக்கிறது" என்று அந்த மனிதன் நகைக்கவும் செய்தான்.

பேச்சில் வல்லவனென்று குருநாதரான மகாகவி தண்டியே ஒப்புக் கொண்ட பல்லவ இளவல் தர்மசங்கடமான நிலையில் பேச்சிழந்து கிடந்தான் அந்த வேளையில். ஆகவே, பேச்சை மாற்றும் உத்தேசத்துடன், "தங்களைப் பார்த்தால் அரச குலத்தவராகத் தெரிகிறது..." என்று ஏதோ சொல்லத் துவங்கினான்.

அந்த மனிதன் அவன் சொல்வதை ஒப்புக் கொள்வதற்கு அறிகுறியாகத் தலையை லேசாக அசைத்தான் ஒருமுறை. ''அரச குலத்தவர் தன்னந்தனியாக இந்த இரவில் காடு சூழ்ந்துள்ள இந்தக் குகைக்கு எதற்காக வரவேண்டும்?'' என்று வினவிய ராஜசிம்மன், ''ஓகோ! ஆதிவராகப் பெருமானைத் தரிசிக்க வந்திருக்க வேண்டும்...'' என்றான் ஏளனம் ஒலிக்க.

அந்த மனிதன் ராஜசிம்மனை ஒருமுறை கூர்ந்து கவனித்து, ''ஆம், அதுவும் ஒரு காரணம்'' என்றான்.

''அதுதான் காரணமாயிருக்க வேண்டும்'' என்றான் ராஜ சிம்மன்.

''ஏன் அப்படி?'' அந்த மனிதன் கேள்வி சட்டென எழுந்தது.

''போரில் வெற்றியடைய விரும்புபவர்கள் இந்தப் பெருமானைத் தரிசித்துச் செல்வது வழக்கம்.''

''அதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?''

''உங்களைப் பார்த்தால் சாளுக்கியர்போல் தெரிகிறது.''

''ஆம்.''

''ஆகவே பல்லவ சாம்ராஜ்யத்தை வெல்ல ஆதிவராகன் அருளைப் பெற வந்திருக்கலாம்.''

அந்த மனிதன் கேட்டான், ''சாம்ராஜ்யத்தை வெல்லும் அத்தனை பலன் இந்தக் கோயிலில் கிடைக்கிறதா?'' என்று.

''கிடைக்கிறது'' என்றான் பல்லவ இளவல்.

''அத்தாட்சி இருக்கிறதா அதற்கு?'' என்று வினவினான் அந்த மனிதன்.

''இருக்கிறது.''

''என்ன அத்தாட்சி?''

''நீங்கள் சற்று முன்பு கூர்ந்து நோக்கிய சிற்பம் யாருடையது தெரியுமா?

''தெரியும். மகேந்திர பல்லவனுடையது.''

''அவர் திருக்குமாரர் நரசிம்ம பல்லவர்...'' வாசகத்தை முடிக்கவில்லை பல்லவ இளவல், எதிரேயிருந்த மனிதனின் முகத்தில் அதுவரை காணாத கடுமை தென்பட்டதால்.

''சொல் மேலே.'' கடுமையுடன் உதிர்ந்தது அந்த மனிதன் வாயிலிருந்து உத்தரவு.

நரசிம்ம பல்லவர் வாதாபிமீது படையெடுக்கு ·முன்பு ஆதிவராகனைத் தரிசித்துவிட்டுச் சென்றதாகப் பல்லவர் வம்ச வரலாறு கூறுகிறது'' என்றான் ராஜசிம்மன்.



அதைக் கேட்டதும் அந்த மனிதன் ஒருமுறை ஆதிவராகப் பெருமானை நோக்கினான். பிறகு ராஜசிம்மனை நோக்கித் திரும்பி ''நமது குற்றங்களை ஆண்டவன்மீது சுமத்துவது தவறு'' என்று கடுமையுடன் கூறினான். ''ஆண்டவன் கருணை வள்ளல். நரசிம்ம பல்லவன் வாதாபியில் விளைவித்த அழிவை ஒரு நாளும் அனுமதித்திருக்க மாட்டான்'' என்று திட்டமாகக் கூறினான். இதைக் கூறிய அந்த மனிதனின் குரலில் கடவுள் நம்பிக்கை பலமாக ஒலித்தது. அதுவரை குரலிலிருந்த கடுமையும் ஓரளவு மறைந்தது.

அவன் சொற்களையும் நரசிம்ம பல்லவன் பெயரைக் கேட்டதும் அவனுக்கு ஏற்பட்ட ஆத்திரத்தையும் கவனித்த ராஜசிம்ம பல்லவனின் இதயத்தில் ஏதோ பெரும் சந்தேகம் உதயமாகவே மெல்லக் கேட்டான்: ''தாங்கள் யார் தெரியவில்லையே!''

அந்த மனிதன் சொன்ன பதில் ராஜசிம்மனை மட்டுமல்ல. பின்னாலிருந்த மைவிழியையும்கூடப் பேரதிர்ச்சிக்குள்ளாக்கியது. ''விக்கிரமாதித்தன்'' என்று சாதாரணமாக அந்த மனிதன் உதடுகளிலிருந்து உதிர்ந்த பதில் அவர்களுக்கு அத்தனை அதிர்ச்சியை அளித்ததென்றால் அவன் மேலே தொடர்ந்த சொற்கள் பல பிரம்மாஸ்திரங்களாக ராஜசிம்மன்மீது இறங்கின. சொல்லும் செயலும் அற்று நின்றான் பல்லவ இளவல்.

## 11. பழியின் வழி

**வ**டநாட்டுச் சக்கரவர்த்தியான ஹர்ஷவர்த்தனைத் தென்னாட்டில் அடியெடுத்து வைக்க முடியாமல் போரில் முறியடித்த மேலைச் சாளுக்கிய மாமன்னன் இரண்டாம் புலிகேசியின் மகனும், பல்லவர்களின் பரம வைரியும், பரம ரசிகனென்று வடமொழிப் பாவலரால் பெரிதும் போற்றப் பெற்றவனும், இரண்டு வாட்களைக் கரங்களில் ஏந்தி எதிரியொருவன் எதிரே நின்ற சமயத்திலும் வாளிடம் கையைக் கொண்டு செல்லாமலே தனது பெயரை வெளியிட்டவனும், முதலாம் விக்கிரமாதித்தனாக சாளுக்கியர்களுடைய மணி முடியைத் தரித்தவனும் பல்லவ காஞ்சியைக் கைப்பற்றியிருப்பவனுமான * விக்கிரமாதித்த சத்யாச்சரயனைக் கண் கொட்டாமல் சில விநாடிகள் பார்த்துக் கொண்டே நின்றான் பல்லவ இளவல். தங்கள் தலை நகரைக்

* *Sir W.Eliot's Fasimile collection refers to Vikramaditya as, Satyasraya. son of Pulikesin - II-jas. Burgess M.R.A.S.F.R.G.S.- Indian Antiquary vol VI-P.75.*

கைப்பற்றிய எதிரி அத்தனை சீக்கிரத்தில் மாமல்லபுரத்துக்கு வந்ததே பெரும் விந்தையாயிருக்க, அவன் ஆதிவராகன் குகைக்குத் தன்னந்தனியே அந்த இரவில் வந்ததும் தன்னை இன்னாரென்று அறிவித்துக் கொண்டதும் நம்பத்தகாத செயலாயிருந்தது பல்லவ இளவலுக்கு. அந்த எண்ணங்களின் விளைவாகவும் அவன் சாளுக்கிய மன்னன் என்ற காரணத்தாலும் வியப்பினால் ஏற்பட்ட அதிர்ச்சி இளவரசனை ஆட்கொண்டிருந்த சமயத்தில் விக்கிரமாதித்தன் அடுத்த பிரும்மாஸ்திரங்களையும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடுத்து விட்டான். ''எந்தப் பல்லவ இளவரசனைத் தேட என் படைவீரர்கள் கடற்கரையைச் சல்லடைபோட்டு சலித்துக் கொண்டிருக்கிறார்களோ அந்த ராஜசிம்மன் நீதானென்பதும் எனக்குத் தெரியும். உனக்குச் சீன அரசகுலத் தோன்றலொருவன் இணைபிரியா நண்பனென்பதையும் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த நண்பன் அதோ இருக்கும் சீனனாயிருந்தால் அதில் நான் வியப்படைவதற்குக் காரணம் ஏதுமில்லை'' என்ற சொல்லம்புகளை வெகுவேகமாக வீசிவிட்ட சாளுக்கிய மன்னன் தனது முடிவுகளில் சந்தேகமேதுமில்லை யென்பதையுணர்த்த இதழ்களை நன்றாக விகசித்தே புன்முறுவல் செய்தான்.

இதைக் கேட்ட ராஜசிம்மன் நீண்ட நேரம் பதிலேதும் சொல்லாமல் மௌனமே சாதித்தான். பிறகு மெல்லக் கேட்டான், ''என்னை எப்படி அடையாளம் கண்டு பிடித்தீர்கள்?'' என்று.

விக்கிரமாதித்தனுடைய ஈட்டிக் கண்கள் ராஜசிம்மனை ஏறெடுத்து நோக்கின. பிறகு அவன் இதழ்கள் விரிந்து உதிர்த்தன சொற்களை. ''புலி என்னதான் நரி வேடம் போட்டாலும் புலியின் சொரூபத்தை மறைப்பது கடினம். தவிர வேடமும் சரியல்ல...'' என்று கூறினான் விக்கிரமாதித்தன்.

''வேடத்தில் என்ன குறைவோ?'' என்று வினவினான் பல்லவ இளவல், ஏதோ கேட்க வேண்டுமென்பதற்காக.

''நீ இட்டிருக்கும் திலகம் பரதவர் திலகமல்ல, பரதவர் வாளைப் பிடித்துப் பழக்கமற்றவர். நீ பிடித்திருக்கும் முறையில் வாட்களை ஏந்தி நிற்க எந்தப் பரதவனாலும் முடியாது. தவிர உன் காதில் வளையத்திலுள்ள ஒரு கல்லுக்கு ஒரு சாம்ராஜ்யத்தை வாங்கலாம். வேடம் தரித்தாய் ராஜசிம்மன், ஆனால் சரியாகத் தரிக்கவில்லை. அவசரத்தில் அவசியமான மாறுதல்களைச் செய்து கொள்ள மறந்துவிட்டாய். அப்படியே சரியாக வேடம் போட்டாலும் என்ன பயன்?'' இதைச் சொன்ன விக்கிரமாதித்தன் சற்று லேசாக நகைக்கவும் செய்தான்.

''பயனில்லாமலென்ன?''



''எந்த வேடத்திற்குள்ளும் நீ மறைந்துவிட முடியாது ராஜசிம்மா! எந்த வேடத்திலிருந்தாலும் உன் கண்கள் உன்னைக் காட்டிக் கொடுத்து விடும். நீ நிற்கும் தோரணை உன்னைக் காட்டி கொடுத்துவிடும். உன் கையிலுள்ள வாள் காயத் தழும்புகள் உன்னைக் காட்டிக் கொடுத்துவிடும்...''

''வீரனான எவன் உடம்பிலும் தழும்பிருக்கும். வீரனான எவன் கண்களிலும் தீட்சண்யமிருக்கும்.''

''தீட்சண்யமிருக்கலாம், அதிகாரப் பார்வையிருக்காது. நிற்கும் தோரணையிலிருக்கலாம், அந்தத் தோரணையில் அலட்சியம் கலந்திருக்காது. வாட் புண்களின் வடுக்கள் தோற்பவனுக்கும் உண்டு, வெற்றியடைபவனுக்கும் உண்டு. முழங்கைக்கு மேல் போகாத வடுக்கள் வாள் சுழற்றுபவனின் தற்காப்புத் தன்மையை நிரூபிக்கிறது.''

இதைக் கேட்ட ராஜசிம்ம பல்லவனின் வியப்பு பன்மடங்கு அதிகப்பட்டது. இணையிலா வீரனான விக்கிரமாதித்தனின் ஆராய்ச்சித் திறனை நினைத்துப் பிரமித்தான் பல்லவ இளவல். அவனைப் பற்றிப் பல்லவ ஒற்றர்கள் பாராட்டிச் சொன்ன சொற்கள் அணுவளவும் தவறில்லையென்பதைப் புரிந்து கொண்டான் ராஜசிம்மன். ஆயினும் ஒன்று புரியவில்லை அவனுக்கு ''இந்த இரவில் எதற்காக விக்கிரமாதித்தன் குகைக்கு வந்தான்?'' என்ற கேள்விக்கு விடை காணாததால் அவன் நேரிடையாகவே அதை அறிய முற்பட்டு, ''தாங்கள் பல்லவ காஞ்சிக்குள் நுழைந்து...'' என்று துவங்கினான். அதை இடையிலேயே வெட்டிய விக்கிரமாதித்தன், ''ஒரு நாளாகிறது'' என்று முடித்தான் வாசகத்தை.

''அதற்குள் மாமல்லபுரம் வர வேண்டிய காரணம்?'' என்று கேட்டான் பல்லவ இளவல்.

விக்கிரமாதித்தன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. எதையோ நினைத்துத் திணறுவதற்கு அறிகுறி அவன் முகத்திலும் லேசாகக் கடுமையுடன் மடிந்த இதழ்களிலும் தெரிந்தது. ''என் குல வைரிகள் இருவரில் ஒருவரைப் பார்க்க வந்தேன். ஒருவரைப் பார்த்ததில் இன்னொருவர் கலைத்திறனையும் கண்டேன்'' என்று கூறிய விக்கிரமாதித்தன் சரேலென்று திரும்பித் தன் கையை எடுத்து ஆள்காட்டி விரலால் மகேந்திர பல்லவன் சிற்பத்தைக் காட்டினான். மேலும் சொன்னான், ''இந்த மகேந்திர பல்லவன் எங்கள் குல வைரி. இவன் காலத்திலேயே மாமல்லன் நரசிம்மவர்மன் பூசலைப் பெரும் போராக்கினான். எங்கள் நாட்டின் மீது போர் வெறி கொண்டு படை எடுத்தான். நாட்டை நாசப்படுத்தினான். பல இடங்களைக் கொளுத்தினான். வாதாபி அழிக்கப்பட்டது'' என்று.

அவன் குரலில் தொனித்த உஷ்ணத்தைக் கவனித்தான் ராஜசிம்மன். ''உங்கள் தந்தையும் கொல்லப்பட்டார்'' என்று சுட்டிக் காட்டினான்.

இதைக் கேட்டதும் விக்கிரமாதித்தன் அதிகமாகக் கொதித்தெழுவானென்று ராஜசிம்மன் எதிர்பார்த்ததால் ஏமாந்தே போனான். விக்கிரமாதித்த சத்யாச்ரயனின் கண்கள் தந்தையின் பெயரைக் கேட்டதும் சாந்தியடைவதைக் கண்டான் பல்லவ இளவல். அதில் சிறிது பெருமிதம் துளிர்ப்பதும் புலனாயிற்று அவனுக்கு. விக்கிரமாதித்தன் கம்பீரமாக நோக்கினான் பல்லவ இளவலை. ''ராஜசிம்மா! நீ வீரன்! ஆனால் வாலிபன். உலக அனுபவ மில்லாதவன். அரச குலத்தார் போரில் மடிவதைப் பொருட்படுத்த மாட்டார்கள். என் தந்தையை நீ அறிய மாட்டாய். இந்தப் பாரத நாடு படைத்த உத்தம வீரர்களில் ஒருவர் இரண்டாவது புலிகேசி சத்யாச்ரயர். வட பாரதம் முழுவதையும் வெற்றி கொண்டவனும் 'ரத்னாவளி'யின் ஆசிரியனும், வீரனும் கலைஞனுமான ஹர்ஷ வர்த்தனன் தென்னாட்டை நோக்கிக் காலை எடுத்து வைக்க முற்பட்டபோது, எந்த மன்னனும் அவனை எதிர்க்கத் துணியாத போது, போர்க்கொடி உயர்த்திய ஒரே மன்னன் புலிகேசி. யாரும் வெல்ல முடியாது என்று பெயர்வாங்கிய வடநாட்டுச் சக்கரவர்த்தியைத் தென்னாட்டில் காலை வைக்க முடியாமல் புறமுதுகிடச் செய்த ஒரே வீரன் சாளுக்கிய புலிகேசி. அந்த வீரன் வாதாபிப் போரில் மடிந்ததில் எந்தக் குறையுமில்லை. போர்க்களத்தில் மடியும் வீரன் வீர சொர்க்கமடைகிறான், சொர்க்கத்திலும் கௌரவிக்கப்படுகிறான் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆகவே அதை நான் பெருமையாக மதிக்கிறேன். அதற்காக எந்த வைரமும் இல்லை எனக்குப் பல்லவர்களிடம் நரசிம்மன் நாட்டுக்கு விளைவித்த நாசம், அதனால் எங்களுக்கு ஏற்பட்ட அவமானம், இவற்றைச் சரிக் கட்டவே போர்க்கொடி உயர்த்தியிருக்கிறேன். அதற்காகவே பல்லவரை முறியடிக்கச் சபதம் செய்தேன். பல்லவர் வெட்கித் தலை குனியச் செய்ய உறுதி பூண்டேன்'' என்றான்.

விக்கிரமாதித்தனின் சொற்கள் ஒரே சீராகவும் உஷ்ணமேது மில்லாமலும் உதிர்ந்ததைக் கண்டான் ராஜசிம்மன். அந்த மகாவீரன் சொல்வதைச் செய்யவல்லவனென்று திண்ணமாகத் தெரிந்தது பல்லவ இளவலுக்கு. ஒரு வேளை வாதாபி அழிவுக்குப் பதிலாக அவன் காஞ்சியின் கலைச் செல்வங்களை அழித்தால் என்ன செய்வது என்று ஏங்கினான். அது பற்றி எதிரியின் மனத்தை அறியக் கேட்டான். ''பல்லவர்களை முறியடிக்கலாம் போரில் படை பலம் அதிகமிருந்தால். ஆனால் அவர்களை வெட்கித் தலை குனியச் செய்வது எப்படிச் சாத்தியம்?'' என்று.



விக்கிரமாதித்தன் சற்று நிதானித்தான். பதில் சொல்லு முன்பு அவன் முகத்தில் சிந்தனை உலாவுவதும் புரிந்தது பல்லவ இளவலுக்கு. ''வாதாபியை நரசிம்மவர்மன் அழித்தான்'' என்று பழைய கதையை ஆரம்பித்தான் சிறிது சிந்தனைக்குப் பிறகு.

''ஆம்...'' பல்லவ இளவல் ஆமோதித்தான்.

''காஞ்சி இப்பொழுது என் கையிலிருக்கிறது.''

''ஆம்.''

''அதை அழித்துப் பழி தீர்த்துக் கொள்ளலாம்.''

''செய்யலாம்.''

''அதனால் பழி தீரும், ஆனால் பல்லவர் வெட்கப்பட அதில் ஏதுமிருக்காது.''

''ஆம்.''

''ஆகையால் உன் தந்தையின் வழியைக் கடைப்பிடிக்கத் தீர்மானித்து விட்டேன். உன் தந்தை இஷ்டப்பட்டிருந்தால் காஞ்சியைக் காப்பாற்றப் போரிட்டிருக்கலாம். போரிடவில்லை. காஞ்சியை விட்டு அகன்று விட்டார். சாதாரண மனிதர் கண்களுக்கு இது கோழைத் தனமாகத் தோன்றும். ஆனால் சிந்திப்பவன் பெரும் தியாகத்தைப் பார்ப்பான். பரமேசுவரவர்மன் செயலில்...'' என்று சொல்லிக் கொண்டு போகையிலேயே விக்கிரமாதித்தன் குரல் தழுதழுத்தது. அந்தத் தழுதழுத்த குரலில் மேலும் சொன்னான் விக்கிரமாதித்தன் : ''ராஜசிம்மா! உன் தந்தை காஞ்சியின் அழிவை விரும்பாததால் அதை விட்டு விலகினார். அந்தப் பெருந்தன்மையை அறிவாளிகள் பாராட்டுவார்கள். சிற்பச் செல்வங்களையும் கோவில்களையும் காக்கத் தன்னைத் தியாகம் செய்த மன்னன் என்று அவரை வாழ்த்துவார்கள். காஞ்சியை நான் அழிப்பதன் மூலம் பரமேசுவரவர்மன் புகழ் ஓங்குமே தவிர அழியாது. ஆகையால் நான் காஞ்சியை அழிக்கப் போவதில்லை. சிற்பம் எதிலும், கலை அடையாளம் எதிலும் கை வைக்கக் கூடாது என்று உத்தரவிட்டிருக் கிறேன் படைகளுக்கு. 'வாதாபியைக் கைப்பற்றிய நரசிம்மன் அந்நகரை நாசப்படுத்தினான், கலைப் பீடங்களைக் கொலை செய்தான். ஆனால் காஞ்சியைக் கைப்பற்றிய விக்கிரமாதித்தன் காஞ்சியை அழிக்கவில்லை. பாதுகாத்தான்' என்று வரலாறு சொல்லும்படி செய்து விட்டேன். அழிவுக்குப்பதில் அன்பையும் நாசத்துக்குப் பதில் பாசத்தையும், சாளுக்கிய விக்கிரமாதித்தன் பல்லவருக்குத் தந்தான் என்று வரலாறு சொல்லும். இதை விடப் பல்லவருக்கு அவமானத்தை விளைவிப்பது வேறென்ன இருக்க முடியும்?''

இதைக் கேட்ட ராஜசிம்ம பல்லவன் வாயடைத்து நின்றான். பல்லவ குலத்தின்மீது அப்பொழுதே மாசு படிந்து விட்டது போல் தோன்றியது அவனுக்கு. அதை நிவர்த்தித்துக் கொள்ள நினைத்த பல்லவ இளவல். ''இந்த விரோதத்தை இந்தக் குகையில் முடித்துக் கொண்டாலென்ன?'' என்று வினவினான் விக்கிரமாதித்தனை நோக்கி.

''எப்படி?'' விக்கிரமாதித்தன் குரலில் வியப்பு ஒலித்தது.

''உங்களிடமும் வாளிருக்கிறது என்னிடமும் வாளிருக்கிறது'' என்று சுட்டிக் காட்டினான் ராஜசிம்ம பல்லவன்.

''போரிட இது சமயமல்ல'' என்றான் விக்கிரமாதித்தன்.

''ஏன்?''

''நீ என்னைக் கொன்றுவிட்டால் என் படைகள் காஞ்சியையும் கடல் மல்லையையும் நாசம் செய்துவிடும். அதை நான் விரும்பவில்லை. நான் உன்னைக் கொன்று விட்டால் திறமையான ராஜ சிற்பி ஒருவன் அழிந்து போவான். அதையும் நான் விரும்பவில்லை. தவிர போரிட இது இடமுமில்லை. நான் உன்னைச் சந்திப்பதனால் போர்க்களத்தில் சந்திக்கிறேன்'' என்று கூறிய விக்கிரமாதித்தன் குகைக்குள்ளிருந்து வெளியே வந்தான். பிறகு, ''சித்ரகாந்தா!'' என்று குரல் கொடுத்தான் பெரிதாக. எதிரி குரல் கொடுத்ததைக் கண்ட பல்லவ இளவல் 'ஓகோ! இவ்வளவுதானா உன் வீரம்! உதவிக்கொரு வனை மறைத்து வைத்து விட்டா வீரம் பேசுகிறாய்?' என்று உள்ளூர எண்ணினான்.

அந்த எண்ணம் பறந்தது அடுத்த வினாடி, மறைவிலிருந்து ஓடிவந்த சித்ரகாந்தனைப் பார்த்த பல்லவ இளவல் வியப்பின் உச்சியை அடைந்தான். சித்ரகாந்தன் நடத்தை பிரமிப்பையும் அளித்தது பல்லவ இளவலுக்கு.

## 12. கடலருகே எழுந்த குரல்

**வி**க்கிரமாதித்த சத்யாச்ரயன் குரல் கொடுத்த மாத்திரத்தில் ஆதிவராகன் குகைக்கு வடக்குப் பகுதியிலுள்ள மரக்கூட்டத்தின் மறைவிலிருந்து அம்புபோல் பாய்ந்து வந்த சித்ரகாந்தனைக் கண்டதும் பல்லவ இளவல் வியப்பின் உச்சியை அடைந்தானென்றல் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. சித்ரகாந்தன் சாளுக்கிய மன்னனின் மெய்க்காவலனாயிருப்பான், தனது பாதுகாப்பை முன்னிட்டு அவனை மன்னன் மறைந்து நிற்க உத்தரவிட்டிருப்பான் என்று பல்லவ இளவல் செய்த ஊகமெல்லாம் மரங்களில் மறைவிலிருந்து ஓடிவந்த



வெண்புரவியைக் கண்டதும் காற்றில் பறந்து விடவே, அவன் ஆச்சரியத்தின் வசப்பட்டு அந்தப் புரவியை உற்று நோக்கினான்.

தாழ இருந்த மரக்கிளைகள் மேலே உராய்ந்ததால் சிறிது சலசலப்பை ஏற்படுத்திக் கொண்டு சாளுக்கிய சத்யாச்ரயனிடம் பாய்ந்துவந்து தன் முகத்தைக் தூக்கி அவன் முகத்தோடு அது இழைத்ததையும், அந்த இழைப்பில் விக்ரமாதித்தன் மயங்கி மெய்மறந்து சில விநாடிகள் நின்று விட்டதையும் கவனித்த பல்லவ இளவல், விக்கிரமாதித்தனுக்குச் சினம் உண்டாக்க வேண்டு மென்றால் அந்தப் புரவியை யாராவது தீண்டிவிட்டால் போது மென்பதைச் சந்தேகமறப் புரிந்து கொண்டான்.

அசுவ லட்சணங்களை நன்றாக உணர்ந்த பல்லவ இளவல் அந்தப் புரவியின் வாளிப்பான சரீரத்தையும், நீண்ட கழுத்தையும், மெல்லியனவாயும் உரமுள்ளனவாயும் எஃகுக் குச்சிகள் போல்நின்ற கால்களையும், சற்றுக் குறைவாகவே காட்சியளித்த வாலையும், நீண்ட முகத்தையும், பளிச்சிடும் கண்களையும் கண்டதும் அது அசல் அரபு நாட்டுப் புரவியென்பதையும் அரச லட்சணங்களைக் கொண்ட நல்ல உயர்ந்த ஜாதியென்பதையும் புரிந்து கொண்டான். அதன் உடலில் ஆங்காங்கு தெரிந்த சில காயங்களிலிருந்து அந்தப் புரவி போரில் தனது எசமானுக்குப் பெருந்துணையாக இருக்கக்கூடிய தென்பதை யுங்கூட உணர்ந்து கொண்டான் போரில் *சித்ரகாந்தனும் விக்ரமாதித் தனும் பரஸ்பரம் கொள்ளும் துணையில் தெள்ளெனத் தெரிந்தது. விக்கிரமாதித்தனுக்கும் அந்தப் புரவிக்கும் இருந்த நட்பு பல்லவ இளவரசனுக்குச் சிறிது பொறாமையாகக்கூட இருந்தது.

பல்லவ இளவல் இத்தனை ஆராய்ச்சியில் இறங்கியிருந்த சமயத்தில் விக்கிரமாதித்தன் தனது புரவியின் கழுத்தை நன்றாகத் தழுவி அதன் முகத்தோடு தன் முகத்தைப் பொருத்தியிருந்தான். அதன் வாயையும் மூக்கையும் ஒருமுறை தனது வலது உள்ளங்கையால் பிடித்து அழுத்திக் கொடுத்தான். பிறகு திரும்பிப் பல்லவ இளவலைப் பார்த்துப் புன்முறுவல் கொண்டு, ''சித்ரகாந்தனைப் பார்த்ததில் பெருவியப் படைந்திருக்கிறாய் ராஜசிம்மா!'' என்று கூறினான் அந்தப் புன்முறு வலின் ஊடே.

பல்லவ இளவல் பதிலேதும் கூறாமல் தலையை மட்டும் அசைத்தான் ஆமென்பதற்கு அறிகுறியாக, விக்கிரமாதித்தனே மேலும்

* *Vikramadiya the First recovered by means of his horse Chitrakantha part of the Chalukya dominions overrun by the Pallavas - by STEN KONOW Ph.D.Ep.Ind, Vol IX P-201.*

சொன்னான்: ''சித்ரகாந்தனுக்கு இணையான ஒரு புரவி இந்தப் பாரத நாட்டில் கிடையாது. அரபு நாட்டிலிருந்து வந்த வணிகன் ஒருவன் இதை எனக்குப் பரிசாகக் கொடுத்தான். பல போர்களில் இது என் உயிரைக் காத்திருக்கிறது. என் தந்தை இறந்ததும் நடந்த எங்கள் நாட்டு தாயாதிச் சண்டையில் இருமுறை நான் காயப்பட்டு இதன் உடலில் சாய்ந்தேன். இரு முறையும் இது என்னைப் போர்க்களத்திலிருந்து வெகு லாவகமாகத் தூக்கிச் சென்று மறைவிடத்தில் வைத்துக் காத்திருக்கிறது. இது வந்த பிறகுதான் எனக்கு அரசும் கிடைத்தது. எங்களை, ஒருவரிடமிருந்து இன்னொருவரைப் பிரிக்க முடியாது.''

சித்ரகாந்தனைப் பற்றிப் பேசிய அந்தச்சமயத்தில் விக்ரமாதித்தன் குரல் தழுதழுத்து விட்டதையும், அன்பு அதில் பெருகியோடியதையும் கவனித்தான் பல்லவ இளவல். விக்கிரமாதித்தன் அந்தப் புரவியைப் பற்றிக் கூறியதையெல்லாம் சாதாரண மனிதர்கள் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் புரவி இலக்கணம் அறிந்த பல்லவ இளவலுக்கு நன்றாகப் புரிந்தது. பெரிய போர்களில் அந்தப் புரவி அம்பு போல் எதிர்ப் படைகளிடை பாய்ந்து செல்லக்கூடியதென்பதையும், அதன் மீதமர்ந்திருக்கும் வீரனின் வாள் வீச்சுக்கும் போர் முறைக்கும் தக்கபடி அது வளைந்து பாய்ந்து நெளிந்தும் திரும்பியும் உதவுமென்பதையும் உணர்ந்து கொண்டதால் விக்கிரமாதித்தன் நல்ல அதிர்ஷ்டசாலி யென்று நினைத்தான் பல்லவ இளவல். அதை வாய் விட்டும் சொன்னான், ''சாளுக்கிய மன்னவர் நல்ல அதிர்ஷ்டசாலி'' என்று.

''ஆம் ராஜசிம்மா! சித்ரகாந்தனின் நட்புக்குப் பாத்திரமான எவனும் அதிர்ஷ்டசாலிதான்'' என்று கூறிய விக்கிரமாதித்தன் சிறிது சிந்தித்துவிட்டு, ''ராஜசிம்மா! இந்தப் புரவியை நீ விரும்புகிறாயா?'' என்று வினவினான்.

ராஜசிம்மன் பதில் தங்கு தடையின்றி வந்தது. ''இல்லை'' என்று.

''ஏன்?'' இதைக் கேட்ட விக்கிரமாதித்தன் கண்களில் சட்டென்று ஓர் ஒளி தோன்றி மறைந்தது.

''காரணங்கள் இரண்டு'' என்றான் பல்லவ இளவல்.

''என்னவோ?''

''முதல் காரணம் எதிரியிடமிருந்து எதையும் யாசித்துப் பெற இஷ்டமில்லை.''

''சரி.''

''இரண்டாவது, அந்தப் புரவியை நான் விரும்புவது அதர்மம்.''

''அதர்மமா?'' என்று வியப்புடன் வினவினான் விக்கிரமாதித்தன்.



''ஆம், மன்னவா'' என்ற பல்லவ இளவலின் குரல் திடமாயிருந்தது.

''புரவியை விரும்புவதில் என்ன அதர்மம் இருக்க முடியும்?'' என்று மீண்டும் வினவினான் விக்கிரமாதித்தன்.

''க்ஷத்ரியர்களிடத்தில் ஒரு முறை உண்டு. ராஜபுதனத்தில் அதைப் பற்றி ஒரு பழமொழியும் உண்டு'' என்று விளக்கினான் பல்லவ இளவல்.

''அப்படியா?''

''ஆம். எந்த வீரனும் தனது புரவி, வாள், மனைவி மூன்றையும் இன்னொருவனுக்குக் கொடுக்க மாட்டான் என்பது ராஜபுதனப் பழமொழி.

''ஓகோ!''

''ஆம்.''

''இப்பொழுது புரிகிறது நீ இந்தப் புரவியை விரும்பாத காரணம்.''

பல்லவ இளவல் விக்கிரமாதித்தனை நன்றாக ஏறெடுத்து நோக்கினான். ''மன்னவா! உங்களுக்கும் அந்தப் புரவிக்கும் இருக்கும் உறவைக்கவனித்தேன். இந்த உறவு, சாதாரணமாக ஏற்படும் உறவல்ல. என் தந்தையிடமும் இப்படியொரு புரவி இருக்கிறது. அதற்கு *''அதிசயம்'' என்று பெயர். அதை இழப்பதைவிட என் தந்தை தன் உயிரை இழப்பார். இந்தப் புரவியின் சாகசச் செயல்கள் அனைத்தும் அதற்கும் உண்டு. என் தந்தையை அந்தப் புரவி காப்பாற்றிய சமயங்களும் பல உண்டு. அப்படியிருக்கும்போது உங்களை இதனிடமிருந்து நான் எப்படிப் பிரிக்க முடியும்? கனவிலும் அது நடவாதென்பது எனக்குத் தெரியும்'' என்று கூறினான் ராஜசிம்ம பல்லவன் உணர்ச்சி மிக்க குரலில்.

விக்கிரமாதித்தன் தனது புரவியின் மீதிருந்த வலது கரத்தை நீக்கிவிட்டு இரண்டடி நடந்து ராஜசிம்ம பல்லவனை அணுகி அவன் தோள்மீது அந்தக் கையை வைத்தான். பிறகு பல்லவ இளவலை ஏற இறங்க நோக்கி, ''ராஜசிம்மா! உன்னை எதிரியாகக் கருதுவது எனக்குச் சொல்லவொண்ணா வேதனையை விளைவிக்கிறது. ஆனால் காலத்தின் போக்கு, அரசுகளின் போக்கு, சமுதாயங்களின் ஓட்டம் இவை நமது கரங்களில் இல்லை. இருப்பினும் உன்னைவிட வயதில் மூத்தவன்

* இந்தப் புரவியும் சரித்திரத்தில் இடம் பெற்றிருக்கிறது. ''பல்லவர் வரலாறு'' - டாக்டர் மா. இராசமாணிக்கம் பிள்ளை - பக்கம் 139.

என்ற கிரமத்தில் சொல்லுகிறேன். கேள். உன் பிற்காலம் பொற்காலமாயிருக்கும். நீ சிருஷ்டிக்கும் கோவில்கள் உன் பெயர் சொல்லும். வரலாற்றில் நீ நிரந்தரமான இடம் பெறுவாய் என்று என் உள்ளம் சொல்கிறது. நாம் களத்தில் சந்திக்கும் போதும் இந்த எண்ணங்களுடனேயே நான் உன்னைச் சந்திப்பேன் சீக்கிரம் மல்லையை விட்டு அகன்றுவிடு. உன்னை எப்படியும் பிடித்துவர உத்தரவிட்டிருக்கிறேன். அந்த உத்தரவை அரசனென்ற முறையில் நான் மாற்ற விரும்பவில்லை'' என்று கூறித் தன் புரவியிடம் சென்று மிக லாவகமாக அதன் மீது தாவி விட்டான். அவன் எண்ணத்தைப் புரிந்துகொண்ட அந்தப் புரவியும் கண்ணிமைக்கும் நேரத்தில் அந்த இடத்திலிருந்து பறந்தது.

அதன் வேகத்தையும், அது பாய்ந்த சென்ற அழகையும் அதன் மீது அலட்சியமாக அமர்ந்திருந்த விக்கிரமாதித்தனின் கம்பீரத்தையும் கவனித்துக் கொண்டே நின்றான் பல்லவ இளவல், புரவியும் எதிரியும் கண்ணிலிருந்து மறையும்வரை. பிறகு திரும்பிச் சற்று எட்ட இருந்த சீனனையும் மைவிழியையும் அருகில் வரும்படி சைகை செய்தான். இருவரும் அருகில் வந்ததும், ''யாங்சின்! நாம் வெகு துரிதமாக மல்லையிலிருந்து வெளியேற வேண்டும். இல்லையேல் எதிரிகளின் சிறையில் இருக்க நேரிடும்'' என்று கூறினான்.

சீனனின் சிறு கண்கள் பனிச்சிட்டன. ''அவனை ஏன் போக விட்டீர்கள்? சற்றுக் கண் காட்டியிருந்தால்...'' என்று சீனமொழியில் கூறி, தனது இடையிலிருந்த சின்னஞ்சிறு கத்தியொன்றைத் தட்டிக் காட்டினான் யாங் சின்.

''விக்கிரமாதித்தனைக் குறைவாக எடை போடுகிறாய் யாங்சின். அவன் பேசிய போதெல்லாம் உன் மீது அவன் ஒரு கண்ணை வைத்திருந்தான். உன் கை சிறிது அசைந்திருந்தாலும் இத்தனை நேரம் நாம் மூவரும் சிறைக்கூடத்தில் இருப்போம். தவிர விக்ரமாதித்தன் மகாவீரன். நமது பலவீனத்தைப் பயன்படுத்திக் கொள்ள அவன் இஷ்டப்படவில்லை. நாம் மட்டும் அவன் தனிமையை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது?'' என்று கேட்டான்.

''சீனாவில் இதையெல்லாம் நாங்கள் பார்ப்பதில்லை'' என்றான் சீனன் லேசாகப் புன்முறுவல் செய்து.

''இங்கு நாங்கள் அதைப் பார்க்கிறோம். இன்னும் பல தர்மங்களைக் கடைப்பிடிக்கிறோம். பாரத புண்ய பூமியின் வழிகள் வேறு'' என்று திட்டமாகக் கூறினான் ராஜசிம்மன்.

அது வரையில் சீன மொழியில் உரையாடிக் கொண்டிருந்ததைக் கைவிட்ட பல்லவ இளவல், ''மைவிழி! இனி நாம் கடல்



மல்லையைவிட்டு வெகு துரிதமாக வெளியேறவேண்டும். இன்னும் ஒரு ஜாமத்தில் பொழுது விடிந்துவிடும். அதற்குப் பிறகு தப்புவது பிரம்மப் பிரயத்தனம்'' என்று கூறிவிட்டு அவள் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு மீண்டும் பக்கத்திலிருந்த காட்டுப் பகுதிக்குள் நுழைந்தான். சீனனும் அவனைத் தொடர்ந்தான்.

ஆதிவராகர் குகை குடையப்பட்ட மலையின் வலது புறத்திலிருந்த காடு அடர்த்தியாயிருந்ததால் சந்திர வெளிச்சமும் அதில் மிகக் குறைவாகவேயிருந்தது. அத்தனை எதிரி பயத்திலும் இடர்பாட்டிலுங்கூட ராஜசிம்மனுடன் இணைந்தும், ஒதுங்கியும், தேகம் பட்டும் படாமலும் நடந்த மைவிழிச் செல்விக்கு ஏதோ இந்திர போகத்தில் இருக்கும் உணர்வே இருந்தது. அவர்களுக்கு பின் சற்று இடம் விட்டே நடந்து வந்தான் சீனன்.

நகர்ப்புறத்தின் பெரும் வீதிகளிலிருந்து வந்துகொண்டிருந்த படை வீரர்களின் காவல் கூச்சலைத் தவிர வேறு எந்த ஒலியும் அவர்களின் காதில் விழவில்லை. ஆதிவராகர் குகையிலிருந்த மலை மீது இன்னொரு பகுதியில் சதுரமாக எழுந்திருந்த கலங்கரை விளக்கத்தின் காவலன் அடிக்கடி அங்கிருந்த தீக்குண்டத்துக்கு எண்ணெய் விட்டாலும் வழக்கமாக அவன் போடும் கூச்சலைப் போடாததால் நிசப்தம் அந்தக் காட்டில் அதிகமாக நிலவிக் கிடந்தது. அந்த நிசப்தத்தில் அந்த மூவரும் நடந்ததால் ஏற்பட்ட ஒலி சற்று அளவுக்கு அதிகமாகவே கேட்டது. மாமல்லபுரத்தை நன்றாக அறிந்த அந்த மூவருக்கும் அந்தக் காட்டில் நடப்பது எவ்விதக் கஷ்டமும் இல்லாதிருந்ததால் காட்டின் முகப்பை வெகு சீக்கிரம் அடைந்தார்கள். அடுத்து மற்ற மரங்கள் ஒதுங்கி, சவுக்குக் கூட்டம் தெரிந்ததால் நடையைத் தேக்கிக்கொண்ட ராஜசிம்மன் மைவிழியை நோக்கி, ''மைவிழி, இந்தத் தோப்பு நான் நிர்மாணிக்கத் துவங்கியுள்ள கோயிலுக்கு அருகில் முடிவடைகிறது. அங்கு எப்படியும் எதிரிகளின் காவலிருக்கும். ஆகவே தரை மார்க்கத்தில் நாம் தப்ப முடியாது'' என்று சுட்டிக்காட்டினான்.

''வேறு எப்படிப் போவது?'' என்று கேட்டாள் மைவிழி.

''கடல் வழியில்தான் செல்லவேண்டும்'' என்றான் இளவரசன்.

''சென்று?''

''யாங்சின் மறைத்து வைத்துள்ள படகை அடைந்து அதன் மூலம் கடல் வழியே சென்றால் அரைக்காதத்தில் பரதவர் குடிசைக் கூட்டமொன்று இருக்கிறது. அதை அடைந்து விட்டால் அங்கிருந்து காஞ்சிக்குச் செல்வது எளிது.''

மைவிழி கேட்டாள். ''இதையெல்லம் என்னிடம் எதற்காகச் சொல்கிறீர்கள்?'' என்று.

''உன்னை இந்தக் கஷ்டத்துக்கு உள்ளாக்க நான் விரும்ப வில்லை'' என்றான் பல்லவ இளவல் சிறிது சிந்தனைக்குப் பிறகு.

''வேறு என்ன உத்தேசம்?'' என்று கேட்டாள் மைவிழி சந்தேகத்துடன்.

''உன்னை யாங் சின்னுடன் அனுப்புகிறேன்.''

''அனுப்பி?''

''அவன் உன்னை எப்படியாவது தப்ப வைத்துக் காஞ்சிக்கு அழைத்துச் செல்வான்.''

''நீங்கள்?''

''நான் கடல் வழி சென்று அப்படகை எடுத்துக் கொண்டு போகிறேன். எப்படியும் காஞ்சியில் சந்திக்கிறேன்.''

மைவிழி அவனை ஏறெடுத்து நோக்கினாள் நன்றாக. ''உங்கள் வழிதான் என் வழி'' என்று திட்டமாகக் கூறினாள் முடிவாக.

''அது அபாயமான வழி மைவிழி'' என்று எச்சரித்தான் இளவல்.

''அந்த அபாயத்தை நான் விரும்புகிறேன்'' என்று கூறினாள் மைவிழி.

வேறு வழியின்றி ராஜசிம்மன் சீனனை உடன் வரும்படி சைகை செய்து மைவிழியுடன் தோப்பின் முகப்பை அடைந்து பாறைகளில் மறைந்து நின்று கடலை நோக்கினான். கடற்கரையில் ஏற்கனவே எதிரி வீரர் பலர் உலவிக் கொண்டிருந்தார்கள். ''எப்படியும் இந்தப் பக்கம்தான் வருவார்கள். மலைப் பாறைகளில் ஆங்காங்கு நின்று எச்சரிக்கையுடன் கவனியுங்கள். ஜாக்கிரதை'' என்று ஒரு தனி மனிதன் குரல் பலமாக எழுந்து ஆணையிட்டுக் கொண்டிருந்தது. அது வீரபாகுவின் குரல்.

## 13. வாய் வித்தை

கடல் மல்லைக் கட்டழகி மைவிழியின் கையைப் பிடித்துக் கொண்டு, கடலலைகள் முக்கால்வாசி சூழ்ந்து தாக்கிக் கொண்டிருந்த மலைப்பாறையின் மறைவில் பாறையோடு பாறையாக ஒட்டி நின்றுகொண்டு, மலைப் பாறைக்கு இரு புறத்திலுமிருந்த கடற் பகுதியை உற்று நோக்கிய பல்லவ இளவல், இரு புறத்திலும் சவுக்குத் தோப்பின் ஓரத்தில் பல இடங்களில் சாளுக்கியப் புரவிப் படை வீரர்கள் பலர் உலாவிக் கொண்டிருந்ததையும், தான் மறைந்து நின்றிருந்த



இடத்துக்கு நேர் எதிரில் வீரபாகு பெரும் புரவி ஒன்றில் வீரர்களுக்குக் கையால் சைகை செய்து கொண்டிருந்ததையும், பெருங்குரலால் அவர்களை எச்சரித்துக் கொண்டிருந்ததையும் கண்டான். வீரபாகு பேச்சில் எத்தனை அசடனாயிருந்தாலும் தற்பெருமை அடித்துக் கொள்ளும் வீணனாயிருந்தாலும் படை வீரரை நிர்வகிக்கும் திறனும் மன்னன் இடும் பணிகளை நிறைவேற்றும் கூரிய அறிவும் உடையவனென்பதை அவன் வீரரை அதட்டின முறையிலிருந்தும், அவன் கை காட்டிய இடங்களுக்கெல்லாம் அவர்கள் பறந்து சென்று ஆராய்ந்ததிலிருந்தும், தான் வந்த சவுக்குத் தோப்புப் பகுதிக்குள்கூட இரு வீரரை அவன் அனுப்பியதிலிருந்தும் புரிந்து கொண்ட பல்லவ இளவல், தானும் மற்ற இருவரும் தப்பிக் கடலுக்குள் புகுவதுகூட அத்தனை சுலபமல்ல வென்பதை உணர்ந்து கொண்டான். எந்த மலைப் பாறையை ஜலசயனன் ஆலய நிர்மாணத்துக்காகத் தான் உடைக்க நேரிட்டதோ, எந்த மலைப் பாறையின்மீது சின்னஞ் சிறு யாளித்தூண்களைத் தான் எழுப்பி யிருந்தானோ, அதே பாறை சிறிது தஞ்சமளித்திருந்தாலும் அந்தச் சமயத்தில் எந்த நிமிடத்திலும் வீரபாகுவின் வீரர்கள் தங்களைக் கண்டுபிடித்து விடலாமென்பதை உணர்ந்து கொண்ட ராஜசிம்ம பல்லவன் புத்தி அங்கிருந்தும் தப்பும் மார்க்கத்தைப் பற்றி வெகு துரிதமாக வேலை செய்து கொண்டிருந்தது.

மைவிழி அவன் மௌனத்தைக் கவனிக்கவே செய்தாள். அவள் கையைப் பிடித்திருந்த அவனது இரும்புக் கரம், அவளை நோக்கிச் சீறி வந்து அவளுக்கருகே பாறையில் தாக்கிக் கொண்டிருந்த கடலலை களின் காரணத்தாலோ என்னவோ, அவள் கையைவிட்டு நீங்கி அவளது இடையில் அணைந்து இறுக்கிப் பிடித்துக் கொண்டது. இடையைக் கன்றிவிடச் செய்யும் அளவுக்கு அவன் கை முரட்டுத் தனமாக அழுத்தியதும், இடைச்சதையை அவன் விரல்கள் இறுக்கிப் பிடித்ததும் அத்தனை ஆபத்திலும் அவளுக்கு விவரிக்க இயலாத சங்கடத்தையும் இன்பத்தையும் அளித்தது. ஆனால் இளவரசன் கைப் பிடிப்புக்குக் காரணம் காமமில்லையென்பதையும் தன்னைத் தப்ப வைப்பதற்காக அவன் உள்ளம் செய்யும் யோசனையின் வெளிச் சேஷ்டையே என்பதையும் உணர்ந்த மைவிழிக்கு அவன் மீது ஓராண்டுக் காலமாகக் கிளைத்திருந்த காதல் மடை திறந்து பிரவாகித்துக் கொண்டிருந்தது ஆபத்தான அந்த நிலையிலும். அவனும் தானும் சென்ற ஓராண்டில் பிரிந்தே ஒருவரையொருவர் பாராதது போல் பார்த்துக் கொண்டிருந்தாலும், எட்ட நின்றே கண்களை ஒருவர் மீது ஒருவர் ஓட்டியிருந்தாலும், இருவர் உள்ளமும் ஒன்றுபட்டுப் போனதால் தங்கள் உறவு ஏற்பட்டு ஓராண்டுக் காலம் ஆகிவிட்டதென்று தனக்குள்

சொல்லிக் கொண்டாள் மைவிழி. என்னதான் உள்ளங்கள் இணைந்தாலும் உடல்களின் இணைப்பு ஏற்படாதவரை ஒரு பூர்த்தி ஏற்படுவதில்லை யென்பதையும் நினைத்துப் பார்த்த மைவிழி மலைப்பாறையில் நகர்ந்து அவன் உடலுடன் தன் உடலைச்சற்று நன்றாக ஒட்டினாள். ஆனல் எதையும் உணரும் நிலையில் இல்லாத இளவரசன் சற்று எட்டப் பாறையில் மறைந்திருந்த யாங் சின்னை அருகே வரும்படி அழைத்தான். யாங் சின் பாறையில் புரண்டு புரண்டு அருகே வந்து அவ்விருவரிடத்தி லிருந்தும் சற்றுத் தள்ளியே நின்று, ''இளவரசர் உத்தரவு என்ன?'' என்று கேட்டான்.

இந்தக் கேள்வியைக் கேட்ட போதும் அடுத்து நடந்த உரையாடல் போதும் தமிழிலேயே யாங் சின் பேசியதால் பல்லவ இளவலை அவன் எவ்வளவு நன்றாகப் புரிந்து கொண்டிருந்தா னென்பதையும், சூசகமாக இளவரசன் சொன்ன விஷயங்களைக் கூட நொடிப் பொழுதில் அவன் உணர்ந்து கொள்ள முடிந்ததையும் கண்ட மைவிழி இளவரசனுக்கு ஏற்பட்டுள்ள தோழன் லேசுப்பட்டவன் அல்லனென்பதை அறிந்து கொண்டாள். எள்ளென்பதற்கு முன்னால் எண்ணெய் எனக்கூடிய கற்பூரப் புத்தியுள்ள யாங் சின் கேட்ட கேள்விக்குப் பல்லவ இளவல் உடனடியாகப் பதிலேதும் சொல்லாமல் சற்றுத் தூரத்தே புரவியிலமர்ந்திருந்த வீரபாகுவைச் சுட்டிக் காட்டினான். வீரபாகுவை ஏற்கனவே பார்த்திருந்த சீனன், ''ஆம். இவன் இதற்குள் வந்தது வியப்பாகத்தானிருக்கிறது'' என்று கூறினான்.

''நாம் அவனை விட்டு வந்ததும் வேறு படை வீரரும் அந்தப் பக்கம் வந்திருக்க வேண்டும்'' என்றான் பல்லவ இளவல்.

''ஆம், படை வீரர்கள் இவனை விடுவித்ததும் காலதாமதம் செய்யாமல் மற்றும் சில வீரரை அழைத்துக் கொண்டு நம்மைத் தேட முற்பட்டிருக்கிறான்'' என்றான் சீனன்.

''குகைக் கோவிலைப் பற்றியும் உப தளபதிகளைப் பற்றியும் இவன்தானே நமக்குச் சொன்னான்?'' என்று கேட்டான் இளவரசன்.

''ஆம். ஆனால் மல்லை நகர் நன்றாகப் படைகளால் பாதுகாக்கப்பட்டிருப்பதால் நாம் தப்புவதானால் கடல் மார்க்கம்தான் வழியென்பதைத் திட்டமாக அறிந்திருப்பான். ஆகையால்தான் நம்மைத் தேட அவன் குகைக் கோயிலுக்குப் போகவில்லை என்று விளக்கிய சீனன், ''நாம் அலைகளுக்கு அருகிலிருந் தாலும் நீரில் இறங்குவது சிறிது கஷ்டம். இரு வீரர்கள் அதோ அருகாமையிலேயே புரவிகளில் உலாவுகிறார்கள். இந்த மறை விடத்தை விட்டுச் சற்று



நகர்ந்தாலும் நாம் அவர்கள் கண்களில் பட்டு விடுவோம்'' என்றும் சுட்டிக்காட்டினான்.

இளவரசன் தங்கள் மறைவிடத்தையும் பார்த்து எட்ட இருந்த வீரபாகுவையும் பார்த்தான். பிறகு சீனனை நோக்கி, ''அருகாமையில் இரு வீரர்கள் தானிருக்கிறார்கள்'' என்று சுட்டிக் காட்டினன்.

சீனனின் சிறு கண்கள் பளிச்சிட்டன. ''ஆம், ஆம்'' என்று உற்சாகத்துடன் கூறினான்.

''நாம் இப்பொழுதுள்ள இந்த மறைவிலிருந்து பின்னாலுள்ள சவுக்குப் பகுதியை எட்டில் ஓடி அடைந்து விடலாம்'' என்று பல்லவ இளவல் சுட்டிக் காட்டினான்.

மேற்கொண்டு ஏதும் பேசாத சீனன் தன் வலது கையை நீட்டினான். இளவரசன் தன் கையிலிருந்த இரு வாட்களில் ஒன்றை அவனிடம் எறிந்ததும் அதை வெகு லாவகமாகப் பிடித்துக் கொண்ட யாங்சின், ''பிரபு! கிளம்பட்டுமா?'' என்று வினவினான்.

''உம்'' என்ற ஒற்றைச் சொல் மந்திரம் கிளம்பியது ராஜசிம்ம பல்லவனிடமிருந்து.

யாங்சின் ஒரே ஒரு வினாடி தனது கச்சையைச் சற்று இறுக்கிக் கட்டிக்கொண்டான். கையில் வாளையும் உருவிப் பிடித்துக் கொண்டான். பிறகு மெள்ள மலைப்பாறையின் மறைவிலிருந்து வெளிவந்து எதிரி வீரர்கள் இருவரும் கவனிக்கும்படியாகத் தோப்பை நோக்கி மெல்ல நடந்தான். ''அதோ போகிறான்! பிடியுங்கள்! பிடியுங்கள்.'' வீரபாகுவின் குரல் பலமாக ஒலிக்கவே தோப்பை நோக்கி ஓடத் துவங்கினான் யாங்சின். புரவி வீரர் அவனிருந்த திசையில் புரவிகளைப் பாய்ச்சிக் கொண்டு சென்றனர். அதற்குள் அவன் தோப்பின் முகப்பை அடைந்து விட்டதால் புரவிகளிலிருந்து குதித்து அவனைத் தொடர்ந்து ஓடலாயினர்.

''இந்தத் தோப்பில்தான் அவர்கள் மறைந்திருக்கிறார்கள். விடாதீர்கள்'' என்ற வீரபாகுவின் குரல் மலைப்பாறைக்கு அப்புற மிருந்த பகுதியிலிருந்த வீரரையும் அந்தச் சவுக்குத் தோப்புக்குள் துரத்திவிடவே கடற்கரை திடீரென வெறிச் சோடி விட்டது. அதே சமயத்தில் பக்கத்திலிருந்து சிறு கல் ஒன்றை எடுத்துப் புரவி மீதிருந்த வீரபாகுவின் மீது இளவரசன் வீசி விடவே அது வந்த திக்கை நோக்கி வீரபாகு புரவியில் விரைந்து வந்தான். வந்தவன் பல்லவ இளவல் மறைந்திருந்த மலைப்பாறைக்கு அருகில் வந்து அக்கம் பக்கம் பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில் தன் கழுத்தில் ஒரு கத்தியின் நுனி தடவுவதைக்கண்டு திரும்ப யத்தனித்தான். ''வீரபாகு! வாயைத்

திறக்காதே. மெல்லத் திரும்பு'' என்ற குரல் அவன் வாயில் எழுந்த ஆணையைத் தேக்கி விட்டது. மெல்லத் திரும்பிய போதும் அவன் கபத்தில் பல்லவ இளவல் கையிலிருந்த வாளின் நுனி தடவிக் கொண்டிருந்ததால் அவன் வாய் சொற்களை உதிர்க்காவிட்டாலும் கண்கள் கனலைக் கக்கின.

அந்த நிலையில் உத்தரவிட்டான் இளவரசன். ''வீரபாகு! புரவியிலிருந்து இறங்காதே. அங்கிருந்தே உத்தரவிடு, உன் வீரர்களுக்குச் சவுக்குத் தோப்பைச் சல்லடை போட. யாரும் கடற்கரைக்கு வரவேண்டாம். புரிகிறதா?'' என்று.

புரிகிறது என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த வீரபாகு அப்பொழுதும் இளவரசன் சொற்படி ஆணையிட மறுத்தான். இளவரசன் சொன்னான், ''வீரபாகு! நீ வீரன். உன்னை இந்த நிலையில் கொல்ல இஷ்டப்படவில்லை. நான். உன்னுடன் வாளுடன் வாள் மோதிச் சண்டையிட சமயமும் இது அல்ல. வாட்களின் ஒலி உன் வீரர்களை இங்கு வரவழைத்து விடும்'' என்று.

அப்பொழுதும் வீரபாகு இணக்கம் காட்டவில்லை. ''வீரபாகு. உன்னை வீரன் என்ற முறையில் நடத்துகிறேன். வேறு முறையிலும் நடத்த முடியும். உன்னைக் கீழிறக்கிக் கைகளைக் கட்டி வாயில் துணியடைத்துவிட்டுப் போய்விட முடியும். அதை விரும்புகிறாயா?'' என்று விசாரித்தான் பல்லவ இளவல்.

அதைக் கேட்டதும் சற்று இளகிய வீரபாகு, ''சரி, பல்லவ இளவரசே! உத்தரவிடுகிறேன். என் உத்தரவால் வீரர்கள் தோப்புக் குள்ளேயே தேடுவார்கள். நீங்கள் இன்று நீர்வழியில் தப்பிவிடலாம். ஆனால் ஒரு நாள் நாம் சந்திப்போம் அப்பொழுது நிலை வேறாயிருக்கும்'' என்று எரிச்சலுடன் மெல்லக் கூறிவிட்டு, பிறகு இரைந்து, ''விடாதீர்கள், தோப்பைச் சல்லடை போடுங்கள்'' என்று கூவவும் செய்தான். அவன் உத்தரவுப்படி கடற்கரையிலிருந்த பதினைந்து வீரரும் தோப்பில் பல பகுதிகளில் நுழைந்து விட்டார்கள்.

இப்படிக் கடற்கரையில் நிம்மதி ஏற்படுவதற்கும் யாங்சின் தோப்பிலிருந்து வெளிவருவதற்கும் சமயம் சரியாயிருந்தது. ரத்தம் தோய்ந்த உருவிய வாளுடன் தோப்பு முகப்பிலிருந்து வெளிப் போந்து இளவரசனும் வீரபாகுவுமிருந்த இடத்துக்கு வந்ததும் வீரபாகுவின் மீது தனது சின்னஞ்சிறு கண்களை ஓட்டிய யாங்சின், ''இவரா?'' என்று இகழ்ச்சியுடன் கேட்டான் இளவரசனை நோக்கி.

இளவரசன் அந்த இகழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை. ''இவரை இகழ்ந்து பேசாதே யாங்சின். இவர் உதவியில்லாவிட்டால் நாம் தப்பியிருக்க முடியாது'' என்றான்.



''ஓகோ!'' என்ற சீனன் குரலில் அவநம்பிக்கை ஒலித்தது.

''ஆம். இவர்தான் சாளுக்கிய வீரர்களைத் தோப்புக்குள் விரட்டினார்'' என்று சுட்டிக் காட்டினான்.

''இஷ்ட விரோதமாக இட்ட உத்தரவு அது'' என்று கூறினான் வீரபாகு அலுப்புடன்.

வீரர்கள் அனைவரும் தோப்புக்குள் போய்விட்டதால் சற்று நிதானமாகவே பேசிய பல்லவ இளவல், ''படைத் தலைவரே! நமது இஷ்டப்படி எது நடக்கிறது உலகத்தில்? உங்களிடமிருந்து தப்பப் பார்த்தேன். அதற்காகக் கட்டிப் போட்டேன். நீங்கள் அங்கேயே காலைவரை கிடப்பீர்கள் என்று எதிர் பார்த்தேன். நடந்ததா?'' என்றான்.

''நடக்காததற்குக் காரணம் தெரியுமா உங்களுக்கு?'' என்ற வீரபாகுவின் குரலில் சற்றுத் தற்பெருமை தெரிந்தது.

''தெரியாது. எதற்கும் புரவியிலிருந்து இறங்கி விட்டுச் சொல்லுங்கள். இந்தக் கத்தியை உங்கள் கழுத்தை நோக்கிப் பிடித்திருப்பது கஷ்டமாயிருக்கிறது'' என்ற பல்லவ இளவல் கூறவே மெல்லப் புரவியிலிருந்து தரையில் குதித்தான் வீரபாகு. ''இப்பொழுது சொல்லட்டுமா?'' என்றும் கேட்டான்.

''சொல்லுங்கள் படைத்தலைவரே'' என்றான் இளவரசன்.

''இந்தச் சீனன் என் கையையும் காலையும் கட்டினான்'' என்று சுட்டிக் காட்டினான் வீரபாகு.

''ஆம்.'' பல்லவ இளவல் அவன் என்ன சொல்லப் போகிறா னென்பதை ஊகித்துக் கொண்டான். இருப்பினும் அவனே சொல்லட்டுமென்று வாளாவிருந்தான்.

''கையைக் கட்டினான். காலைக் கட்டினான். வாயைக் கட்டவில்லை'' என்று குறிப்பிட்டான் வீரபாகு. இதைச் சொன்ன சமயத்தில் அவன் பெரிய மீசை பயங்கரமாக அசைந்தது கண்களில் ஒரு கள்ளத்தனம் தெரிந்தது.

அதைக் கவனித்தாலும் கவனிக்காதது போலவே சொன்னான் பல்லவ இளவல். ''வாயைக் கட்டாவிட்டாலென்ன? வீரர்களை வாயால் கூப்பிட்டிருப்பீர்கள்'' என்று.

''இல்லை கூப்பிடவில்லை. கூப்பிடுவதற்கு அருகில் யாருமில்லை. என்ற வீரபாகுவின் கண்களில் கள்ளத்தனத்தின் ஒளி சற்று அதிகமாயிற்று.

''வேறு என்ன செய்தீர்களோ?'' என்ற பல்லவ இளவல் கேட்டுக் கொண்டிருக்கையிலேயே திடீரென உதடுகளை மடித்துப் பெரிதாகக்

கிறீச்சென்ற ஒலியொன்றைக் கிளப்பி விட்டான் வீரபாகு. ''இதைத்தான் செய்தேன். என்னை வேண்டுமானால் கொன்று போட்டுப் போய்விடுங்கள்'' என்று அலட்சியமாகக் கூறிப் பயங்கரமாக நகைக்கவும் செய்தான்.

அடுத்த சில விநாடிகளில் சவுக்குத் தோப்பிலிருந்து வீரர்கள் ஓடி வரும் காலடிச் சத்தம் கேட்டது. அது மூவர் காதிலும் விழவே தனது மடியிலிருந்த சிறு கத்தியை எடுத்தான் சீனன். ''கொல்ல வேண்டாம் யாங் சின். இவனை நம்முடன் அழைத்துச் செல்வோம்'' என்று கூறிய இளவரசன் மைவிழியை விட்டு வீரபாகுவின் கையைப் பலமாகப் பிடித்துக் கொண்டு மலைப்பாறையில் அலைகளில் இறங்கினான்.

நிலத்தில் காட்டிய வீரம் நீரைக்கண்டதும் அகன்றுவிடவே, ''எனக்கு நீந்தப் பழக்கமில்லை'' என்று கூவினான் வீரபாகு.

''வாயினால் வித்தை செய்யலாம்'' என்றான் பல்லவ இளவல்.

''என்ன வித்தை?'' பயத்துடன் ஒலித்தது வீரபாகுவின் குரல்.

''வாயால் நீரைக் குடிக்கலாம்.''

''குடித்தால்.''

''வயிறு உப்பி விடும்.''

''உப்பினால்?''

''நீர்ல் மிதக்கலாம்.''

''அப்படி எதற்காக நான் சாக வேண்டும்?''

''வாய் வித்தையை இப்பொழுது காட்டியதால்'' என்று கூறிய இளவரசன் அவனை இழுத்துக் கொண்டு கடலுக்குள் இறங்கி விட்டான். மைவிழியும் சீனனும் பின்தொடர்ந்தார்கள்.

நிலப் பகுதியில் எதற்கும் அஞ்சாத வீரபாகு நீரைக் கண்டு நடுங்கினான். அவன் நடுக்கத்தைக் கண்ட இளவரசன், 'வீரபாகு! தமிழில் ஒரு பழமொழி உண்டு'' என்றான்.

வீரபாகு தன் மீது மோதிய கடலலைகளைக் கண்டு நடுங்கியதால் பதிலேதும் சொல்லவில்லை. இளவரசனே சொன்னான்: ''நுணலும் தன் வாயால் கெடும் என்று ஒரு பழமொழி தமிழில் இருக்கிறது'' என்று.

அந்தப் பழமொழியையோ அந்த பழமொழியைச் சொல்லிய தில் பதிந்து கிடந்த இளவரசனின் நகைச் சுவையையோ யோசிக்கும் நிலையில் வீரபாகு இல்லை. அந்தச் சமயத்தில் கடலோரம் வந்துவிட்ட தனது வீரர்களை ஒரு முறை திரும்பிப் பார்த்தான்.



வீரரில் ஒருவன் கடலில் இறங்கிச் சென்று கொண்டிருந்த மூவரை நோக்கியதும் தனது வில்லில் அம்பைப் பொருத்தவே அதைப் பார்த்துவிட்டு பல்லவ இளவல் வீரபாகுவைத் தனக்கு எதிரில் திருப்பி அம்பு வரக்கூடிய திசையை நோக்கிப் பிடித்துக் கொண்டான். நீரால் மரணமில்லாவிட்டாலும் அம்பால் மரணம் நிச்சயமென்பதைப் புரிந்துகொண்ட வீரபாகு. ''அம்பை விடாதே! விடாதே!'' என்று உரக்கக் கூவினான். வீரனுக்கு அந்தக் கூச்சல் அலைகளின் இரைச்சலில் காதில் விழாததால் அவன் நாணை நன்றாக இழுத்து அம்பை எய்துவிட அம்பு வீரபாகுவின் மார்பை நோக்கி வெகு வேகமாகப் பறந்து வந்தது.

# 14.கடலாடு காதை

**பொ**ழுது புலரும் சமயம் நெருங்கிக் கொண்டிருந்ததன் விளைவாகச் சித்ரா பௌர்ணமியின் முழுமதியின் முகம் கர்ப்ப ஸ்திரீகளின் முகம்போல் வெளுக்கத் தொடங்கி விட்டதாலும், நட்சத்திரக் கூட்டங்களும் நாலைந்து நாழிகைகளில் தலை காட்டக் கூடிய கதிரவனுக்கு அஞ்சி மறையத் தொடங்கி விட்டதாலும், வானமும் கடலின் நீர்ப்பரப்பும் மங்கிய வெளிச்சத்துக்கு இலக்காகி விட்டதாலும், திட்டமாக எதையும் யாரும் பார்க்க முடியாத சூழ்நிலை உருவாகிக் கொண்டிருந்த காரணத்தால் வீரபாகுவின் மார்பை நோக்கிப் பறந்து வந்த அம்பு,குறி தவறி வேறிடம் சென்று வீழ்ந்தது. அதனால் ஆசுவாசப் பெருமூச்சு விட்டு, ''தப்பினேன்'' என்று கூறிய வீரபாகுவை மீண்டும் திருப்பி, ''உனக்கு ஆபத்து ஏதுமில்லை, வா என்னுடன்'' என்று தைரியப்படுத்திய பல்லவ இளவல் சீனனைப் பார்த்து, ''யாங்சின்! படைத் தலைவரைப் பிடித்து அழைத்து வா! தாமதிக்க நேரமில்லை'' என்று கூறி வீரபாகுவைச் சற்று எட்ட இருந்த சீனனை நோக்கித் தள்ளினான்.

சீனனும் அவனைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு தனது இடது கையால் அவன் வலது கையைப் பற்றி, ''வாருங்கள் படைத் தலைவரே!'' என்று கேலிக் குரலில் கூறி, கடல் நீரில் இழுத்துச் சென்றான்.

பிரதமை நெருங்க நெருங்கப் பௌர்ணமியின் ஆகர்ஷண சக்தி குறைந்துவிட்டதால் கடலில் அலைகள் மந்தப் பட்டிருந்தன. விடியும் வேளைக்கு ஆரம்ப முகூர்த்தம் வைக்கும் தோரணையில் எட்ட இருந்த முந்திரித் தோப்புகளிலிருந்த குயில்கள் மங்களகீதம் பாடின. இடையிடையே சில மைனாக்கள் கூவியதும், காகங்கள் கரைந்ததும் இயற்கையின் சங்கீதத்திலும் ஆங்காங்கு அபசுருதி உண்டென்பதை

விளக்கின. எந்த நாடும் சுதந்திரமிழப்பதுகூட ஓர் அபசகுநிதான் என்பதை நிரூபிக்கும் வகையில் கடற்கரையில் அன்று எந்த அரவமோ, வணிகர் நடமாட்டமோ இல்லை. இரவு பூராவும் வெளிநாட்டு வணிகராலும் வணிகப் பொருள்களை வாங்குவோராலும் அமர்க்களப்படும மாமல்லன் துறைமுகம் அன்று சோகமே உருவாய் உறங்கிக் கிடந்தது. தூரத்தே கடலில் ஆடி நின்ற நாலைந்து மரக்கலங்களிலிருந்து படகுகள் எதுவும் வரவில்லை. மூன்றாம் ஜாம முடிவிலேயே வலைகளைத் தூக்கிக் கொண்டு படகுகளில் செல்லும் பரதவரைக் கூட அன்று நீர்ப்பரப்பில் காணவில்லை. விக்கிரமாதித்தன் ஆக்கிரமிப்பின் பூரண களையும் அதனால் ஏற்பட்ட விபரீத அமைதியுமே எங்கும் காணப்பட்டது. அந்த அமைதியில் மணற் பகுதியில் எதிரிப் புரவி வீரர்கள் பல்லவ இளவலை ஆங்காங்கு தேடிக் கொண்டிருந்த அரவம் மட்டும் கடலில் சற்றுத் தூரம் கேட்டுக் கொண்டிருந்தது.

இந்தச் சூழ்நிலையில் கடலில் இடுப்பளவு ஆழத்துக்குமேல் சென்றுவிட்ட பல்லவ இளவல் சீனனை விளித்து வீரபாகுவையும் அவனையும் தனக்கு முன்னால் செல்லப் பணித்தான். அத்துடன் வீரபாகுவின் இடைக்கச்சைப் பிரித்து வாளைப் பிடுங்கிக் கடலின் மந்த அலைகளுக்குப் பரிசாக விட்டெறிந்தான். ''நீ முன்னால் செல் யாங் சின்! நமது படகின் மறைவிடத்துக்குச் சென்றதும் படகைப் பயணத்துக்குத் தயார் செய். படைத் தலைவருக்கு நீந்தத் தெரியாததால் மார்பளவு நீருக்குமேல் இறக்கிவிடாதே'' என்று உத்தரவிட, சீனன் வீரபாகுவை இழுத்துக் கொண்டு முன்னால் செல்லத் தொடங்கினான்.

வீரபாகுவின் மனத்தில் கடலில் செல்லுகிறோமே என்ற அச்சத்துடன் சீனனைப் பற்றி ஏற்பட்ட வியப்பும் கலந்து கொண்டது. சீனனின் குள்ளத்தையும் உடலமைப்பையும் முதலில் பார்த்த போது இவனைச் சட்டென்று உதறி ஓடிவிட்டாலென்ன என்று நினைத்த வீரபாகு, சீனன் கை தன் கையை இரும்பு போல் பிடித்து விட்டதை எண்ணிப் பெரிதும் வியந்தான். 'இவன் மூக்கு சப்பையாயிருந்தாலும், கை எந்த விதத்திலும் சப்பையில்லை' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட வீரபாகு, சீனனிடமிருந்து தப்புவது பிரம்மப்பிரயத் தனமென்பதை உணர்ந்துகொண்டு நீருக்குள் கால்களைத் துழாவி, தள்ளாடி தள்ளாடி நடந்தான். ''நேரமில்லை சீக்கிரம் நட. விடிந்தால் வீரர்கள் பார்த்துவிடுவார்கள்'' என்று அதட்டிய சீனன் அவனை இழுத்துச் சென்றான்.

''வீரர்கள் பார்த்தால் உனக்குத்தானே ஆபத்து?'' என்று இகழ்ச்சியுடன் கூறினான் வீரபாகு.



''இல்லை. உனக்கும் ஆபத்து உண்டு'' என்று கூறினான் சீனன் லேசாகப் புன்முறுவல் செய்து.

''எனக்கு எப்படி ஆபத்து நேரிடும்?'' என்று கேட்டான் வீரபாகு தள்ளாடித் தள்ளாடி நீரில் முன்னேறிக்கொண்டு.

''உன் வீரர்கள் நம்மைப் பார்த்தால்...'' சீனன் கபடாக இழுத்தான் வாசகத்தை.

''பார்த்தால்?''

''எனக்குக் கோபம் வரும்.''

''வந்தால்...''

''உன்னைக் கொன்று கடலிலேயே போட்டுவிடுவேன். அது உனக்கு ஆபத்தா இல்லையா?'' இந்தக் கேள்வியைச் சீனன் சாதாரணமாகவே கேட்டுச் சிரித்தான். அத்துடன், 'நமக்குப் பேச நிரம்ப அவகாசமிருக்கிறது. வா'' என்று கூறி வீரபாகுவை இழுத்துக் கொண்டு சென்றான் யாங் சின்.

சீனனுக்கும் வீரபாகுவுக்கும் நன்றாகப் பின்னடைந்துவிட்ட ராஜசிம்மன் தன் வயிற்றளவு வந்த கடலாழம் மைவிழிக்கு மார்பளவாகிவிட்டதைப் பார்த்ததும் சில வினாடிகள் மதிமயங்கி நின்றான். நிலவு மங்கி விட்டதுகூட மைவிழியின் மேனிக்கு ஒரு புதுவித மெருகை அளித்திருந்தது. கடல் நீரில் நனைந்து விட்ட சேலையின் விளைவாக, விவரமாகப் புலனாகக் கூடிய அவள் மார்பகத்தைக் கடலரசன் தனது புனித நீருள் மறைத்து அவளுக்குப் பாதுகாப்பளித்திருந்தாலும், மந்த அலைகள் மட்டும் அவளது மார்பில் ஏறியும் இறங்கியும் சலனப்பட்டுக் கொண்டிருந்ததால், அவள் அழகிய மேனியில் அந்த அழகுகள் கண்ணுக்குத் தோன்றியும் மறைந்தும் ஜாலம் காட்டிக் கொண்டிருந்தன. அதைக் கவனித்த பல்லவ இளவலின் மனம் மாமல்லபுரத்தின் எதிரி ஆக்கிரமிப்பையும் எதிர் நோக்கியுள்ள ஆபத்தையுங்கூட ஒரு வினாடி மறந்து விட்டது. நீர்க்கடியில் அவள் இடையை அணைத்து நின்ற அவனது கை வாளாவிருக்காமல் அங்கு இங்கும் அளைந்து கொண்டிருந்தது. அதனால் ஏற்பட்ட மனச் சஞ்சலத்திலிருந்து மீள, தூரத்தே தான் எழுப்ப முயன்று கொண்டிருந்த ஜலசயனன் ஆலயத்தூண்களிரண்டின் ஆரம்ப அமைப்பைப் பார்த்தான்.

இடையில் இளவலின் கரம் துழாவிக் கொண்டிருந்ததால் பெருத்த சங்கடத்துக்குள்ளாயிருந்த மைவிழி அவன் பார்வை கரையை நோக்கிச் சென்றுவிட்டதைப் பார்த்து, ''என்ன பார்க்கிறீர்கள் அங்கே? எதிரி வீரர்களையா?'' என்று வினவினாள்.

இளவலின் இதயம் வேறு நினைப்புகளில் சிக்கி உருண்டு கொண்டிருந்ததால், ''இல்லை'' என்று ஒற்றைச் சொல்லை மட்டும் உதடுகள் உதிர்த்தன. சொல் ஒற்றைச் சொல்லே தவிர, விரல்கள் ஐந்து என்பதை நன்றாகப் பிரிந்து, அவளது இடையைத் துழாவிக் கொண்டிருந்த அவனது கை நிரூபித்தது.

''வேறு எதைப் பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டாள் மைவிழி அவன் இடது கையின் துழாவலால் ஏற்பட்ட உணர்ச்சி வேகத்துக்கு அணை போட.

''ஜலசயனன் கோவிலைப் பார்க்கிறேன்'' என்றான் இளைய பல்லவன். அதைச் சொன்னபோது அவனது இன்னொரு கையும் நீருக்குள் அவளைச் சுற்றி முதல் கையுடன் இணைந்து கொண்டது.

''கோவில் இன்னும் கட்டியாகவில்லையோ?'' என்று குழைந்தாள் மைவிழி.

''யார் சொன்னது?'' இளவலின் குரல் புதுமாதிரியாக ஒலித்தது.

''அப்படியானால் கோவிலைக் கட்டிவிட்டீர்களா?''

''ஆம்.''

''கோவிலைக் காணோமே!''

''காணாததெல்லாமம் நடக்காது என்று சொல்ல முடியுமா?''

''நீங்கள் சொல்வது புரியவில்லை...''

பல்லவ இளவல் சிறிது நேரம் பதில் சொல்லவில்லை. கோவிலை எழுப்ப உத்தேசித்துள்ள மலைப்பாறையையே பார்த்துக் கொண்டு நின்றான். ''மைவிழி! அதோ அந்த மலைப்பாறை உன் கண்ணுக்குத் தெரிகிறது. சிறுசிறு தூண்கள் தெரிகின்றன. ஆனால் என் கண்களுக்கு அந்த மலைப்பாறை அடியோடு மறைந்துவிட்டது. அதிலிலிருந்து நான் உடைத்துச் சதுரமாக்கிய கற்கள் யாளிகளுடனும், மற்றத் தேவதைகளுடனும் பிரகாசிக்கின்றன. அதோ, முதலில் ஒரு ராஜ கோபுரமும் அதை அடுத்து அரங்கன் பள்ளி கொண்ட சிறு கோபுரமும் ஆனந்தமாகத் தெரிகின்றன. உள்ளே அரங்கன் சயனித்திருக்கின்றான். ராஜ கோபுரத்தின் வாயிலாக உள்ளே புகும் கடலலைகள் அரங்கன் திருவடிகளைத் தழுவிப் பூஜிக்கின்றன. இந்தக் காட்சிகள் என் கண்களுக்குத் தெளிவாகத் தெரிகின்றன. என் மனத்தில் அந்தக் கோயிலை என்றோ நான் கட்டி முடித்து விட்டேன்...'' என்று ஆவேசத்துடன் கூறினான் அந்த ராஜ சிற்பி.

''உங்களுக்கு அவ்வப்பொழுது புதுக்கற்பனை தோன்றுகிறது'' என்றாள் மைவிழி, பல்லவ இளவலை நோக்கி.



''என்ன கற்பனை மைவிழி?''

''முன்பு வீரபாகு உங்கள் பெயரைக் கேட்டபோது கைலாசன் என்று சட்டென்று ஒரு புதுப் பெயரைச் சொன்னீர்கள்...''

''அதில் கற்பனை ஏதுமில்லை மைவிழி. அந்தப் பெயர் எப்பொழுதும் என் நினைவிலிருக்கிறது.''

''அந்தப் பெயரில் என்ன அத்தனை விசேஷம்?''

''கைலாசநாதருக்குக் காஞ்சியில் ஒரு கோயில் கட்டத் தந்தை கட்டளையிட்டிருக்கிறார். அதற்கும் ஒரு சித்திரம் தயாரித்திருக் கிறேன். அதன் விவரம் பூராவும் மனத்திலிருக்கிறது.''

''அங்கும் கோயில் பணிதான் போலிருக்கிறது.''

''ஆம். அதைவிட சிறந்த பணி உலகத்தில் என்ன இருக்கிறது?'' என்று கேட்ட பல்லவ இளவல் ''கைலாசநாதர் கோயிலின் தூண்களில் எத்தனை சிற்பங்கள் இருக்கும்? எத்தனை தெய்வங்கள் காட்சி யளிக்கும்! அவர்களை அண்டி எத்தனை அப்சரஸ்கள்! இவை அனைத்தையும் சிருஷ்டிக்கப் போகிறேன் மைவிழி. கைலாசம் எப்படியிருக்கிறதோ எனக்குத் தெரியாது. ஆனால் கைலாசநாதர் கோவிலின் அழகு உலகப் பிரசித்தி பெறும். அதிலுள்ள பிம்பங்களின் உருவங்களை, உருவாக்குபவனை உலகம் போற்றும். அதில் உன்னைப் போன்ற அழகிகளுக்கும் இடமிருக்கும்'' என்று கூறினான்.

அவன் உணர்ச்சிகள் கரை புரண்டு ஓடுவதை மைவிழி உணர்ந்தாள். அவன் கைகள் தன் தேகம் பூராவும் அளைவதையும் சிற்பசாஸ்திரப்படி துளைவதையும் கவனித்தாள். சிற்ப வெறியில் ஒரு வேளை இவர் நான் யாரென்பதை மறந்து விட்டாரோ என்று நினைத்தாள் மெல்லச் சொல்லவும் சொன்னாள். ''இளவரசே, நான் கல் அல்ல'' என்று.

இளவரசன் உணர்ச்சிகள் மேலிட்டுக் கிடந்ததால், ''உம்'' மட்டும் கொட்டினான்.

''கையை எடுங்கள்.''

''எடுத்துத்தான் இருக்கிறேன்.''

''மீண்டும்... மீண்டும்...''

''எந்தச் சிற்பியும் செதுக்கும் போது கையை எடுத்து எடுத்துத்தான் செதுக்க முடியும்.''

''இதென்ன பைத்தியக்காரத்தனம்! நான் கல் அல்லவே!...''

''அதனால் பாதகமில்லை.''

''பாதகமில்லையென்றால்?''

''கல்லில் நான் வடிக்கப்போகும் அழகிகளுக்கு அடையாளச் சிற்பம் நீ. உன்னைப் பார்த்துப் பார்த்து அளவெடுத்து எடுத்து அப்படியே சிற்பங்களை உருவாக்குவேன்...''

இதையெல்லாம் ஆவேசத்துடன் சொன்ன பல்லவ இளவல் கரையிலிருந்த கண்ணை மைவிழியை நோக்கிப் பதியவிட்டான். ''இந்தத் தெய்வீக அழகைப் பார்ப்பது மனத்தைக் கலக்குகிறது மைவிழி'' என்று காதில் அவளுக்கு மட்டும் கேட்கும்படி குனிந்து மெல்லச் சொன்னான்.

மைவிழியின் மார்பில் கடலின் மந்த அலைகளும் இதயத்துக்குள் உணர்ச்சி அலைகளும் மோதிக் கொண்டிருந்ததால், அவள் பதிலேதும் சொல்லவில்லை.

அவனை நோக்கி அவள் மெல்லத் திரும்பியதால் பக்கவாட்டிலிருந்து அவள் உடல் சுழன்று அவனுக்கு நேர் எதிரில் வந்தது. அப்படியே அவளையும் இழுத்துக் கொண்டு தண்ணீரில் அவளைக் கழுத்தளவு அமுந்தவிட்டுத் தானும் அமிழ்ந்தினான். அவன் கைகள் அவளைப் பூர்ணமாக அணைக்கப்பயந்து பாதி தொட்டும் பாதி தொடாமலும் சில இடங்களில் பட்டும் சில இடங்களில் படாமலும் அலைந்ததால், இன்பச் சித்ரவதையை அடைந்தாள் மைவிழி.

அந்த நிலையை இவள் எண்ணிப் பார்த்தாள். பயந்தாள். இப்படி அவனுடன் கடலாட வேண்டுமென்று அவள் ஏங்கிய நாட்கள் பல. ஆனால் ஏங்கியது கிடைத்துவிட்டால் அதைப் பரிபூர்ணமாக அனுபவிக்க மனத்துக்கு ஏன் துணிவிருப்பதில்லை? இந்தக் கேள்வி அனாதி காலமாக இருந்து வந்தாலும் அதற்கு யாரும் அன்றுவரை விடை கண்டு பிடிக்கவில்லை என்பதை மைவிழி அந்த நேரத்தில் உணர்ந்து கொண்டாள். பெண்களுக்கு இயற்கை அளிக்கும் பல பதுகாப்புகளில் அச்சம் ஒன்று என்பதை அறிந்து கொண்டதால் அத்தகைய, இயற்கைப் பாதுகாப்புகளை — செய்றை நாகரிகத்தை — முன்னிட்டுப் பெண்கள் உடைத்துக் கொண்டால் எத்தனை விபரீதம் ஏற்படும் என்பதையும் நினைத்துப் பார்த்தாள் மைவிழி.

ஆனால் அதிக நினைப்புக்கோ தர்க்கத்துக்கோ சம்பந்தமில்லாதிருந்த சமயமாயிருந்தது அது. இளவரசனின் கைகள் அவளைச் செப்பனிட்டுக் கொண்டிருந்தன. மைவிழியின் மனம் அந்த நிலையில் புகாரை நோக்கிப் பறந்தது. ஐந்நூறு ஆண்டுகளை நோக்கிப் பறந்தது! சிலப்பதிகாரத்தின் கடலாடு காதை அவள் மனக்கண் முன் விரிந்தது. புகாரின் கடற்கரையில் தாழை மலர்கள் விரிந்த ஒரு தாழைக் காட்டின் உட்புறத்திலே, ஒரு புன்னை மர நிழலிலே புதுமணற் பரப்பிலே கோவலன் மாதவியுடன் கூடிய காட்சியை இளங்கோவடிகள் விவரித்தது அவள் கற்பனையில் விரிந்தது. அங்கு மணற்பரப்பு; இங்கு நீர்ப் பரப்பு. இது ஒருவித கடலாடு காதை என்று நினைத்து மைவிழி பல்லவ இளவலின் கரங்களுக்குள் நன்றாகப் புகுந்தாள். ஆனால், ''இவர் கோவலனா அல்லது நான்தான் மாதவியா!'' என்று நினைத்தாள் ஒரு வினாடி. அடுத்த வினாடி சிந்தித்துப் பார்க்கும் சக்தியை அவள் இழந்து விட்டாள். இணைப்பின் சக்தியை மட்டும் உணர்ந்து கொண்டாள். இருப்பினும் அந்தச் சக்தியை, அதன் வேகத்தை, முழுவதும் உணர முடியவில்லை. அவ்விருவராலும், ''பிரபு! பிரபு'' என்று சீனன் திடீரென இரைந்து அலறிய காரணத்தால்.



# 15. சீனன் வேதாந்தம்

இளங்கோவடிகளின் கற்பனைத் தேன் சொட்டும் கடலாடு காதையிலே, பூம்புகாரின் கடற்கரையின் புதுமணற் பரப்பிலே, தாழை மலர்கள் விரிந்த தாழைக் காட்டிலே கருத்தைப் பறிகொடுத்துக் காவியச் சுவையைப் பருகிக் கொண்டிருந்த மைவிழிச் செல்வியும், கடல்மல்லை அரங்கன் கோவிலையும் காஞ்சியின் கைலாசநாதர் கோயிலையும் மனத்தில் கட்டி விட்டு அவற்றின் தூண்களெங்கும் சிற்பங்களைச் செதுக்கக் கைகளில் தவழ்ந்த ஆரணங்கின் அழகிய உடலை அளவெடுத்து ஆராய்ந்து கொண்டிருந்த பல்லவ இளவலும், சீனனான யாங்சின் போட்ட கூச்சலால் இக உலகத்துக்கு வந்து அவனிருந்த திசையை நோக்கினர். பதிலுக்குச் சீனன் கடற்கரைப் பகுதியைச் சுட்டிக்காட்டவே அத்திசையில் கண்ணைச் செலுத்திய பல்லவ இளவல் சுமார் பத்து சாளுக்கிய வீரர்கள் அங்கிருந்த இரண்டு படகுகளை நீரில் இறக்கிக் கொண்டிருந்ததையும், படகைச் செலுத்தும்படி பரதவர் இருவரை மிரட்டிக் கொண்டிருந்ததையும் கண்டான். வீரபாகுவை இழுத்துக் கொண்டு தான் கடலில் இறங்கிவிட்டதைக் கவனித்த வீரர்கள் அதற்குமேல் வாளாவிருக்க வில்லையென்பதையும் எப்படியும் தன்னைப் பிடித்துவிட உறுதியுடன் இருக்கிறார்களென்பதையும் புரிந்துகொண்ட பல்லவ இளவல் எப்படியும் படகுகள் தானிருக்குமிடத்திற்கு வரச் சிறிது நேரமாகுமென்பதை உணர்ந்து கொண்டான். கடல் மல்லையில் சிறிது தூரம் ஆழமில்லாததாலும் மணலடித்திருந்ததாலும் படகுகளைத் தள்ளித்தான் கொண்டுவர வேண்டுமேயொழிய, துடுப்புக்களால் துழாவி வேகமாகக் கொண்டு வர முடியாதென்பதைச் சந்தேகமற அறிந்திருந்தானாகையால் சீனனை

நோக்கிக் கையால் இரண்டு முறை ஜாடை காட்டி விட்டு "மைவிழி! உனக்கு நன்றாக நீந்தத் தெரியுமா?" என்று வினவினான்.

மைவிழி வரும் ஆபத்தை லட்சியம் செய்யாமல், நகைத்தாள். "கடல் மல்லைப் பெண்ணைப் பார்த்து நல்ல கேள்வி கேட்டீர்கள்!" என்று கூறவும் செய்தாள் நகைப்பின் ஊடே.

"அதற்காகக் கேட்கவில்லை, மைவிழி! சாதாரணமாக நீந்தத் தெரிவது வேறு, கடலின் அலை உக்ரத்தைச் சகித்து மூழ்கியே நெடுந்தூரம் நீந்துவது வேறு" என்று சுட்டிக் காட்டினான் இளவரசன்.

"நான் வாளை மீன். தெரியுமா உங்களுக்கு?" என்று கேட்டாள் அவள்.

"தெரியும்."

"தெரியுமேன்றால்?"

"உடல் வழவழப்பாயிருக்கிறது. இடையும் சிறுத்திருக்கிறது."

"சரி சரி. அதைக் கேட்கவில்லை."

"வேறு எதைக் கேட்டாய்?"

"எதையும் கேட்கவில்லை சொன்னேன்."

"என்ன சொன்னாய்?"

"எனக்கு நன்றாக நீந்தத் தெரியுமென்று சொன்னேன். கடல் மல்லையில் பிறந்தவள், தினம் கடலாடுபவள், அவளுக்கு நீந்தத் தெரியுமா என்று கேட்பது மீன் குட்டிக்கு நீந்தத் தெரியுமா என்பதைப் போலத்தான்!"

இதைச் சொன்ன மைவிழி கடலின் ஆழமான பகுதியை நோக்கி வேகமாகச் சென்றாள். பல்லவ இளவல் கரையை நோக்கினான். பூரண ஆயுதம் தாங்கிய காவலருடன் படகுகளைப் பரதவர் தள்ளிக்கொண்டு வந்ததையும், காவலரில் சிலர் விற்களை நாணேற்றியும், இன்னும் சிலர் வேல்களை உயர ஓங்கிக் கொண்டும் தானும் மைவிழியுமிருந்த இடத்தை நோக்கிக் கொண்டிருப்பதையும் சீக்கிரம் படகுகளைச் செலுத்தும்படி பரதவரை முடுக்குவதையும் கண்டான். எப்படியும் கூடிய சீக்கிரம் அப்படகுகள் தான் இருக்கும் இடத்தை அடைந்துவிட முடியுமென்பதையும், அப்படி நெருங்கி வந்து விட்டால், வேல்களிலிருந்தும் அம்புகளிலிருந்தும் தான் தப்புவது துர்லபமென்பதையும் உணர்ந்து கொண்ட பல்லவ இளவல், மைவிழியைத் தொடர்ந்து துரிதமாகக் கடலின் ஆழமான பகுதிக்குச் செல்ல முற்பட்டாள்.



அவனும் மைவிழியுமிருந்த இடத்திலிருந்து கடல் ஆழமுள்ள இடம் சிறிது தூரத்திலிருந்தாலும் அவர்கள் இருந்த இடத்தில் ஆழம் நீச்சலுக்கு உகந்ததல்லவாதலாலும் மைவிழியின் இடையில் கையைக் கொடுத்து வேகமாக இழுத்துக் கொண்டு கடலின் அடி மணலில் கால்களை வேகமாக ஊன்றி ஊன்றி நடந்து சென்றான் அவனுக்கு ஈடு கொடுத்து உடலுடன் உடலொட்டி அவனுடன் கால் பாவ நடந்து சென்ற மைவிழிக்கு மெள்ள மெள்ள ஆழம் கழுத்தளவுக்கு வந்து விடவே அவள் சரேலென்று உடலை நீட்டி நீரில் மிதந்து நீந்தினாள். நீரில் மிதந்த நிலையில் அவள் இடையை விடாது தனது இடது கையால் தழுவிச் சென்ற பல்லவ இளவல் சிறிது தூரம் சென்றதும் தானும் நீந்தத் துவங்கினான் அவள் இடையிலிருந்த கையை அகற்றி.

கடலலைகள் மந்த கதியாயிருந்தாலும் வேகமாக வந்து கொண்டிருந்தபடியால் மைவிழியும் பல்லவ இளவலும் சற்று எச்சரிக்கையுடன் லாவகத்துடனும் அலைகளில் மூழ்கியும் அவசியமானபோது மிதந்து தாவியும் கைகளை வீசிச் சென்றனர். மைவிழி தனக்குச் சமதையாக அலட்சியமாக அருகில் நீந்தி வந்ததைக் கண்ட பல்லவ இளவல் பெருவியப்படைந்தான். வழவழத்த அவள் உடல், அலைகளில் புகுந்தெழுந்த சர்வசகஜத்தைக் கண்ட இளவரசன், 'உண்மையில் இவள் வாளை மீன்தான்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். இருப்பினும் அவளை எச்சரிப்பதற்காகச் சொன்னான், "மைவிழி! அலைகள் மந்தமாயிருந்தாலும் வேகம் இன்று அதிகமாயிருக்கிறது" என்று.

"ஆம்" என்றாள் மைவிழி வாயில் உப்பு ஜலத்தை உறிஞ்சி வாணம் போல் உமிழ்ந்து விட்டு.

"இந்த அலைகளில் சற்று எச்சரிக்கையாக நீந்து" என்றான் இளவரசன்.

"எந்த அலையிலும் எச்சரிக்கை தேவை."

"வேறு எந்த அலைகள் இங்கு இருக்கின்றன?"

"இங்கு இல்லை."

"வேறெங்கு இருக்கின்றன?"

"கரையில்."

"கரையிலா?"

"ஆம்."

"கரையில் அலைகள் உண்டா?"

''உண்டு. வாழ்க்கை அலைகள். அவற்றிலும் எச்சரிக்கையாகத்தான் நீந்த வேண்டும்.''

இளவரசன் நீந்திய நிலையிலும் நகைத்தான். ''நீ என்ன, வேதாந்தியா மைவிழி?'' என்றும் கேட்டான்.

''ஆம்.'' என்றாள் மைவிழி.

''கோயில் கட்டும் இளவரசனைத் தினம்பார்க்கும் வேதாந்தி போலிருக்கிறது.''

''ஆம். கோவிலுக்கும் வேதாந்தத்துக்கும் சம்பந்தம் உண்டு. கோவிலுக்கும் இளவரசருக்கும் சம்பந்தம் உண்டு. அதனால் அவரைப் பார்ப்பதும் வேதாந்தம்.''

ஆபத்து பின்பற்றிக் கொண்டிருந்த அந்த நிலையில் அவள் வேடிக்கையாகப் பேசியது பெருவிந்தையாயிருந்தது பல்லவ இளவலுக்கு. 'எந்த ஆபத்தையும் அலட்சியம் செய்யும் இவள் அரச பீடத்தில் அமரத் தகுந்தவள்' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான். அத்துடன் திரும்பிப் படகுகளையும் நோக்கினான்.

படகுகள் அநேகமாக நெருங்கிவிட்டன. ''அதோ, அதோ இருக்கிறார்கள்!'' என்ற வீரனொருவன் கூச்சலிடுவதையும் அந்தக் கூச்சலைத் தொடர்ந்து அம்பு பொருத்தப்பட்ட நாண்கள் இழுக்கப்படுவதையும் கண்ட ராஜசிம்மன், ''மைவிழி! நான் முழுகும் போது நீயும் மூழ்கிவிடு. என்னைவிட்டு அதிக தூரம் சென்று விடாதே'' என்று எச்சரித்தான்.

அந்த சமயத்தில் நாலைந்து அம்புகளும் வேல்களும் பறந்து வந்தன அவர்களை நோக்கி.

மைவிழியும் ராஜசிம்மனும் ஒரே சமயத்தில் நீரில் மூழ்கி விட்டதால் வேல்களும் பயனற்று நீரில் விழுந்தன. அதனால் வெகுண்ட சாளுக்கிய வீரனொருவன், ''படகை நிறுத்தாதீர்கள் மூழ்கியவர்கள் மூச்சுவிட எழுந்துதானாகவேண்டும். எழுந்ததும் தாக்குவோம்!'' என்று கூவினான். இந்தச் சமயத்தில் படகுகள் ஆழத்துக்கு வந்துவிட்டதால் பரதவர்களும் படகுக்குள் குதித்து துடிப்புக்களைக் கொண்டு துழாவத் தொடங்கினார்கள். வீரர்கள் கண்களை நீர் மட்டத்தில் செலுத்தி எங்கு இளவரசன் தலை தெரியுமென்று ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். கூடிய வரையில் குறி வைத்து நீருக்குள்ளும் வேல்களையும் அம்புகளையும் எய்தார்கள். நீண்ட நேர மட்டும் இளவரசன் தலையோ மைவிழியின் தலையோ நீர் மட்டத்துக்கு மேல் வெளிப்படவில்லை.



இதனால் சற்று ஏமாற்றத்துக்குள்ளான சாளுக்கிய வீரர்களில் ஒருவன் சற்று எட்டச்சென்று கொண்டிருந்த சீனனையும் வீரபாகுவையும் பார்த்துவிடவே, ''அதோ அவர்களையாவது பிடியுங்கள்! ஒரு படகு அந்தப் பகுதிக்குச் செல்லட்டும்'' என்று உத்தரவிடவே படகுகளில் ஒன்று சீனனிருந்து இடத்தை நோக்கித் திரும்பியது. ஏற்கெனவே நடுக்கத்திலிருந்த வீரபாகு, படகு தங்களை நோக்கித் திரும்பியதைக் கண்டதும் அதிகமாக நடுங்கினான். சீனன் ஏற்கெனவே நடந்த உரையாடலில் வெளியிட்ட கருத்துக்கள் வீரபாகுவுக்கு விஷமாயிருந்தன. படகுகளில் சாளுக்கிய வீரர் வர ஆரம்பித்த உடனேயே சற்று தைரியப் பட்டுக் களைத்த வீரபாகுவை நோக்கிய யாங்சின், ''ஏன் களைக்கிறாய்?'' என்று வினவினான்.

''அந்தப் படகுகளில் வருபவர்கள் எனது வீரர்கள்'' என்றான் வீரபாகு.

''அவர்களால் உனக்கென்ன லாபம்?''

''உன்னைக் கொன்று விடுவார்கள். அது எனக்கு லாபமில்லையா?''

''இல்லை.''

''ஏனோ?''

''முன்னமே சொன்னேன். அவர்கள் கை அசைந்தால் நான் உன்னைக் கொன்று கடலில் எறிந்து விடுவேனென்று.''

வீரபாகு அச்சத்துடன் சீனனை நோக்கினான். ''அது அதர்மம்'' என்றான் சற்றுப் பொறுத்து.

''எது?'' என்று வினவினான் சீனன் புன்முறுவல் செய்து.

''என்னைக் கொல்வது?'' என்றான் வீரபாகு.

''என்னைக் கொல்வது மட்டும் தர்மமா?''

''ஆம்.''

''எப்படியோ?''

''நீ எதிரி?''

''நீ?''

''சிறைப்பட்டிருப்பவன்.''

''அதனால்?''

''அதனால் நீ என்னைக் கொல்ல முடியாது. எதிரியைக் கொல்லலாம். எதிரியாயிருந்தாலும் சிறைப்பட்டிருப்பவனைக் கொல்ல முடியாது.''

''யார் சொன்னது?''

''எங்கள் சாஸ்திரம் சொல்லுகிறது.''

சீனன் சிரித்தான். ''எங்கள் சாஸ்திரம் என்ன சொல்கிறது தெரியுமா?'' என்று கேட்டான்.

''உங்கள் சாஸ்திரமா?''

''ஆம். பௌத்த சாஸ்திரம்.''

''என்ன சொல்கிறது?''

''எந்த உயிரையும் கொல்லக்கூடாது என்று சொல்கிறது.''

''நல்ல சாஸ்திரம்?''

''ஆம். ஆனால் உனக்கல்ல.''

''ஏன்?''

''உன்னைக் கொன்றுவிடுவேன்.''

''சாஸ்திரப்படி நடக்க வேண்டாமா?''

''வேண்டாம்'' என்ற சீனன் மேலும் சொன்னான்: 'வீரபாகு, சாஸ்திரப்படி நடந்தால் உலகத்தில் யாரும் வாழ முடியாது. ஒருவன் வாழ இன்னொருவன் நசுக்கப்படுகிறான். ஒருவன் பிழைக்க இன்னொருவன் கொலை செய்யப்படுகிறான். ஓர் உயிரை விழுங்கி இன்னோர் உயிர் வாழ்கிறது. இந்தக் கடற்கரையை எடுத்துக் கொள். கொசுவையும் சின்னஞ் சிறு பூச்சிகளையும் விழுங்கி நண்டு, தவளை இவை வாழ்கிறது. நண்டையும், தவளையையும் விழுங்கிப் பாம்பு வாழ்கின்றன. பாம்பையும் இதர ஜீவராசிகளையும் விழுங்கிப் பெரிய மீன்கள் வாழ்கின்றன. மீன்களை விழுங்கி மனிதன் வாழ்கிறான். ஆகையால் ஒருவன் பிழைப்பு இன்னொருவன் நாசத்தைப் பொறுத்திருக்கிறது. உதாரணமாகப் பார் உன்னை எனக்குத் தெரியாது. என்னை உனக்குத் தெரியாது. இருந்தாலும் உன்னை கொன்று நானும் என்னைக் கொன்று நீயும் வாழப் பார்க்கிறோம். இது தான் வாழ்க்கையின் தர்மம். இதன்படி அந்தப் படகு அருகில் வருமானால் உன்னைக் கொன்று போட்டு நான் கடலில் மூழ்கித் தப்பி விடுவேன்.''

''என்னைக் கொல்லாமல் என்னையும் உன்னுடன் அழைத்துச் சென்றால் என்ன?'' என்று கேட்டான் வீரபாகு.

''உனக்கு நீந்தத் தெரியாது. உன்னை அழைத்துக் கொண்டு நான் கடலில் மூழ்கினால் நீ என்னைப் பிடித்துக் கொள்வாய் பிடித்துக் கொண்டால் நானும் போய்விடுவேன்.''



இப்படிக் கூறிவிட்டு வீரபாகுவை இழுத்துக் கொண்டு நல்ல ஆழத்துக்கு சென்றான் யாங்சின். வீரபாகுவுக்குக் கழுத்தளவு நீர் வந்து விட்டது.

''சீனா! கழுத்தளவு நீர் வந்து விட்டது'' என்று கூறினான் வீரபாகு பயத்துடன்.

''பயப்படாதே கழுத்தளவு ஆழத்திலேயே நடந்து வா. நான் மூழ்கி நீந்தி வருகிறேன்'' என்று கூறிவிட்டு நெருங்கிக் கொண்டிருந்த படகை நோக்கி ஏதோ சைகை செய்து விட்டு நீரில் மூழ்கிவிட்டான்.

வீரபாகு கழுத்தளவு நீரில் நின்று சுற்றும் முற்றும் நோக்கினான். படகுகளிரண்டில் ஒன்று தன்னை நோக்கியும் இன்னொன்று இளவரசனிருந்த திக்கிலும் வேகமாகச் செல்வதைக் கவனித்தான். இரண்டு படகுகளும் நல்ல ஆழத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தன. சீனன் என்ன சைகை செய்தான் தங்களை நோக்கி வரும் படகைப் பார்த்து என்று எண்ணிய வீரபாகு விடை காணாமல் தவித்தான். விடை கண்டான் விரைவில், வியப்பின் உச்சியை அடைந்தான். ''இப்படியா விஷயம்!'' என்று பிரமித்தான்.

## 16. அவன் காட்டிய சொந்தம்

**ஆ**யுதம் தாங்கிய சாளுக்கிய வீரர்கள் கொண்ட படகு தானும் சீனனுமிருந்த இடத்தை நோக்கி விரைந்தபோது அது எப்படியும் தங்களை வெகு சீக்கிரம் அணுகிவிடும் என்று நினைத்த வீரபாகு இரண்டுவித எண்ணங்களுக்கு இலக்காகி இருந்தான். படகிலிருந்த வீரர்கள் சற்று எட்ட இருந்தே வேல்களை வீசிவிட்டால் சீனனை மாய்த்துத் தன்னைக் காப்பாற்றி விடலாமென்பது ஓர் எண்ணம். அப்படி அவர்கள் நடவடிக்கை எடுப்பதைப் பார்த்ததும் சீனன் தன்னைக் கொன்று போட்டுக் கடலில் மூழ்கிவிட்டால் தன் வாழ்வு முடிந்து விடுமே என்ற எண்ணம் இன்னொரு பக்கம். இந்த இரண்டு எண்ணங்களில் வீரபாகு சிக்கியிருந்த நிலையில் சீனன் ஏதோ படகுகளைப் பார்த்துச் சைகை செய்யவே, தனது வீரர்களைப் பார்த்து இவன் என்ன சைகை செய்ய முடியும் என்ற சிந்தனையும் கலந்து கொண்டது வீரபாகுவின் சித்தத்தில். அப்படி அவன் குழம்பியிருந்த நிலையில் நடந்தது அங்கு விசித்திரம்.

சீனன் சைகை காட்டியதற்கும் பெரியதாக வந்த ஓர் அலை மீது படகு ஏறுவதற்கும் சமயம் சரியாயிருந்தது. அதுவரை அலைகள் மீது

தாவி வந்து கொண்டிருந்த படகு திடீரெனக் கவிழ்ந்து அலைகளில் மறைந்ததையும், அடுத்த விநாடி படகிலிருந்த சாளுக்கிய வீரர்கள் கடல் நீரில் தத்தளித்துக் கொண்டிருந்தையும் பார்த்த வீரபாகு சீனன் சைகை செய்ததன் மர்மத்தைப் புரிந்து கொண்டான் படகிலிருந்த வீரர்கள் சிலர் நீரில் நீந்த முயன்று கொண்டிருந்தனர். இன்னும் சிலர் கரையை நோக்கி விரையப் பிரயத்தனம் செய்தனர். படகைச் செலுத்தி வந்த பரதவர் இருவரையும் நீர் மட்டத்தில் காணவில்லை. நீரில் அவர்கள் மூழ்கிச் சென்றிருக்க வேண்டும் என்று தீர்மானித்தான் வீரபாகு. அத்துடன் எட்ட இருந்த மற்றொரு படகையும் நோக்கினான். அந்தப் படகின் கதியும் இந்தப் படகின் கதியைப் போலத் தானிருந்தது. அதுவும் நீரில் ஒரு கணம் மறைந்து, மிதந்து, பிறகு உருண்டது கரையை நோக்கி. அதிலிருந்த வீரர்களில் இருவரைக் காணவில்லை. மற்றவர் தத்தளித்துச் சிறிது நீந்திக் கரையை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

இளவரசனிடம் பரதவருக்கிருந்த ஆழ்ந்த அன்பை கடலில் கழுத்தளவு நீரில் நின்று கொண்டிருந்த அந்தச் சமயத்தில் புரிந்து கொண்டான் வீரபாகு. பரதவருக்கிருந்த அன்பு பல்லவ நாட்டு மக்களுக்கும் இருக்குமாகையால் பல்லவர்களை வெல்வதோ, வென்ற பின் அவர்கள் நாட்டைப் பரிபாலிப்பதோ சாளுக்கியரால் முடியாதென்பதையும் சந்தேகமற உணர்ந்து கொண்டான் சாளுக்கியர் உபதளபதி. அதனால் பெருமூச்சொன்றை விட்டுச் சீனனை நோக்கினான். ''உபதளபதி, வா போகலாம்'' என்று சீனன் தான் மட்டும் நீந்திக் கொண்டு அவனைக் கழுத்தளவு நீரில் நடந்துவரச் சொல்லி முன்னேறினான். வீரபாகு ஏதும் சொல்லாமல் சிறிது நேரம் நடந்தான். சீனனைப் பற்றி அவனுக்கு பலமான சந்தேகம் இருந்தது. முன்பு தன்னைக் கடற்கரையில் வலைகொண்டு கட்டிப் போட்டபோது 'சங்சங் சிங்சிங்' என்று ஏதோ சீன மொழியில் இளவரசருடன் அவன் பேசியதும், அவற்றுக்கு இளவரசன் மொழி பெயர்த்ததும் நினைப்புக்கு வந்தது அவனுக்கு. ஆனால் அதே சீனன் சென்ற பல நிமிடங்களில் தன்னுடன் தமிழை நன்றாகப் பேசியதால் பெருவியப்பை அடைந்த வீரபாகு சீனன் வேண்டுமென்றே வேஷம் போடுகிறானென்பதைப் புரிந்து கொண்டதால் அதைப் பற்றிக் கேட்கவும் செய்தான்.

''சீனா. உனக்குத் தமிழ் நன்றாகத் தெரிகிறதே!'' என்று குறிப்பிட்டான் வீரபாகு.

''சிறிது தெரியும்'' என்றான் சீனன்.

''முன்பு என்னை வலையில் கட்டிப் போட்ட போது சீன மொழியில் பேசினாயே?'' என்று மற்றொரு கேள்வி தொடுத்தான்.



''ஆம்.''

''ஏன் அப்படி?''

''அப்பொழுது மொழி பெயர்த்துச் சொல்ல இளவரசர் இருந்தார்.''

''அப்படியா?''

''ஆம். இப்பொழுது அவர் இல்லை. உனக்குச் சீன மொழி தெரியாது.''

''அதனால்தான் தமிழில் பேசுகிறாயா?''

''தெரியாத மொழியில் உன்னுடன் எப்படிப் பேச முடியும்?''

சீனன் தன்னைக் கேலி செய்கிறானென்பதைப் புரிந்து கொண்ட வீரபாகு ஒரு விநாடி மௌனம் சாதித்தான். ''தமிழ் தெரிந்தால் அப்பொழுதே தமிழில் பேசித் தொலைப்பது தானே?'' என்று சற்று நேரம் கழித்துக் கடிந்து கொள்ளவும் செய்தான்.

அதைக் கேட்டதும் சிறுநகை கொண்ட சீனன், ''அவசிய மிருந்தாலொழிய நான் தமிழில் பேசுவது கிடையாது'' என்றான்.

''ஏன்?''

''என் மொழியைப் பேசுவதில்தான் எனக்கு விருப்பம். அது முடியாதபோது பிறமொழியில் பேசுகிறேன்.''

''உன் மொழி என்ன கரும்போ?''

''எவனுக்கும் தாய்மொழி கரும்பு. அதில் பேச, நினைக்க, செயலாற்ற விரும்புவது இயற்கை. மற்றது இயற்கைக்கு விரோதம்.'' இதைச் சொன்ன சீனன், ''சரி சரி வா, வீரபாகு இளவரசர் கரை சேருமுன்பு நாம் சேர்ந்து விடவேண்டும். இந்தப் பக்கம் வா. நீராழம் சிறிது குறைந்து மார்புக்கு வரும். உனக்கு நடக்கவும் சௌகரியமா யிருக்கும்'' என்று கூறிவிட்டுச் சற்றுக் கரைப் பக்கம் நீந்தி, தானும் தரையில் கழுத்தளவு ஆழத்தில் நின்றான். அங்கு வீரபாகுவுக்கு மார்புக்கும் கீழேயே நீராழம் இருந்ததால் அவன் சற்றுச் சௌகரியமாகவே நடந்தான். சீனன் சில நிமிடங்கள் நடந்தும் சில நிமிடங்கள் நீந்தியும் சென்றான்.

வீரபாகு நடந்து கொண்டே எட்ட இளவரசனிருந்த இடத்தை நோக்கினான். அங்கு இளவரசனோ மைவிழியோ தென்படவில்லை. அலைகள் மட்டுமே புரண்டு கொண்டிருந்தன. ''இளவரசரைக் காணோமே'' என்று கேட்டான் வீரபாகு.

''நமக்கு முன்பாகச் சென்றிருப்பார்'' என்று சீனன் பதில் கூறினான்.

''பின்னால் தானே இருந்தார்'' என்று கேட்டான் வீரபாகு.

''பின்னாலிருப்பவர்கள் முன்னேறி விடுவதும் முன்னேறியவர்கள் பின்னுக்கு வருவதும் உலக இயற்கை'' என்றான் சீனன்.

சீனன் சொன்ன தத்துவத்தைப் பற்றிச் சட்டை செய்யாத வீரபாகு ''அவருடன் பெண்ணொருத்தியுமிருக்கிறாள்'' என்று சுட்டிக் காட்டினான்.

''அவருடைய அதிர்ஷ்டம் அது'' என்று சீனன் கூறி முறுவல் செய்தான்.

''அதில் என்ன அதிர்ஷ்டம்?''

''முக்கிய அதிர்ஷ்டம். அந்தப் பெண்ணுக்கு நீந்தத் தெரியும். என்னைப்போல் அவள் துரதிர்ஷ்டசாலியல்ல'' என்றும் கூறினான்.

''நீ எப்படி துரதிர்ஷ்டசாலி?'' என்று வீரபாகு வினவினான்.

''உன்னை இழுத்துக் கொண்டு போவது அதிர்ஷ்டம் என்று நினைக்கிறாயா?'' என்று சீனன் பதில் கேள்வி கேட்டான்.

''நான் சாளுக்கியர் உபதளபதி. என்னைப் பிடித்ததே அதிர்ஷ்டமில்லையா?'' என்று கோபத்துடன் வினவினான் வீரபாகு.

''அதோடு நின்றிருந்தால் அதிர்ஷ்டம்தான். நீந்தத் தெரியாத உன்னை கடலில் கட்டி இழுப்பது அதிர்ஷ்டமல்ல. அதுவும் உன் வீரர் தொடரும் போது உன்னையும் இழுத்துக் கொண்டு நானும் நடப்பதோ நீந்துவதோ அதிர்ஷ்டமா? தலையெழுத்து சரி, சரி, வா'' என்று கூறிய சீனன் அவனை வடக்குத் திசை நோக்கி அழைத்துச் சென்றான்.

வானத்தில் சந்திரன் அசாத்திய வெளுப்பை அடைந்தான். எந்த நிமிடத்திலும் வானம் சிறிது கண்களை மூடித் திறக்கலா மென்பதையும் கருக்கல் அதிக நாழிகை இல்லையென்பதையும் உணர்ந்து கொண்ட சீனன் கரையை நோக்கிக் கண்களை ஓட விட்டான். சற்றுத் தூரத்தில் பரதவர் குடிசைக் கூட்டமொன்று தெரிந்தது. கடற்கரையிலும் பரதவர் நடமாட்டம் இருந்தது. அந்தக் கரைக்கு நேரில் கடலில் கண்களை ஓட விட்ட சீனன் அந்தத் திசையில் இளவரசனும் மைவிழியும் அனாயாசமாக நீந்திக் கொண்டு கரையை நோக்கிச் சென்று கொண்டிருப்பதைக் கவனித்தான். அவர்களை வீரபாகுவுக்குச் சுட்டிக் காட்டி, ''வீரபாகு, அதோ பார்! என்ன அனாயாசமாக நீந்தி வருகிறார்கள்! இப்பொழுது அதிர்ஷ்டசாலி யாரென்பது புரிகிறதா? நமக்கு முன்பு அவர்கள் கரையேறி விடுவார்கள். சீக்கிரம் நட இங்குதான் ஆழமில்லையே'' என்று துரிதப்படுத்தினான் உபதளபதியை. வீரபாகுவும் இளவரசன் நீந்திக் கொண்டிருந்த திசையை நோக்கினான்.



இளவரசனுடைய நீச்சல் திறமையைப் பெரிதும் சிலாகித்தான். அந்த ஜோடியினுடைய உல்லாசத்தையும் பார்த்து வியந்தான்.

உண்மையில் அன்று விடியற்காலை நீச்சல் இளவரசனுக்கும் மைவிழிக்கும் இன்ப போகமாயிருந்தது. தங்களை நோக்கி வரும் படகைக் கண்டவுடன் மைவிழியுடன் ஆழத்துக்குச் சென்று விட்ட இளவரசன், ''மைவிழி! படகு அருகில் வந்ததும் சட்டென்று மூழ்கி நீந்து, அதிக தூரம் சென்றுவிடாதே. என் அருகிலேயே நீந்தி வா'' என்று கூறினான். அப்படி எச்சரித்த சமயத்தில் படகிலிருந்து வேல்களும் அம்புகளும் தன்னை நோக்கிப் பறக்கச் சட்டென்று அவளையும் மூழ்கச் சொல்லித் தானும் நீரில் மறைந்தான். அப்படியும் கிட்டத்தட்ட அவ்விருவரையும் நோக்கி வேல்கள் நீருக்குள் பாய்ந்தன. அவை வந்த திசையிலிருந்து சிறிது விலகி மேலும் கடலாழத்துக்குள் சென்ற பல்லவ இளவல் ஒரு கையால் துழாவி மைவிழி பக்கத்திலிருப்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டான். அந்த நிலையில் கைகளை வீசும்போது அடிக்கடி மைவிழியின் உடலின் மேல் கைபட அவளருகிலேயே நீந்திய பல்லவ இளவல் கடலடியிலும் அவளைப் பாதுகாத்துச் சென்றான்.

அந்தப் பாதுகாப்பு மைவிழிக்குச் சிறிதும் தேவையில்லைதான். அவள் முதலில் சொன்னதுபோல் அவள் வாளை மீன்தான். வாளை மீன் வாலை அசைத்து அசைத்து நீந்துவதைப் போலும், சில வேளைகளில் வாலை அசைக்காமல் ஜிவ்வென்று செல்வது போலும் அவள் நீந்தினாள். நீந்திய அந்த நிமிடங்களில் அடிக்கடி இளவரசன் கரம் தன் உடலின்மீது விழுவதையும் எழுந்த சமயங்களில் லேசாகத் தழுவவும் செய்து நீந்தியதையும் கவனித்த அவள் கடலுக்கு அடியிலும் சொர்க்க மிருப்பதைப் புரிந்து கொண்டாள். இளவரசன் நிலையும் அவள் மன நிலைக்குச் சற்றும் வேறுபட்டதாக இல்லை. ஓராண்டுக் காலம் அவளைப் பற்றி நினைத்து மட்டுமே இருந்த அவன், அன்று அவள் அழகு பூராவும் கையில் சிக்கிவிட்டதால் பேரின்பத்தை அடைந்தான். அவளது வாளை மீன் உடல் நீருக்கடியில் தன்மீது பட்டபோதும் தவழ்ந்த போதும் அவன் இல்லாத பாடுபட்டான். அடிக்கடி அவள் அருகில் இருக்கிறாளா என்ற பயத்தில் கையை வீசி அவளைத் தொட்டுப் பார்த்தபோதும் அந்தப் பயத்தைவிட இன்ப இச்சைகள் மனத்தை அலைக் கழிப்பதை எண்ணி வியந்தான். எதிரிகள் தன்னை வேட்டையாடும் சமயத்திலும் அந்த வேட்டை தன்னை ஆட்கொண்டு விட்டதை நினைத்துச் சிருஷ்டி எத்தனை விசித்திரமானது என்று வியந்தான் இளவரசன். இதய வேகம் இன்பத்திற்கு உந்தியதால் கைகள் கடலுக்கு அடியிலும் அவளை வளைத்தன. இழுத்தன. இதனால் நீந்த

முடியாத நிலை அவளுக்கு ஏற்பட்டது. ஆனால் அவளை இடது கையால் சுற்றி இழுத்துக் கொண்டு ஒரு கையால் நீந்தினான் இளவரசன்.

இந்த சமயத்தில் மூச்சு வாங்க மேலுக்கு வந்தனர் இருவரும். அப்பொழுது மூச்சு இரைச்சுக் கேட்டாள் மைவிழி, ''ஏன் இத்தனை கஷ்டம்?'' என்று.

''என்ன கஷ்டம்?'' என்று கேட்டான் இளவரசன்.

''ஒரு கையால் நீந்துவது கஷ்டமில்லையா?'' இந்தக் கேள்வியைக் கேட்டபோது அவளை வெட்கம் பிடுங்கித் தின்றது.

''இன்னொரு கைக்கு வேலையிருந்தது.''

''என்ன வேலையோ?''

''உன்னைக் காப்பாற்றும் வேலை.''

''காப்பாற்றும் வேலையா?''

''ஆம். வேறென்ன?''

''வேறென்னவா? நல்ல இளவரசர் நீங்கள்!''

''பொல்லாதது எதையும் செய்ய மாட்டேன்.''

''மாட்டீர்கள், மாட்டீர்கள்!''

''ஏன் அப்படி? ஏதாவது செய்து விட்டேனோ?''

''என்னைக் கேட்காதீர்கள்.''

''வேறு யாரைக் கேட்பது?''

''கடலைக் கேளுங்கள்.''

இதைச் கொல்லிவிட்டு வேகமாகக் கரையை நோக்கி நீந்தினாள் மைவிழிச் செல்வி.

இதைச் சொல்லித் திடீரெனக் கைகளை வீசி வேக வேகமாக நீந்திக் கால்களைத் தரையில் ஊன்றிப் பெருமூச்சு வாங்க நின்ற போதுதான் இளவரசன் அவளிருந்த இடத்தை அடைந்தான்.

நீண்ட தூரம் நீந்தியதால் அதிகக் களைப்பு இல்லை மைவிழிக்கு. சென்ற சில நிமிடங்களில் அதிக வேகத்துடன் நீந்தியதால் பெருமூச்சு மட்டும் விட்டுக் கொண்டிருந்தாள் அவள். அந்தப் பெருமூச்சின் விளைவாக அவள் மார்பு ஏறி ஏறி இறங்கிக் கொண்டிருந்ததை இளவரசன் கவனித்தான். நீரில் நனைந்த ஆடை அடியோடு உடலில் ஒட்டிக் கிடந்ததால் அவள் அழகுகள், அழகுகளின் அளவு திட்டவட்டமாகக் கண்ணுக்குத் தெரிவதையும் பார்த்தான். அதனால் இடுப்பில் வரிந்து கட்டியிருந்த முண்டாசுத் துணியை எடுத்துப் பிழிந்து



அவள் மார்பு மீது போட்டு, ''சரியாகச் சுற்றிக் கொள், வா'' என்று சற்றுக் கடுமையுடன் கூறிக் கரையை நோக்கி நடந்தான்.

கரையருகே இருந்த பரதவர் தன்னை அந்தக் கோலத்தில் காணக்கூடாது என்பதற்காக இளவரசன் செய்த பாதுகாப்பு என்பதை நினைத்து அவள் மனம் மகிழ்ந்தாள். 'அப்பா! அதற்குள் எத்தனை சொந்தம் கொண்டாடுகிறார்! எத்தனை கோபம்! எத்தனை பாதுகாப்பு!' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டு சிறிது வெட்கச் சிரிப்பும் வெளிப்படையாகச் சிரித்தாள்.

பிறகு கடற்கரை பூராவிலும் கண்களை ஓட்டினாள். தாங்கள் நெடுந்தூரம் நீந்தி வந்துவிட்டது புரிந்தது அவளுக்கு. அப்பொழுது தான் நின்றிருந்த இடத்தில் கடல் கரைப்புறம் வளைந்து கிடந்தாலும் பக்கங்களில் சவுக்குத் தோப்புகள் உட்புகுந்து விட்டதாலும் யாரும் தங்களைத் தென்புறத்திலிருந்து பார்க்க முடியாதென்பதையும் புரிந்து கொண்டாள். பிறகு மெல்ல நடந்து கரையை நோக்கிச் சென்றாள். அவள் கரையை அடையு முன்பே பரதவப் பெண்கள் நாலைந்து பேர் ஓடி வந்து அவளை அழைத்துச் சென்றனர். கரையில் குடிசைகள் ஏராளமாக யிருந்ததையும் குடிசைகளுக்கு அப்பாலும் பக்கங்களிலும் சவுக்கு முந்திரி மரங்கள் மிக அடர்த்தியாயிருந்ததையும் கவனித்த மைவிழி, இளவரசன் மறைந்துறையத் தகுந்த இடம் கடல் மல்லையில் இல்லை யென்பதைப் புரிந்துகெண்டால் அதனால் ஏற்பட்ட சாந்தியுடன் பரதவப் பெண்களுடன் கரையேறினாள்.

பரதவப் பெண்கள் அங்கிருந்த பல குடிசைகளைத் தாண்டி ஒதுக்குப் புறமாயிருந்த ஒரு பெரும் குடிசைக்கு அவளை அழைத்துச் சென்றனர். அங்கு அவளைத் தங்கச் செய்து நீராட்டத்துக்கு ஏற்பாடு செய்ய விரைந்தனர். ''அம்மணி சீக்கிரம் நீராட ஏற்பாடு செய்கிறோம். அதுவரை சற்று இளைப்பாருங்கள்' என்று சொல்லிப் போயினர்.

அந்தக் குடிசையில் வெகு துரிதமாகச் சகல சௌகரியங்களும் அளிக்கப்பட்டன அவளுக்கு. நீராடி அவள் மாற்றுடை புனைந்த பின்பு உணவும் கொண்டு வந்து வைத்தார்கள் பரதவப் பெண்கள். ''அவர் எங்கே?'' என்று வினவினாள் மைவிழி.

''வெளியே சென்றிருக்கிறார்'' என்றாள் அவளுக்குப் பணிவிடை செய்த பரதவர் பெண்,

''எப்பொழுது வருவார்?'' என்று கேட்டாள் மைவிழி.

''மாலையில்'' என்றாள் பரதவப் பெண்.

''யாங் சின்?''

''யார், சீனனா?''

''ஆம்.''

''அவனும் போயிருக்கிறான்.''

''மாலையில் தான் வருவானோ?''

''ஆம். அந்தச் சாளுக்கிய உபதளபதி மட்டும் இருக்கிறார். அவரை அழைக்கட்டுமா?''

பரதவப் பெண் சாதாரணமாகத்தான் கேட்டாள் இக்கேள்வியை. பதிலுக்கு அவளைச் சுட்டுவிடுபவள் போல் பார்த்தாள் கடல் மல்லைக் கட்டழகி.

## 17. இரும்புக் கொல்லர் இருவர்

கடல் மல்லைக் கட்டழகியின் சுடுவிழிகளை நோக்கிய பரதவப் பெண் அந்த உஷ்ணத்துக்குக் காரணம் புரியாமல் ஒரு வினாடி விழித்தாள். பிறகு கேட்டாள், ''அப்படியானால் அவரை அழைக்க வேண்டாமா?'' என்று.

மைவிழியின் கண்களில் துளித்த கனல் முகம் பூராவும் பரவியது. ''அவரை அழைக்கும்படி உன்னிடம் சொன்னேனா?'' என்ற அவள் கேள்வியிலும் உக்ரம் நன்றாக ஒலித்தது.

''இல்லை'' என்றாள் பரதவப் பெண் குழப்பத்துடன்.

''பின் எதற்காக அவரை அழைப்பதாகக் கூறுகிறாய்?'' என்று மைவிழி கோபம் தணியாத குரலில் மீண்டும் கேட்டாள்.

உங்களுடன் வந்தவர் மூவர்...'' என்ற பணிப்பெண் வாசகத்தை முடிக்காமல் விட்டாள்.

''ஆம்.'' மைவிழியின் ஒற்றைச் சொல்லிலும் சினம் தெரிந்தது.

''அந்த மூவரில் இருவரைப் பற்றிக் கேட்டீர்கள்...''

''ஆம்.''

''அவ்விருவரும் இல்லை.''

''அதனால்?''

''இருப்பவருடன் நீங்கள் பேச விரும்பலாமென்று நினைத்தேன்.'' இதைச் சொல்லிவிட்டு வெளியே செல்லத் திரும்பினாள் பரதவப் பெண்.

அந்தச் சமயத்தில் திடீரென்று எதையோ நினைத்துக் கொண்ட மைவிழி! ''பெண்ணே! சற்று இரு'' என்று அவளைத் தடுக்க, அப்பணிப்



பெண் மீண்டும் குடிசையின் உட்புறத்தை நோக்கித் திரும்பி மைவிழியின் கட்டளையை எதிர்பார்த்து நின்றாள்.

கட்டளையேதும் பிறக்கவில்லை கடல் மல்லைக் கட்டழகியின் உதடுகளிலிருந்து. முகத்திலிருந்த சீற்றம் சந்தேகச் சாயைக்கு இடம் கொடுத்தது. ''சாளுக்கிய உபதளபதியை உன்னால் இங்கு அழைத்து வர முடியுமா?'' என்று வினவினாள் மைவிழி சந்தேகத்துடன்.

''முடியும்'' என்றாள் பணிப்பெண்.

''அவர் இஷ்டப்படி எங்கு வேண்டுமானாலும் போக முடியுமா?'' என்று மீண்டும் வினவினாள் மைவிழி.

''முடியுமென்று நினைக்கிறேன்.''

''அவரைக் காவலில் வைக்கவில்லையா?''

''இல்லை.''

''அவர் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்?''

''இந்தக் குடிசைப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.''

பணிப் பெண்ணின் பதில் மைவிழிக்குப் பெருவியப்பை அளித்தாலும் அதை வெளிக்காட்டவில்லை. வீரபாகுவைச் சுதந்திரமாக உலாவவிட்டு இளவரசனும் யாங்சின்னும் சென்று விட்டது எத்தனை அபாயம் என்று நினைத்தாள் மைவிழி. வீரபாகு மெள்ளக் குடிசைகளைப் பார்வையிடுவது போல் அவற்றைக் கடந்து அடுத்திருந்த அடர்த்தியான சவுக்குத் தோப்புக்குள் நுழைந்து விட்டால் அவன் தப்பிவிடுவது மிகச் சுலபமென்பதையும், அப்படித் தப்பிவிட்டால் அவன் தனது படை வீரருடன் வந்து அந்தக் குடிசைப் பகுதியை வளைத்துத் தன்னை சிறைப்பிடிப்பது ஒரு பெரிய காரியமல்ல என்பதையும் புரிந்து கொண்டாள் மைவிழி. அசாத்திய எச்சரிக்கையுடனும் மிகுந்த சாமர்த்தியத்துடனும் தன்னைத் தப்புவித்து அழைத்து வந்த இளவரசன் திடீரென்று வீரபாகுவின் விஷயத்தில் இத்தனை அசிரத்தைக் காட்ட வேண்டிய அவசியமென்ன வென்பதையும் எண்ணிப் பார்த்தாள். இத்தகைய எண்ணங்கள் உள்ளத்திலோட, சிறிது நேரம் மௌனத்தில் ஆழ்ந்துவிட்ட மைவிழி, கடைசியாகப் பணிப் பெண்ணை நோக்கி, ''சரி, நீ போய் வா'' என்று விடை கொடுத்தாள்.

பணிப் பெண் சென்ற பின்பும் அவள் மனம் ஒரு நிலையில் இல்லை. வீரபாகு தப்பிவிட்டால் தனக்கு மட்டுமின்றி இளவரசனுக்கும் பேராபத்து என்பதை உணர்ந்து கொண்டாள். வீரபாகு எப்படியும் தனது வீரர்களை அழைத்து வந்து இளவரசர் வந்ததும் அவரை

வளைத்துப் பிடித்து விடுவானென்று திட்டமாக நம்பினாள். இப்படியொரு நிலையை ஏற்படுத்திவிட்டு இளவரசர் எங்கு போயிருப்பார் என்று நினைத்து நினைத்துப் பார்த்து விடை காணாமல் தவித்தாள்.

இத்தகைய எண்ணங்கள் அவளை மாத்திரமல்ல. வீரபாகுவின் மனத்திலும் எழுந்து அவனையும் குழப்பிக் கொண்டிருந்தன.

பரதவர் குடிசைப் பகுதியில் அன்று வீரபாகுவுக்கு ராஜோபசாரம் நடந்ததால் அவனுக்கு எதுவும் புரியவில்லை. அவனுக்காகத் தனித்து விடப்பட்டிருந்த குடிசையில் பரதவர் அவனுக்குச் சகல சௌகரியங்களும் செய்து கொடுத்திருந்தார்கள். ஒரு பணிப்பெண் அவன் நீராட நீர் கொண்டு வந்து பெரும்பானையில் கொட்டினாள். அவனுக்குச் சிற்றுடையொன்று கொணர்ந்து கொடுத்த இரு பரதவர் அவனை நீராடும்படி வேண்டிக் கொண்டதன்றி அவனுக்கு உடம்பில் நீர் மொண்டு கொட்டி உடம்பைத் தேய்த்து விடவும் செய்தார்கள். பிறகு அவனது நனைந்த ஆடைகளை உலர்த்திவிட்டு வேறு ஆடைகளைக் கொடுத்து அவனுக்கு உணவும் பரிமாறினார்கள். உணவருந்தியதும் உலர்ந்த அவனது ஆடைகளைக் கொணர்ந்து கொடுக்கவும் செய்தார்கள். அந்த ஆடைகளை அணிந்து கொண்டதும் அந்தப் பரதவரில் ஒருவன் வெளியே சென்று ஒரு வாளுடன் திரும்பி வந்து, ''இதை இளவரசர் தங்களிடம் கொடுக்கச் சொன்னார்'' என்று கூறி அதையும் கொடுத்தான்.

அது தனது வாளென்பதைக் கண்ட வீரபாகு வியப்பின் எல்லையை அடைந்தான். இளவரசன் எந்தத் துணிவைக் கொண்டு வாளைத் தன்னிடம் கொடுக்க உத்தரவிட்டானென்பது புரியாததால், ''இளவரசரா இதைக் கொடுக்கச் சொன்னார்?'' என்று வினவினான்.

''ஆம்'' என்றான் பரதவன்.

''இளவரசர் எங்கே இப்பொழுது?'' என்று கேட்டான் வீரபாகு மீண்டும்.

''வெளியே சென்றிருக்கிறார்'' என்றான் பரதவன்.

''எங்கே?''

''தெரியாது.''

''எப்பொழுது வருவார்?''

''அதுவும் தெரியாது.''

''வருவாரா மாட்டாரா?...''

''தெரியாது.''



பரதவனிடமிருந்து தான் எந்த விஷயத்தையும் ஒழுங்காக அறிய முடியாதென்று புரிந்து கொண்ட வீரபாகு, வாளைத் தனது இடுப்பில் கட்டிக் கொண்டு குடிசைக்கு வெளியே செல்ல முற்பட்டான். அவனை இரண்டு பரதவரும் தடுக்கவில்லை. அவன் வெளியே சென்று குடிசைப் பகுதிகளைப் பார்வையிட முற்பட்டபோது அவனை அவர்கள் தொடர்ந்து செல்லவில்லை. வீரபாகு பரதவர்களின் அந்தக் குடிசைகளை இரண்டு மூன்று தடவை சுற்றி வந்தான். சில சமயங்களில் அங்கிருந்த முந்திரி மரத்தின் நிழலில் உட்கார்ந்து கொள்ளவும் செய்தான். அப்படி அவன் இளைப்பாறிய பொழுது திடீரென்று பக்கத்துத் தோப்பிலிருந்து வெளிப்போந்த இரு பரதவரில் ஒருவன், ''வெய்யில் ஏறிவிட்டதே. எசமானுக்கு இளநீர் கொண்டு வரட்டுமா?'' என்று விசாரித்தான்.

வீரபாகு அவர்களை ஏற இறங்க பார்த்தான். ''இளநீர் கொண்டு வரத்தான் வந்தீர்களா?'' என்று வினவினான் சற்றுச் சினத்துடன்.

''ஆம்'' என்று கூறி, தலையும் வணங்கினான் பரதவன்.

''இல்லை வேவு பார்க்க வந்தீர்கள்'' என்று சீறினான் வீரபாகு.

இரு பரதவரும் பதில் சொல்லவில்லை. புன்முறுவல் பூத்தார்கள். பிறகு அந்த இடத்திலிருந்து அகன்றார்கள். வீரபாகுவும் முந்திரி மரத்தின் நிழலிலிருந்து எழுந்து சவுக்கு மரங்களிருந்த அடர்ந்த தோப்பு நோக்கிச் சென்றான். தோப்புக்குள் யாருமிருந்ததாகத் தெரியவில்லை. வெளியே சித்திரை மாதச் சூரியனின் வெப்பம் அதிகமாகிக் கொண்டிருந்ததால் கடற்கரை மணல் தகிக்கலாயிற்று. அங்கிருந்து தோப்புக்குள் புகுந்து தப்பிவிட்டாலென்ன என்று நினைத்த வீரபாகு தோப்புக்குள் நுழையவும் செய்தான். அவனை யாரும் தடை செய்யவில்லை. தூரத்தே மரங்களின் நிழலில் உட்கார்ந்து வலை பின்னிக் கொண்டிருந்த பரதவர்கள்கூட எழுந்திருக்கவுமில்லை, எழுந்து அவனை நோக்கி வரவுமில்லை.

சில அடி தூரம் தோப்புக்குள் நடந்து சென்ற வீரபாகுவுக்குச் சந்தேகம் வலுத்துக் கொண்டிருந்தது. இப்படித் தன்னை இஷ்டப்படி இளவரசன் திரிய விட்டிருப்பதற்கு ஏதோ ஆழ்ந்த காரணம் இருக்க வேண்டுமென்று நினைத்தான். ஆனால் அந்தக் காரணம் யாதாயிருக்குமென்று எத்தனை முறை சிந்தித்துப் பார்த்தும் புரியவில்லை வீரபாகுவுக்கு. ஆகவே, தோப்பின் ஊடே குழப்பத்துடன் நடந்து சென்றவன் நீண்ட நேரத்துக்குப் பிறகு திரும்பிச் சுற்றுமுற்றும் நோக்கினான். தூரத்தே இரண்டு பரதவப் பெண்கள் சவுக்குச் சுள்ளிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தார்கள். இன்னொரு புறத்தில்

இரண்டு பரதவர் சவுக்குக் கன்றுகளுக்குக் களை எடுத்துக் கொண்டிருந்தார்கள். அதைக் கண்ட வீரபாகுவுக்குக் கோபம் அதிகமாக வரவே, ''இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?'' என்று வினவினான்.

''கன்றுகளுக்குக் களை எடுக்கிறோம்'' என்றான் பரதவன்.

''எதற்காக?''

''கன்று வளருவதற்கு.''

''சவுக்குக்குக் களை எடுத்து நான் இதுவரை பார்த்ததில்லை.''

''இப்பொழுது பாருங்கள்.''

''சவுக்கு, காட்டுப் பயிர். தானே வளரும்.''

''இல்லை எசமான். இதெல்லாம் நாங்கள் பயிர் செய்தது தான்.''

இதைக் கேட்டதும் வெகுண்ட வீரபாகு பதில் சொல்லாமல் தோப்பின் வேறொரு பகுதிக்குச் சென்றான். அந்தப் பகுதியிலிலும் யாரோ இருவர் ஏதோ பணிகளைச் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் யாரும் அவனுக்கு எந்தவிதத் தடையையும் விதிக்கவில்லை. இருப்பினும் தன் ஒவ்வோர் அசைவும் உன்னிப்பாகக் கவனிக்கப் படுகிறதை உணர்ந்து கொண்டான் வீரபாகு. தனக்கு மேலுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறதேயொழிய உண்மையில் தான் பலமான கண்காணிப்பில் இருப்பதை உணர்ந்தான். ஆங்காங்கு இருந்த பரதவர்கள், பெரும் கத்திகளைக் கொண்டு சவுக்கைப் பிளப்பதையும், பிளக்கும்போது தன்னை அரைக்கண்ணால் கவனிப்பதையும் சிலர் சுறாக்கள் மீது எறியும் வேல்களைத் தீட்டுவதையும் தீட்டும்போது தன்னைக் கவனிப்பதையும் கண்டான். பெரும் மௌனமான, மரியாதையான ஆனால் மிகப் பலமான பாதுகாப்பில் தானிருப்பதை உணர்ந்து கொண்டு வெகுண்டான் வீரபாகு. 'எப்படியும் நான் தப்பிச் செல்வேன். சென்ற பின்பு எனது படையை அழைத்து வந்து இந்தப் பரதவர் குடிசைக் கூட்டத்தை அழித்து விடுகிறேன்' என்று கறுவிக் கொண்டான். அத்தகைய உள்ள வெப்பத்துடன் மீண்டும் தனது குடிசையை அடைந்து படுத்தான்.

பகல் மிக மெதுவாக ஓடிக் கொண்டிருந்தது. மாலையில் கதிரவன் மலை வாயிலில் விழுந்த பின்பே இளவரசனும் சீனனும் திரும்பி வந்தார்கள். அவர்களுடன் வேறு இரு மனிதர்களும் வந்திருந்தார்கள். அவர்களை அங்கிருந்த பரதவர் தலைவனுக்கு அறிமுகப்படுத்தினான் இளவரசன். ''இவர்களிருவரும் காஞ்சியின் இரும்புக் கொல்லர்கள். இன்று காஞ்சிக்குச் செல்கிறார்கள்'' என்று.



பரதவர் தலைவன் புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். ''இவர்கள் செய்யும் கோடாரிகளுக்குச் சவுக்குப் பிடிகள் தேவைப்படுகின்றன'' என்றும் சுட்டிக் காட்டினான் இளவரசன். அதற்கும் தலையாட்டினான் பரதவர் தலைவன். பிறகு அவன் மற்றப் பரதவர்களுக்கு ஏதோ சைகை செய்ய அடுத்த அரை நாழிகை நேரத்தில் ஒன்றரை முழமுள்ள நாலு கட்டுச் சவுக்குக் கழிகள் வந்து சேர்ந்தன. அவற்றை இரும்புக் கொல்லர்களுக்குச் சுட்டிக் காட்டிய இளவரசன், ''இது போதுமா?'' என்று வினவினான்.

போதுமென்பதற்கு அறிகுறியாக ஒரு கொல்லன் தலையசைக்கவே, ''சரி, இன்னும் நான்கு நாழிகைகளுக்குள் புறப்படுவோம்'' என்று கூறிய இளவரசன், ''யாங்சின்! நீ வீரபாகுவைப் பயணத்துக்குச் சித்தப்படுத்து. நான் மைவிழியை அழைத்து வருகிறேன்'' என்று உத்தரவிட்டான் மைவிழி இருந்த குடிசைக்குச் சென்றான்.

மைவிழி மிகுந்த சினத்துடன் வரவேற்றாள் இளவரசனை. ''பகல் முழுதும் எங்கு போயிருந்தீர்கள்?'' என்று வினவினாள் குரலில் கனல் விசிற.

''அடுத்த கிராமத்துக்குச் சென்றிருந்தேன்'' என்றான் பல்லவ இளவல்.

''எதற்கு?''

''இரும்புக் கொல்லரை அழைத்து வர.''

''இரும்புக் கொல்லர் எதற்கு?''

''அடுத்து வரும் ஆபத்திலிருந்து நம்மைத் தப்புவிக்க.''

''உங்களைத் தப்புவிக்க இரும்புக் கொல்லர் எதற்கு?''

''காஞ்சிக்குச் சென்றதும் புரிந்து கொள்வாய் அதை.''

மைவிழி அவனை நன்றாக ஏறெடுத்து நோக்கினாள். அவன் சொல்வது ஏதும் புரியவில்லை அவளுக்கு. ''உனக்குச் சந்தேகமிருந்தால் இப்படி வந்து கொல்லர்களைப் பார்'' என்று மைவிழியைக் குடிசை வாயிலுக்கு அழைத்த இளவரசன். ''அதோ பார் அவர்களை. உனக்கே நம்பிக்கை பிறக்கும்'' என்று தூரத்தில் பரதவர்களுடன் உட்கார்ந்திருந்த இரு கொல்லர்களையும் சுட்டிக் காட்டினான்.

அவர்களைக் கண்ட மைவிழி பெரும் திகில் கொண்டாள். ''ஐயோ, இவர்களா!'' என்று அவள் உதடுகளிலிருந்து வெளிப்பட்ட சொற்களில் கிலி மிதமிஞ்சி ஒலித்தது.

# 18. தளையும் நிலையும்

இளவரசன் கட்டிக் காட்டிய இரும்புக் கொல்லர் இருவரைக் கண்டதும் மைவிழிச் செல்வி மதிமயங்கி, ''ஐயோ! இவர்களா!'' என்று அச்சம் துவங்கிய சொற்களை உச்சரித்ததன்றி, அவள் கால்கள் நிற்கும் சக்தியை இழந்தனவாகையால் குடிசையின் கூரை மூங்கிலைச் சற்று இறுகக் கையொன்றால் பிடித்துக் கொள்ளவும் செய்தாள். மேற்கொண்டு பேசும் சக்தியை இழந்த அவள் இரும்புக் கொல்லர் இருவரையும் பல விநாடிகள் வெறித்துப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

அப்பொழுது மாலை முற்றி இருளும் கவியத் தொடங்கி விட்ட படியால், பரதவர் இருவரும் இரண்டு பந்தங்களைக் கொளுத்தி, கொல்லர் உட்கார்ந்திருந்த இடத்தில் நட்டு விட்டதன் விளைவாகக் கொல்லர் இருவர்மீதும் பந்தத்தின் வெளிச்சம் நன்றாகவே விழுந்திருந்தது. அந்தகாரம் மெல்ல மெல்ல அந்தப் பகுதியைச் சூழத் துவங்கிவிடவே குடிசைகளின் வாயில்களிலும் விளக்குகள் ஏற்றப்பட்டபடியால், பரதவரின் அந்தக் குடியிருப்புப் பகுதி மிக ரம்மியமாகவும் மங்களமாகவும் காட்சியளித்தது. விளக்குகளுக்கு எண்ணெய் விட்டு திரியைத் தூண்டி விட்ட பரதவப் பெண்கள் விரல்களில் பட்ட எண்ணெயைத் தலையில் தடவிக் கொண்ட போது அவர்கள் வளையல்கள் செய்த ஒலி, சங்கீதம் போல் ஒலித்தது. அந்தச் சூழ்நிலையில், இருள் மூண்டதால் துறைமுகப் பகுதியிலிருந்த சிச்சிலிப் பறவைகள் கூண்டுகளை நோக்கிப் பறக்கும் ஒலியும் அவை கிளப்பிய கிலகிலா நாதமும் சூழ்நிலையைப் பேரின்ப நிலைக்குக் கொண்டு போய்க் கொண்டிருந்தன. அன்று பௌர்ணமிக்கு அடுத்த பிரதமை திதியின் காரணமாக இருண்டு இரண்டு நாழிகைக்குப் பிறகே சந்திரன் வானத்தில் தோன்றுவானாகையால், அதுவரை தங்கள் ராஜ்யம் பலிக்கும் என்ற மமதையால் குடிசை விளக்குகள் காற்றில் ஆடிச் சிரித்த காட்சியும், காண்பவர் உள்ளத்தை ஈர்த்துக் கொண்டிருந்த பெரும் வளர்ப்புக் கோழிகளும் குஞ்சுகளும் அப்படியும் இப்படியும் தலைகளை ஆட்டியது கூட உள்ளத்தை மயக்கும் காட்சியாகத்தான் இருந்தது.

இத்தனை இன்பக் காட்சிகளையும் சாதாரண காலத்தில் பார்த்து ரசிக்கக்கூடிய மைவிழிச் செல்வி, அன்று மட்டும் எதையும் ரசிக்கும் தன்மையில் இல்லாமல் இரு இரும்புக் கொல்லர்களை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தாள். அவர்கள் வரவு மீண்டும் தனது நிலையை மிகக் கேவலமாக அடித்து விட்டதை உணர்ந்து கொண்டதால் அவள் மார்பு திக்கு திக்கென்று அடித்துக் கொண்டது. அவர்களிருவரில் ஒருவர்



தனது தந்தை இந்திரவர்மர் என்பதையும் இன்னொருவர் புலவர் போல் வேட மணிந்திருந்த மனிதரென்பதையும் உணர்ந்த விநாடிகளிலிருந்து அவள் பெரும் தயக்கமும் திகிலும் கொண்டிருந்தாளாதலால் முதலில் வெளியிட்ட இரண்டு அதிர்ச்சிச் சொற்களுக்குப் பிறகு நீண்ட நேரம் ஏதுமே பேசாமல் வாயடைத்து நின்றாள்.

அவள் அதிர்ச்சிக்குக் காரணம் நன்றாகப் புரிந்திருந்தது பல்லவ இளவலுக்கு. ஏற்கனவே அவளைக் கேவலமாகப் பேசி, சவுக்குத் தோப்பில் விட்டுச் சென்ற தந்தையைக் கண்டதும் அவளுக்குத் திகில் ஏற்பட்டதில் எந்தவித ஆச்சரியமும் இல்லையென்பதை உணர்ந்து கொண்டான். ஆகவே அவளை ஆசுவாசப் படுத்தும் நோக்கத்துடன் அவள்மீது தனது கையொன்றை வைத்து ''அஞ்சாதே மைவிழி, உன் தந்தை உன் நிலையைப் புரிந்து கொண்டு விட்டார்'' என்று ஆறுதலும் சொன்னான்.

அந்தச் சொற்கள் அவளுக்கு ஆறுதலைச் சிறிதும் அளிக்க வில்லை. ''இவர்கள் உங்கள் உத்தரவை நிறைவேற்றவில்லையா?'' என்று மட்டும் கேட்டாள் மைவிழி.

''எந்த உத்தரவை?'' என்று வினவினான் பல்லவ இளவல் ஏதுமறியாதவன் போல.

''கடிகைக்குச் செல்லும்படி நீங்கள் இட்ட உத்தரவை'' என்றாள் மைவிழி.

''இல்லை. நிறைவேற்றவில்லை.''

''ஏன்?''

''நிறைவேற்ற முடியவில்லை. மாமல்லபுரத்தின் வழிகள் ஒவ்வொன்றும் சாளுக்கிய வீரர்களால் பலமாகக் காக்கப்பட்டிருக்கிறது.''

''எல்லாப் பாதைகளுமா?''

''ஆம்.''

''குறுக்கு வழிகள்?''

''பொதுப் பாதையில் எந்த இடங்களிலிருந்து பார்த்தால் குறுக்குப் பாதைகள் தெரியுமோ அந்த இடங்களிலெல்லாம் சாளுக்கிய புரவி வீரர்கள் இருக்கிறார்கள். எந்த இடத்திலும் அவர்கள் கண்ணோட்டம் இருக்கிறது.''

புரிந்து கொண்டதற்கு அறிகுறியாக தலையை அசைத்தாள் மைவிழி ஒருமுறை. சிறிது நேரம் ஏதும் பேசாமலிருந்துவிட்டு வினவினாள், ''தந்தையை எங்கு சந்தித்தீர்கள்?'' என்று.

''எதிர்பார்த்த இடத்தில் சந்தித்தேன்!'' என்றான் பல்லவ இளவல் சர்வ சாதாரணமாக.

மைவிழி சற்றுத் தலையைத் திருப்பி, தனது விழிகளை அவன் விழிகளுடன் கலந்தாள். ''அப்படியானால் தந்தை கடிகைக்குப் போக மாட்டாரென்பது உங்களுக்கு முன்னமே தெரியுமா?'' என்றும் வினவினாள் அச்சங் கலந்த வியப்புடன்.

பல்லவ இளவலின் கை குடிசைக்கு உட்புறமாக இருந்த அவளது இடையில் தவிழ்ந்தது. சற்றுப் பின்னடைய முற்பட்ட மைவிழியை நோக்கி, ''பயப்படாதே, வெளியில்தான் வெளிச்சமிருக்கிறதே யொழிய நாம் இருளில் தானிருக்கிறோம்'' என்று தைரியப்படுத்தி விட்டு, ''மைவிழி! உன்னை உன் தந்தையிடம் நான் தூது அனுப்பியதில் முக்கியக் காரணம் ஒன்று உண்டு. சாளுக்கியர் மல்லைக்குள் புகுந்ததைப் பிரகடனப்படுத்தியதற்கும் அவர்கள் ஆக்ரமிப்பதற்கும் இடையில் உன் தந்தை தப்பிவிட அவகாசமிருக்கு மென்று எண்ணினேன். அதனால் தான் அத்தனை துரிதமாக அத்தனை ஆபத்திலும் தன்னந்தனியாக உன்னை தோப்பின் நடுவிலிருந்த குடிசைக்கு அனுப்பினேன். ஆனால் சாளுக்கியர்கள் ஆங்காங்கு பாதைகளில் காவல் படைப்பிரிவுகளை நிறுத்தி நிறுத்திக் கொண்டே வந்து கடல் மல்லையில் பிரவேசித்துவிட்டார்கள். ஆக்ரமிப்பை அவர்கள் பிரகடனப் படுத்திய சமயத்தில் கடல் மல்லையின் வழிகள் அடைக்கப்பட்டு மல்லை மாநகர் சாளுக்கியரின் இரும்புக் கவசத்தில் அகப்பட்டுக் கொண்டு விட்டது. இதையும் நான் முன்பே ஊகித்திருந்தேன்...'' என்றான்.

''அப்படியானால் என் தந்தையை ஏன் கடிகைக்குப் போகச் சொன்னீர்கள்?'' என்று கேட்டாள் மைவிழி.

''நமக்கு இப்பொழுது பெரும் பாதுகாப்பு காஞ்சியின் சர்வ கலாசாலையான கடிகைதான். முடிந்தால் அந்த இடத்தை உன் தந்தை அடையட்டுமென்று நினைத்தேன். முடியாவிட்டால் என்ன செய்ய வேண்டுமென்பதற்கும் முன்னேற்பாடு இருந்தது'' என்று விளக்கினான் பல்லவ இளவல்.

''என்ன முன்னேற்பாடு?'' மைவிழியின் கேள்வியில் ஆர்வம் தெரிந்தது. இத்தனை முன்னேற்பாடு செய்யக்கூடிய இளவரசர் தன் தந்தை தன்னைப் பற்றித் தவறாக நினைக்கக்கூடும் என்பதை ஏன் முன்கூட்டி ஊகிக்கவில்லை என்றும் நினைத்தாள்.

அவள் உள்ளத்திலோடிய எண்ணங்களைப் புரிந்து கொண்டவன் போல் ராஜசிம்மன் பேசினான். ''மைவிழி! சுமார் ஒரு மாதத்துக்கு



முன்பிருந்தே சாளுக்கியர் படையெடுப்பை எதிர்பார்த்து நானும் உன் தந்தையும் மாமல்லபுரம் சாளுக்கியர் வசமானால் என்ன செய்வது என்பதைப் பற்றி முடிவு செய்திருந்தோம். எனது தந்தை பரமேசுவர பல்லவர் சாளுக்கியர் படையெடுப்பு ஏற்படுமானால் காஞ்சியிலோ மாமல்லபுரத்திலோ போர் நிகழக் கூடாதென்று திட்டமாகச் சொல்லிவிட்டதால், மாமல்லபுரத்திலிருந்து தப்பும் வழிகளைத் திட்டவட்டமாக முடிவு செய்திருந்தோம். முடிந்தால் முன்னதாகக் காஞ்சியை அடைந்துவிடுவது, இல்லையேல் பக்கத்து ஊர் ஒன்றில் ஒளிந்திருந்து பிறகு காஞ்சிக்குப் போவது என்று தீர்மானித்திருந்தோம். அந்தத் திட்டப்படியே நடந்து கொண்டோம். உன் தந்தை தப்பிக் காஞ்சிக்குப் போயிராவிட்டால், அவர் இருக்கக்கூடிய இடம் எது என்பது தெரிந்திருந்ததால் அங்குபோய் அவரைச் சந்தித்தேன். அழைத்து வந்தேன் இருவரையும். காஞ்சியின் கொல்லர்களாக மாற்றினேன்'' என்று விளக்கினான் பல்லவ இளவல்.

''என் தந்தையை இந்தப் பரதவருக்குத் தெரியாதா?'' என்று கேட்டாள் மைவிழி.

''நன்றாகத் தெரியும்.''

''தெரியும்...''

''தெரியாததாகப் பாசாங்கு செய்வார்கள். பரதவர்களை விடச் சிறந்த ஒற்றர்களும் நுட்ப அறிவுள்ளவர்களும் இந்த நாட்டில் வேறு யாருமில்லை. கரிகாலன் காலத்திலிருந்து தமிழகத்தின் கடல் பாதுகாப்பு அவர்களிடம்தான் இருந்துவருகிறது. உன் தந்தையை இரும்புக் கொல்லர் என்று அறிமுகப்படுத்தியதும் பரதவர் தலைவன் அப்படியே ஆமோதித்தான். மற்றவர்களும் மாற்றுப் பேசவில்லை. நான் எதைச் சொன்னாலும் செய்தாலும் அதற்குக் காரணம் இருக்குமென்பது என்னைச் சேர்ந்தவர்களுக்குத் தெரியும்.''

''உங்களைச் சேர்ந்தவர்களா?''

''ஆம்.''

''நல்ல அழகு!''

''ஏன், அழகில்லாமலென்ன?''

''நீங்கள் மன்னர் குலம். அவர்கள் செம்படவச் சாதி.''

ராஜசிம்மன் நகைத்தான் பெரிதாக. ''ஏன் நகைக்கிறீர்கள்?'' என்று சீற்றத்துடன் கேட்டாள் மைவிழி.

சிறிது நேரம் பதில் சொல்லவில்லை இளவரசன். பதில் சொன்னபோது அவன் குரலில் உணர்ச்சி மிகுந்து கிடந்தது. ''மைவிழி!

சாளுக்கியரின் அம்புகள் பாயும்போது, வாட்கள் நுழையும்போது, என் உடலிலிருந்தும் அந்தப் பரதவன் உடலிலிருந்தும் சொட்டும் ரத்தம் ஒரே வித சிவப்பாகத்தான் இருக்கும். எங்கள் உயிர்கள் பறந்து விட்டால் உடல்கள் ஒரே விதமாகத்தான் விறைக்கும். ஒளியிழந்த கண்கள் வானத்தை நோக்கும்போது ஒரே விதமாகத்தான் நோக்கும். நீ கீழ்க்குலத்தான் என்று நினைக்கும் அதோ அந்தப் பரதவன் மனத்திலிருக்கும் பல்லவ நாட்டைப் பற்று என் மனத்துப் பற்றைவிட எந்த விதத்திலும் குறைந்ததல்ல. புரிந்து கொள். மைவிழி, புரிந்து, கொள்'' என்று உணர்ச்சி பொங்க, குரல் தழுதழுக்கப் பேசிய பல்லவ இளவல், ''இன்னும் சிறிது நேரத்தில் நாம் புறப்படப் போகிறோம் சித்தமாயிரு'' என்று கூறிவிட்டு வெளியே செல்ல முயன்றான்.

அவன் கையைப் பற்றிச் சிறிது நிறுத்திய மைவிழி சொன்னாள். ''அப்பா! பரதவரைப் பற்றிக் கேட்டதும் எத்தனை வெகுண்டு விட்டீர்கள்!'' என்று.

ராஜசிம்மன் சற்று நின்று திரும்பிக் குடிசைக்குள் அவளை அழைத்துச் சென்று இருளில் அவளை இரு கைகளாலும் இறுக்கினான். அந்த நிலையில் சொன்னான்: ''மைவிழி! நமது குடி மக்கள் நம்மைவிட ஆயிரம் மடங்கு உயர்ந்தவர்கள். அவர்கள் ஆதரவு இல்லையேல் மன்னன் மகுடம் அவன் தலையில் நிற்காது. அவர்கள் இல்லையேல் அவன் பஞ்சணையைத் தயாரிக்க யாருமிருக்க மாட்டார்கள். அவர்கள் இல்லையேல் அவனுக்கு அறுசுவை உண்டியில்லை, ஆடையில்லை, அம்ச தூளிகா மஞ்சமில்லை. ஆபரணங்களில்லை, அதிகாரங் களில்லை. இதை நன்றாய் நினைவில் வைத்துக் கொள்.''

மைவிழி அவனுக்கு மக்களிடமிருந்த அன்பை எண்ணி வியந்தாள். அந்தச் சமயத்தில் இன்னொரு சந்தேகமும் கேட்டாள், ''என் தந்தையுடன் வந்திருக்கிறாரே அந்தப் புலவர் யார்?'' என்று.

அவன் பதில் அவளைத் தூக்கி வாரிப் போட்டது. ''பல்லவர் படைத் தலைவர், பலபத்ரவர்மர்'' என்று மிகுந்த மரியாதையுடன் சொன்னான் பல்லவ இளவல்.

இதைக் கேட்டதும் மைவிழிக்கு ஏற்பட்டது அதிர்ச்சி மட்டுமல்ல, வியப்பும் மண்டியது அவள் இதயத்தில், ''இவர் உங்கள் தந்தையுடன் செல்லவில்லையா?'' என்று வினவினாள்.

''இல்லை.''

''ஏன்?''

''என்னிடம் வேலை இருக்கிறது அவருக்கு.''



''என்ன வேலையோ?''

''காஞ்சியில் சொல்கிறேன். அதுவரை பொறுத்திரு. இப்பொழுது நாம் செய்ய வேண்டிய முக்கியக் காரியம் காஞ்சியை அடைய வேண்டியதுதான். புறப்படச் சித்தம் செய்து கொள்!'' என்று கூறிவிட்டு, குடிசையிலிருந்து வெளியே சென்று விட்டான் ராஜசிம்மன்.

அடுத்த இரண்டு நாழிகைகளில் அனைவரும் உணவை முடித்துக் கொண்டு சித்தமானதும் நீளமான மூடு வண்டியொன்று கொண்டு வரப்பட்டது. அந்த வண்டியில் சவுக்குக் கழிகளைப் பக்கங்களில் அடுக்கி இந்திரவர்மனையும் மைவிழியையும் நடுவிலும், பலபத்ரவர்மனைப் பின் கோடியிலும் உட்கார வைத்த ராஜசிம்மன், முன்புறத்தில் வீரபாகுவை உட்கார வைத்தான். அவனுக்கருகில் சீனனை உட்கார வைத்து முகப்பில் தான் ஏறி உட்கார்ந்து வண்டிக் கயிறுகளைக் கையில் ஏந்தி, சாட்டையையும் எடுத்துக் கொண்டான்.

உள்ளிருப்பவர்களை நோக்கி, நீங்களிருவரும் இரும்புக் கொல்லர்கள். நான் காஞ்சியின் வணிகன். மைவிழி என் மனைவி காஞ்சியிலிருந்து மாமல்லபுரம் வந்த இக்கொல்லர்களை சாளுக்கிய மன்னர் உத்தரவுப்படி காஞ்சிக்கு அழைத்துச் செல்கிறேன். அவர்கள் தப்பி ஓடாதிருக்க மன்னர் அவரது உபதளபதி வீரபாகுவை அனுப்பியிருக்கிறார். இந்தச் சீனன் வீரபாகுவின் கையாள். இதுதான் இந்தப் பயணத்தில் நமது நிலை. இப்பொழுது ஆபத்தான பயணத்தைத் துவங்குகிறோம். வழியில் யார் வண்டியை மறித்தாலும் நான் தான் பேசுவேன். அதை வீரபாகு ஆமோதிப்பார்'' என்று திட்டமிட்டான் பல்லவ இளவல்.

யாங்சின் தன் கையில் மறைத்து வைத்திருந்த மெல்லிய கத்தியை வீரபாகுவின் கண்களின் முன்பாகக் காட்டினான். வீரபாகு தனது நிர்கதியான நிலையைப் புரிந்து கொண்டான்.

தோப்பை ஒட்டிக் கிடந்த மணலில் சிறிது தூரம் முண்டி முண்டி நடந்த காளைகள் காஞ்சியின் பிரதான சாலையை அடைந்ததும் வெகு வேகமாகப் பறந்தன. வண்டியோட்டுவதில் பல்லவ இளவலுக்கு இருந்த லாவகத்தைக் கண்ட மைவிழி பெரிதும் வியப்படைந்தாள். ''இளவரசருக்குத் தெரியாத காரியம் எதுவுமில்லை போலிருக்கிறது'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

பல்லவ இளவல் சுமார் அரை ஜாமத்திற்குள் அந்த வண்டியை முன்னால் சென்று கொண்டிருந்த பொதி வண்டிகளின் கூட்டத்துடன் கலந்து விட்டான். மாடுகளைச் சற்றுத் திருப்பி முடுக்கிவிட்டு அந்த

வண்டிக் கூட்டத்தின் நட்ட நடுவில் தனது வண்டியைச் செலுத்தினான். வண்டிகள் எதிரி வீரர்களால் சோதிக்கப்பட்டாலும் தனது வண்டி நடுவிலிருப்பதில் பயனிருக்கிறது என்று எண்ணினான் இளவரசன்.

ஆனால் அந்த ஆசை நிராசை என்பதைக் காஞ்சியின் பெருமதிளை அடைந்ததும் புரிந்துகொண்டான். அங்கு வண்டிகளைச் சோதித்துக் கொண்டிருந்தவர்கள் சாளுக்கிய வீரர்கள் மட்டுமல்ல. பல்லவ காஞ்சியின் பெரு வணிகர் இருவர் வண்டிகளைச் சோதித்துச் சோதித்து உள்ளே அனுப்பலாமென ஜாடை காட்டிக் கொண்டிருந்தார்கள். அந்த ஜாடையை அனுசரித்துச் சாளுக்கிய வீரர்கள் வண்டிகளை ஒவ்வொன்றாக உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

பல்லவ இளவலின் வண்டி சோதனைத்தளையை அடைந்ததும் அந்தப் பெரு வணிகரில் ஒருவன் பல்லவ இளவலைப் பார்த்து விடவே அவன் கண்களில் அச்சமும் வியப்பும் கலந்து ஏற்பட்டன. அருகிலிருந்த தடுப்புத் தளையையும் தனது நிலையையும் அறவே மறந்த அவன் பல்லவ இளவலுக்குத் தலையை வணங்கிவிட்டான். அதைக்கண்ட சாளுக்கிய புரவி வீரர் இருவர் வண்டியைத் துரிதமாக நெருங்கினர். இளவரசனின் குட்டி வெளிப்பட்டு விட்டதை நினைத்த வீரபாகு இடியென நகைத்தான். அடுத்த விநாடி இளவரசனை நோக்கிய சாளுக்கிய வீரனொருவன் ''இறங்கு கீழே!'' என்று உத்தரவிட்டான். மற்றொரு வீரன் அந்த உத்தரவை நிறைவேற்றி வைக்கத் தனது வேலால் இளவரசன் மார்பைத் தட்டி, ''உம். சீக்கிரம்!'' என்று துரிதப்படுத்தவும் செய்தான்.

## 19. விஷப் பரீட்சை

**சோ**தனை தளையருகே வேதனை தரக்கூடிய அந்த நிகழ்ச்சி மைவிழிக்கும் மற்றோருக்கும் பெரும் கலக்கத்தையும், வீரபாகு வுக்குக் களிவெறியையும் அளித்ததென்றாலும், பல்லவ இளவலின் இதயத்தில் மட்டும் எந்தவித அச்சத்தையோ குழப்பத்தையோ உண்டாக்காததால், அவன் முகத்தில் புன்முறுவலே படர்ந்து கிடந்தது.

கடல் மல்லையிலிருந்து புறப்பட்ட நேரத்திலேயே வழியில் எதிரி வீரர்கள் மடக்குவார்களென்பதை உணர்ந்திருந்த பல்லவ இளவல் வெகு எச்சரிக்கையுடனேயே வண்டியைச் செலுத்தினான் அந்தப் பெரும் மூடு வண்டியை மற்றப் பொதி வண்டிகளுடன் அவன் கலந்துவிட்ட வேளையில்கூட மற்ற வண்டிக்காரர்களுக்கு எந்தவிதச்



சந்தேகமும் உண்டாகாத வழியிலேயே வண்டியைச் செலுத்தினான். கடல் மல்லையிலிருந்து புறப்பட்ட மறுநாள் நடுப்பகலில் பல்லவபுரத்து எல்லைத் தோப்பில் மற்ற வண்டிகள் அவிழ்த்து விடப்பட்டபோது அந்த வண்டிக் கும்பலின் நடுவில் தனது வண்டியையும் அவிழ்த்து விட்டான். மற்ற வணிகக் கூட்டங்களைப் போலவே தானும் மரத்தின் அடியில் சட்டிகளைக் கொண்டு சமைத்துத்தானும் உணவருந்தி மற்றவர்களுக்கும் உணவு படைத்தான். மைவிழி இடையிடையே அவனுக்கு உதவ வந்த போதுகூட வேண்டாமென்று தடுத்து அவளை மட்டும் வண்டியிலேயே தங்கச் செய்து தனக்கு உதவ இந்திரவர்மனையும் பலபத்ரவர்மனையும் உபயோகப்படுத்திக் கொண்டான். வீரபாகு மட்டும் பலமாகச் சீனனால் பாதுகாக்கப்பட்டு ஒரு மரத்தடியில் இளைப்பாறிக் கொண்டிருந்தான்.

அந்தச் சூழ்நிலை மிக இன்பமாயிருந்ததைக் கண்டாள் மைவிழி. தோப்பில் ஆங்காங்கு வண்டிகள் அவிழ்த்து விடப்பட்டு வணிகரும் பணியாட்களும் மற்றும் வணிகர் வண்டிகளில் சொற்பப் பணத்துக்குப் பயணம் செய்து கொண்டிருந்த சாதாரண மக்களும் பலவிடங்களில் உணவு தயாரித்ததும், கட்டுச் சாதத்தை அவிழ்த்து உட்கார்ந்து, உணவருந்தியதும் ஏதோ வனபோஜனம் நடப்பது போன்ற பிரமையை அவளுக்கு அளித்திருந்தது. எனினும் இந்த இன்பச் சூழ்நிலையிலும் தங்கள் நிலை துன்பப்படத் தக்கதாகவே இருந்ததை எண்ணியதால் பெரு மூச்சும் விட்டாள் ஓரிருமுறை மைவிழி. அத்தகைய நிலையிலும் இளவரசனே தனக்கு உணவு கலந்து ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு வந்தது அவளுக்குச் சிறிது சங்கடமாகவும் பயமாகவும் இருந்தது. ஏற்கனவே இளவரசனையும் தன்னையும் பற்றித் தவறான எண்ணம் கொண்டிருந்த தனது தந்தை, கடல் மல்லைச் சவுக்குத் தோப்பில் 'இவளுக்குத் துணையிருக்க இளவரசர் வருவார்' என்று வெறுத்துப் பேசித் தன்னை மணல் மேட்டில் தள்ளி விட்டுப் போன தந்தை, இப்பொழுது இளவரசன் உணவு தருவதைக் கண்டால் என்ன நினைப்பார் என்று அச்சம் கொண்டாள். வண்டியில் பயணம் செய்த சமயத்தில், தனக்கும் அவளுக்கும் எந்த பந்தமோ சம்பந்தமோ இல்லாதவர் போலவே அவள் தந்தை உட்கார்ந்திருந்தார். அவரது போக்கிலிருந்து அவரது உள்ளக் குமுறல் அடங்கவில்லையென்பதைப் புரிந்துகொண்ட மைவிழி, இளவரசன் உணவுக் கலயத்தை அவளிடம் நீட்டி வண்டி முகப்பில் உட்கார்ந்து, ''சாப்பிடு'' என்று சொன்னதும் அவள், ''எனக்குப் பசிக்கவில்லை'' என்றே சொன்னாள்.

''ஏன்?'' என்ற இளவரசன் கேள்வியில் வியப்பு இருந்தது.

''பசிக்காததற்குக் காரணம் உண்டா?'' என்று கேட்டாள் அவன் பதிலுக்கு.

''முந்திய இரவே சரியாக நீ சாப்பிடவில்லை. இன்றைய பகலிலும் பசிக்கவில்லையென்றால் காரணம் இருக்கவேண்டும்'' என்றான் பல்லவ இளவல். அத்துடன் அவளை உற்றுப் பார்த்து, 'நீயாகச் சாப்பிடுகிறாயா நான் ஊட்டட்டுமா?' என்று கேட்டு ஒரு கவளத்தைக் கையால் எடுக்கவும் செய்தான்.

''வேண்டாம் வேண்டாம். நானே சாப்பிடுகிறேன்'' என்று கூறிக் கலயத்தை அவனிடமிருந்து பிடுங்கிக் கொண்டாள் அவள். அதைப் பிடுங்கிக் கொண்டதும் தூரத்தே ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருந்த தனது தந்தையைக் கவனித்தாள். அதுவரை வண்டியில் நடந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த இந்திரவர்மன் அவள் பார்த்ததும் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டான். இதனால் வேண்டாவெறுப்புடன் உணவை மெல்ல மெல்ல அருந்தினாள் மைவிழி.

இளவரசன் மீதோ தன் மீதோ இருந்த சந்தேகமும் சினமும் அவருக்குச் சிறிதளவும் குறையவில்லை யென்பதை நன்றாகப் புரிந்து கொண்டதால், மேற்கொண்டு நடந்த பயணத்தை உணர்ச்சி ஏதுமற்ற பதுமை போலவே ஏற்றுக் கொண்டாள்.

மாமல்லபுரத்திற்கும் காஞ்சிக்கும் சிம்மவிஷ்ணுவின் காலத்திலேயே போடப்பட்டிருந்த பெருஞ்சாலையில், இளவரசன் தனது வண்டியையும் பொதி வண்டிகளோடு இணைத்துச் செலுத்தியதிலிருந்து பல்லவபுரம் வரும்வரை சாளுக்கியப் புரவி வீரர் பலர் அடிக்கடி அந்தப் பெருஞ்சாலையில் விரைந்து கொண்டிருந்ததையும், புரவி கட்டிய ரதங்கள் பலவும் கடல் மல்லையை நோக்கி உருண்டு கொண்டிருந்ததையும் கவனித்தான். என்னதான் இந்திரவர்மனையும் பலபத்ரவர்மனையும் பொதி வண்டி வணிகர்கள் சற்று ஊன்றிக் கவனித்தால் கண்டு பிடித்து விடுவது எளிதென்பதையும், அப்படிக் கண்டுபிடித்து அவர்கள் தனக்கு அதிக மரியாதை காட்ட ஆரம்பித்தால் தன் வேடம் கலைந்து விடுமென்பதையும் அப்புறம் அவ்வப்பொழுது சாலையில் உலாவும் சாளுக்கிய வீரர்கள் தன்னைச் சிறைசெய்வது சர்வ சுலபமென்பதையும் புரிந்து கொண்டான். அது தவிர இந்திரவர்மனும் சீனனும் மாறுவேட மணியாமல் சுய உடைகளில் இருப்பதிலும் ஆபத்திருந்தது அவனுக்கு தெரிந்தே யிருந்தது. ஆனால் இந்திரவர்மனைச்சுய உடையில் இருக்க வைப்பதில் அனுகூலமும் ஓரளவு பாதுகாப்பும் இருந்ததால் அவன் அந்த நிலையை மாற்ற இஷ்டப்படவில்லை.



காஞ்சிக்குச் செல்லும் பெரும் சாலையில் இடையிடையே அதிகக் காவல் இருந்து கொண்டிருந்ததைக் கவனித்த இளவரசன் வண்டிக்குள்ளிருப்போரை எச்சரித்தான். ''இரவின் முதல் ஜாமத்தில் நாம் காஞ்சியின் கிழக்கு வாயிலை அடைவோம். அதற்கு சற்று முன்பாகவே எச்சரிக்கையுடனிருங்கள். நமது வண்டியை சாளுக்கிய வீரர்கள் நிறுத்தினால் யார் யார் எப்படி நடந்து கொள்ள வேண்டு மென்பது தெரியுமல்லவா?'' என்று வினவினான் வண்டிக்குள்ளிருந் தோரை நோக்கி.

''தெரியும். நானும் இந்திரவர்மரும் பேசாமடந்தைகளாக இருப்போம்'' என்றான் பல்லவர் படைத்தலைவனான பலபத்ரன்.

''மைவிழியும் பேசத் தேவையில்லை'' என்ற இளவரசன் சீனனை நோக்கினான்.

யாங்சின் 'சங்சங்' என்று ஏதோ ஒலி எழுப்பினான் உதடுகளி லிருந்து. இதனால் வெகுண்ட வீரபாகு, ''இவன் என்ன சொல்கிறான்?'' என்று சீறி வெறுப்புடன் சீனனைப் பார்த்தான்.

''தானும் பேச அவசியமில்லை என்று சொல்கிறான்'' என்றான் இளவரசன்.

''இவனுக்குத்தான் தமிழ் தெரியுமே, தமிழில் பேசினால் என்ன கேடு? எதற்கு 'கூ' கொட்டுகிறான்?''

''எந்த மொழியில் பேச வேண்டுமென்பது அவரவர் இஷ்டம். அவன் நேசிப்பது இரண்டு. அவற்றில் தாய்மொழி ஒன்று'' என்றான் பல்லவ இளவல்.

''இன்னொன்று?'' என்று கேட்டான் வீரபாகு.

இம்முறை பல்லவ இளவல் பதில் கூறவில்லை. சீனன் தனது மெல்லிய கத்தியை எடுத்து வீரபாகுவின் கண்களுக்கெதிரில் காட்டினான். ''இதை எதற்காக அடிக்கடி என்னிடம் காட்டுகிறான்?'' என்று சீறினான் வீரபாகு.

''காஞ்சியில் நாம் தடுக்கப் பட்டால் நீ சரியாகப் பேச வேண்டுமென்பதற்காக'' என்றான் பல்லவ இளவல்.

''சரியாக என்றால்?''

''எப்படிப் பேசினால் எங்களுக்கு ஆபத்து வராதோ அப்படி!''

''பேசாவிட்டால்?''

''உனக்கு ஆபத்து வரும்.''

''எப்படி வரும்?''

''யாங்சின் அதைச் சொல்லத்தான் கத்தியைக் காட்டினான்.''

புரிந்து கொண்டான் தனது நிலையை வீரபாகு. இருப்பினும் கேட்டான் அவன். ''கத்தியால் ஒருமுறை குத்தியதும் நான் அலறி விட்டால் அப்புறம் உங்கள் கதி என்ன ஆகும் தெரியுமா?''

உடனடியாகப் பதில் சொல்லவில்லை பல்லவ இளவல். சிறிது நேரம் கழித்துப் பதில் சொன்னபோது அதில் சிறிது வெறுப்பும் கலந்திருந்தது. மிகுந்த தீனமான ஆனால் வருத்தம் கலந்த குரலில் கூறினான் பல்லவ இளவல். ''வீரபாகு! பூ நாகத்தின் சக்தியை நீ புரிந்து கொள்ளவில்லை'' என்று.

''பூ நாகமா! வீரபாகுவின் கௌவயில் வியப்பு இருந்தது.

''ஆம். யாங்சின் வைத்திருக்கும் கத்தி மிக மெல்லியது. நமது தாழை மலர்களில் உள்ளடங்கி உறங்கும் சிறுநாகத்தைப் போலிருப்பதால் அதைச் சீனர்கள் பூ நாகம் என்று சொல்கிறார்கள். அது நமது உடலுக்குள் நுழைவது தெரியாது. உயிரைக் கண்ணிமைக்கும் நேரத்தில் குடித்துவிடும்'' என்று விளக்கினான் பல்லவ இளவல்.

வீரபாகுவின் பெருவிழிகள் பிதுங்கின. ''அப்படியா!'' என்று கேட்டபோது அவன் பெரிய மீசையும் பயத்தால் அசைந்தது.

''ஆம். அந்தக் கத்தியில் விஷம் தீட்டப்பட்டிருக்கிறது. அது உன் உடலில் நுழைவதற்கும் நீ நினைப்பை இழப்பதற்கும் விநாடி அவகாசம் கூட இருக்காது'' என்றான் பல்லவ இளவல்.

தான் சற்றுத் தாறுமாறாக நடந்து கொண்டால் தனது உயிர் அரைக் காசுக்கும் உதவாதென்பதை உணர்ந்துகொண்ட வீரபாகு அதற்குப் பிறகு மௌனத்தையே கடைப் பிடித்தான். அத்தப் பொதி வண்டித் தொடர் காஞ்சியின் கிழக்கு வாசலை அன்றைய இரவின் முதல் ஜாமத்தின் முடிவில் அடைந்த போதும் அவன் வாயைத் திறக்கவில்லை. எதிரே பிரும்மாண்டமாக எழுந்த காஞ்சியின் கோட்டை மதிலும், மதிள்கள் மேல் இருந்த வில், வேல் கூடங்களில் பளபளத்து ஆடிய பந்தங்களும், கோட்டை மதிளை அணைத்துக் கிடந்த பெரிய அகழியில் முதலை களும் சுறாக்களும், சீறி எழுந்ததால் ஏற்பட்ட பயங்கர ஒலிகளும் வீரபாகுவுக்கு அதிகத் துணிவைக் கொடுக்கவில்லை. சதா தனது இடுப்பைத் தடவிக் கொண்டிருந்த சீனனின் வலது கரத்தை நினைத்துச் சங்கடப்பட்டுக்கொண்டே இருந்தான். ஒவ்வொரு வண்டியாகச் சோதனை செய்து தளையை விலக்கி வண்டிகளை உள்ளே அனுப்பி கொண்டிருந்த சாளுக்கிய வீரர்கள்கூட அவனுக்குத் தைரியத்தைக் கொடுக்கவில்லை. அத்தனை பயத்திலும் கூடப் பிறந்த சுபாவம்



விடாததால் தானிருந்த வண்டி திடீரென நிறுத்தப்பட்டதும், இளவரசனைச் சாளுக்கிய வீரன் இறங்கக் கட்டளையிட்டதும், தன்னையும் மீறி நகைத்துவிட்டான் வீரபாகு.

புரவியில் அமர்ந்த சாளுக்கிய வீரர் இருவர் மத்தியில் வந்த காஞ்சியின் பெருவணிகர், இளவரசனைக் கண்டதும், தலைவணங்கி விடவே, ''இறங்கு கீழே'' என்று கட்டளையிட்டான் சாளுக்கிய வீரன். அவன் இறங்காது போகவே இன்னொருவன் கையிலிருந்த ஈட்டியால் அவன் மார்பில் தட்டி, ''உம் சீக்கிரம்'' என்று துரிதப்படுத்தினான்.

இளவரசன் நிதானத்தை இழக்கவில்லை. ''டேய்! வேலை மார்பிலிருந்து எடு'' என்று சினம் ஒலித்த குரலில் கட்டளையிட்டான் பல்லவ இளவல்.

''எந்தத் துணிவில் கட்டளையிடுகிறாய்?'' என்று சீறினான் ஒரு வீரன்.

''பெருவணிகர் என்னைப் பார்த்ததும் தலை வணங்கவில்லை?''

''ஆம்.''

''ஏன் வணங்கினார்?''

''நீங்கள் பல்லவ இளவரசராயிருக்க வேண்டும்.''

''முட்டாள்! இளவரசன் இப்படித் தானிருப்பாரா? இந்த மாதிரி வண்டியில்தான் வருவாரா?'' இதைச் சொன்ன இளவரசன் நகைத்தான் பெரிதாக.

''அப்படியானால் நீ யார்? வண்டியில் இன்னும் யாரிருக் கிறார்கள்?'' என்று வினவினான் வீரரில் ஒருவன் சிறிது சந்தேகமும் தயக்கமும் கொண்டு.

''அதை அறிந்து கொண்டால் பெருவணிகர் தலைவணங்கிய தற்கும் காரணத்தை அறியலாம்'' என்று கூறிய இளவரசன் ''அந்தப் பந்தத்தில் இப்படி ஒன்றைக் கொடு'' என்றான். வீரன் பந்தத்தைக் கொடுக்க அதை வீரபாகுவின் முகத்தை நோக்கிக் காட்டி, ''இதோ பார். இராசமல்லர் விக்ரமாதித்த பூபதியின் உபதளபதி!'' என்று கூறினான் மரியாதை துளிர்த்த குரலில்.

வீரபாகு வண்டியிலிருப்பதைக் கண்டதும் வெல வெலத்துப் போனான் சாளுக்கிய வீரன். ''உபதளபதி புரவியிலாவது ரதத்திலாவது வருவாரென்று எதிர்ப்பார்த்தோம். இப்படி...'' என்று குளறவும் செய்தான்.

''நான் எப்படி வரவேண்டுமென்று சட்டதிட்டமுண்டா?'' என்றான் வீரபாகு எரிச்சலுடன். அந்த எரிச்சலுக்குச் சீனன் கத்தி அவன் இடையை லேசாகத் தடவியதும் ஒரு காரணமென்பதைச் சாளுக்கிய வீரன் புரிந்து கொள்ளாததால் வீரபாகுவை நோக்கித் தலைவணங்கி வண்டியைப் போக அனுமதித்தான். ஆனால் வண்டியை உடனடியாகச் செலுத்தவில்லை இளவரசன். தன்னை முதலில் அடையாளம் கண்டு பிடித்த பெருவணிகரை நோக்கி, ''நீங்களும் வருகிறீர்களா?'' என்று வினவினான்.

''அவர் எதற்கு?'' என்று கேட்டான் வீரன்.

''நாங்கள் திருவெஃகாவில் இறங்கி விடுவோம். உபதளபதியை அரண்மனைக்கு அழைத்துச் செல்லவேண்டும்'' என்றான் இளவரசன்.

வீரபாகு வண்டியிலிருந்ததால் எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராயிருந்த சாளுக்கிய வீரன் அந்தப் பெருவணிகனையும் வண்டியில் ஏறிக் கொள்ள அனுமதித்தான். சோதனைத் தளை நீக்கப்பட்டு வண்டி காஞ்சிக்குள் புகுந்ததும் காளைகளை வெகு வேகமாக முடுக்கினான் இளவரசன். கிழக்குக் கோட்டை வாசலுக்கெதிரே விரிந்த பெருஞ் சாலையில் ஓடிய வண்டி சிறிது தூரம் சென்றதும் திடீரெனப் பக்கத்துப் பாதையொன்றில் திரும்பி விட்டதைக் கண்ட பெருவணிகன், ''இந்தப் பாதை திருவெஃகா வுக்குப் போகவில்லை'' என்றான்.

''இல்லை'' என்று இளவரசனும் ஒப்புக் கொண்டான்.

''பிறகு வண்டியை எங்கு கொண்டு போகிறீர்கள்?'' என்று வினவினான் பெருவணிகன்.

போகுமிடத்தைச் சொன்னான் இளவரசன். ''வேண்டாம், வேண்டாம். அந்தப் பாதைக்கே போகவேண்டாம்'' என்று மித மிஞ்சிய திகிலுடன் கூறினான் பெரு வணிகன்.

''ஏன்?'' என்று கேட்டான் இளவரசன்.

''அங்கு இந்த வண்டி போனால் நீங்கள் உயிருடன் மீள முடியாது'' என்று எச்சரித்தான் பெரு வணிகன்.

ஆனால் அவன் எச்சரிக்கையை லட்சியம் செய்யாத இளவரசன் அந்த அபாயப் பாதையிலேயே வண்டியைச் செலுத்தினான். ''பெரும் விஷப் பரீட்சை இளவரசே, வேண்டாம். திருப்புங்கள் வண்டியை'' என்று கெஞ்சினான் பெருவணிகன்.

இளவரசன் அதைக் காதில் வாங்கவில்லை.

# 20. ராஜ மோகினி

முதலாம் ஜாமம் முடிந்து வெண்மதி காஞ்சி மாநகருக்கு நிலவாடை போர்த்தியிருந்ததால் மனத்தைக் கவர்ந்து விட்ட அம்மா நகரின் எழிலிலும் பெருமையிலும் நிகரிலா வரலாற்றிலும் புராணத்திலும் இலக்கியத்திலும் இதயத்தைப் பறிகொடுத்து விட்ட இளவரசன் பெருவணிகனின் எச்சரிக்கையைக் காதில் வாங்கினா னில்லை. தொண்டைமான் இளந்திரையன் காலத்தில் திருவெஃகா வுக்கு அப்புறமிருந்த காஞ்சி மாநகர் பல்லவர் காலத்தில் நாற்புறங் களிலும் பெரிதும் படர்ந்து விட்டதையும் பெருமதில்களாலும் அகழிகளாலும் பலப்பட்டுவிட்டதையும் தெய்வாலயங்களாலும் சமண மடங்களாலும் சிறப்புற்றிருப்பதையும் எண்ணிப் பார்த்து, இத்தனையும் பல்லவர்கள் சாதனையென்பதால் பெருமிதப்பட்டுக் கொண்டான். அந்நகருக்கு இணை உலகத்தில் வேறெங்கும் கிடையாது என்று மனத்திற்குள் சொல்லிக் கொள்ளவும் செய்தான்.

உண்மையில் அவன் எண்ணத்தை வடமொழியும் தென் மொழியும் தீந்தமிழும் ஒப்புக் கொள்ளவேசெய்தன. 'நகரேஷு காஞ்சி'யெனக் காளிதாசனாலும், 'கல்வியில் கரையிலாத காஞ்சி நகர்' என அப்பர் சுவாமிகளாலும் சிறப்பிக்கப்பட்டதும் *கச்சிப்பேடு என்னும் நெடுங் கொடிகள் தழுவப்பட்ட குறுகிய கால்களையுடைய காஞ்சி மரங்கள் நிறைந்ததால் காஞ்சிபுரம் என்றும் ஆதிகாலத்தி லிருந்தே பிரசித்தி உள்ளதும், ஸ்கந்த புராணத்திலும் மோகினி தந்திரத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டதும் புராணப்படி பாரதத்தின் புண்ணியஸ்தலங்களில் ஒன்றாயிருப்பதும் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் புத்தபகவானே வந்து சமய உண்மைகளை உரைத்ததால் பெரும் பேறு பெற்றதும் கி.மு.15 -ஆம் நூற்றாண்டில் பதஞ்சலி பாஷ்யத்தில் இடம் பெற்றதும், *பிரளயஜித், சிவபுரம், விஷ்ணுபுரம், திருமூர்த்திவாசம், பிரமபுரம், தண்டகபுரம், கன்னி காப்பு '' இப்படிப் பலப்பல பெயர்களால் புராணங்களால் அழைக்கப் பெற்றதுமான காஞ்சியின் பெருமைகளையெல்லாம் எண்ணிப் பார்த்த பல்லவ இளவல், 'இல்லை இல்லை; இம்மாநகருக்கு இணை ஏதுமில்லை' என்று தனக்குள் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டான். அவனது வண்டி சென்ற பாதைக்குப் பக்கத்தில் மிக உயரமாக எழுந்திருந்த காஞ்சியின்

* *Cities of Ancient India. bv R.N.PURI, M.A.B. Litt Oxon P-31.*

* *அபிதான சிந்தாமணி - டாக்டர் அ. சிங்கார வேலு முதலியார் பக்கம் 400.*

பெருமதில்களையும், அதன் மேற்பகுதியில் எரிந்து கொண்டிருந்த பெரும் பந்தங்களையும், சஞ்சரித்துக் கொண்டிருந்த சாளுக்கிய வீரர்களையும் பார்த்து 'எந்த எதிரியும் நுழைய முடியாத இந்த நகரத்துக்குள் சாளுக்கியரை அனுமதித்து விட்டாரே தந்தை' என்று நினைத்துப் பெருமூச்சும் விட்டான். அப்பொழுதும் தந்தையைப் பற்றி நொந்தானில்லை பல்லவ இளவல். போரின் வெறியில் காஞ்சியின் சிற்பச் செல்வங்களும் மற்றைய சிறப்புகளும் பெருஞ்சோலைகளும் அழிக்கப்படாமலிருப்பதற்காக அவர் செய்த தியாகத்தை எண்ணி மகிழவே செய்தான்.

முதல் ஜாமம் முடிந்து இரண்டாம் ஜாமம் துவங்கிவிட்ட அந்த வேளையிலும் காஞ்சி மாநகர் விழித்துக் கொண்டு தானிருந்தது. எங்கும் அமிதமான சாளுக்கிய வீரர்கள் நடமாட்டம் இருந்து கொண்டிருந் தாலும் ஆங்காங்கிருந்த வீடுகளில் வீணை போன்ற நரம்புத் தந்திகளுள்ள வாத்தியங்களின் இசை ஒலிகளும் பரத்தையர் இல்லங் களில் நாட்டியம் பழகும் அழகு மங்கையரின் காற்சலங்கை ஓசைகளும் காதில் விழுந்து கொண்டிருந்தன. அவ்வப்பொழுது அவனது வண்டிக்கு எதிரிலும் பக்கங்களிலும் சாளுக்கிய வீரர்களின் ரதங்கள் வந்து போய்க் கொண்டிருந்தாலும், வணிகர் வண்டிகளின் சஞ்சாரமும் கூடவே இருந்து கொண்டிருந்தது. இரவு ஏறி விட்டதை முன்னிட்டு மக்கள் நடமாட்டம் அதிகமில்லையானாலும் நீண்ட நேரம் இரவில் அலுவல் புரியும் பணியாட்கள் பலர் வேலை முடிந்து இல்லங்களுக்கு விரைந்து கொண்டிருந்தனர். இவற்றையெல்லாம் கண்ட பல்லவ இளவல் சாளுக்கிய மன்னன் அத்தனை ஆக்கிரமிப் பிலும் மக்களின் சாதாரண வாழ்க்கையைக் கெடுக்காமல் வைத்திருப் பதை எண்ணி அவனைப் பாராட்டவும் செய்தான் 'விக்கிரமாதித் தனும் நல்ல ரசிகனாயிருக்க வேண்டும், இல்லையேல் படை ஆக்கிரமிப்பில் எந்த நகரமும் அச்சத்திலும் அதனாலேற்படும் பயங்கர அமைதியிலு மல்லவா சிக்கிக் கிடக்கும்!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். இத்தனையிலும் ஆங்காங்கு அணி வகுத்துப் புரவிகளில் நின்று கொண்டிருந்த இராக் காவலரின் எச்சரிக்கையைப் பார்த்த பல்லவ இளவல், எந்த நிமிஷத்திலும் தனது வண்டி நிறுத்தப்படலா மென்பதை யும், தானும் மற்றோரும் சிறை செய்யப்படலா மென்பதையும் உணர்ந்தே இருந்தான். இருப்பினும் பெருவணிகன் ஆட்சேபித்த அபாயப் பாதை வழியே வண்டியைச் செலுத்தினான்.

அதை மீண்டும் எதிர்த்துப் பேச முற்பட்ட பெருவணிகன், "திருவெஃகாவுக்குப் போக வேண்டுமானல் கிழக்குக் கோட்டை வாயிலிலிருந்து நேர் கிழக்கேயுள்ள பெருஞ்சாலையில் செல்ல வேண்டும்" என்று கூறினான்.



"ஆம், பெருவணிகரே" என்று ஒப்புக் கொண்டான் பல்லவ இளவல்.

"அப்படியானால் ஏன் மதிளோரமாகத் தெற்கே செல்கிறீர்கள்?" என்று கேட்டான் பெருவணிகன்.

"தெற்குச்சாலைக் கோடியில் கொல்லர் விடுதிகள் இருக்கின்றன அல்லவா?" என்றான் இளவரசன்.

"ஆம்."

"அங்குள்ள ஆயுத பட்டறைகளைத் தாண்டினால் ஆயுதக் கொட்டடி இருக்கிறது."

"ஆம்."

"அங்கு உங்களையெல்லாம் இறக்கி விடுகிறேன்."

"இறக்கி விட்டால்?"

"நீங்கள் ஆயுதக் கொட்டடிக்கு அருகிலிருக்கும் அரண்மனைச் சத்திரத்தில் தங்கலாம்."

இதைக் கேட்ட பெருவணிகன் பெரும் வியப்பின் காரணமாகச் சற்று நகைத்தான். "அரண்மனையின் தென் பகுதிச் சத்திரம் இப்பொழுது சாளுக்கிய வீரர்கள் கண்காணிப்பில் இருக்கிறது" என்றும் குறிப்பிட்டான் நகைப்பின் ஊடே.

அந்த நகைப்பைக் கவனித்தாலும் அதை லட்சியம் செய்யாத இளவரசன், "அங்கு இந்திரவர்மரை யாருக்கும் தெரியாது, மாறு வேடத்திலிருப்பதால் பலபத்ரரையும் சாளுக்கிய வீரர்கள் அடையாளம் கண்டுகொள்ள முடியாது. மைவிழியை யாருக்கும் தெரியவே தெரியாது. ஆகையால் நீங்கள் தைரியமாக அங்கு தங்க முடியும். அங்கு நீங்கள் சென்றதும் சத்திரக் காவலன் உங்களைக் கவனித்துக் கொள்வான். உங்களை எப்படிக் காப்பது என்பது அவனுக்குத் தெரியும்" என்று கூறினான்.

பெருவணிகன் தீவிர யோசனையிலிறங்கினன். பிறகு. "இளவரசே! இது பெரிய விஷப் பரீட்சை. சாளுக்கியரால் சதா கண்காணிக்கப்படும் பொதுச் சத்திரத்தில் இவர்களை அழைத்துச் செல்வது பெரும் அபாயம். தவிர கோட்டை வாயிலிலுள்ள சாளுக்கிய வீரர் மீண்டும் என்னைத் தேடி வந்து நான் சத்திரத்திலிருப்பதை அறிந்தால் இந்த உபதளபதியைப் பற்றிய கேள்விகள் வரும். அதற்கு நான் என்ன பதில் சொல்லட்டும்?" என்று கேட்டான்.

"உபதளபதி வண்டியில் மேலை ராஜ வீதிக்குச் சென்று விட்டதாகக் கூறிவிடு" என்று பதில் சொன்னான் இளவரசன்.

''அவரை அங்கு தேடி அவர் இல்லாவிட்டால்?''

''இருப்பார்.''

''எப்படி?''

''இவரையும் அழைத்துக் கொண்டுதான் நாங்கள் ராஜ வீதிக்குப் போகப் போகிறோம்.''

''நாங்களென்றால்?''

''நானும் யாங் சின்னும்.''

இதைக் கேட்ட பெருவணிகனின் அதிர்ச்சி முன்னைவிடப் பல மடங்கு அதிகமாயிற்று ''நீங்கள் மேலை ராஜவீதிக்குச் சென்றால் அதைத் தாண்டிச் செல்வது கஷ்டம்.''

''மேலை ராஜவீதியைத் தாண்டாவிட்டால்?''

''தாண்டாமல்?''

''அங்கேயே இருந்து விடுகிறேன்.''

இளவரசனை நோக்கிய பெருவணிகன் முகத்தில் ஈயாட வில்லை. உதடுகளைத் திறந்து அவன் பேசிய போது சொற்கள் மிகுந்த கவலையுடன் உதிர்ந்தன.

''அந்த வீதியில் எத்தனை முறை தாங்கள் புரவியில் உலாவந் திருக்கிறீர்கள்! எத்தனை முறை தங்கள் ரதங்கள் புரண்டோடி யிருக்கின்றன! எத்தனை மக்கள் தங்களைப் பார்த்து ஆனந்த ஆரவாரம் செய்திருக்கிறார்கள்! நீங்கள் அந்த வீதியில் நுழைந்ததும் உங்களை அடையாளம் கண்டுகொள்ளக் கூடியவர்கள் ஏராளம். அடையாளம் கண்டு கொண்டால் மக்கள் வாளாவிருப்பார்களா? கூச்சல் போடுவார்கள். அதைத் தொடர்ந்து பெரும் விபரீதம் விளையும்'' என்று விளக்கினான் பெருவணிகன்.

''அஞ்சாதீர் பெருவணிகரே ஒருவரும் காணாமல் ராஜவீதிக்குள் என்னால் நுழைய முடியும்'' என்று உறுதி கூறிய பல்லவ இளவல், மேற்கொண்டு உரையாடலை வளர்த்த விரும்பாமல் காளைகள் பக்கம் திரும்பிச் சாட்டையைச் சொடுக்கினான்.

அதற்கு மேல் பெருவணிகனும் ஏதும் பேசவில்லை. தன்னை மற்றவர்களுடன் விட்டுப் போக வேண்டாமென்று மைவிழி கூடச் சொல்ல ஒரு முறை வாயெடுத்தாள். அப்படி ஏதாவது கூறினால் தந்தை விபரீதப் பொருள் கொண்டு விட்டால் என்ன செய்வதென்று எண்ணி உதட்டில் வந்த சொற்களை மென்று விழுங்கி விட்டாள். தன்னுடன் பெண் வரக்கூடாதென்று தந்தை மறுக்காததே பெரும் மாறுதல் என்று



நினைத்த மைவிழி, விதி விட்ட வழியில் காரியங்கள் நடக்கட்டுமென்று மௌனமே சாதித்தாள். பல்லவ இளவல் மேற்கொண்டு யாருடனும் பேசக் கொடுக்காமல் தன்னிஷ்டப்படி வண்டியைச் செலுத்தினான். இரும்புக் கொல்லர் பட்டறைகளி லிருக்கும் குறுகிய வீதியொன்றில் வண்டியைத் திருப்பி இரண்டொரு பட்டறைகளைத் தாண்டி ஆயுதக் கொட்டடிக்கருகிலிருந்த ஒரு பட்டறை முன்பாக வண்டியை நிறுத்தி இந்திரவர்மனையும் பலபத்ரனையும் இறங்கச் சொல்லிச் சவுக்குக் கழிகளையும் இறக்கச் சொன்னான். பணியாட்கள் சிலர் தலை நீட்டவே, ''போர்க் கோடாரி களுக்குச் சவுக்குப் பிடிகள் அரசர் உத்தரவுப்படி வந்திருக்கின்றன. இறக்கிப் போடுங்கள். ஆயுதக் கொட்டடிக்கப் பாலுள்ள சத்திரத்திற்கு இந்த இரும்புக் கொல்லர்களையும் இந்தப் பெருமாட்டியையும் அழைத்துச் செல்லுங்கள். மன்னர் உத்தரவு'' என்று கூறினான் இளவரசன்.

அவர்கள் சவுக்குக் கழிகளை இறக்கிக் கொண்டிருக்கையில் இந்திரவர்மனை வண்டியின் முன்புறம் வரச் சொன்ன இளவரசன், ''இந்த இரும்புக் கொல்லர்களைத் துணை கொண்டு சென்றால் உங்கள் மீது எந்தச் சந்தேகமும் யாருக்கும் வராது. சத்திரத்தில் தங்குங்கள். நாளைக்குள் உங்களைச் சந்திக்கிறேன்'' என்று கூறிவிட்டு மைவிழியை யும் வண்டியிலிருந்து இறக்கி விட்டு மீண்டும் காளைகளை முடுக்கினான்.

மீண்டும் வண்டி வந்தது அந்தக் குறுகிய வீதியிலிருந்து தெற்குப் பெருவீதிக்கு. வண்டியைச் செலுத்திய இளவரசன் மேலை ராஜவீதியி லிருந்த சிவகாஞ்சியை நோக்கிக் காளைகளைப் பறக்கவிட்டான். வண்டி மேலை ராஜ வீதியை அடைவதற்கு முன்பாக இருந்த பக்கப் பாதையொன்றில் வண்டியை நிறுத்தி வீரபாகுவையும் சீனனையும் இறங்கக் கட்டளையிட்டான். பிறகு சொன்னான் வீரபாகுவை நோக்கி, ''வீரபாகு! இனி நாம் நடந்தே செல்லப் போகிறோம்'' என்று.

''எங்கு?'' என்று கேட்டான் வீரபாகு எரிச்சலுடன்.

''ஏற்கெனவே நான் சொல்லவில்லை, பெருவணிகரிடம்?''

''மேலை ராஜவீதிக்குப் போகப் போவதாகச் சொன்னீர்கள்.''

''அங்குதான் போகிறோம்.''

''உங்களுக்கு அதிகத் துணிவிருக்கிறது'' என்றான் வீரபாகு.

''என்னை விடத் துணிவு உனக்குத் தேவை'' என்றான் இளவரசன்.

''ஏன்?''

''எந்த விநாடியிலும் நீ இறந்து விடலாம்.''

''எதற்காக?''

''எங்களைக் காட்டிக் கொடுப்பதற்காக.''

''காட்டிக் கொடுப்பதாக யார் சொன்னது?''

''வீரபாகு! இப்பொழுது நாம் மேலை ராஜ வீதிக்குள் நுழைகிறோம். இரண்டாம் ஜாமம் முற்றிக் கொண்டிருப்பதால் மக்கள் நடமாட்டம் ராஜ வீதியில் அதிகமிருக்காது. வீரர்கள் நடமாட்ட மிருக்கும். ஆகவே, நாம் அங்குள்ள பெருமாளிகைகளை ஒட்டி விழுந்திருக்கும் நிழல்களில் ஒதுங்கி ஒதுங்கிச் செல்வோம். அப்படியும் ஒருவேளை உன்னை யாராவது ஒரிரு வீரர்கள் பார்த்து விட்டால் அவர்களைப் போகச் சொல்லிக் கம்பீரமாகச் சைகை செய்துவிடு. யாராவது தடை செய்தால் உன் உயிர் சிட்டுக் குருவி போல் ஆகாயத்தை நோக்கிப் பறந்துவிடும்'' என்று எச்சரித்துவிட்டு வீரபாகுவுடன் கைகோத்துக் கொண்டு இணைந்து வரும்படி சீனனுக்கும் உத்தரவிட்டு, தான் முன்னால் நடந்து சென்றான். தன் முகம் தெரியாதிருப்பதற்காகத் தலை முண்டாசை அரை முகம் வரை மறையும்படியாக இறக்கி விட்டுக் கொண்டான் இப்படி ராஜ வீதியை அடைந்ததும் அதன் மாளிகையின் தாழ்வரை நிழல்களில் ஒதுங்கி யார் கண்ணிலும் அதிகமாகப் படாமல் மறைந்து நடந்து அந்தப் பெரு வீதியில் மேலண்டைக் காடியிலிருந்த ஒரு சிறு மாளிகையை அடைந்தான், பல்லவ இளவல்.

''சிறிதும் சத்தம் செய்ய வேண்டாம். மெள்ள நடந்து வாருங்கள்'' என்று பின்னால் வந்தவர்களை எச்சரித்துவிட்டு அந்த மாளிகையின் முன் தாழ்வரையைக் கடந்து மாளிகையின் பெருங் கதவில் இருமுறைலேசாகத் தட்டினான். சிறிது நேரம் உள்ளிருந்து பதிலேதும் வராததால் மீண்டும் இரு முறை சற்றுப் பலமாகத் தட்டினான். உள்ளே எங்கோ இரு பெருங்கதவுகள் திறக்கப்பட்ட ஒலி கேட்டது. அதை அடுத்து முதல் பெருங்கதவுக்கு அப்பாலிருந்து ஒரு குரல் வினவியது. ''யார் அது?'' என்று.

அந்தக் குரலைக் கேட்டதும் இளவரசன் முகத்தில் சந்தேகச் சாயை படர்ந்தது ஒரு விநாடி. பிறகு ஏதோ முடிவுக்கு வந்தவன்போல் தலையை அசைத்து, ''சிற்பி'' என்று பதில் கூறினான் சற்று இரைந்து.

கதவு மெள்ளத் திறக்கப்பட்டது. திறந்த கதவுகளுக்குப் பின்னால் நின்றிருந்த உருவத்தைக் கண்டதும் பெரும் குழப்பத்திற்கும் வியப்புக்கும் உள்ளானான் இளவரசன். கதவுக்குப் பின்னால் தன்னந்தனியாக நின்றிருந்தாள் ஒரு ராஜ மோகினி.



''இங்கு உங்களை நான் எதிர்பார்க்கவில்லை'' என்று தட்டுத்தடுமாறிச் சொன்னான் இளவரசன்.

''அந்த ஏமாற்றம் உங்களுக்கு மட்டுமல்ல எனக்குந்தான்'' என்றாள் அந்த ராஜமோகினி, கமல முகத்தில் சிறிது சினத்தைப் படரவிட்டு.

''ஏன்?''

''நானும் உங்களை எதிர்பார்க்கவில்லை இங்கு.'' இதைச் சொன்ன அந்த ராஜமோகினி நகைத்தாள். அந்தச் சிரிப்பு ஜலதரங்கத்தின் ஸ்வரங்களைப் போல் ஒலிப்பதை உணர்ந்த இளவரசன் மேற்கொண்டு பேச நா எழாமல் பல விநாடிகள் சிலையென நின்று விட்டான்.

அவள் சிரிப்பு அடுத்த விநாடி மறைந்தது. முகத்தில் கடுங்கோபம் தாண்டவமாடியது. அதுவரை மரியாதை காட்டிப் பேசிய அவள் முகத்தில் சினத்தின் சாயை திடீரெனப் படர்ந்தது. கண்கள் கனலைக் கக்கின. ''யார் நீ'' என்று சற்றும் மரியாதையற்ற சொற்கள் கூரிய அம்புகளென உதிர்ந்தன அவள் செவ்விய உதடுகளிலிருந்து.

## 21. 'ஒரு நாயகமாய் ஓட உலகுடன் ஆண்டவர்...'

**ரா**ஜ மோகினி! கதவைத் திறந்த காரிகையைக் கண்டதும் அந்தப் பெயர்தான் அவன் நினைவுக்கு வந்தது. அவள் நின்ற தோரணை, பார்த்த பார்வை எல்லாவற்றிலுமே ஓர் அரச தோரணை இருந்ததைப் பல்லவ இளவல் கண்டான். சினத்துடனும் அதட்டலுடனும் ''யார் நீ?'' என்று அவள் செவ்விய உதடுகள் உதிர்த்த சொற்கள் கூட' அவள் அமுத உதடுகளிலிருந்து உதிர்ந்த காரணத்தால் தித்திக்கவே செய்வதை உணர்ந்த இளவரசன், அவளுக்கு உடனடியாகப் பதில் ஏதும் சொல்லாமல் அவள் இணையிலா அழகில் ஈடுபட்டுப் பல விநாடிகள் பேசாமலே நின்று விட்டான்.

கதவொன்றை அவள் கால்வாசிக்கு மேல் திறந்திருந்ததால் அவளுக்குப் பின்னாலிருந்த மாளிகை முன் கூடத்தில், அவள் நின்றிருந்த இடத்துக்குச் சற்றுப் பக்கவாட்டின் மூலையில் வைக்கப்பட்டிருந்த விளக்கின் ஒளி அவள் மேனியின் மீது சற்று மங்கலாக விழுந்திருந்ததால், அவள் தங்கத் திருமேனியே அவ்விளக்கொளிக்குச் சிறப்பை அளித்திருந்தது. முகத்திலும் கழுத்திலும் விழுந்த விளக்கொளி அவள் பொன்னிற மேனியில் பட்டுப்

பிரதிபலிப்பதைப் போன்ற பிரமையை ஏற்படுத்திய காரணத்தால் பல்லவ இளவல் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டான் ஒரு விநாடி. கடற்கரைப் பறவையான மைவிழியின் அழகுக்கும் கதவைத் திறந்த ராஜமோகினியின் அழகுக்கும் மிகுந்த வேறுபாடு இருப்பதை ராஜசிம்மன் கண்டான். மைவிழியைவிட அவள் உயரமென்பதையும் உயரத்தை அழகுபடுத்துவதற்குத் தேவையான பருமனும் அவளுக்கிருந்ததையும் கண்ட இளவரசன், அன்றைய இரவில் கதவருகே அவள் நின்ற நிலை கதவை அணைத்து ஒரு தெய்வீக சிற்பம் நிற்பதைப் போலவே தோன்றுவதை உணர்ந் தான். எத்தனையோ சிற்பங்களை வடித்துள்ள அந்த ராஜ சிற்பிக்கு, இவளை அப்படியே சிற்பத்தில் வடித்தால் காலமுள்ளளவும் அதைக் கண்டு கணக்கிலா மக்கள் மகிழ்வார்களே என்ற எண்ணம் ஒரு வினாடி உண்டானாலும் திடீரென 'சே சே! இந்த அழகை எல்லாரும் காண வைக்கக் கூடாது' என்று தனக்குள்ளே ஒரு தடையையும் ஏற்படுத்திக் கொண்டான்.

சற்றே இடையை ஒடித்தும் தலையை நன்றாக நிமிர்ந்தும், கதவை நன்றாக அணைத்து ஒரு கையால் பிடித்தும் நின்ற அவள் நிலையையும் விளக்கொளி விளக்கிய விவரங்களையும் அணு அணுவாகப் பார்த்த இளவரசன், ''என்ன அற்புத சிருஷ்டி!'' என்று தனக்குள் பலமுறை சொல்லிக் கொண்டான். தலையில் அவள் பின்புறம் போட்டிருந்த கொண்டை பக்கவாட்டில் கரும்பந்தாகத் தெரிந்ததே கண்ணைக் கவர்ந்ததென்றால், அதில் சூடிக்கலைந்து கிடந்த காஞ்சியின் மல்லிகைச் சரங்கள் இரண்டு அந்த அழகை உச்ச நிலைக்குக் கொண்டு சென்றன. அந்த அவிழ்ந்த, சில மலர்கள் உதிர்ந்த, மெல்லிய வாழைநாரைச் சிறிதளவு குறுக்கே கட்டிய அந்த மல்லிகைச் சரமும், லேசாக நெகிழ்ந்து கிடந்து அவசரத்தில் சரியாகக் கட்டப்பட்டும் சரியாகாமலிருந்த மேலாடையும், இடுப்பில் உற்றுப் பார்த்தாலொழியத் தெரியாத அளவுக்கே நெகிழ்ந்திருந்த சேலைப் பகுதியும், அவள் அப்பொழுதுதான் எழுந்து வந்திருக்கிறா ளென்பதைத் தெரியப் படுத்தின. தலை வகிட்டுக்கு வலது புறத்துக்கு குழலடர்த்தியில் தொற்றிக் கிடந்த கோமேதகச் சரமொன்றும்கூட நிலை புரண்டு கிடந்ததன்றி, அப்படி நிலை புரண்ட காரணத்தாலேயே ஒரு தனி அழகையும் குழலுக்குத் தந்திருந்தது. நன்றாக அகன்றிருந்த அவள் வதனப் பிறைமதியை, நல்ல வெண்மை யுடன் சிறிது பொன்னிறமும் கலந்த சருமத்தின் கவர்ச்சியை, நெற்றியின் நடுவிலிருந்த திலகம் பன்மடங்கு அதிகப்படுத்திக் காட்டியது. வெண்மையும் பொன்னிற மும் கலந்த அந்தத் தாழைமடல் நிறம் அவள் பருவக் கன்னங்களில் பரவியிருந்தாலும் கூட, அவற்றின் நடுவே சிறிது நாணச் சிவப்போ



கோபத்தின் சிவப்போ தட்டிக் கிடந்ததால், தாழை மலரும் கோபிக்க முடியும் என்பதற்கு அத்தாட்சி கூறியது. நுதலின் கீழே கறுத்து வளைந்த புருவங்கள் கோபத்தால் சற்று சுளித்திருந்தாலும் அந்தச் சுளிப்பும் அவளுக்கு அழகாயிருந்ததை இளவரசன் கண்டான்.

ஆனால் சினம் துளிர்த்த அவள் பெருவிழிகள்! அவற்றின் அழகு! அவற்றுக்கு உவமை காணமுடியவில்லை அவனால். அமரருக்கும் மனிதருக்குமுள்ள வேறுபாடே மானிடர் இமை கொட்டுவார்கள், அமரர் இமைகொட்ட மாட்டார்கள் என்பதுதான். அந்த உண்மைக்கு முற்றும் மாறாக இமைகொட்டாமல் ஒரு விநாடி சீற்றத்துடன் பார்த்த அவள் விழிகள் அமரருலகத்து அமுதத்தையே பொழிந்ததால் இவளும் அந்த உலகத்தைச் சேர்ந்தவளாகத்தான் இருக்கவேண்டும் என்று இளவரசன் தனது இதயத்துக்குச் சொல்லிக் கொண்டான். அவள் விழிகள் மைவிழியின் விழிகளைப்போல் பெரிய விழிகளல்ல வென்றாலும் சரிசமான அளவுக்கு இரண்டு அழகிய கிளிஞ்சல்களுக்கு இடையில் அசையும் மணிகளெனத் தெரிந்தன. கண்ணின் கருமணிகள் அதிகக் கருமையில்லாவிட்டாலும் காம மோகச் சாயை உடையனவா யிருந்ததால், காளிதாசன் மேகத்தைப் பார்த்துச் சொன்ன காதல் தூதும் இவள் மயக்க விழிகளைப் பற்றித் தானிருக்கும் என்று எண்ணிக் கொண்ட இளவரசன், அத்தனை கோபத்திலும் ஒரு சிரிப்பும் மயக்கமும் அந்தக் கண்களிலிருந்து உதிர்வதைக் கண்டான். முகத்தின் கீழ்ப் பகுதியை இரண்டாக வகுத்த செண்பக நாசியும் நாசிக்குக் கீழ் சற்று அதிகமாகவே விகசித்த செம்பவள உதடுகளும் அவள் அழகைத் தெய்வீக அழகாக அடித்தன. உறங்கி எழுந்த அந்த நிலையிலும் அந்தப் பெரிய உதடுகளில் மின்னிய ஈரம் தன்னை அப்படியே நிலைகுலையச் செய்வதை உணர்ந்தான் பல்லவ இளவல்.

இத்தனை அஸ்திரங்களையும் மீறும் பிரம்மாஸ்திரத்தைப் போல கழுத்துக்குக் கீழே லேசாக விலகிய ஆடைக்குள்ளிலிருந்து எட்டிப் பார்த்த மார்பகம் அவனை வேறு உலகத்துக்குக் கொண்டு போய்க் கொண்டிருந்தது. அவளுடைய இரண்டு கைகளுக்கிடையில் பரவிக் கிடந்த அவள் மார்பின் கவர்ச்சி அத்தனை பரவலிலும் திண்மையுடனும் கம்பீரத்துடனும் காட்சியளித்தது. கண்ணுக்குத் தெரிந்த மேல் விளிம்பின் வழவழப்பிலிருந்து மறைந்து கிடந்த மாபெரும் கவர்ச்சியை ஊகிக்க முடிந்ததால் அவன் சட்டென்று அச்சத்தின் வசப்பட்டுக் கண்களை அகற்றினான் அந்த இடத்தி லிருந்து. அப்படியும் அவன் கண்களுக்கோ இதயத்திற்கோ சாந்தி கிடைக்கவில்லை. இடையில் லேசாக நெகிழ்ந்திருந்த ஆடை மெல்லக் காட்டிய வயிற்றின் சிறு பகுதியும் ஆடை மறைத்த திண்மைப் பகுதிகளும் அவள் சக்திக்கும்

அழகுக்கும் அத்தாட்சி கூறின. சற்று ஒடிந்து நின்றிருந்ததால் இடைக்குக் கீழே ஒரு புறத்தில் தெரிந்த பருத்த பகுதிகள் தெரியாத பகுதிகளின் பரிமாணம் எப்படியிருக்கும் என்பதை நினைவுறுத்தின. 'இத்தனையும் தாங்கும் நுண்ணிய இடை எத்தனை சிரமப்படும்?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டான் பல்லவ இளவல். அவள் உயரம், தோற்றம், அழகு, சக்தி இவற்றைக் கண்ட பல்லவ இளவல் 'இவள் தமிழகத்தைச் சேர்ந்த வளல்ல, வடக்கேயிருந்து வந்தவளாகத்தான் இருக்க வேண்டும். இந்த மோகினி!' என்று சொல்லிக் கொண்டான். 'இவள் எப்படி இங்கு வந்தாள்? இவள் யார்? இவள் ஏன் மாளிகைக் கதவைத் திறக்கிறாள்? வேறு பணியாட்களில்லையா இங்கு? என்று வினவிக்கொண்ட பல்லவ இளவலுக்குத் தான் பல விநாடிகள் ஒரு பெண்ணை அனாவசியமாக உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றது எத்தனை அநாகரிகச் செய்கை என்பது நினைப்புக்கு வந்தது.

அந்த ராஜமோகினியும் ஒரு நிலைக்கு வர அதிக நேரமே பிடித்தது. தனக்கெதிரே நின்ற ஆண் மகனின் தோற்றத்தைக் கண்டு வியந்தாள் அவள். ஆஜானுபாகுவான அவன் சரீரத்துக்கும் முகத்திலிருந்த ராஜ களைக்கும், கண்களின் கம்பீர நோக்குக்கும் அவன் அணிந்திருந்த உடைக்கும் எந்தவித சம்பந்தமுமில்லா திருந்ததைக் கவனித்தாள் அவள். உடையில் பரதவனைப் போலிருந்த அவன் உண்மையில் அரச பரம்பரையைச் சேர்ந்தவனாகயிருக்க வேண்டு மென்று தீர்மானித்தாள். அவன் காதிலாடிய பரதவர் வளையங்கூட அத்தனை விலை உயர்ந்த தங்கமில்லை யென்பதை உணர்ந்த ராஜமோகினி அவன் வேடதாரியென்பதைப் புரிந்து கொண்டு விட்டாளாதலால் மீண்டும் ஒருமுறை பழைய கேள்வியைத் திருப்பினாள், ''யார் நீ?'' என்று.

இம்முறை அந்தக் கேள்வியில் அத்தனை கெடுபிடியோ சினமோ இல்லாததைக் கவனித்தான் பல்லவ இளவல். அத்துடன் அவள் பெரிய இதழ்களில் தெரிந்த கடுமையும் சிறிது மறைந்ததைக் கண்டான். கார்மேக விழிகளில் கோப மின்னல் மறைந்து சிறிது சிரிப்பும் மயக்கமும் கலந்து பளிச்சிடுவதையும் பார்த்தான். ஆகையால் சற்று தைரியத்துடன், ''முன்பே சொன்னேனே?'' என்று அடக்கத்துடன் பதில் கூறவும் செய்தான்.

அவள் கண்களில் கேள்விக் குறியொன்று எழுந்தது. ''முன்பா? எப்பொழுது?'' என்ற சொற்களும் அடுத்தடுத்து உதிர்ந்தன அமுத அதரங்களிலிருந்து.

''கதவைத் திறக்கு முன்பு'' என்றான் இளவரசன்.



''சிற்பி என்று கூறினீர்களே அதுவா?'' என்று வினவினாள் அந்த ராஜமோகினி.

மீண்டும் அவள் மரியாதையாகப் பேசத் துவங்கி விட்டதைக் கண்ட ராஜசிம்மன், தான் இன்னானென்பது அவளுக்கு ஒருவேளை புரிந்து விட்டதோ என்று அச்சமுற்றாலும் அதை வெளிக்குக் காட்டாமல், ''ஆம். அப்படித்தான் சொன்னேன்'' என்று கூறினான்.

அவள் இதழ்களில் இளநகை அரும்பிற்று. அந்த இளநகையின் ஊடே சொன்னாள் அவள், ''பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும்'' என்று.

தமிழை அவள் மிக அழகாகப் பேசுவதைக் கவனித்தபல்லவ இளவல் ஒருவேளை அவள் வடநாட்டுப் பெண் அல்லவோ என்று சந்தேகித்தான் ஒரு விநாடி. அடுத்த விநாடி அந்தச் சந்தேகத்தை விலக்கிக் கொண்டு, 'இல்லை, இல்லை. தமிழ் மகளல்ல இவள். தமிழ் கற்றிருக்கிறாள், அதனால்தான் இப்படிப் பேசுகிறாள்' என்று கூறிக்கொண்டான் தன்னுள். அதை வெளிப்படையாக அவளிடம் கூறவும் செய்தான் ''தமிழ் நன்றாகப் பேசுகிறீர்கள்!'' என்று.

அவள் முகத்தில் திடீரெனச் சந்தேகச் சாயை படர்ந்தது. தான் இன்னாரென்பதை ஒருவேளை அவன் புரிந்து கொண்டு விட்டானோ என்று நினைத்தாள். பிறகு நகைத்து விட்டுச் சொன்னாள், ''செந்தமிழும் நாப்பழக்கம்'' என்று.

பல்லவ இளவலின் வியப்பு உச்ச நிலைக்குச் சென்றது. அவள் தமிழ்மொழிச் சிறப்பை உணர்ந்தவள் என்று அறிந்ததால் அந்த வியப்புடன் ஒரு மதிப்பும் இணைந்தது அவன் இதயத்தில். அதன் விளைவாக, ''உள்ளே வரலாமா? இங்கேயே நின்று பேசுவது அவ்வளவு உசிதமாக இல்லை'' என்றான்.

அவள் சற்று யோசித்தாள். ''சிற்பி என்று சொல்பவரை உள்ளே அனுமதிக்க உத்திரவிருக்கிறது. சிற்பியின் உடைக்கும் பரதவர் உடைக்கும் வித்தியாசம் உண்டு'' என்று கூறிய அவள் இளவரசனை ஏற இறங்கப் பார்த்தாள். பிறகு, ''சரி. வாருங்கள் உள்ளே'' என்று கூறி வழிவிட்டு நின்றாள்.

இளவரசனும் இளவரசனைத் தொடர்ந்து வீரபாகுவும் சீனனும் உள்ளே நுழைந்த பிறகு கதவைத் தாளிட்ட அந்த அழகி, ''என் பின்னே வாருங்கள்'' என்று உத்தரவிட்டு முன் சென்றாள். அந்த மாளிகையின் முதல் இரண்டு கட்டுகளைத் தாண்டி மூன்றாவது கட்டுக்கு வந்ததும் அங்கிருந்த விசாலமான கூடத்தின் இருபுறங்களிலும் காணப்பட்ட

அறைகளைச் சுட்டிக் காட்டி, ''இந்த அறைகளில் எந்த அறையில் தங்க விரும்புகிறீர்கள்?'' என்று வினவினாள்.

கூடத்தின் ஒரு மூலையில் எரிந்து கொண்டிருந்த பெரு விளக்கும் மேலிருந்து தொங்கிய வெண்கலச் சரவிளக்கும் நல்ல ஒளியை வீசியிருந்ததால் அவளை நன்றாகப்பார்க்க முடிந்தாலும், அவளைப் பார்ப்பதைவிடப் பெரும் கேள்விகள் இளவரசன் சித்தத்தில் எழுந்து கிடந்ததால் அவற்றைக் கேட்கவே முற்பட்டான் அவன். கூடத்தின் நடுவில் நின்ற இடத்திலிருந்து அசையாமல் அந்த அரச மோகினியை நோக்கிய இளவரசன், ''நான் யாரென்று சொன்னேன். நீங்கள் யாரென்று சொல்லவில்லையே?'' என்று வினவினான் அவள் முகத்தை உற்று நோக்கி.

''சொல்ல விருப்பமில்லை.'' பதில் சட்டென்றுவந்தது, உறுதியுடனும் வந்தது அவளிடமிருந்து.

''ஏன்?'' இளவரசன் விழிகளில் வியப்பு விரிந்தது.

''உங்களைப் போல் நான் பொய் சொல்ல விரும்பவில்லை'' என்ற அவள் இளநகை பூத்தாள்.

அப்படி இளநகை கொண்டபோது லேசாகக் கோடிகளுக்கு இழுபட்ட அவள் பேரிதழ்களும் வழவழத்த செழித்த கன்னங்களில் விழுந்த அந்தக் குழிகளும் தன்னைப் பார்த்து நகைப்பதாக எண்ணினான் இளவரசன். ஆகவே, ''இவள் நகைக்கட்டும். இளநகையே இத்தனை அழகென்றால் முழு நகைப்பில் எத்தனை விந்தைகளைப் பார்க்கலாம்!'' என்று எண்ணினான். அந்த எண்ணத்தைச் சற்றே அகற்றி, ''நான் பொய்யேதும் சொல்ல வில்லை உங்களிடம்'' என்றான்.

''சிற்பி என்று சொன்னது பொய் இல்லையா?''

''இல்லை.''

''பின் ஏன் இப்படி உடை அணிந்திருக்கிறீர்கள்?''

''கிடைக்கிற உடையை அணியும் நிலையிலிருக்கிறேன்.

''அவ்வளவு ஏழையா?''

''ஆம்.''

சிறிது சிந்தித்த அவள், ''சரி. அதுவும் உண்மையாயிருக்கலாம்'' என்றாள்.

''எது?'' என்று ஏதும் புரியாமல் கேட்டான் இளவரசன்.

அவள் இதழ்களில் மந்தகாசம் நன்றாக விரிந்தது. கார் மேகக் கருமணிகள் விஷமச் சிரிப்பைக் கக்கின. ''நீங்கள் ஏழை யென்பது!'' என்று அவள் உதடுகள் உதிர்த்த சொற்களிலும் ஏளனம் இருந்தது.



இளவரசன் வியப்பு அதிகமாயிற்று. அவள் உரையாடலை ஏதோ ஒரு துறைக்குக் கொண்டு செல்கிறாளென்பதைப் புரிந்து கொண்ட இளவரசன் கேட்டான், ''நான் ஏழையென்பதைப் புரிந்து கொண்டீர்களா?'' என்று.

''புரிந்து கொண்டேன்'' என்றாள் அவள்.

''எப்படி?''

''நீங்கள் மாற்றுடையில் வந்திருக்கிறீர்கள்.''

''ஆம்.''

''ராஜ வீதிக்கு வந்ததும் நிலவொளியில் நடு வீதியில் வரவில்லை.''

''இல்லை''

''மாளிகைகளின் தாழ்வரைகள் வீசிய நிழலில் மறைந்து வந்தீர்கள்.''

ஆம்.'' இளவரசன் வியப்பு எல்லை கடந்ததால் ஆம் என்ற பதிலைக்கூடச் சற்று அழுத்தமாக உச்சரித்தான்.

அந்த அழுத்தத்தைக் கண்டுகலகலவென நகைத்தாள் அந்த மோகினி. ''உங்கள் கையில் அப்பொழுது உடைந்த பானை இல்லையே? நிழலில் படுத்துக்கிடந்த கருநாய் எதுவும் காலைக் கடிக்கவில்லையே?'' என்று வினவினாள் நகைப்பின் ஊடே.

ராஜசிம்ம பல்லவன், சாளுக்கியர் படையெடுப்பைக் கடல் மல்லையில் கண்டபோதுகூட அடையாத பெரும் குழப்பத்தையும் உணர்ச்சிப் பெருக்கையும் அடைந்தான்.

ஆகவே, ''என்ன பெண்ணே, என்ன சொல்கிறாய்?'' என்று கூவினான் பிரமிப்புடன்.

அவள் சர்வ சாதாரணமாக, தமிழ் மொழியின் அமர கவிதையொன்றின் இரு வரிகளைச் சொன்னாள்:

**''ஒரு நாயகமாய் ஓட**
**உலகுட னாண்டவர்**
**கருநாய் கவர்ந்த காலர்**
**சிதைகிய பானையர்**

இதற்கு மேல் தாளாத இளவரசன் இரண்டெட்டில் அவளை நெருங்கி, அவள் இரு தோள்களையும் நொறுக்கிப் பிடித்து, ''உண்மையைச் சொல். யார் நீ? நான் யாரென்பது உனக்கெப்படித் தெரியும்?'' என்று இரைந்தான். அந்த இரைச்சல் கூடத்தில் பயங்கரமாக எதிரொலி செய்தது.

அந்தப் பெண் அதற்கும் மசியவில்லை. அலட்சியமாக அவனை ஏறெடுத்து நோக்கினாள். ''பல்லவ இளவரசரே! எடுங்கள் கையை, முறை பிசகி நடக்க வேண்டாம்'' என்றாள் மிதமிஞ்சிய அதிகாரத் தோரணையில், அப்படிச் சொன்னது அவள் மட்டு மல்ல. கூடத்தின் ஒரு மூலையிலிருந்து ''ராஜசிம்மா! விடு அவளை!'' என்ற மற்றோர் அதிகாரக் குரலும் எழுந்தது.

## 22. மாளிகைச் சிறை

**கை**யில் அலங்காரச் சிறு விளக்கேந்தி தங்க மேனிக்குக் குறுக்கே காஞ்சியின் பட்டுச் சரிகைத் தகடியொன்று முப்புரி நூலைப் போல ஓடி திரண்ட தோள்களைத் தழுவி அப்புறம் செல்ல, தூங்காததற்கு அறிகுறியாகக் குழல்கள் சீராக முகத்தின் இருபுறமும் அணைத்துக் கிடக்க, ''ராஜசிம்மா! விடு அவளை'' என்று உதடுகள் உதிர்த்த சீற்றம் சற்றும் துலங்காத சர்ந்தமான விழிகள் அவனை அளவெடுக்க, ஆஜானுபாகுவாய், மிக அழகாய், கம்பீரமாய், கவிதைக் கடலும் வேத சாஸ்திர விற்பன்னருமான* ஆசார்ய தண்டி கூடத்தின் மூலையில் நிற்பதைக் கண்ட பல்லவ இளவலின் கைகள் ராஜமோகினியின் தோள்களை விட்டு விசையால் முடுக்கப்பட்டவை போல் விலகின. அவன் தலை தாழ்ந்து வணக்கத்திற்கறிகுறியாக. உதடுகள் முணுமுணுத்தன ''ஆசார்ய தேவோ பவ'' என்ற வேத மந்திரத்தை. ''என் சென்னியில் ஆசார்யன் திருவடிகள் பதியட்டும்'' என்று தமிழில் அவன் உள்ளமும் ஜபித்துக் கொண்டது.

முன்பின் அறியாத ஒரு பருவ மங்கையை உணர்ச்சிப் பெருக்கால் தான் தீண்டியதைப் பற்றி ஆசார்யர் என்ன நினைப்பாரோ என்ற திகில் அவன் உள்ளத்தைச் சூழ்ந்து கொண்டதால் சில விநாடிகள் பிரமை பிடித்து நின்றான் பல்லவ இளவல். அவன் பிரமையை மகா கவியான தண்டியும் உணர்ந்து கொண்டதாலோ என்னவோ அவர் நெற்றி ஒரு விநாடி சுளித்து அதன் மத்தியிலிருந்து கோபி சந்தனமும் குங்குமப் பொட்டும் வரி வரியான இரண்டு கோடுகளைக் குறுக்கே சிருஷ்டித்துக் கொண்டன. அந்தச் சுளிப்பும் திடீரென நீங்கப் பல்லவ இளவலையும் மற்றோரையும் மீண்டுமொரு முறை நோக்கிவிட்டு, ''நீ செல் உள்ளே'' என்று அந்த அழகியை நோக்கி உத்தர விட்டார் தண்டி. அந்த உத்தரவைக் காதில் வாங்கியதும் அழகிய இரு கைகளையும் வளைகள் குலுங்கத்

* *ஆசார்ய தண்டியின் மாணவரில் ராஜசிம்ம பல்லவனும் ஒருவன்-''– History of the Pallavas -by R. Gopalan - page III*



**தூக்கிக்** கூப்பி, தலையாலும் வணங்கிவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்றாள் ராஜ மோகினி. அவள் சென்று அந்தக் கட்டின் கோடியிலிருந்த ஒரு கதவு மூடப்பட்ட சத்தம் கேட்டதும் ஆசார்ய தண்டி தானிருந்த மூலையைவிட்டு ராஜசிம்மனை நோக்கி நடந்து வந்தார். அவருடைய கம்பீரமான நடையையும் கச்சமாகக் கட்டப்பட்ட சரிகை ஆடையின் முன் கச்ச விசிறி அசைந்த அழகையும், செக்கச் செவேலென்ற பாதங்களின் தூய்மையையும் மென்மையையும் மெருகையும் பார்த்த ராஜசிம்மபல்லவன், ''தூய்மையான வாழ்க்கையில் சித்தம் மட்டு மின்றி, சிதையும் உடலும் எத்தனை காந்தியைப் பெறுகிறது?'' என்று தனக்குள் பக்தியுடன் சொல்லிக் கொண்டான். ஆசார்ய தண்டியின் முகத்தில் இரவின் இரண்டாம் ஜாம முடிவிலும் தெரிந்த காந்தியும் சாந்தியளிக்கும் கண்களின் ஒளியும் அவனைப் பல நாட்கள் ஆட்கொண்டதுபோல அன்றும் ஆட்கொள்ளவே, அவர் அருகில் வந்ததும் அவன் மண்டியிட்டு உட்கார்ந்து அவர் பாதங்களில் தலையை வைத்துத் தண்டனிட்டான்.

தண்டியின் கண்கள் சற்றுத் தாழ்ந்து தன் காலடியில் படிந்திருந்த பல்லவ இளவலின் தலையை அன்புடனும் அருளுடனும் நோக்கின. அவர் சற்றுக் குனிந்து தனது கையொன்றால் அரச குமாரனின் குழல்களைக் கோதிவிட்டார். ''தீர்க்காயுஷ்மான் பவ, (நீண்ட ஆயுளுடன் இரு)'' ''ச்ரேயஸ்வீ பவ, (கீர்த்தியுடன் இரு)'' என்று அவர் உதடுகள் அவனை ஆசீர்வதித்தன. ''எழுந்திரு ராஜசிம்மா'' என்று அவர் உத்தரவிட ராஜசிம்ம பல்லவன் எழுந்து நின்றான்.

அவன் எழுந்த பின்பு ஆசார்ய தண்டி ஒரு முறை வீரபாகுவை யும் சீனனையும் பார்த்தார். பிறகு ஏதும் சொல்லாமல் மூவரையும் தன் பின்னால் வரும்படி சைகை செய்து முன்னால் நடந்தார். அந்தக் கூடத்தின் கிழக்கு மூலையை அடைந்ததும் அங்கிருந்த இரு அறைகளைச் சுட்டிக் காட்டி, ''ராஜசிம்மா! இந்தச் சிறிய அறையில் நீ தங்கலாம். இவர்களிருவரும் அந்தப் பெரிய அறையில் தங்கட்டும்'' என்று கூறினார்.

அத்தனை நேரம் நடந்த நிகழ்ச்சிகளை பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்த வீரபாகு தன்னையும் சீனனையும் ஓர் அறைக்குள் தள்ளிவிடத் தண்டி முயற்சித்ததும் பொறுமையை இழந்தான். பல்லவ இளவல் தன்னைப் பலவந்தமாக ராஜ வீதிக்கு இழுத்து வந்ததும், ஏதோ ஒரு மாளிகையில் கதவைத் தட்டியதும் அங்கு ஒரு கட்டழகி கதவைத் திறக்க அவளுடன் அவன் வாதாடியதும், பிறகு அவள் அவனையும் தங்களையும் உள்ளே அழைத்துச் செல்ல மூன்றாம் கட்டில் ஒருவர் தோன்றியதும் பெரும் பிரமையாயிருந்தது அவனுக்கு. விக்கிரமாதித்த

மகாராஜாவே உறையும் மேலை ராஜவீதியிலேயே இப்படியோரு சதிக்கூட்டம் இருக்குமென்பதை அறிய அவனுடைய பிரமிப்பு நினைப்புக்கு அப்பாற்பட்டதாயிருந்தது. போதாக்குறைக்கு அந்தக் கட்டழகி நகைத்ததும், தமிழ்ப் பாட்டு சொல்லியதும், இளவரசன் அவள் தோளைப் பிடித்ததும் பரம எரிச்சலாகவும் ஆத்திரமாகவும் இருந்தது வீரபாகுவுக்கு. அந்தக் கூட்டத்தின் மூலையில் ஒரு மனிதன் முளைத்ததும் அவன் தன்னை யாரென்று கூட விசாரிக்காமல் கிழக்கு மூலைக்கு அழைத்து வந்து சீனனுடன் ஓர் அறையில் தங்க உத்தரவிட்டதும் அவன் பொறுமையைப் பெரிதும் சோதித்துவிடவே அவன் ஆசார்யரைப் பார்த்து, ''நான் யார் தெரியுமா உங்களுக்கு?'' என்று சீற்றத்துடன் கேட்டான்.

ஆசார்ய தண்டியின் இதழ்களில் சற்றே புன்முறுவல் அரும்பியது. ''யாரப்பா நீ?'' என்று வினவினார் சாந்தத்துடன்.

''சாளுக்கியர் உபதளபதி'' என்றான் கம்பீரமாக வீரபாகு.

''அப்படியா? சந்தோஷம்'' என்றார் தண்டி விகசித்த புன் முறுவலைச் சிறிதும் குறைக்காமல்.

''என் பெயர் வீரபாகு'' என்றுமீண்டும் கூறினான் வீரபாகு.

''வீரனுக்குத் தக்க பெயர்தான்'' என்றார் தண்டி.

''தங்களைப் பார்த்தால் பெரியவராகத் தெரிகிறது.

''அப்படியா!''

''ஆம். வைதீகராகவும் தெரிகிறது.''

''சரி.''

''விஷயங்களை நன்றாகப் புரிந்துகொள்ளும் சக்தி எனக்கு உண்டு'' என்று தன் பிரதாபத்தை எடுத்துக் கூறிய வீரபாகு ''வணங்குகிறேன்'' என்று கூறித் தலையையும் வணங்கினான்.

''தீர்க்காயுஷ்மான் பவ'' என்று ஆசீர்வதித்தார் தண்டி.

இதைக் கேட்ட வீரபாகு மகிழ்ச்சிப் புன்முறுவல் கொண்டான். ''பெரியவரே! நீங்கள் இப்பொழுது செய்த ஆசீர்வாதம் மனப்பூர்வமாகச் செய்யப்பட்டதா?'' என்று வினவினான்.

ஆசார்ய தண்டியின் கண்கள் வியப்பைக் கக்கின. புருவங்கள் சற்று மேலெழுந்தன. கேட்டார் தண்டி: ''ஏன் அதிலென்ன சந்தேகம் உனக்கு?''

வீரபாகு மெல்ல நகைத்தான். ''சந்தேகத்துக்குக் காரண மிருக்கிறது'' என்றும் கூறினான் நகைப்பையொட்டி.



''என்ன காரணம் அப்பா?'' என்று கேட்டார் தண்டி.

''இந்தச் சீனனுடன் என்னைத் தனியறைக்கு அனுப்புகிறீர்கள் என்னைக் கொன்றுவிட இவன் பூநாகம் வைத்திருக்கிறான்'' என்று மர்மத்தை உடைத்தான்!

ஆசார்ய தண்டி பல்லவ இளவலை நோக்கி, 'பூநாகமா! அதென்ன?'' என்று வினவினார் வியப்புடன்.

இளவரசன் பதில் சொல்லுமுன்பு யாங்சின் அந்தச் சின்னஞ்சிறு கத்தியை எடுத்துக் காட்டினான். அதைக் கண்ட ஆசார்ய தண்டியின் இதழ்களில் மீண்டும் புன்முறுவல் அரும்பியது. ''இது தான் பூநாகமா! இந்தச் சிறு கத்தியா!'' என்று கேட்டார் வீரபாகுவை நோக்கி.

''சிறு கத்தியென்று நினைக்காதீர்கள். அதன் முனையில் விஷம் தீட்டி வைத்திருக்கிறான். இவனுடன் என்னைத் தனியாக விட்டால் என்னைக் கொன்று விடுவான். அப்புறம் 'தீர்க்காயுஷ் மான் பவ' என்ற உங்கள் ஆசீர்வாதம் பலிக்காமல் போய் விடும்'' என்ற வீரபாகு திகிலுடன் அந்தக் கத்தியை நோக்கினான்.

''வீரனே! அஞ்சாதே. இந்த மாளிகையில் நீ இருக்கும் வரையில் உனக்கு எந்தவித ஆபத்தும் நேரிடாது. இங்கு யாரும் யாருக்கும் எந்தத் தீங்கையும் விளைவிக்க முடியாது'' என்று வீரபாகுவுக்கு உறுதி கூறிய தண்டி வீரபாகுவையும் சீனனையும் அந்தப் பெரிய அறையை நோக்கி அனுப்பிவிட்டு இளவரசனை மட்டும் தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்றார். அந்த மூன்றாவது கட்டின் மற்றொரு மூலையில் இருந்த தமது அறைக்குள் இளவரசனை அழைத்துச் சென்ற தண்டி மகாகவி அங்கிருந்த பஞ்சணையில் உட்கார்ந்து கொள்ள ராஜசிம்மன் தரையில் அமர்ந்தான்.

ஆசார்ய தண்டியின் அறை அவனுக்குப் புதிதல்ல. காஞ்சி மாநகரில் வித்தை பயின்ற பல நாட்கள் அந்த அறையில் அவன் உட்கார்ந்திருக்கிறான். ஆச்சாரியாருடன் தர்க்கம் செய்திருக்கிறான். அதே பஞ்சணையில் அவருக்குச் சரணசேவையும் செய்திருக்கிறான். இருப்பினும் அன்றும் அந்த அறையைச் சுற்று முற்றும் பார்த்தான். அறையிலிருந்த அந்தப் பஞ்சணையின்மீது அன்றும் அந்த மான் தோல் விரிந்து கிடந்தது. சந்தன மரத்தில் செய்யப்பட்ட அவர் குமிழ்ப் பாதுகை அன்றும் அந்தக் கட்டிலை ஒட்டிக் கிடந்தது. அந்தப் படுக்கையறையின் சுத்தத்தை அதிலிருந்த சந்தன மாலைகளின் சுகந்தத்தை அன்றும் அனுபவித்தான் பல்லவ இளவல். அங்கு பலமுறை பாடம் கேட்டதும், சாந்தமே உருவான ஆசார்யர்கூட ஓரிரு முறை தன்னைக் கோபித்ததும், ஒரே ஒரு முறை கைத்தண்டத்தால் தன் கையில் அடித்ததும் அந்த

இரவில் அவன் நினைவுக்கு வந்தது. அடிவாங்கியதை நினைத்து அவன் அன்றும் மகிழ்ந்தான், மெய் சிலிர்த்தான். பழைய நினைவுகளில் திளைத்தான்.

அவனை மகாகவி தண்டியின் கேள்வியொன்று இந்த உலகுக்குக் கொண்டு வந்தது. ''காஞ்சிக்கு எப்பொழுது வந்தாய்?'' என்று வினவினார் தண்டி.

''இன்றிரவுதான்'' என்று பணிவுடன் மொழிந்தான் பல்லவ இளவல்.

''இன்னும் யாரை அழைத்து வந்திருக்கிறாய்?'' என்று அடுத்துக் கேட்டார் தண்டி.

''இந்திரவர்மனையும் பலபத்ரவர்மனையும்'' என்றான் பல்லவ இளவல்.

மகாகவி தண்டி சிறிது சிந்தனையிலிறங்கினார். மறுபடியும் கேட்டார். ''அவர்களை எங்கு வைத்திருக்கிறாய்?'' என்று.

''இரும்புக் கொல்லர் பட்டறையை அடுத்த பெரும் சத்திரத்தில்'' என்று தெரிவித்தான் பல்லவ இளவல்.

''நல்லது. சரியான இடம்'' என்று ஆமோதித்தார் மகாகவி. பிறகு, ''வேறு ஏதாவது கூறவேண்டுமா?'' என்றும் கேட்டார்.

''வேறு ஏதுமில்லை ஆசார்யாரே'' என்றான் பல்லவ இளவல்.

மீண்டும் சிந்தனையிலிறங்கினார் மகாகவி தண்டி. சில விநாடிகள் மௌனத்தில் ஓடின. மௌனத்திலிருந்து மீண்ட அவர், ''அப்படியானால் அந்தப் பெண்ணை என்ன செய்தாய்?'' என்று சர்வ சாதாரணமாக வினவினார்.

ராஜசிம்ம பல்லவன் பேரதிர்ச்சியடைந்தான். மைவிழியைப் பற்றி அவர் அறிந்திருப்பது பெருவியப்பை அளித்தது அவனுக்கு. ஆகவே உடனடியாகப் பதில் சொல்லவில்லை அவன். கடைசியில் சொன்னான், ''ஆசார்யாருக்குச் சோதிடம் தெரிந்திருக்க வேண்டும்'' என்று.

தண்டி மகாகவி நகைத்தார். ''இதற்கு சோதிடம் தெரிய வேண்டியதில்லை'' என்று தெரிவித்தார்.

''வேறெப்படித் தெரிந்து கொண்டீர்கள்?'' என்று கேட்டான் பல்லவ இளவல்.

''காமுகர்களின் பலவீனமே அதுதான் ராஜசிம்மா! தங்கள் விவகாரங்கள் யாருக்கும் தெரியாதென்று நினைக்கிறார்கள். ஆனால் உலகத்தில் அவர்கள் உறவு வெகு சீக்கிரத்தில் பரவி விடுகிறது. அவர்கள் பார்வையிலிருந்தும் நடவடிக்கைகளிலிருந்தும் மற்றவர்கள் வெகு விரைவில் அவர்களைப் புரிந்து கொண்டு விடுகிறார்கள். உலகத்தில் மனிதன் ரகசியம் என நினைப்பது காதல் விவகாரம் ஒன்றுதான். ஆனால் அதைவிடப் பகிரங்கப்படும் விஷயம் உலகத்தில் ஏதுமே இல்லை'' என்று தெளிவுபடுத்தினார் ஆசார்யர்.



''தங்களுக்கு இதைச் சொன்னது யார்?'' என்று குழப்பத்துடன் கேட்டான்.

ஆசார்ய தண்டி அவனைக் கூர்ந்து நோக்கினார். பிறகு சொற்களை நிதானமாகவும் மரியாதையுடனும் உதிர்த்தார். 'விக்கிரமாதித்தன் சொன்னான்'' என்று மெள்ள மெள்ள உதிர்த்த சொற்களைக் கேட்ட பல்லவ இளவல் திகிலடைந்தான் ஒரு விநாடி. பிறகு சமாளித்துக் கொண்டு, ''சாளுக்கிய மன்னரா?'' என்று வினவினான்.

''ஆம்.''

''என்று?''

''நேற்று மாலை.''

''மாமல்லபுரத்திலிருந்த எப்பொழுது வந்தார்?''

''நேற்று காலையில்.''

''சரி. வேறென்ன சொன்னார்?''

''உன்னை எந்த விநாடியிலும் காஞ்சியில் எதிர்ப்பார்ப்பதாகச் சொன்னார்.

''காஞ்சியிலா?''

''ஆம்.''

''காஞ்சியில் எங்கு?''

''இந்த மாளிகையிலாவது, கடிகையிலாவது.''

''உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்தான் பல்லவ இளவல். ''எனக்கு விடை கொடுங்கள்'' என்றும் உத்தரவு கேட்டான்.

ஆசார்ய தண்டி திடமான குரலில் சொன்னார்: ''நான் விடை கொடுத்துப் பயனில்லை''என்று.

''ஏன்?'' கொதிப்புடன் எழுந்தது ராஜசிம்மன் கேள்வி.

''இந்த மாளிகை விக்கிரமாத்தனின் வீரர்களால் சூழப்பட்டிருக் கிறது.''

''வந்தபோது யாரையும் காணவில்லையே.''

''உன் கண்ணில் படவேண்டாமென்று விக்கிரமாதித்தன் உத்தரவு.''

''அப்படியானால்?''

''நீ இங்கு வந்ததும் இந்த மாளிகையைக் காவல் புரியவும் நீ வெளியே செல்லாதபடி பார்த்துக் கொள்ளவும் உத்தரவிட்டிருக் கிறான் விக்கிரமாதித்தன்.''

''இந்த மாளிகை...''

''உனக்குச் சிறை'' என்று ஆசார்ய தண்டி குற்றவாளிக்குத் தண்டனை விதிக்கும் நீதிபதிபோல் சொற்களை மெதுவாக உதிர்த்தார்.

## 23. கங்கன் மகள் ரங்கபதாகா

ஆசார்ய தண்டியின் சொற்களைக் கேட்ட பல்லவ இளவல் பல விநாடிகள் பதில் சொல்லாமல் மௌனமாகவே உட்கார்ந்து தனது நிலையை அலசிப் பார்க்கலானான் தான் எத்தனையோ சாமர்த்தியமாக மாறு வேடம் புனைந்தது, ஆங்காங்கிருந்த காவல் வீரரை ஏமாற்றிக் காஞ்சிக்கு வந்தது ஆகிய அனைத்தும் விக்கிரமாதித்த சத்யாசிரயனால் கால் கழஞ்சுக்குப் பயனில்லாமல் அடிக்கப்பட்டதை எண்ணியதால் பெரும் வியப்புக்கும் ஓரளவு சினத்துக்கும் உள்ளானான் ராஜசிம்மன். விக்கிர மாதித்த சத்யாசிரயனுடைய புறக் கண் மட்டுமின்றி அகக்கண்ணும் சதா அலுவல் புரிந்து கொண்டிருப்பதையும் அவன் கூரியபுத்தி எதையும் ஊகித்துவிடுவதையும் எண்ணிய இளவரசன் பல்லவ சாம்ராஜ்யம் மிகத் திறமை வாய்ந்த ஓர் எதிரியிடம் சிக்கிவிட்டதை உணர்ந்து கொண்டான். காஞ்சிக்குத் தான் வரும்பட்சத்தில் கடிகையிலோ அல்லது ஆசார்ய மாளிகையிலோ தான் தங்க முடியுமென்பதை எப்படி சாளுக்கிய மன்னன் அறிந்தானென்பதை நினைத்துப் பார்த்து விடை கிடைக்காததால் அதைப் பற்றி ஆசார்யரையே வினவினான், ''இந்த இரண்டு இடங்களுக்குத்தான் நான் வருவேனென்பது சாளுக்கிய மன்னனுக்கு எப்படித் தெரியும்?'' என்று.

ஆசார்ய தண்டிகையின் கண்களில் ஒரு புத்தொளி தெரிந்தது. ''காரணத்தை மன்னனே சொன்னான்'' என்று கூறிய தண்டியின் குரலில் விக்கிரமாதித்தனைப் பற்றிய பெருமையும் ஒலித்தது.

''என்ன காரணமாம்?'' என்று இளவரசன் ஆவலுடன் கேட்டான்.

''கடிகை பல நாட்டவரும் கல்வி பயிலும் பல்கலைக்கழகம்.''

''ஆம்.''



''அதில் படைவீரர்கள் யாரும் புகக்கூடாதென்ற கட்டுப்பாடு இருக்கிறது.''

''அது பல்லவர் செய்த கட்டுப்பாடல்லவா?''

''ஆம். பல்லவர் செய்த கட்டுப்பாடுதான். பல்லவர் கட்டுப்பாடு, ஏற்பாடு எதையும் மீறக்கூடாதென்று விக்கிரமாதித்தன் படைகளுக்கு உத்தரவிட்டிருக்கிறான்.''

''ஓகோ!''

''ஆம். இரண்டாவதாக, கடிகையின் தலைமை ஆசிரியரின் மாளிகையிலும் யாரும் புகமுடியாது.''

''இதுவும் தந்தையின் ஏற்பாடு.''

''விக்கிரமாதித்தன் ஏற்பாடும் அதுதான்.''

இளவரசன் பிரமித்து உட்கார்ந்து விட்டான். ஆசார்ய தண்டியே மேலும் சொன்னார். ''ராஜசிம்மா! சாளுக்கியர் படை காஞ்சிக்குள் நுழைந்து இன்று ஆறாவது நாள். இந்த ஆறு நாட்களில் எந்தச் சாளுக்கிய வீரனும் இந்த மாளிகைக்குள் வரவில்லை. கடிகைக் குள்ளும் வரவில்லை. ஒரு முறை விக்கிரமாதித்தன் மட்டும் இங்கு வந்தான். வருவதற்கு முன்னதாக என்னுடைய அனுமதி கேட்டு ஆளனுப்பி, பிறகே அவன் வந்தான். வந்தவன் என்னையும் வணங்கி, பூஜை அறைக்கு வந்து அம்பிகையையும் வணங்கிச் சென்றான். சாளுக்கியர் படை காஞ்சியில் நுழைந்த மறுநாளிலிருந்து இங்கு பூரண அமைதி நிலவுகிறது. சாளுக்கிய மன்னன் படைகள் பெரும்பாலும் இங்கிருந்து தென்கிழக்கில் ஒன்றரைக் காத தூரத்திலுள்ள *திரையனேரிக்கருகில் தங்கியிருக்கின்றன. அவசியமான ஒரு சிறு பகுதியை உங்கள் படை வீடுகளில் தங்க வைத்திருக்கிறான் சாளுக்கிய மன்னன். மற்றப்படி வீரர்கள் வீதியிலும் கோட்டை கொத்தளங்களிலும் நடமாடுகிறார்கள், காவல் புரிகிறார்கள், காஞ்சியின் சாதாரண வாழ்க்கை சிறிதளவும் பாதிக்கப்படவில்லை. இன்னும் சில நாட்களில் விக்கிரமாதித்தனை மக்கள் தெய்வம் போல் தொழுதாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.''

இதைக் கேட்ட ராஜசிம்ம பல்லவன் பெருமூச்செறிந்தான். நுண்ணிய அறிவும் சிறந்த படை பலமும் உள்ள ஓர் எதிரியிடம் காஞ்சி சிக்கியிருப்பதை உணர்ந்ததால் துயரம் அவன் இதயத்தைச் சூழ்ந்தது. கடைசியாக ஒரு முடிவுக்கு வந்து, ''அப்படியானால் இந்த மாளிகையை

* *திரையனேரி என்பது இப்பொழுது தென்னேரி என்று அழைக்கப்படுகிறது. தொண்டமான் இளந்திரையன் விவசாய வளப்பத்துக்காக நிர்மாணித்த ஏரி இது - Guide to Kanchi - Dr.M.K.Srinivasan, Page1.*

விட்டு வெகு சீக்கிரம் நான் வெளிக் கிளம்ப வேண்டும்'' என்று கூறவும் செய்தான்.

''நீ இந்த மாளிகையிலிருந்து வெளியில் கால் வைத்த மறுகணம் சிறைப்படுத்தப்படுவாய்'' என்றார் ஆசார்யர்.

அவர் சொன்னதை ஆமோதித்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் பல்லவ இளவல். மீண்டும் பல விநாடிகள் யோசனையில் இறங்கிய பல்லவ இளவல் கேட்டான், ''வேறு வழியே இல்லையே ஆசார்யரே?'' என்று.

தண்டியின் கண்களில் மீண்டும் அந்தப் புத்தொளி தெரிந்தது. ''இருக்கிறது'' என்றார் மெல்ல.

''என்ன வழி?'' என்று ஆவலுடன் கேட்டான் பல்லவ இளவல்.

ஆனால் ஆசார்ய தண்டி உடனடியாக வழியைக் கூறவில்லை. ''நாளைக்குச் சொல்கிறேன். போய்ப் படுத்துக்கொள்'' என்று சொன்னார்.

''அது என்ன என்பது பற்றிச் சிறிது கோடி காட்டக் கூடாதா?'' என்று கேட்டான்.

''கோடி காட்டுவதில் பயனில்லை. எனக்கும் ஏதோ ஊகம்தான். நாளை இரவில் சொல்கிறேன். அவசரப் படாதே'' என்று முடிவாகச் சொல்லிவிட்ட தண்டி அவனை அறைக்குப் போக உத்தரவு கொடுக்கும் முறையில் கையால் ஆசீர்வதித்தார்.

அதற்கு மேல் அவரிடம் பேசிப் பயனில்லை என்பதை உணர்ந்த பல்லவ இளவல், அவர் அறையிலிருந்து கிளம்பி வீரபாகுவும் யாங் சின்னும் இருந்த அறைக்கு வந்து கதவைத் திறந்து எட்டிப் பார்த்தான். இருவரும் படுக்காமலே உட்கார்ந்திருந்ததைக் கண்டதும், ''இன்னுமா நீங்கள் உறங்கவில்லை?'' என்று வினவினான்.

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வீரபாகுவே முந்திக் கொண்டான், ''இவன் உடன் இருக்கும்வரை என்னால் உறங்க முடியாது'' என்று.

''உன்னை ஏதாவது தொந்தரவு செய்தானா இவன்?'' என்று கேட்டான் இளவரசன்.

''இவன் தொந்தரவு செய்ய வேறு வேண்டுமா?'' வீரபாகுவின் சொற்களில் இகழ்ச்சி மண்டிக் கிடந்தது.

''தொந்தரவு செய்யாவிட்டால் தூங்கலாமே!'' என்றான் இளவரசன்.



''இவன் கூட இருப்பதே தொந்தரவு'' என்றான் வீரபாகு.

அதைக் கேட்டு நகைதத இளவரசன், ''யாங் சின்! வீரபாகுவை அச்சுறுத்தாதே'' என்று கூறிவிட்டு வெளியே சென்றான். வாயிற் படியைக் கடந்தபோது, ''என்னை அச்சுறுத்த யாராலும் முடியாது'' என்று வீரபாகு இரைந்தது அவன் காதில் விழுந்தது.

சாதாரணச் சமயமாயிருந்தால் அந்த நிலையைப் பெரிதும் ரசித்திருப்பான் பல்லவ இளவல். ஆனால் அந்தச் சமயத்தில் தன் நிலை பற்றியும் பல்லவ அரசைப் பற்றியுமிருந்த பல எண்ணங்களில் அவன் வீரபாகுவின் கூச்சலை அரைகுறையாகக் காதில் வாங்கிக் கொண்டு தனக்குக் காட்டப்பட்ட அறைக்குச் சென்று அங்கிருந்த சிறு கட்டிலில் படுத்தான். தான் சிற்பி என்று சொன்னதும் அந்தப் பெண் தனக்கும் ஆசார்யருக்கும் மட்டுமே தெரிந்த அந்த அடையாள வார்த்தையைப் புரிந்து கொண்டு கதவைத் திறந்தை எண்ணிப் பார்த்தான். 'அதை ஆசார்யர் சொல்லியிருக்கலாம். ஆனால் என்னை எப்படி அவள் பல்லவ இளவரசனென்று அடையாளம் கண்டு கொண்டாள்? அதுவும் அதை நேரிடையாகச் சொல்லாமல் 'ஒரு நாயகமாய்' என்ற திருவாய்மொழிப் பாட்டைச் சொன்னாளே, அவளுக்குத் தமிழில் அத்தனை பரிச்சயம் எப்படி ஏற்பட்டது? இருக்கட்டும். நாளைக்கு அவளையே அப்பாட்டுக்கு விளக்கம் கேட்கிறேன்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். 'அது கிடக்கட்டும் கதவை அவள் ஏன் திறந்தாள்? இந்த மாளிகையின் பணியாட்கள் எங்கே போனார்கள்? மூன்று கட்டுவரை யாருமே காணோமே? ஒரு வேளை, கடைசிக் கட்டிலிருப்பார்களா? முதல் இரண்டு கட்டுகளில் காவலில்லாமல் ஏன் நிர்க்கதியாக விட்டு விட்டார் ஆசார்யர்? ஒருவேளை, ஆசார்யரின் மாளிகைக் காவலரையும் விக்கிரமாதித்தன் சிறை செய்துவிட்டானா? இருக்காது, இருக்காது, ஆசார்ய தண்டியிடம் பரம பக்தி கொண்டவன், பண்பாடுடையவன், அப்படிச் செய்திருக்க மாட்டான். ஆனால் மாளிகையின் இந்தக் காவலேயில்லாத நிர்க்கதியான நிலைக்கும் ஏதோ காரணமிருக்க வேண்டும்' என்றும் உள்ளூர விவரித்துக் கொண்டான்.

இந்த நிலையில் ஒரு வியப்பும் எழுந்தது அவன் இதயத்தில். இத்தனையிலும் அந்தப் பெண் யார், எந்த ஊர் என்று கேட்க மறந்து விட்டேனே!' என்று தன்னைத் தானே கடிந்தும் கொண்டான். அந்தப் பெண்ணை நினைத்ததால் அவள் ராஜ தோரணையும் இணையிலா அழகும் அவன் மனத்தில் எழுந்தன. அவள் கார்மேக விழிகள் தன் இதயத்தைப் பார்த்து நகைக்கும் பிரமை ஏற்பட்டது அவனுக்கு. 'இரு பெண்ணே இரு. எப்படியும் நாளை நீ யார், இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்பதைக் கண்டு பிடித்துவிடுகிறேன்' என்று

உள்ளூரக் கறுவிக் கொண்டான். அதே சமயத்தில் மைவிழியும் அவன் மனக்கண்ணில் தோன்றினாள். அவள் பெருவிழிகள் தன்னைப் பார்த்து எள்ளி நகையாடுவது போல் தோன்றின. 'என்ன சபல சித்தன் நீ? புஷ்பத்திலிருந்து புஷ்பத்துக்குத் தாவும் வண்டின் அறிவை விடக் கேவலமாயிருக்கிறதே உன் அறிவு?'' என்று அவள் உதடுகள் சொற்களை உதிர்ப்பதாகவும் தோன்றியது அவனுக்கு; அதனால் சொல்லிக் கொண்டான் : 'சே! சே! இந்தப் பெண்ணை இப்பொழுது தானே கண்டேன்; இதற்குள் மையலா ஏற்பட்டுவிடும்? ஒருகாலு மில்லை. ஆசார்யர் மாளிகையிலிருக்கிறாளென்ற மரியாதைதான் அவளிடம்' என்று தனக்குத்தானே சமாதானமும் சொல்லிக் கொண்டான். ஆனால் அந்தச் சமாதானம் அர்த்தமற்றது என்பது அவனுக்கே புரிந்தது. இருவரில் யாரைக் காதலிக்கிறோம் என்று புரியாத குழப்ப நிலையில் தானிருப்பதை உணர்ந்த பல்லவ இளவல் இருவரிடமிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்ளக் கண்களை இறுக மூடிக் கொண்டான். உறங்கவும் முயன்றான்.

ஆனால் உறக்கம் பிடிக்கவில்லை அவனுக்கு. இரவு முழுவதும் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தான். நான்காவது ஜாமத்தின் போது சிறிது உறக்கம் பிடித்தாலும் விடியற்காலையில் விழித்துக் கொண்டான். விடியற்காலையில் அந்த மாளிகை முந்திய இரவைப் போலில்லாததையும் சிலர் அறைக்கு வெளியே கூடத்தில் உலாவு வதையும் உணர்ந்தான். கதவைத் திறந்து பார்த்தபோது ஆசார்யரின் சீடர் சிலர் புஷ்பங்களையும், பில்வதளங்களையும் சுத்தப்படுத்து வதையும், இன்னும் சிலர் கூடத்தில் ஜலம் தெளித்துப் பெருக்கு வதையும் கண்டான். ஓரிரு சீடர்கள் ஆங்காங்கு கோலமும் போட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒரு சீடன் இளவரசனைக் கண்டதும் தலை வணங்கி, ''ஆசார்யர் உங்களை இன்னும் சிறிது நேரத்தில் பூஜை அறையில் எதிர்பார்க்கிறார். நீராட சகல ஏற்பாடுகளையும் செய்திருக்கிறோம்'' என்று கூறினான்.

''இதோ வந்து விட்டேன்'' என்று கூறிய பல்லவ இளவல் அந்தச் சீடனுடன் அறைக்குச் சென்று நீராட்டத்தை முடித்துக் கொண்டான்.

பூஜை அறைக்குள் சந்தடி செய்யாமல் பயபக்தியுடன் நுழைந்த பல்லவ இளவல் அந்த அறையிலிருந்த அழகைப் பார்த்து பிரமித்து நின்றான் பல விநாடிகள். பிறகு அம்பிகையின் சிம்மாசனத்துக்கு அருகில் அமர்ந்திருந்த ஆசார்யரை வணங்கினான். அவருக்கு நேர் எதிர்ப்பக்கத்தில் அமர்ந்திருந்தாள் அந்த ராஜ மோகினி. அவள் எதிரில் ஒரு சிக்குப்பலகையும் அதன் நடுவில் பெரும் ஓலைச்சுவடியொன்றும் காட்சியளித்தன. அவள் அவனைத் தலை நிமிர்ந்துகூடப் பார்க்க



வில்லை. சிக்குப் பலகையைக் கவனித்த வண்ணமே இருந்தாள்.

இளவரசனின் பார்வையை மகாகவி தண்டியும் கவனித்திருக்க வேண்டும். ஆகவே அவர் அவனை ஏறெடுத்து நோக்கி, ''இவள் யாரென்பதை அறிந்து கொள்ளத் துடிக்கிறாயா ராஜசிம்மா?'' என்று வினவினார்.

''ஆம். சொல்லக்கூடியதாயிருந்தால் ஆசார்யர் சொல்லலாம்.'' பயபக்தியுடன் வந்தது ராஜசிம்மனின் பதில்.

தண்டியின் பதிலும் தங்கு தடையின்றி வந்தது. ''அம்பிகையின் சந்நிதானத்தில் எந்த ரகசியத்துக்கும் இடமில்லை ராஜசிம்மா. ஆகவே அறிந்து கொள். இவள் உன் எதிரியின் மகள்.''

''எதிரியின் மகளா!'' வியப்பு ஒலித்தது ராஜசிம்மன் குரலில்.

''ஆம்! கங்கன் மகள் ரங்கபதாகா'' என்று ஆசார்ய தண்டி சொற்களை மிக உறுதியுடனும் திடத்துடனும் உதிர்த்தார்.

''ரங்க பதாகா தேவி! ரங்கபதாகா தேவி!'' என்ற சொற்களை இளவரசன் இதயம் முணுமுணுத்ததேயொழிய உதடுகள் முணு முணுக்கவில்லை. சொற்களை உதிர்க்கும் சக்தியை அவை இழந்து விட்டதால், பல்லவ இளவலின் உணர்ச்சிகள் பெரும் வெள்ளமாகப் பெருக்கெடுத்து அவன் சித்தத்தை உலுக்கின. 'எத்தனை அசந்தர்ப் பத்தில் விபரீதத்தில் சிக்கிக் கொண்டு விட்டேன்!' என்று நினைத்து நினைத்துத்திணறினான் அவன். 'விதி இப்படியா விளையாடும் என்னிடம்?' என்று விதியையும் நொந்து கண்களை இறுக மூடிக் கொண்டான்.

## 24. கருத்தும் காவியமும்

முந்திய இரவில் கதவைத் திறந்து கடுமுகங் காட்டியவள், நம்மாழ்வார் பாசுரம் சொல்லி நகையாடியவள், சிற்றிடை இழைய சிங்கார நடை நடந்தவள், கணநேரத்தில் கருத்தைக் குலையச் செய்து விட்டவள், அப்பேர்ப்பட்ட ரங்கபதாகாதேவி விக்ரமாதித்தனுக்கு அடுத்தப்படியாக பல்லவர்களின் பரம வைரியான கங்க மன்னன் மகளென்பதை அறிந்ததும் விதியை நொந்து கண்களை இறுக மூடிக்கொண்டு பூஜை அறையின் மூலைத் தூணொன்றில் சாய்ந்து மார்பில் கைகளை இறுகக்கட்டிய வண்ணம் நின்றுவிட்ட பல்லவ இளவலின் இதயத்தில் அரசியல் இருள் பெரிதும் அடைந்து கிடந்தது. அந்த இருளைக் கிழிக்க எழுந்தன இரு குரல்கள் இணைந்து. ஒன்று ஆசார்ய தண்டியின் சுஸ்வரமான மந்திர ஸ்தாயில் இயங்கிய மதுரநாதம்.

இன்னொன்று அந்த கீழ் ஷட்ஜத்துக்கு மேலே உள்ள ஷட்ஜத்தில் மிக மெல்லியதாக இழைந்த ராஜமோகினியின் பிரமர ரீங்காரம். இரண்டும் இணைந்து உதிர்ந்த பீஜாக்ஷரங்கள் அந்த அறையை தெய்வீகப் பெரும் சக்தியொன்றால் சூழ வைத்தன. அவற்றின் சக்தியால் ஈர்க்கப்பட்ட பல்லவ இளவலின் இருள் மனம் புறக் கண்களைத் திறக்கச் செய்யவே அவன் அம்பிகையையும் பார்த்து ஆசார்யரையும் பார்த்தான் சில விநாடிகள்.

தண்டி மகாகவியின் வம்சத்தில், பாரவியின் காலத்திற்கு முன்பு எப்பொழுதோ யாராலோ கண்டெடுக்கப்பட்டுப் பரம்பரையாக வந்த அம்பிகையின் சுவர்ண விக்ரகத்தின் முகத்தில் அபரிமிதமான காந்தி வீசிக்கொண்டிருந்தது. பக்கத்திலிருந்த வெள்ளிக் குத்துவிளக்கும் மேலிருந்து தொங்கிய தங்கச் சரவிளக்கும் அளித்த ஒளியின் பிரதிபலிப்பு மட்டுமல்ல அது. விளக்குகளின் ஒளிக்கும், ஒளியின் பிரதிபலிக்கும் சக்திக்கும் மேலாக ஏதோ ஒரு விளக்க முடியாத ஜாஜ்வல்யம் அம்பாளின் வதனத்திலும், அம்புஜப் பாதங்களிலும் தெரிந்தது. அம்பாளின் அருள்விழிகள் மூடித்தான்கிடந்தன. செய்த சிற்பி கண்மலரைத் திறக்காமலே வைத்திருந்தான். ஆனால் மூடிய அந்தக் கண்களுக்குள்ளேயிருந்தும் அம்பிகை பார்ப்பதைப் போன்ற ஒரு பிரமை. அது சம்பந்தமான ஒரு ஒளி வீச்சு வெளிவந்து கொண்டு தானிருந்தது. அம்பாளின் கிரீடத்தின் உச்சியிலிருந்து இறங்கி வதனத்தின் நடுவில் தொங்கிய ஒரு சிவப்புக்கல் நெருப்புத் துண்டம்போல் எரிந்தாலும், அது திரிபுரமெரித்தவனின் மூன்றாவது கண்ணைப்போல் இல்லாமல், அருணோதயச் சிவப்பை வீசி அருள் புரிவதாயிருந்தது. மேலும் கீழுமாகத் திரும்பிய இரு உள்ளங் கைகளின் பத்ம ரேகைகளும் சங்கசூட முத்திரைகளும் உலகத்திற்கு க்ஷேமம் செய்யும் சக்ரவிதானங்களாகத் திகழ்ந்தன. பத்மாசனத்தில் அமர்ந்திருந்த அம்பிகையின் மடிந்த கால்களின் பாதங்கள், தந்திர சாஸ்திரத்தில் வேதரிஷிகளும் காணமுடியாத எத்தனையோ சூட்சுமங்கள் இருப்பதை அறிவுறுத்தின. அம்பாளின் சிற்றிடை, உலகம் பரம சூட்சமம் என்பதைச் சுட்டிக் காட்டியது. இப்படியிருந்த ஜகன் மாதாவான மகாசக்தியின் பொன்மேனிக்கு ஆசார்யர் மிக அழகாகப் புஷ்பாலங்காரம் செய்திருந்தார்.

தாழை மலர்படல்கள் அவள் இடைக்குப் பாவாடையாகத் திகழ்ந்தன. காஞ்சியின் மல்லிகைச் செண்டு கிரீடத்தைச் சற்றே மறைத்தது. மகா சக்தியின் கழுத்திலிருந்த தாழைகளையும் சிறிது மறைத்துத் தொங்கிய செண்பக மலர்களின் மஞ்சள் கலந்த சிவப்பு, காலையின் சிவப்பையும் மாலையின் மஞ்சளையும் நினைவுறுத்தின.



அம்பாளின் கணுக்கால்களுக்கு மட்டும் பூச்சரங்கள் இல்லை, இரண்டு மாணிக்கத் தண்டைகள் அவற்றைத் தழுவி நின்ற காரணத்தால். ஆனால் அருள் கைகளின் மணிக்கட்டுகளுக்கு மட்டும் பவழமல்லி வளையங்களை ஆசார்யர் அணிவித்திருந்தார். இத்தனைக்கும் சிகரம் வைக்கும் முறையில் அம்பிகையின் அபிஷேக பீடத்தில் அவள் பாதங்களுக்குக் கீழே இரண்டு பெரும் தாமரை மலர்களை நன்றாகப் பிரித்து மகரந்தம் புலனாகும் வகையில் வைத்திருந்தார் ஆசார்யர்.

இவ்வளவு அலங்காரங்களையும் அள்ளிப் பருகிய பல்லவ இளவல் ஆசார்யரையும் பார்த்தான். அம்பிகையின் பரம பக்தரும், அம்பிகையுடன் இராக் காலங்களில் நேரிடையாகப் பேசுகிறவரென்று பிரசித்தி பெற்றவரும் பேரரசர்களின் மணிமுடிகள் பல பாதத்தில் படப்பெற்றவரும் மகாயோகியென்று பெயர் பெற்றவரும், காளிதாசனுக்கு ஈடாகச் சொல்லப்பட்டவருமான மகாகவி தண்டி, கண்களை மூடிக்கொண்டு அம்பிகையைப்போலவே பத்மாஸனம் போட்டு அம்பிகைக்கு வலது புறத்தில் வியாக்ராசனத்தில் அமர்ந் திருந்தார். ஸ்நானம் செய்த பின்பு பூஜையை முன்னிட்டு வாரப்படாத தால் சற்று நனைந்து ஒட்டிக்கிடந்த குழல்கள் கூட அவருக்கு ஒரு கம்பீரத்தை அளித்திருந்தன. இடையின் பஞ்சகச்ச ஆசாரவேஷ்டியும் அதை இணைத்துப் பிடித்திருந்த உத்தரீயமும், உடலெங்கும் பூசப்பட்ட திருநீறும், நெற்றியில் துலங்கிய கோபீ சந்தனமும் அவருக்கு ஒரு தெய்வீகத் தன்மையை அளித்திருந்தன. இத்துடன் பக்தியும் வித்தையும் அளித்த ஞான ஒளி அவர் முகத்தில் வீசிக் கொண்டிருந்தது. மூடிய அவர் கண்களும் அம்பிகையின் கண்களைப் போலவே மூடியநிலையிலும் உள்ளிருந்து பார்ப்பவை போல் தோன்றின. 'ஜீவாத்மா பரமாத்மாக்கள் ஒன்றுபடும் நிலையென்பது இதுதான் போலும்!' என்று எண்ணினான் பல்லவ இளவல்.

அந்தச் சமயத்தில் ஆசார்யரின் உதடுகள் திறந்தன மீண்டும் பீஜாக்ஷரமொன்று உதிர்ந்து, 'ஓம்...' என்ற பிரணவ சப்தத்தைத் தொடர்ந்து 'ஹௌம்' என்ற சப்தம் தீர்க்கமாக எழுந்தது. ராஜ மோகினியும் உச்சஸ்தாயியில் இணைந்தாள். இந்த சிவபீஜாக்ஷரியும், துர்க்கையை அழைக்கும் 'தும்' என்ற பீஜாக்ஷரியும், மஹாமாயையை விளிக்கும் 'க்ரீம்', 'ஹ்ரீம்' என்ற பீஜாக்ஷரிகளும் தீர்க்கமாக ஒன்றன்பின் ஒன்றாக எழுந்தன. பிராணயாம பாணியில் சுஸ்வரத்தில் ஆசார்யரும் ராஜமோகினியும் சேர்ந்து கிளப்பிய த்வனிகள், அந்த அறையையே த்வன்யாலோகமாக அடித்ததால் பல்லவ இளவகலின் இதய இக இருளும் கிழிக்கப்பட்டு அவனும் அம்பிகையின் மோகன அருள் வடிவத்தில் கண்களைப் புதைத்தான். கைலாசநாதர் கோவில்

கட்டும்போது இப்படி ஓர் அம்பிகையையும் அதில் சிருஷ்டிக்கிறேன் என்றும் மனத்துள் சொல்லிக் கொண்டான்.

அவன் என்ன சொல்லிக் கொண்டாலும் அதைப் பற்றி ஆசார்யரோ அந்த ராஜமோகினியோ கவனிப்பதாகத் தெரியவில்லை. இருவரும் கண்களை மூடியவண்ணம் பீஜாக்ஷரங்களைத் திரும்பச் திரும்பச் சொல்லி அந்த அறையை நாதமயமாக அடித்துக் கொண்டிருந்தார்கள் பல விநாடிகள். பிறகு ஆசார்யர் கண்களைத் திறந்து ராஜமோகினியைப் பார்த்து, ''தேவி! நீ நீண்ட நாளாகக் கேட்டுக் கொண்டிருந்தது இன்று பூர்த்தியாகப் போகிறது'' என்றார்.

ரங்கபதாகாதேவியின் கமலக் கண்களும் திறந்தன. செம்பவள உதடுகள் மரியாதையுடன் விரிந்தன, ''பாக்யம் ஸ்வாமி'' என்ற சொற்களையும் உதிர்த்தன.

''பீஜாக்ஷரங்களின் உட்பொருளை அறியப் பிரியப் பட்டிருக்கிறாய் தேவி'' என்றார் ஆசார்யர்.

''ஆம் ஆசார்யரே.''

''அதற்கு இன்று அம்பாள் சம்மதித்துவிட்டாள்.''

''பாக்யம்.''

''கேள் மகளே! பீஜாக்ஷரங்களைப் பக்குவமில்லாதவர்களுக்குச் சொல்லக்கூடாதென்பது சாஸ்திரம். இப்பொழுது ஒரு மண்டலப் பூஜை பூர்த்தியாகிவிட்டது. உனக்கு இதுவரையில் சொல்லியிருப்பது பிரணவத்தைத் தவிர நான்கு பீஜாக்ஷரங்கள்.''

''ஆம் ஸ்வாமி.''

''இதுவரையில் அவற்றுக்கு உனக்கு விளக்கம் சொல்ல வில்லை.''

''இல்லை.''

இதற்குப் பின்பு சிறிது மௌனம் சாதித்த ஆசார்ய தண்டி எதிரேயிருந்த கட்டிலிருந்து சாதித்த பில்வங்களையும் புஷ்பங் களையும் எடுத்து அம்பிகையின் பாதங்களில் போட்டார். பிறகு அம்பிகையைப் பார்த்துக் கொண்டே சொன்னார்:

*'தேவி! முதலில் 'ஹௌம்' என்பது சிவ பீஜாக்ஷரி. 'ஹ' என்பது சிவம். ஆவ் என்பது சதாசிவம். மேலே உம் என்பதற்கு அடையாள மாகப் போடும் புள்ளி சூன்யத்தைக் குறிக்கும். அதாவது துக்கத்தை

* *Tantra Sastra-Garland of Letters–By Sir John Woodroffe–P.P. 290-91*



சூன்யமாக்கும் என்பது பொருள். இது சிவ மந்திரம். இரண்டாவது 'தும்' என்பது துர்க்கா மந்திரம் தா என்பது துர்க்கை. உ என்பது காப்பாற்று. 'ம்' என்ற பிந்து பிரார்த்தனையைக் குறிக்கிறது. மூன்றாவதான 'க்ரீம்' என்ற பீஜாக்ஷரியில் 'க' காளியையும் 'ரா' பிரும்மாவையும், 'ய' மஹா மாயையும் குறிக்கும். 'ம்' என்ற பிந்து தக்க சம்ஹாரத்தைச் சொல்லு கிறது. 'நான்காவதான 'ஹ்ரீம்' என்பதில் 'ஹ' சிவன் 'ரா' பிரக்ருதி, 'ஈ' மஹாமயா, 'ம்' என்ற பிந்து துக்க விநாசனத்தைக் குறிக்கும். இவைதான் பொருள். பீஜாக்ஷரிகள் ஒவ்வொன்றிலும் உலக க்ஷேமம் அடங்கிக் கிடக்கின்றது. அவை எல்லாவற்றிலும் சந்திர பிந்துவான மகாசக்தியே ஊடுருவிக் கிடக்கிறாள். மகா சக்தியே பரமேச்வரி, பரமேச்வரியே அம்பிகை, அம்பிகைக்கு மேல் எதுவுமில்லை, சக்திக்கு மேல் என்ன இருக்க முடியும்?''

இந்த சொற்களை நிதானமாகவும், உணர்ச்சி தொனித்த குரலிலும் சொன்ன ஆசார்யர் அம்பிகையின் பாதங்களிலிருந்து இரண்டு புஷ்பங்களை எடுத்து ரங்கபதாகாதேவியின் சிரத்தில் எறிந்தார். அடுத்தபடி வில்வங்களையும் புஷ்பங்களையும் எடுத்து அர்ச்சனையில் இறங்கினார். அம்பிகையைப் பற்றிய அஷ்டோத்திரம் முடிந்ததும் தீபாலங்கார சமயத்தில் சீடர்கள் மந்திரத்தால் அழைக்கப் பட்டவர்கள் போல் உள்ளே நுழைந்தார்கள். பூஜை மணியை ஒரு சீடன் அடிக்க இன்னொருவன் ஆரத்தி எடுத்துக் கொடுக்க, தீபதரிசனம் நடந்தது. தீபத்தில் அம்பாளின் கண்கள் ஆசார்ய தண்டியை மிகுந்த அருளுடன் நோக்குவது போல் பளபளத்தன. அவள் மூடிய கமலக் கண்களில் தெரிந்தது தங்கத்தில் பிரதிபலித்த தீபத்தின் ஒளியா உள்ளிருந்து ஆசார்யருக்கு மட்டுமே தெரிந்த அருள் ஒளியா என்பது விவரிக்க இயலாததாயிருந்தது. இப்படி சுமார் இரண்டரை நாழிகை நேரம் பூஜையை முடித்த ஆசார்யர் எல்லோருக்கும் அம்பாள் குங்குமத்தையும், புஷ்பவில்வப் பிரசாதங்களையும் அளித்த பிறகு சற்று விச்ராந்தியாகப் பின்னாலிருந்த சங்கூடு மணையில் சாய்ந்து கொண்டார். ''சரி, படி மகளே!'' என்று ராஜமோகினிக்குக் கட்டளையும் இட்டார். அவள் சிக்குப் பலகையிலிருந்த சுவடிகளைப் படித்துக் கொண்டிருந்த போது, ''ராஜசிம்மா! நீயும் உட்கார்'' என்று பல்லவ இளவலுக்கு உத்தரவிட்டு, மற்றச் சீடர்களையும் உட்காரக் கையால் சமிக்ஞை செய்யவே, எல்லோரும் பயபக்தியுடன் கைகட்டி உட்கார, ரங்கபதாகாதேவி படிக்கத் தொடங்கினாள். அவள், படிக்கத் துவங்குமுன்பாக ராஜசிம்மனைப் பார்த்து சொன்னார், ''ராஜசிம்மா! இப்பொழுது தேவி முன்பு காவ்யா தர்சம் படிக்கிறோம்'' என்று.

அதுவரையில் பிரமையில் ஆழ்ந்திருந்த ராஜசிம்மன் மெல்ல வாயைத் திறந்து, ''அப்படி ஒரு காவியம் நீங்கள் புனைந்திருப்பதாகச் சொல்கிறார்கள்'' என்றான்.

''அது அலங்கார சாஸ்திரம். காவ்யத்துக்கு ஆதாரமாக விளங்குவது. அதாவது காவியம் புனைய வழிகாட்டுவது இலக்கணம் வகுப்பது'' என்று விளக்கினார் தண்டி மகாகவி. அத்துடன் சொன்னார், ''எல்லோரும் தலைவணங்குங்கள், முதல் சுலோகம் சரஸ்வதி ஸ்தோத்திரம்'' என்று.

எல்லோரும் தலைவணங்கிய நிலையில் ரங்கபதாகா தேவி படித்தாள்.

சதுர்முக முகாம்போஜ வனஹம்ஸ வதுர்மம்
மானஸே ரமதாம் நித்யம் ஸர்வ சுக்லா சரஸ்வதி

இந்த வடமொழி சுலோகத்தை மிக மதுரமாகப் படித்தாள் ராஜமோகினி. ''நான்முகனான பிரும்மாவின் முகத் தாமரையிலே விளையாடும் சரஸ்வதியாகிற அன்னப் பறவை என் மனமாகிற தாமரைத் தடாகத்திலும் சஞ்சரிக்கட்டும்'' என்று பொருள் சொன்னார் ஆசார்யர் அந்த சுலோகத்துக்கு. பிறகு, ''மகளே! இன்றைக்கு எந்த் சுலோகம் படிக்க வேண்டும் நீ?'' என்றும் வினவினார்.

ரங்கபதாகாதேவி பதில் சொல்லவில்லை. தலையைக் கவிழ்ந்த வண்ணம் எதிரேயிருந்த சுவடியை நோக்கினாள். வெட்கத்தால் அவள் முகமலர் அம்பாளின் திருவடியிலிருந்து மலர்ந்த தாமரை யெனச் சிவந்தது.

''முதல் பரிச்சேதத்தில்...''

''முதல் பரிச்சேதத்தில்?''

''எண்பத்து ஏழாவது சுலோகம்.''

இதைக் கேட்ட ஆசார்ய தண்டி ரங்கபதாகாதேவியை அருள் கண்களால் பார்த்தார். ''தேவி! அந்த சுலோகத்தைப் படி'' என்று கண்டிப்பான குரலில் கூறினார்.

''ஆண் பிள்ளைகள் முன்பு எப்படிப் படிப்பேன்?'' என்று கேட்டாள் ரங்கபதாகாதேவி கண்களைச் சுவடியை விட்டு எடுக்காமலே.

''இங்கு ஏது ஆண்பிள்ளை?'' என்று வினவினார் ஆசார்யர்.

''ஆசார்யர், இளவரசர், சிஷ்யர்கள்...''

''இந்த அறைக்கு வெளியில்தான் அவர்கள் ஆண்பிள்ளைகள், மகாசக்திக்கு முன்பு எல்லோரும் பெண்கள்தான். இங்கு நாணத்துக்கோ



மற்ற மனித உணர்ச்சிகளுக்கோ இடமில்லை. காவ்யம் அம்பாளின் திருவடிகளில் சமர்ப்பிக்கப்படுகிறது' என்றார் தண்டி.

''என்னால் முடியவில்லை, ஆசார்யரே இந்த இடம் மிகவும்...'' என்று துவங்கினாள்.

''மோசமாயிருக்கிது என்கிறாய், முட்டாள்களைப் போல் பேசாதே தேவி. காவிய கர்த்தாக்கள் காமுகர்களல்ல. உத்தம காவியத்தில் விரசம் கிடையாது. ஆண் பெண் உறவைப் பற்றிய இச்சையில்லாமல் கவி புனைகிறான் கவிதையை'' என்று கடிந்த தண்டி மகாகவி மேலும் சொன்னார்: ''பெண்ணே! சாதாரண மனித நியாயங்களைப் பிரயோகித்தால் மகரிஷிகளின் காவியங்களையும், காளிதாசன் போன்ற மகாகவிகளின் சிருஷ்டிகளையும் உடைப்பில்தான் போட வேண்டும். தற்காலத்தில் தர்மவேஷம் போடும் இரண்டுங் கெட்டான் கவிஞர்களும், அவர்களுடைய மூன்றாந்தரப் படைப்பு களுந்தான் மிஞ்சும். பெரிய பொக்கிஷங்களை நாம் கைவிட முடியாது. விஷய சித்தமில்லாதவன் எதையும் ஆராயலாம். அனுமான் ராவண கிருகத்தில் நிலைகுலைந்த எத்தனை அழகிகளைப் பார்த்தான்? மனவிகாரப்பட்டானா? அதை எழுதிய மகரிஷிக்குத்தான் காம விகாரமா? சீச்சீ! இதையெல்லாம் விடு. படி எண்பத்து ஏழாவது சுலோகத்தை.''

அதற்கு மேல் ஏதும் சொல்ல முடியாமல் படித்தாள் மெல்ல. அதில் தண்டி எழுதியிருந்தார், ''அழகின் இலட்சியமான யௌவன ஸ்திரீயின் மார்பு இரண்டும் விம்மியும் விரிந்தும் சென்றன. அதிகமாக விரிந்திருக்கும் இருபுறங்களிலும் இரண்டு கைகளாகிய கொடிகள் அப்புஷ்பச் செண்டுகளுக்கு அணை போடாதிருந்தால்...'' என்று அந்த சுலோகத்தை மிக ஈனஸ்வரத்தில் படித்தாள் ரங்கபதாகாதேவி.

அதைக் கேட்டுப் பல்லவ இளவல் பரவசப்பட்டுக் கிடந்தான். விகாரம் ஏதும் தொன்றவில்லை அவனுக்கு. ரங்கபதாகாதேவியின் அழகுகூட அவன் கண்களுக்கு ஏதோ தெய்வீகமாகத் தோன்றியது.

இப்படி அரை நாழிகை சென்றதும் தண்டி ரங்கபதாகாவைப் பார்த்து, ''தேவி, தமிழ்ப் பாசுரம் ஒன்று சொல்'' என்றார்.

இப்பொழுது குறுக்கிட்டான் ராஜசிம்மன், ''ஒரு நாயகமாய் என்று ஒரு பாட்டிருக்கிறது'' என்று.

ஆசார்ய தண்டியின் அதரங்களில் புன்னகை பூத்தது. ''உன்னைச் சுட்டிச் சொன்னாளே அந்தப் பாசுரமா? சரி, அந்தக் கவிதையைச் சொல் இளவரசி'' என்று கூறினார்.

ரங்கபதாகாதேவியின உதடுகளில் அப்பொழுதுதான் புன்னகை அரும்பியது. மெல்ல மெல்லப் பேசத் துவங்கி, கதை ஏகசக்கராதி பதியாய், உலகெல்லாம் அவன் பின்னால் ஓட ஆண்டு வந்தான். அப்படி உலகுடன் ஆண்டவன் நாடிழந்து பிச்சையெடுக்க முற்பட்டு எதிரிக்குப் பயந்து நிலவில் நடவாமல் தாழ்வரை நிழலில் நடந்து வந்தான். நிழலில் பதுங்கி இருந்த கறுப்பு நாயொன்று அவன் காலைக் கவர்ந்தது. அதனால் கையிலிருந்த சட்டியையும் கீழே போட்டான். சிதைந்தது அந்தப் பானையும். அவன் திருநாரணன் தாள் பற்றியிருந்தால் இந்தக் கதி அவனுக்கு நேர்ந்திருக்காதே...''

''கவிஞர்களையும் இன்பரசங்களையும் பற்றி நினைத்தாயே தேவி. இந்தக் கவிதைக்கு என்ன சொல்கிறாய்? பல்லவ காஞ்சி விக்கிரமாதித்தன் கைக்குச் சிக்கப் போவது நம்மாழ்வாருக்குத் தெரியுமா? அல்லது பல்லவ இளவல் தாழ்வரை இருளில் மறைந்து வருவானென்பது தெரியுமா? கவிகள் காலத்துக்கு அப்பாற்பட்ட வர்கள். அவர்கள் எழுதுவதெல்லாம் சத்தியம், ரசம், புரிந்துகொள் தேவி. காவியங்களை இப்பொழுதுள்ள அல்ப புத்திகளைக் கொண்டு எடை போடாதே'' என்றார் தண்டி மகாகவி.

எல்லோரும் நமஸ்கரித்தார்கள். ஆசார்யரும் நமஸ்கரித்தார்.

அவருக்குப் பக்கத்தில், அறைக்குள் புதிதாக வந்து வாயிற் படியில் நீண்ட நேரம் பயபக்தியுடன் நின்றிருந்த இன்னொரு வரும் நெடுஞ்சாண் கட்டையாக விழுந்து நமஸ்கரித்தார் ஆசார்யர் அவரைப் பார்த்த பார்வையிலிருந்து அவர் வரவு ஆசார்யருக்கு அவ்வளவு திருப்தியளித்ததாகத் தெரியவில்லை. அவரை ஆசார்யர் ராஜசிம்மனுக்கு வறண்ட குரலில் அறிமுகப்படுத்தினார்: ''ராஜசிம்மா! இவர்தான் ஸ்ரீராம புண்ய வல்லபர்.''

ராஜசிம்மன் முகத்தில் கேள்விக் குறி எழுந்தது. அதைக் கவனித்த தண்டி, ''நீங்கள் சாம்ராஜ்யம் இழந்ததற்குக் காரணம் புருஷர் இவர்தான்'' என்று கூறினார்.

# 25. கடைசியில் ஒரு கணைவீச்சு

**அ**ம்பிகையின் பூஜையும் பிரணவ பூஜாக்ஷரிகளின் விவரணமும் முடிந்த பிறகு மற்றவர்களை வெளியே போகச் சொல்லிக் கை காட்டிய ஆசார்ய தண்டி தாம் மட்டும் பூஜாக் கிரகத்திலேயே தங்கிவிட்டார் அதன் விளைவாக மற்றவர்களுடன் வெளியே வந்துவிட்ட பல்லவ இளவல். அந்த இடத்திலிருந்து நேராகத் தானிருந்த அறைக்கு வந்து தீர்க்கமான யோசனையில் இறங்கினான்.



சாளுக்கிய வீரர்கள் தன்னை எங்கு பார்த்தாலும் நிச்சயமாக ராஜ வீதியில் எதிர்பார்க்க மாட்டார்களென்றும், அப்படி ராஜவீதியில் எதிர்பார்த்தாலுங்கூட நிச்சயமாகத் தண்டி மகாகவியின் வீட்டில் எந்தக் காரணத்தைக் கொண்டும் எதிர்பார்க்க மாட்டார்களென்றும் நம்பியிருந்ததற்கு முற்றும் மாறாக விக்கிரமாதித்தன், ஆசார்யரின் மாளிகையைச் சுற்றிக் கண்காணிப்பாளரை நிறுத்தி விட்டது மிக விசித்திரமாயிருந்தது இளவரசனுக்கு, அதுவும் ஆசார்யருடைய மாளிகையே தனக்குச் சிறைக் கூடமாக அமையக் கூடுமென் பதையோ, அங்கு கங்க மன்னன் மகள் வசிப்பாளென்பதையோ அவன் சொப்பனத்தில்கூட நினைக்காததால் பெரிய இக்கட்டில் தான் சிக்கி விட்டதை எண்ணிப் பிரமிக்கத் தொடங்கினான்.

தவிர, கங்கநாட்டு மன்னனுக்கு மகளொருத்தி இருப்பதாக அவன் கேள்விப்பட்டதில்லையாகையால் இவள் யார், எங்கு வந்தாள் என்றும் தன்னை விசாரித்துக் கொண்டான். கங்க நாட்டு மன்னனும் விக்கிரமாதித்த பூபதியின் உயிர்த் தோழனுமான பூவிக்கிரமனுக்கு இவள் மகளில்லையென்றாலும் அந்த வம்சத்தில் ஏதாவது ஒரு கிளைவழிப் பெண்ணாக இருக்க முடியுமென்று ஊகித்தான். எப்படியும் ஆசார்யர் சொன்னதில் தவறு இருக்கமுடியாது என்ற முடிவுக்கே இறுதியில் வந்தான்.

'ஆனால் பூஜையின் கடைசியல் வந்தாரே அந்த மனிதர், அவர் தான்* ஸ்ரீராம புண்யவல்லபர், அவர் யார்? விளக்கிச் சொல்லவில்லையே ஆசார்யர். அவர்தான் நாங்கள் சாம்ராஜ்யம் இழந்ததற்குக் காரண புருஷர் என்று ஆசார்யர் சொன்னாரே, எந்தக் காரணத்தால் சொன்னார்? அவர் என்ன பிரதான படைத்தலைவரா? படைத் தலைவராயிருந்தால் எனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே? ஆனால் அவர் - அந்த மனிதர் கிட்டத்தட்ட ஆசார்யர் தோற்ற முள்ளவர் - எத்தனை கம்பீரம்! எத்தனை உயரம்! என்ன நீண்ட கைகள்!'' என்று அந்த மனிதரைப் பற்றிய எண்ணங்களில் திளைத்தான். அவரைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் மட்டும் அவனுக்கு அதிகமாயிருந்தது. பல்லவ சாம்ராஜ்யத்தின் பிற்கால ஸ்திதியை நிர்ணயிக்க வல்லவர்களில் ஸ்ரீராம புண்ய வல்லபர் முக்கிய ஸ்தானம் வகிப்பார் என்ற தீர்மானம் அவன் மனத்தில் ஏற்பட்டுவிட்டது.

* *ஸ்ரீராம புண்ய வல்லபர், விக்கிரமாதித்தனிடம், போரையும் அமைதியையும் நிர்ணயிக்கும் மந்திரியாக இருந்தார். -Indian Antiquary Vol. VI-Page 88 JAS. BURGESS M.R.A.S.F.R G.S.*

அவன் ஆவல் அடுத்த சில நாழிகைகளுக்குள் பூர்த்தி செய்யப்பட்டது. ஆசார்யர் தியானத்தை முடித்துக் கொண்டு தமது அறைக்கு இளவரசனை அழைத்து வரச் சீடன் ஒருவனை அனுப்பினார். சீடனைத் தொடர்ந்து ஆசாரியர் அறைக்குள் நுழைந்த பல்லவ இளவல் ஒரு விநாடி பிரமித்தான். ஸ்ரீராமபுண்யவல்லபர் ஆசார்ய தண்டிக்குச் சமதையாக அவரது கிருஷ்ணாஜினத் தின் ஒரு பகுதியில் உட்கார்ந்திருந்தார். விக்கிரமாதித்த மகாராஜாகூட அமர முடியாத இடத்தில் ஸ்ரீராமபுண்யவல்லபர் அமர்ந்ததைப் பார்த்த பல்லவ இளவல் அவரையும் நோக்கிப் பிறகு தண்டியையும் நோக்கினான். ஸ்ரீராம புண்ய வல்லபர் சாதாரணமாக இரு கால்களையும் மடக்கிப் பத்மாசனம் போட்டதுபோல் உட்கார்ந்திருந் தாலும் அவர் நல்ல ஆஜானு பாகுவான சரீரத்தைப் பெற்றிருந்ததால் உட்கார்ந்த நிலையிலும் மிக உயரமாகத் தெரிந்தார். அவருடைய உடலுக்குக் குறுக்கே ஓடிய பெருமதிப்புள்ள யோக வேஷ்டி அதிக நீளமாயிருந்தும் அவருடைய நீண்ட உடலுக்குப் போதாததாயிருந்தது. அவருடைய மற்ற எலும்புகள் அதிகமாக வெளிக்குத் தெரிந்ததால் அவர் இளைத்தவர்போல் காணப்பட்டாலும் உடலின் வலு அசாதாரணமானது என்பதைப் பல்லவ இளவல் கண்ணோட்டத்தி லேயே புரிந்து கொண்டான்.

க்ஷத்திரியர்களின் தலைக் குழல்களைப் போல காகபக்ஷகங் களாக வெட்டிவிடப்பட்ட தலை முடி அலைந்து கிடந்த முறையிலும் ஓர் அலட்சியம் தெரிந்தது. அந்த அலட்சியம் முகத்திலும் கண்களிலும் கூட நன்றாகத் தெரிந்தது. கண்களில் அலட்சியத்தோடு யாரும் நிர்ணயிக்க முடியாத ஆழமும் இருந்தது. பாரத நாட்டின் பெரிய ராஜதந்திரி யொருவரின் முன்பு தான் நிற்பதைச் சில விநாடிகளுக்குள் புரிந்து கொண்டான் ராஜசிம்மன்.

ஸ்ரீராமபுண்ய வல்லபரைப் பல்லவ இளவல் அணு அணுவாக எடை போடுவதைப் பார்த்த ஆசார்ய தண்டியின் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது இளவரசன் உட்கார எதிரேயிருந்த ஓர் ஆசனத்தைக் காட்டிவிட்டு அவன் அதில் அமர்ந்ததும், ''ராஜசிம்மா! ஸ்ரீராமபுண்ய வல்லபரைப் பற்றி நீ கேள்விப்பட்டிருக்க மாட்டாய்'' என்று சொன்னார்.

''இல்லை, கேள்விப்பட்டதில்லை'' என்று பணிவுடன் கூறினான் பல்லவ இளவல்.

''நீ என்ன, அநேக நாடுகளில் இவரைத் தெரியாது'' என்று மீண்டும் சொன்னார் தண்டி.



''அப்படியா?'' ஆசார்யாருக்குப் பதில் சொல்லாதிருப்பது சரியல்ல என்பதற்காக அந்தச் சம்பிரதாய வார்த்தையைச் சொன்னான் இளவரசன்.

ஆசார்ய தண்டி இளவரசனை அன்புடன் நோக்கினார். ''ராஜசிம்மா! விக்கிரமாதித்தன் பல்லவ காஞ்சிமீது படையெடுக்கப் போவது எத்தனை காலமாகத் தெரியும் உன் தந்தைக்கும் உனக்கும்?'' என்றொரு கேள்வியையும் கேட்டார்.

''இரண்டு மாதங்களாகத் தெரியும்'' என்று ராஜசிம்மன் விடை பகர்ந்தான், அந்தக் கேள்விக்குக் காரணத்தை அறியாமல்.

''இரண்டு மாதங்கள் உங்கள் ஒற்றர்கள் சாளுக்கிய நாட்டிலிருந்து செய்தி அனுப்பியிருக்கிறார்கள்.''

''ஆம்''

''ஆனால் அந்தச் செய்திகளுக்கு ஆதாரங்கள், அதாவது படை திரட்டுதல், ஆயுதங்கள் தயாரித்தல் முதலிய விவரங்கள் ஏதாவது கிடைத்தனவா?''

''இல்லை. சாளுக்கியர் படையெடுக்கப் போகிறார்கள் என்ற செய்தி மட்டுமே கிடைத்தது.''

ஆசார்யர் இளவரசனை உற்று நோக்கினார். ''நீங்கள் இன்னொரு நாட்டின் மீது படையெடுப்பதாகத் திட்டம் போட்டால் என்ன செய்வீர்கள்?'' என்று வினவினார்.

இளவரசன் தங்கு தடையின்றிச் சொன்னான்: ''முதலில் படைவீரர்களை அந்தந்தத் தளங்களில் திரள உத்தரவு அனுப்புவோம். ஆயுதப் பட்டறைகளில் அதிக ஆயுதங்கள் தயார் செய்யவும் உத்தரவிடுவோம். நமது படைகள் வெளிநாடு செல்லும்போது உள்நாட்டைக் காக்கும் ஏற்பாடுகளையொட்டி அணி வகுப்புக்கள் நடக்கும். எதிரிப் படையெடுப்பு ஏற்படும் பட்சத்தில் மக்கள் தற்காப்புக்கு என்ன செய்து கொள்ள வேண்டும் என்றும் கற்பிக்கப்படும். ஏராளமான ஏற்பாடுகள் செய்யப்படும்.''

இதை நிதானமாகக் கேட்டுக் கொண்ட ஆசார்ய தண்டி ''இந்த ஏற்பாடுகள் இல்லாமல் படையெடுப்பு நடக்காதா?'' என்று வினவினார்.

''நடக்காது'' திட்டமாகச் சொன்னான் ராஜசிம்ம பல்லவன்.

''இந்த ஏற்பாடுகள் சாளுக்கிய நாட்டில் நடந்ததாகக் கேள்விப்பட்டாயா?''

''இல்லை. ராணுவ அணிவகுப்பு அடிக்கடி நடந்தது.''

''ஆயுத சேகரிப்பு இல்லை, உணவு சேகரிப்பு இல்லை. ரதங்கள் புதிதாக நிர்மாணிக்கப்படவில்லை. ஆனால் படையெடுப்பு நடந்திருக்கிறது. அதுவும் யாரும் அசைக்க முடியாத பல்லவ காஞ்சி மீது. எப்படி ஏற்பட்டது ராஜசிம்மா?''

இந்தக் கேள்வியைச் சர்வ சாதாரணமாகத்தான் கேட்டார் ஆசார்யர் அதற்குப் பதிலேதும் சொல்ல முடியவில்லை ராஜசிம்ம னால். ஆசாரியரே பதில் சொன்னார்: ''ராஜசிம்மா! சாளுக்கிய நாட்டில் நடக்க வேண்டிய முக்கால்வாசி ஏற்பாடுகள் கங்க நாட்டில் நடந்தன. தானிய வண்டிகளைக் கங்கன் செய்து கொடுத்தான். ஆயுதங்களையும் செய்து நிரப்பினான். மேலைச் சாளுக்கியர் படை பலம் ஏற்கனவே பெரிது. அவற்றுக்குச் சாதனங்கள் தான் தேவை. அதைக் கங்கன் கொடுத்தான். கங்க நாட்டில் இந்த ஏற்பாடுகள் நடந்ததால் சாளுக்கிய நாட்டிலிருந்த பல்லவ ஒற்றர்கள் முழு உண்மையை, சாளுக்கியப் படையின் முழுப் பலத்தை உணர முடியவில்லை. ஒரு லட்சம் வீரர்கள் கொண்ட சாளுக்கியப் படை கிளம்பிப் பாதிதூரம் வந்த பிறகு தானிய வண்டிகளும், ஆயுத வண்டிகளும், வேலெறியும் யந்திர வண்டிகளும் படையுடன் கலந்து கொண்டன. உங்களுக்கு முழு உண்மை புரியுமுன்பாகக் காஞ்சிக்கு வெகு அருகில் விக்கிரமாதித்தன் வந்து விட்டான்.''

இப்படிச் சாளுக்கிய வெற்றியின் ரகசியத்தை, படையெடுப் பின் மர்மத்தை விளக்கிய ஆசார்ய தண்டி, ''இந்த மர்மத்தின் காரண புருஷர் இதோ இருக்கிறார்'' என்று ஸ்ரீராமபுண்ய வல்லபருக்காகக் கையைக் காட்டினார்.

ஸ்ரீராமபுண்ய வல்லபர் எதுவும் பேசாமல் மௌனமாகவே உட்கார்ந்திருந்தார். ராஜசிம்ம பல்லவன் அவரை ஏறெடுத்து நோக்கியபோது அவரது கண்களும் அவனை நிர்மலமாகவே சந்தித்தன. உதடுகள் மட்டும் கூறின, ''யுத்தங்களில் ஜயாபஜயம் சர்வ சாதாரணம்'' என்று.

அவரது அடக்கத்தை கண்டு வியந்தான் ராஜசிம்மன். ''விக்கிரமாதித்த மன்னனிருக்கத் தாங்கள் எதற்காகப் போர்த் திட்டங்களை வகுக்க வேண்டும்? ஆசார்யர்களின் அலுவல் அதுவல்லவே?'' என்று கேட்கவும் செய்தான்.

இந்த இடத்தில் தண்டி மகாகவி இடை புகுந்து, ''ராஜசிம்மா! இவர் விக்கிரமாதித்தனின் ஆசார்யரல்ல'' என்று கூறினார்.

''அப்படியானால், இவர்?''



''போர் மந்திரி.''

தண்டியின் இந்தப் பதிலைக் கேட்டதும் ராஜசிம்மனின் வியப்பு உச்ச நிலைக்குச் சென்றது. மந்திரிகளுக்குண்டான எந்த லட்சணமும் இல்லை உடையுமில்லை ஸ்ரீராம புண்ய வல்லபருக்கு. ''போர் மந்திரி என்றால் போர் வல்லமை வேண்டுமே. இவரைப் பார்த்தால் அந்தச் சம்பந்தம் எதுவும் இருப்பதாகத் தெரிய வில்லையே?'' என்று நினைத்தான் ராஜசிம்மன்.

அப்பொழுது ஸ்ரீராமபுண்ய வல்லபர் சொன்னார், ''பல்லவ இளவரசனே! போருக்கும் ஆயுதங்களுக்கும் உடைக்கும் உள்ள சம்பந்தங்களைவிட போருக்கும் தந்திரத்திற்கும் அதிக சம்பந்தமுண்டு. போருக்கும் பூசலுக்கும் உள்ள சம்பந்தத்தைவிடப் போருக்கும் அமைதிக்கும் சம்பந்தமுண்டு. அதனால்தான் மந்திரியாக இருக்கிறேன், அமைதிக்கும் மந்திரியாக இருக்கிறேன்'' என்று.

ராஜசிம்மன் கண்கள் அவரை ஏறெடுத்து நோக்கின. ''சுவாமி, போரும் அமைதியும் நேர் எதிரான அம்சங்களாயிற்றே! இரண்டுக்கும் நீங்கள் பொறுப்பாளியென்றீர்களே?'' என்று வினவினான்.

ஸ்ரீராமபுண்ய வல்லபர் சொன்னார்: ''இளவரசனே! உலகில் சுகம் முக்கியம், போர் முக்கியமல்ல. ஆனால் மனித ஆசை போர்களைத் தூண்டுகிறது. ஓர் அநீதி இன்னோர் அநீதிக்கு இடம் கொடுக்கிறது. உனது பாட்டன் நரசிம்மவர்மன் நாட்டாசையால் புலிகேசிமீது போர் தொடுத்தான். வாதாபியை அழித்தான். அதற்குப் பழி வாங்கப் புலிகேசி மகன் உன் தந்தை மீது போர் தொடுத்துக் காஞ்சிக்குள் நுழைந்திருக்கிறான். ஆசையும் வீண் கௌரவமும் மனிதனைப் பீடிக்கும் வரையில் போர்த் தொல்லை போகாது ஆனால் அந்தப் போர்களில் மனித சேதத்தைக் குறைப்பது, மற்ற நாசத்தை மட்டுப்படுத்துவது, மகளிர் மானத்தைக் காப்பது கண்ணியமானவர் களின் கடமை அந்தக் கடமையை நான் மேற்கொண்டிருக்கிறேன். அதனால் தான் கங்க மன்னனை மற்ற ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லி விக்கிரமாதித்தனைப் படையெடுக்கச் செய்தேன். எனக்குப் போரை விட அமைதி முக்கியம்.''

ஸ்ரீராமபுண்ய வல்லபரை நோக்கித் தலை வணங்கினான் இளவரசன், ''உங்களையும் ஆசார்யரையும் போன்றவர்களால் இந்தப் பாரதம் சிறப்படைகிறது'' என்றும் சொன்னான்.

அப்பொழுதுதான் ஆசார்யர் சம்பாஷணையில் மீண்டும் புகுந்து, ''ராஜசிம்மா! ஸ்ரீராமபுண்ய வல்லபர் இன்று இங்கு உன்னைத் தேடித்தான் வந்திருக்கிறார்'' என்று அறிவித்தார்.

திக்பிரமை கொண்டான் பல்லவ இளவல். ''என்னைத் தேடியா?'' என்று வியப்புடன் கேட்கவும் செய்தான்.

''ஆம்'' என்றார் ஆசார்யர்.

''நான் இங்கிருப்பது இவருக்கு எப்படித் தெரியும்?'' என்று மீண்டும் வினவினான் பல்லவ இளவல்.

''இந்த மாளிகை கண்காணிக்கப்பட்டிருக்கிறது என்று முன்னமே சொன்னேன். உனக்கு'' என்றார் ஆசார்யர்.

''ஆம்.''

''நீ இந்த மாளிகைக் கதவைத் தட்டியதும் செய்திபோயிருக்கும் போர் மந்திரிக்கு'' என்ற தண்டி, ''ராஜசிம்மா! ஸ்ரீராமபுண்ய வல்லபர் கண்ணில் படாத நிகழ்ச்சியோ, காதில் கேட்காத செய்தியோ காஞ்சியில் ஏதுமிருக்க முடியாது. என்றும் சுட்டிக் காட்டினார்.

ராஜசிம்ம பல்லவன் சிறிது நேரம் சிந்தனையில் இறங்கினான்'' பிறகு கேட்டான். ''சாளுக்கியப் போர் மந்திரிக்கு நான் செய்யக் கூடியது என்ன? சிறைப்படட்டுமா?'' என்று.

ஸ்ரீராமபுண்ய வல்லபரின் கண்கள் பல்லவ இளவலைக் கருணையுடன் நோக்கின. ''இப்பொழுது சிறையில் தானிருக்கிறாய் நீ? ஆகையால் இனிச் சிறைப்படுவது என்பது ஏதுமில்லை'' என்று சொன்னார்.

புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையசைத்தான் ராஜசிம்மன். ''வேறு நான் செய்யக் கூடியது என்ன இருக்கிறது?'' என்று வினவினான்.

ஸ்ரீராமபுண்ய வல்லபர் அவனை நீண்ட நேரம் உற்று நோக்கினார். ''நான் உனது எதிரியின் மந்திரி'' என்று மெல்லச் சொன்னார்.

அதை எதற்காகத் திரும்பச் சொல்கிறாரென்பதை அறியாத பல்லவ இளவல், ''ஆம்'' என்றான்.

''உனக்கும் உன் குலத்துக்கும்கூட நான் நன்மை செய்ய விரும்புகிறேன் என்று சொன்னால் உன்னால் நம்ப முடியுமா?'' என்று கேட்டார் விக்கிரமாதித்தனின் போர் மந்திரி.

இந்த விசித்திரக் கேள்வியைக் காதில் வாங்கியதால் வியப்பினால் கண்களை ஆசார்ய தண்டியின்மீது திருப்பினான் பல்லவ இளவல். ஆசார்ய தண்டியின் ஒளிவிழிகள் அவன் விழிகளுடன் நன்றாகக் கலந்தன. ''ஸ்ரீராம்புண்ய வல்லபர் மகானுபாவர். அவர் சொல்வதை நீ கண்டிப்பாய் நம்பலாம்'' என்று கூறினார் தண்டி.



''சரி நம்புகிறேன் சுவாமி! சொல்லுங்கள்!'' என்று கேட்டான் பல்லவ இளவல், எதிரியின் போர் மந்திரியை நோக்கி

போர் மந்திரி உடனடியாக ஏதும் சொல்லவில்லை. சிறிது நேரம் சிந்தித்தார். பிறகு கேட்டார்: ''ராஜசிம்மா! உன் தந்தை பரமேசுவர பல்லவர் இப்பொழுது எங்கிருப்பார்? உனக்குத் தெரியுமா?'' என்று.

''தெரியாது.''

''நான் சொல்ல முடியும்.''

''சொல்லுங்கள்.''

''கங்கநாட்டு எல்லையில் இருக்கிறார்.''

''அப்படியா!''

''ஆம்.''

''அங்கு என்ன செய்கிறார்?''

''படை திரட்டுகிறார்.''

''எதற்கு?''

''கங்க மன்னனை முறியடிக்க.''

இதைக் கேட்டதும் பிரமித்துப் போனான் பல்லவ இளவல். இந்தச் சமயத்தில் பூவிக்கிரமனுடன் போர் தொடுப்பது பரம நாசத்தை விளைவிக்கும் என்பதை அறிந்திருந்தபடியால் அவன் மனத்தில் சொல்லவொண்ணா துக்கம் சூழ்ந்தது. தனது தந்தையின் ஒவ்வோர் அசைவையும் கவனிக்கும் ஆற்றல் பெற்ற ஸ்ரீராமபுண்ய வல்லபரிடம் பெரும் கோபமும் உண்டாயிற்று அவனுக்கு. ஆனால் அதை வெளிக்குக் காட்டாமல், ''அதற்கு நான் என்ன செய்ய முடியும்?'' என்று வினவினான்.

''போரைத் தடை செய்ய முடியும்'' என்றார் போர் மந்திரி.

''எதற்காகத் தடை செய்ய வேண்டும்?''

''அனாவசியமான நாசத்தைத் தவிர்க்க. பூவிக்கிரமனை உனது தந்தை வெற்றி கொள்ள முடியாது.''

''என்ன அத்தனை நிச்சயமாகச் சொல்கிறீர்கள்?''

''தெரிந்ததால் சொல்கிறேன்.''

''எல்லாம் தெரியுமா உங்களுக்கு?''

''இந்தப் போரின் விளைவு நிச்சயமாகத் தெரியும்.''

''எப்படி?''

''உன் தந்தை எங்கு தாக்குவார், எப்படித் தாக்குவார், அதை எப்படிச் சமாளிக்க வேண்டும் என்ற திட்டத்தைத் தெளிவாக வகுத்து முன்னமே கங்க மன்னனிடம் கொடுத்திருக்கிறேன்.''

இதைக் கேட்ட ராஜசிம்ம பல்லவன் அடியோடு வியப்பின் வசப்பட்டு, பேச நா எழாமல் பல விநாடிகள் நின்றுவிட்டான். ''இப்பொழுது என்னிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டான் சீற்றத்துடன்.

''போரிட வேண்டாமென்று ஓர் ஓலை எழுதிக் கொடு உன் தந்தைக்கு'' என்று கேட்டார் ஸ்ரீராமபுண்ய வல்லபர்.

''முடியாது'' என்று திட்டமாக அறிவித்த ராஜசிம்மபல்லவன் சொன்னான். ''சாளுக்கியர் போர் மந்திரியாரே! வெகு சீக்கிரம் அறிந்து கொள்வீர்கள் உங்களைவிடப் போர்த் தந்திரம் தெரிந்தவர்கள் பல்லவ நாட்டிலிருப்பதை! சற்றுப் பொறுங்கள்'' என்று கூறினான் திட்டவட்டமாக. அவன் குரலில் சீற்றம் மண்டிக்கிடந்தது. கண்களில் கனல் பறந்தது.

ஸ்ரீராமபுண்ய வல்லபர் எந்தவிதப் பதற்றத்தையும் காட்ட வில்லை. அவன் சீற்றத்தைக் கண்டு அனுதாபப் பார்வை யொன்றை வீசினார் அவன் மீது. பிறகு அவர் உதடுகள் புன்முறுவல் கோட்டின. ''வருகிறேன் ஆசார்யரே!'' என்று விடை பெற்றுக் கொண்டு அறையிலிருந்து கிளம்பினார். அறை வாயிற்படியைத் தாண்டு முன்பு தலையை மட்டும் திருப்பிப் பல்லவ இளவலை நோக்கி, ''சத்திரத்திலிருந்த பலபத்ரனையும் இந்திரவர்மனையும் சிறை செய்து விட்டேன். இந்திரவர்மன் மகளை இன்னும் சில நாழிகைகளில் இங்கேயே அனுப்பி வைக்கிறேன்'' என்று கடைசியாக ஒரு கணையைத் தொடுத்து விட்டு வெளியேறினார்.

அந்தச் செய்தி இளவரசனை நிலைகுலையச் செய்தது. ஆசார்ய தண்டியின உதடுகளில் இருந்த புன்முறுவல் மறைந்து முகத்தில் சற்றுக் கவலை விரிந்தது.

## 26. இலக்கணப் பாவை

ஸ்ரீராமபுண்ய வல்லபரின் கடைசிக் கணை வீச்சினால் பெரிதும் தாக்கப்பட்ட பல்லவ இளவல் தனது ஆசனத்தை விட்டு எழுந்து ஆசார்ய தண்டியின் முன்பு கவலை தோய்ந்த முகத்துடன் பல விநாடிகள் நின்றான், கண்களைத் தரையில் பதித்த வண்ணம். கடைசியாக அவன் கண்களை உயர்த்தி ஆசார்யரைப் பார்த்தபோது அவர் முகத்திலும்



கவலையின் சாயை படர்ந்து கிடப்பதைப் பார்த்ததுமே அவன் கவலை பன்மடங்கு உயர்ந்தது. ''அடுத்து என்ன நடக்கும் ஆசார்யரே?'' என்று வினவியபோது அவன் குரலிலும் கவலை பரிபூரணமாகத் தெரிந்தது.

ஆசார்ய தண்டி தமது சீடனை உற்றுநோக்கினார் தமது அருள்விழிகளால். ''இன்னும் சில நாழிகைகளில் இந்திரவர்மன் மகள் இங்கு வந்து விடுவாள்'' என்றார் வெறுப்புடன்.

மைவிழி அந்த மாளிகைக்கு வருவதை ஆசார்ய தண்டி விரும்பவில்லையென்பது நன்றாகத் தெரிந்தது பல்லவ இளவலுக்கு. அதற்குக் காரணம் மட்டும் தெரியாததால், ''மைவிழிச் செல்வி இங்கு வருவதில் தங்களுக்கு விருப்பமில்லை போல் தெரிகிறது'' என்று வாய்விட்டும் சொன்னான் அவன்.

''ஆம், விருப்பமில்லை'' என்று பதில் சொன்னார் ஆசார்ய தண்டி.

''ஏன் ஆசார்யரே? அவள் என்ன செய்தாள் உங்களை?'' என்று வினவினான் பல்லவ இளவல் வியப்புடன்.

ஆசார்யர் தமது மஞ்சத்தில் சற்று நன்றாக உட்கார்ந்து கொண்டார்.'' அவள் ஏதும் செய்யவில்லை. ஸ்ரீராமபுண்ய வல்லபர் அவளையும் தமது சதுரங்கத்தில் ஒரு காயாக நகர்த்துகிறார். அதுதான் பிடிக்கவில்லை எனக்கு'' என்றார் தண்டி கவலையுடன்.

பல்லவ இளவலின் பிரமிப்பு அதிகமாயிற்று. 'மைவிழி ஏதுமறியாத அபலை. ராஜரீகத்தைப் பற்றிக் கவலையே இல்லாதவள். அவளுக்கும் காஞ்சியின் அரசியல் சிக்கல்களுக்கும் என்ன பிணைப்பு இருக்க முடியும்?'' என்று சிந்தித்த பல்லவ இளவல், ''இது பெரிய விந்தை சுவாமி'' என்றான் ஆசார்யரைப் பார்த்து.

''எது?'' ஆசார்யரின் குரல் வியப்புடன் ஒலித்தது.

''மைவிழிக்கும் ஸ்ரீராமபுண்ய வல்லபர் திட்டத்துக்கும் ஏதாவது சம்பந்திருக்குமென்பது'' என்று கூறினான் இளவரசன்.

''பின் எதற்காக மைவிழியை இங்கு அனுப்புவதாகச் சொல்கிறார் போர் மந்திரி?''

'அவள் தந்தையைச் சிறை செய்து விட்டார். அபலைப் பெண் தனியாக இருக்க வேண்டாம். இங்கு பெண் துணை இருக்கிறது என்ற எண்ணமாக இருக்கலாம்.''

''விக்கிரமாதித்தனுக்குப் பணிவிடை புரியும் பணிப்பெண்கள் பலர் அரண்மனையில் இருக்கிறார்களே, அவர்கள் துணை போதாதா மைவிழிக்கு?''

''போதும்.''

''அங்கேயே அவளைப் பெண்கள் கண்காணிப்பில் வைத்துக் கொள்ளலாமல்லவா?''

''வைத்துக் கொள்ளலாம்.''

''பின் ஏன் இங்கு அனுப்புகிறார்? அம்பிகைக்குப் பூஜை செய்யவா அல்லது ரங்கபதாகா தேவியுடன் விளையாடவா?'' இக்கேள்வியை மிகுந்த உஷ்ணத்துடன் கேட்டார் ஆசார்யர்.

அவர் சொன்னதில் உண்மை பலமாகப் புதைந்து கிடப்பதைக் கவனித்தான் பல்லவ இளவல். தனது தந்தையின் அரண்மனையிலேயே விக்கிரமாதித்தன் தங்கியிருப்பதால் அங்கு பணிப்பெண் களுக்குக் குறைவில்லை யென்பதை இளவரசன் உணர்ந்தே இருந்தான். ஸ்ரீராமபுண்ய வல்லபர் மைவிழியை அனுப்புவதாகச் சொன்னபோது அவன் கவலையெல்லாம் சிறைப்பட்டு விட்ட பலபத்ரனைப் பற்றியும் இந்திரவர்மனைப் பற்றியுமே இருந்தபடியால் அவன் மைவிழியின் வரவைப் பற்றிக் கவலை கொள்ளவே இல்லை. அதுபற்றிச் சிறிது மகிழ்ச்சி கூடக் கொண்டான். ஆனால் ஸ்ரீராமபுண்ய வல்லபரின் அந்தச் சிறு ஏற்பாட்டில் கூட இத்தனை மர்மம் புதைந்து கிடப்பது ஆசார்யர் விவரித்த பின்புதான் அவனுக்கே புரிந்தது. ஆகவே வினாவினான், ''ஆசார்யரே! அப்படியானால் மைவிழியை இங்கு எதற்குத்தான் அனுப்புகிறார் விக்கிரமாதித்தனின் போர் மந்திரி?'' என்று.

ஆசார்யர் நீண்டநேரம் யோசித்தார். ''எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை ராஜசிம்மா! ஆனால் லேசாக ஊகிக்க முடிகிறது. உன் கால்களுக்குத் தளை போடவும் உன்னைக் கண்காணிக்கவும் போர் மந்திரி ஏற்பாடு செய்கிறார்'' என்று கூறினார்.

''என் கால்களுக்கு அவள் எப்படித் தளையாக முடியும்?'' என்று கேட்டான் பல்லவ இளவல்.

சாதாரண காலமாயிருந்தால் மகாகவி தண்டி அதைக் கேட்டுப் புன்முறுவல் கொண்டிருப்பார். சிரித்து வேடிக்கையாகப் பதில் ஏதாவது சொல்லியிருப்பார். ஆனால் அன்று அவர் மைவிழி — இளவசரன் உறவைப் பற்றி வெறுப்புடனேயே கூறினார், ''விக்கிரமாதித்தன் உன்னை ஆதிவராகன் கோவிலில் சந்தித்ததைப் பற்றி என்னிடம் சொன்னான்'' என்று.

''உம்.''

''அப்பொழுது உன்னுடன் மைவிழியும் சினனும் வந்திருப் பதைப் பற்றியும் சொன்னான்.''



''உம்.''

''எதிரி நாட்டுக்குள் நுழைந்த பின்பும் ஒரு பெண்ணைக்கூட அழைத்துக் கொண்டு ஓர் இளவரசன் திரிந்தால் அப்பெண்ணுக்கும் அவனுக்குமுள்ள உறவு சாதாரண உறவாயிருக்க முடியாது என்று அபிப்பிராயப் பட்டான். ஆகவே...''

இங்கு சட்டென்று இடைமறித்த பல்லவ இளவல், ''ஏன், ஓர் அபலையைக் காப்பாற்றும் பொறுப்பு அரச குலத்தவனுக்கு இல்லை யென்பது விக்கிரமாதித்தன் முடிவா?'' என்று வினவினான் சினத்துடன்.

இதற்கு ஆசார்ய தண்டி மிக இடக்காகப் பதில் சொன்னார். ''மாமல்லபுரத்தில் அபலை இவள் ஒருத்திமட்டுமல்ல என்பது விக்கிரமாதித்தன் கருத்து'' என்று.

இளவரசன் மேற்கொண்டு பதிலேதும் சொல்லவில்லை. தண்டியே பேசினார். ''ராஜசிம்மா! உனக்கும் அந்தப் பெண்ணுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை ஊகித்த விக்கிரமாதித்தன் இங்கு வந்ததும் அதைப்பற்றி ஸ்ரீராமபுண்ய வல்லபரிடம் சொல்லி விட்டான். ஸ்ரீராமபுண்ய வல்லபருக்கு விஷயம் துளி கிடைத்தால் போதும். அடுத்த விநாடி அவர் மூளை வேகமாக இயங்கும். ரகசிய உத்தரவுகள் பறக்கும். விக்கிர மாதித்தன் திரும்பி வந்து விஷயங்களைக் கூறியதும் போர் மந்திரி ஒற்றர்களைக் காஞ்சி முழுவதும் திரிய விட்டுவிட்டார். உங்கள் அசைவு ஒவ்வொன்றும் கவனிக்கப்பட்டிருக்கிறது. நீ வந்து சேர்ந்த மறுநாள் காலை பூஜைக்கு அவரும் வந்துவிட்டார் பார்.''

இதைக் கேட்டதும் ராஜசிம்மன் கவலை அதிகப்படவே அவன் ஆசார்யரை வணங்கிவிட்டுத் தனது அறைக்குச் சென்று பூஜை உடைகளைக் களைந்து அங்கிருந்த மாற்றுடை ஒன்றை அணிந்தான். கிட்டத்தட்டத் தனக்கு அளவெடுத்தது போன்ற உடை ஒன்று, தான் வருமுன்பே மஞ்சத்திலிருந்ததைக் கவனித்தான். இருப்பினும் அது எப்படி வந்தது என்பதைப் பற்றி யோசிக்காமலே அதை அணிந்துகொண்டான், வேறு கவலைகள் மனத்தைச் சூழ்ந்திருந்த காரணத்தால். அவன் மனம் எங்கெங்கோ சுழன்று கொண்டிருந்தது. மைவிழி அங்கு வருவதில் பல கஷ்டங்கள் இருப்பதைப் புரிந்து கொண்டான் அவன். தான் ஆசார்யர் மாளிகையிலிருந்து தப்ப முயன்றால் கூட மைவிழியின் வருகை பெரும் உபத்திரவந்தான் என்பதையும் புரிந்து கொண்டான். இருப்பினும் அத்தனை வேதனையிலும் கவலையிலும் மைவிழியின் வருகை அவனுக்கு மகிழ்ச்சியையே அளித்தது. அந்த மகிழ்ச்சி அவனை மாமல்லபுரத்துக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றது. அங்கு மைவிழி மயில் நடை நடந்து

வந்தது, யூ கஸ்கம்பத்தைக் கட்டிக் கொண்டு நின்றது, கடலைக் கண்டு கனவுகண்டது, இவை அனைத்தையும் மலைப் பாறை மறைவிலிருந்தே கவனித்தான் ஓர் இளவரசன். பிறகு பல விளைந்தன. அவன் கடலில் இறங்கினான். அவள் பூவுடலைத் தழுவினான். இங்கு அவன் முகம் புன்முறுவல் கொண்டது. 'அதற்குப் பிறகு தோப்புக் குடிசைக்குள் தூக்கிக் கொண்டு ஓடினேனே! விளக்கை ஊதி அணைத்தேனே, அப்பொழுது அவள் என்ன நினைத்திருப்பாள்?' என்று நினைத்தான், நகைத்தான்.

''விளக்கை நீங்கள் ஊதுகிறீர்களா, நான் ஊதி விடட்டுமா?'' இப்படியொரு கேள்வி இடைபுகுந்தது. குரல் குயிலின் குரலாயிருந்தது. அதைக் கேட்ட இளவரசன் துள்ளி எழுந்தான் பஞ்சணையிலிருந்து. வாயிற்படியில் நின்றிருந்த ரங்கபதாகாதேவி அறையின் மூலையை நோக்கிக் கையை நீட்டினாள். இரவில் ஏற்றிய விளக்கு அப்பொழுதும் எரிந்து கொண்டிருந்ததைக் கவனித்தான் பல்லவ இளவல்.

தன் நினைப்பை அப்படியே உட்புகுந்து அளந்துவிட்டாளே ரங்கபதாகா தேவி என்று நினைத்து ஒரு விநாடி அதிர்ச்சியடைந்த ராஜசிம்மன், இரவு விளக்கைக் காலையில் தான் அணைக்காமலே விட்டுவிட்டதை அப்பொழுதுதான் உணர்ந்தானாகையால் ஆசுவாசப் பெருமூச்சு விட்டான்.

அதையும் கவனித்தாள் ரங்கபதாகா தேவி. பிறகு இளநகை கூட்டிக் கொண்டு அவன் அறைக்குள் புகுந்து அறை மூலையிலிருந்த விளக்கை ஊதி அணைத்தாள். அவள் ஊதிய முறையிலேயே அழகு இருந்ததைப் பல்லவ இளவல் கவனித்தான் பூஜைக்குப் பிறகு அவள் மாற்றுடை அணிந்திருந்தாள். தலையையும் பின்னிக் கொண்டையிட்டிருந்தாள். அவள் விளக்கை ஊதக் குனிந்த போது அவள் மேல் உடை தூளிபோல் சற்றுத் தொங்க, அவள் அழகிய பருத்த மார்பகம் அவன் கண்களுக்கு நன்றாகவே புலனாயிற்று. கஞ்சுகத்தையும் மீறி இரு புறத்திலும் எழுந்து பரவிக் கிடந்த அந்த இரட்டை அழகுகளைப் பார்த்த இளவரசன் ஆசார்யரின் காவ்யாதர்சத்தின் மூலம் முதல் பகுதி எண்பத்து ஏழாவது சுலோகத்தை நினைவுப்படுத்திக் கொண்டான். சற்று முன்பு பூஜையின்போது ராஜமோகினி படித்த அந்த சுலோகம். 'சர்வ லட்சணமுள்ள பெண்ணின் விம்மிப் பருத்த மார்பகம் இரு புறங்களிலும் கைகளாகிற இரு கொடிகளால் தடைப்பட்ட காரணத்தாலேயே மேலும் பரவிச் செல்ல முடிவில்லை' என்ற கருத்துக் கொண்ட அந்தக் கவிதை அவளுக்கே முழுப் பொருத்தம் என்று முடிவு செய்து கொண்டான். அவற்றைத் தாங்கிய மஞ்சள்நிறக் கச்சை வெளேரென்ற இடுப்பின் ஒற்றை மடிப்பில் தங்கிய மனோகரம், தண்டியின் காவ்யாதர்சத்தின்



கற்பனைக்கும் அப்பாற்பட்டதாயிருந்ததை இளவரசன் புரிந்து கொண்டான்.

அவள் குனிந்து விளக்கை ஊதிய போது குவிந்து சிவந்த உதடுகளின் அழகு! அப்பப்பா! விவரிக்க இயலாதது. உன் மத்தம் ஊட்டக் கூடியது! ஊதியபோது சற்றே பருத்த கன்னங்கள் சாதாரணமாகவே செழித்திருந்த அவற்றின் தோற்றத்தை எத்தனை தூரம் அழகுபடுத்தி விட்டது என்பதையும் கண்டான். அவள் குனிந்தபோது தலையின் கொண்டையிலிருந்த காஞ்சியின் மல்லிகைச் சரமொன்று கழுத்தில் பாய்ந்து எதற்காகத் தடவ வேண்டும். அட, அதுதான் தடவிற்று. அந்தக் கண்களிலிருந்த மை லேசாக எதற்காகக் கன்னத்தில் ஒட்டிக்கிடந்தது? அவளுக்குத் திருஷ்டி கழிக்கவா? சரி, அவள் குனிந்த நிலையில் பின்னெழில் சேச்சே! தவறு! தவறு! அப்படி நினைப்பது தவறு; என்ன கயவனாகி விட்டேன்.

இப்படிப் பலபடி ஓடிய எண்ணங்களாலும் காந்தம்போல் இழுத்த அவள் உடற்கணைகளாலும் பஞ்சணையிலிருந்து எழுந்து சிலையென நின்றுவிட்டான் இளவரசன். அவன் மனப்போக்கைப் பற்றிச் சிறிதும் லட்சியம் செய்யாத ரங்கபதாகா தேவி விளக்கை ஊதிவிட்டு நிமிர்ந்து மீண்டும் வாயிற்படியை நோக்கி நடந்தாள். ''ரங்கபதாகா தேவி!'' என்ற பல்லவ இளவலின் குரலைக் கேட்டுச் சற்றே திருப்பினாள் தலையை மட்டும். ''என்ன?'' என்ற அவள் கேள்வி சர்வ சாதாரண மாயிருந்தது.

''இந்த விளக்கை ஊத நீங்கள் வர வேண்டுமா?'' என்று வினவினான் ராஜசிம்மன் நின்ற இடத்திலிருந்து நகராமல்.

ரங்கபதாகா தேவி அந்த நிலையிலேயே சிறிது புன்முறுவல் கோட்டினாள். 'இரவில் வாயிற் கதவைத் திறக்க மட்டும் நான் வரவேண்டுமா?'' என்று கேட்டாள் பதிலுக்குப் புன்முறுவலின் ஊடே.

இளவரசன் பதில் சொல்ல முடியாமல் விழித்தான். ''ஆம். வரவேண்டிய அவசியமில்லை. சீடர்கள் இருந்தார்கள். அவர்களை விட்டுத் திறக்கச் சொல்லியிருக்கலாம்'' என்றான் பிறகு சற்றுச் சமாளித்துக் கொண்டு.

''அது மட்டுமல்ல இளவரசரே!''

''உம்.''

''என் பணிப் பெண்களும் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவரை விட்டுத் திறக்கச் சொல்லியிருக்கலாம்.''

''ஆம்''

''அப்படிச் செய்யவில்லை.''

''ஏனோ?''

''ஆசார்யர் உத்தரவு.'' இதைச் சொன்னதும் அவள் செல்ல ஓர் அடி எடுத்து வைத்தாள்.

''அரசகுமாரி!'' மீண்டும் இளவரசன் குரல் ஒலித்து அவள் நடையைத் தடை செய்தது. இம்முறை அவள் தலையை மட்டும் திருப்பவில்லை நன்றாக உடல் பூராவையும் திருப்பி அவன் முன்பு நின்றாள். ''வேறு ஏதாவது சந்தேகமிருந்தாலும் கேட்டு விடுங்கள்'' என்றாள்.

அவனால் உடனடியாக ஏதும் கேட்க முடியவில்லை. உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் கண் முன்பு தெரிந்த எழில் குவியல்களில் அவன் கண்களும் உள்ளமும் பிணைந்து கிடந்தன. அவள் பூஜைக்குப் பின் பெரிய புதிய அலங்காரமொன்றும் செய்து கொள்ளவில்லை. சிவந்த பட்டுச் சேலையொன்று, அதுவும் சரிகையில்லாதது, சாதாரண பட்டுப் பூ வேலைப்பாடுள்ளது. பட்டு நிறைந்த காஞ்சியில் பணிப் பெண்களும் கட்டுவது, அந்தச் சேலையைத்தான் அணிந்திருந்தாள். ஆனால் அந்தச் சேலைக்கு அவள் இணையிலா அழகு மெருகு கொடுத்திருந்தது.

தாமரைத் தடாகத்தில் நனைப்பதற்காக எட்டி விசிறப்பட்ட சீலையின் நிலையிலிருந்தது அந்தச் சேலை. மேலே சீலைக்கு எட்டாத முகமலர், அடுத்துச் சீலை மறைத்தும் உள்ளிருந்து முறைக்கும் தாமரைப் பெரு மொட்டுகள், திடீரெனச் சீலையை இணைத்துப் பிழிய இழுத்ததால் சட்டென்று சுருங்கிவிட்ட இடைப் பகுதி மறைத்தாலும் ஊகிக்க முடிந்த தடாகச் சுழிகள், சுழல்கள். இன்னும் என்னென்னவோ! ஊகிக்கச் சோலையின் அழகு தெரிந்தது. உள்ளிருந்த இலக்கியப் பூம்பொழிலும் தெரிந்தது. கணக்கற்ற கவிதை மலர்களும் தெரிந்தன. அப்படி நின்றாள் காவியம் படித்த அந்தக் காவியப் பாவை.

அவன் கண்கள் ஓடிய இடங்களைக் கண்ட அவள் லட்சியம் செய்யவில்லை. ''நான் போகலாமா? ஏதும் கேட்கவில்லையே!'' என்று கேட்டாள் சற்று லேசாகச் சிரித்து.

''இல்லை...'' திணறினான் இளவரசன்.

''உம், சொல்லுங்கள்.''

''விளக்கை ஊத நீங்கள் தான் வரவேண்டுமா?''

''உங்களுக்குப் பொறுப்பிருந்தால் நான் வரவேண்டியதில்லை.''

''எனக்குப் பொறுப்பில்லாமலென்ன?''



''இருந்தால், விளக்கை ஏன் அணைக்கவில்லை?''

''மறந்து விட்டேன்.''

''அதனால் தான் நான் அணைத்தேன்.''

''பணிப்பெண்களை அனுப்பக்கூடாதா?''

''நான் தான் உங்களுக்குப் பணிப்பெண்'' என்றாள் தேவி.

இளவரசனின் வியப்பு இன்னும் அதிகமாயிற்று. ''நீங்கள் எனக்குப் பணிப்பெண்ணா?'' என்று வினவினான்.

''ஆம்.''

''யார் சொன்னது?''

''ஆசார்யர்.''

''நமது ஆசார்யரா?''

''இல்லை. மகாராஜாவின் ஆசார்யர்''

''யாரவர்?''

பதில் அவனை அசர வைத்துவிட்டது, ''ஸ்ரீராம புண்ய வல்லபர்'' என்ற பெயரை மிகுந்த பக்தி சிரத்தையுடன் உச்சரித்தாள் தேவி.

இதைக் கேட்டதும் பலவிநாடிகள் அசந்து நின்று விட்ட இளவரசன் எரிச்சலுடன் கேட்டான், ''பகல் உணவு யார் கொண்டு வருவார்கள்?'' என்று.

''நான் தான்'' என்றாள் தேவி.

''இரவு உணவு?''

''நான்தான் கொண்டு வருவேன்.''

இளவரசன் நிதானமிழந்து, ''எனது பஞ்சணையை யார் தட்டிப் போடுவார்கள்?'' என்று சீறினான்.

''நான்தான்'' என்றாள் தேவி சர்வ சாதாரணமாக.

ஏதும் தெரியாமல் குழம்பிய இளவரசன் இரண்டு எட்டில் அவளை அணுகி, அவள் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு, ''வேண்டாம் தேவி. நீ எதிரி மகளாயிருந்தாலும் அரச மகள். அதுவும் காவ்யாதர்சம் கற்றறிந்த இலக்கணப் பாவை. நீ செய்ய வேண்டாம் இந்தப் பணி'' என்று கெஞ்சினான்.

''இளவரசரும் இலக்கணம் கற்றுக் கொள்கிறார் போலிருக் கிறது?'' என்ற குரலைக்கேட்டு இருவரும் பிரிந்து நின்று பின்புறம் திரும்பிப் பார்த்தனர். அறை வாயிற்படியில் மைவிழி நின்றிருந்தாள்.

# 27. இரு மங்கையருக்கிடையில் இளவல்

அறை வாயிற்படியில் அன்னப் பறவையைப் போல் ஒய்யாரமாகத் தலை சாய்த்து நின்றிருந்த மைவிழியைக் கண்டதும் பல்லவ இளவல், ராஜமோகினியின் கைகளிரண்டையும் உதறி விட்டுச் சற்றுப் பின்னால் நகர்ந்து நின்று கொண்டான். ஆனால் ரங்கபதாகா தேவி மட்டும் நின்ற இடத்தை விட்டு நகர வில்லை. கமல முகத்தில் எந்தவிதக் குழப்பத்தையோ உணர்ச்சியையோ காட்டவு மில்லை. அவளுக்கே உரித்தான கம்பீர தோரணையில் நின்று கொண்டு ஒரு முறை மைவிழியைத் தலையிலிருந்து கால் வரை ஏற இறங்கப் பார்த்தாள். பிறகு இளவரசனை நோக்கி, ''நான் வரட்டுமா இளவரசரே?'' என்று அவனிடமிருந்து விடை பெற முயன்றாள்.

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லும் திராணியை அறவே இழந்திருந்தான் ராஜசிம்ம பல்லவன். அவன் ராஜ பார்வை யெல்லாம் எங்கோ பறந்துபோய், பெரும் குற்றம் செய்தவனைப் போல் விழித்தான் இரு பெண்களையும் பார்த்துச் சில விநாடிகள். பிறகு மெள்ள நிலைமையைச் சமாளிக்க முற்பட்டு, ''உங்களை அறிமுகப்படுத்த மறந்துவிட்டேன்'' என்று தட்டுத் தடுமாறி ஏதோசொல்லி, ''இவள்தான்...'' என்று ரங்கபதாகா தேவிக்கு மைவிழியைச் சுட்டிக் காட்டினான்.

''கடல் மல்லைக் கட்டழகி. பல்லவ இளவலுக்காக ஊரைத்துறந்து உடன் வந்த மைவிழி மங்கை'' என்று குறுக்கிட்டு அவன் வாசகத்தை முடித்தாள் ரங்கபதாகா தேவி, அத்துடன் ஏளனப் புன்முறுவலொன்றையும் தனது உதடுகளில் படர விட்டாள்.

ராஜசிம்மனின் சங்கடம் அதிகமாயிற்று. அத்துடன் மைவிழியின் உள்ளத்திலும் சினம் ஏறியதால் அவள் பெருவிழிகள் நன்றாக மலர்ந்து கூர்ந்து நோக்கின கங்க மன்னன் மகளை. அவள் வாயிலிருந்து சொற்கள் உஷ்ணத்துடன் உதிர்ந்தன ''உங்களையும் எனக்குத் தெரியும்'' என்றாள் மைவிழிச் செல்வி, ரங்கபதாகா தேவியை நோக்கி.

''என்ன தெரியும்?'' அலட்சியமாக எழுந்தது ரங்கபதாகா தேவியின் கேள்வி.

''ஓராண்டுக் காலமாக நான் இவரை அறிவேன்'' என்று இழுத்தாள் மைவிழி.

''நீண்ட நாள் நட்பு! பாவம்!'' என்று ரங்கபதாகா தேவி கூறினாள் இகழ்ச்சி குரலில் தொனிக்க.



''அதில் பாவம் ஏதுமில்லை. எனக்குத்தான் இவரைத் தெரியும். இவருக்கு என்னைத் தெரியாது.''

''ஓகோ!''

''இவர் என்னிடம் உரையாடவே ஓராண்டுக் காலம் பிடித்தது'' என்ற மைவிழி. ''ஆனால்...'' என்ற சொல்லை சொல்லிச் சிறிது குரலை நீட்டவும் செய்தாள்.

ரங்கபதாகா தேவியின் கண்களில் அப்பொழுதும் கோபம் துளிர்க்கவில்லை. சற்று வெறுப்பே அந்தக் கார்மேகக் கண்களில் புலனாயிற்று. ''ஆனால்?'' என்று கேட்டாள் வெறுப்பு குரலிலும் ஒலிக்க.

''ஒரே இரவில் நீங்கள் இவருக்கு இலக்கணம் சொல்லிக் கொடுத்துவிட்டீர்கள்'' என்றாள் மைவிழி. அவள் கரிய பெரிய விழிகளில் சீற்றம் மண்டிக் கிடந்தது.

இதைக் கேட்டதும் ரங்கபதாகா தேவியின் கார்மேகக் கண்களில் வெறுப்பும் அலட்சியமும் அதிகமாகத் தெரிந்தன. அவளது சிவந்த அதரங்களிலிருந்த உதிர்ந்த சொற்கள் மைவிழியின் உணர்ச்சிகளைச் சீனனின் கூர்மையான சிறு கத்தியைப் போல் பல கத்திகளாக எழுந்து வெட்டு வெட்டென்று வெட்டின. ''நீ போயும் போயும் ஒற்றன் மகள் தானே? இதற்கு மேல் உன்பு புத்தி வேலை செய்யாது'' என்று தலை நிமிர்ந்து கம்பீரத்துடன் கூறிய ரங்கபதாகா தேவி வெகு வேகமாக மைவிழியைத் தனது வலது கையால் அலட்சியமாக ஒரு புறம் ஒதுக்கித் தள்ளிவிட்டு வெளியே நடந்து விட்டாள். அவள் வேகத்தையும் பார்த்தான் ராஜசிம்மன். வேகத்தில் அவள் அழகுகள் அசைந்த விந்தையையும் பார்த்தான். ஆனால் அதை விடப் பெரிய விந்தை அடுத்துக் காத்திருந்தது அவனுக்கு. ''அவள் அழகைப் பருகிவிட்டீர்களா இல்லை, நடை இலக்கணம் கற்றுவிட்டீர்களா?'' என்று சீறிய மைவிழி சட்டென்று உள்ளே நுழைந்து அறைக் கதவையும் சாத்தி விட்டாள்.

மைவிழியை நோக்கினான் பல்லவ இளவல். கோபத்தால் எழுந்து எழுந்து அவள் மேலாடைக்குள் தாழ்ந்து கொண்டிருந்த அவள் மார்பின் மொட்டுக்களையும் கண்டான் சாத்திய கதவையும் கண்டான். பிறகு மெள்ள, ''மைவிழி...'' என்று அழைத்தான்.

''என்ன?'' அம்பு போல் பாய்ந்து வந்தது பதில்.

''கதவை எதற்காகச் சாத்துகிறாய்?'' என்று கேட்டான் பல்லவ இளவல் சங்கடத்துடன்.

''சாத்தினால் என்ன?''

''யாராவது ஏதாவது நினைத்துக் கொண்டால்?''

''யார்? இப்பொழுது போனாளே அந்த மேட்டிமைக் காரியா?''

''அவளல்ல...''

''வேறு யார்?''

''இது யார் மாளிகை தெரியுமா?''

''தெரியும். ஆசார்ய தண்டி மகாகவியின் மாளிகை.''

''இங்கு அவர் இருக்கிறார்'' என்று ராஜசிம்மன் மென்று விழுங்கினான்.

மைவிழி வெறுப்புடன் நகைத்துவிட்டுக் கேட்டாள். ''இருந்தாலென்ன?'' என்று.

''அவர் ஏதாவது நினைக்கலாம்.''

இன்னும் யார் நினைக்கலாமோ?''

''சீடர்கள் இருக்கிறார்கள் இங்கு. பணிப் பெண்களும் இருப்பதாக ரங்கபதாகா தேவி சொல்கிறாள்.''

இதைக் கேட்ட மைவிழியின் முகத்தில் சிந்தனை படர்ந்தது. ''என்ன, ரங்கபதாகா தேவி சொன்னளா?''என்று வினவினாள் சந்தேகத்துடன்.

எதற்காக மைவிழி அந்தக் கேள்வியைக் கேட்கிறாள் என்பதைப் புரிந்து கொள்ளாத ராஜசிம்மன், ''ஆம்'' என்றான்.

''பணிப் பெண்களிருப்பது உங்களுக்குத் தெரியாதா?'' என்று வினவினாள்.

''எப்படித் தெரியும்? நான் நேற்றிரவுதானே இங்கு வந்தேன்!'' என்றான் பல்லவ இளவல்.

''அப்படியா?''என்ற மைவிழியின் கேள்வியில் இகழ்ச்சி தொனித்தது.

''ஆம்.''

''பணிப் பெண்களைப் பார்க்கவில்லை?''

''இல்லை.''

''உங்களுக்கு யார் கதவைத் திறந்தது இரவில்? ஓகோ? ஆசார்யராயிருக்கும்...''

''இல்லை, இல்லை. ஆசார்யர் இல்லை.''



''வேறு யாரோ?''

''வேறு...வேறு...'' என்ற சங்கடத்துடன் சொற்களை உதிர்த்தான் பல்லவ இளவல்.

''சங்கடப்படாதீர்கள். ரங்கபதாகாதேவிதான் திறந்திருக்கிறாள்'' என்றாள் மைவிழி திட்டமாக.

''யார் சொன்னது?'' என்று சீறினான் ராஜசிம்மன்.

மைவிழி அவனை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தாள். ராஜசிம்மன் ஓர் அடி பின்னால் நகர்ந்தான். மைவிழி சற்றுப் பெரிதாகவே நகைத்தாள். ''முன் வைத்த காலைப் பின் வைப்பது அரச குலத்துவருக்கு அழகில்லை'' என்றும் கூறினாள் அந்த நகைப்பின் ஊடே.

''பின் வைப்பதாக யார் சொன்னது?'' என்று கேட்டான் இளவரசன் கோபத்துடன்.

''யாரும் சொல்லவில்லை. இதோ நானே பார்த்தேன்?'' என்றாள் மைவிழி.

''ரங்கபதாகா தேவி எனக்குக் கதவைத் திறந்ததையும் நீயே பார்த்தாய் போலிருக்கிறது?'' என்று வினவினான் ராஜசிம்மன் சினம் குரலில் மிதமிஞ்சி ஒலிக்க.

''இல்லை. அது பிறர் சொன்னது தான்.''

''அந்தப் பிறர் யாரே?''

''உங்களை முறியடித்தவர்.''

''விக்கிரமாதித்தனா?''

''இல்லை.''

''வேறு யாரோ?''

''எந்த மகான் என்னை இங்கு அனுப்பி வைத்தாரோ, எவர் போர்த் திட்டங்களால் இந்தக் காஞ்சி விக்கிரமாதித்த மன்னனால் பெற்றுக் கொள்ளப்பட்டதோ, எவருடைய ராஜ தந்திரத்துக்கு ஈடு கொடுக்கமுடியாமல் உங்கள் தந்தை மறைந்து உறைகிறாரோ அந்த மகான் ஸ்ரீராமபுண்ய வல்லபர் சொன்னார். இன்று விடியற்காலையே அதைச் சொன்னார் இங்கு என்னை அனுப்புமுன்பு வேறு பல விஷயங்களையும் சொன்னார்...'' இங்கு பேச்சை முடிக்காமல் விஷமத்துடன் இழுத்தாள், மைவிழிச் செல்வி.

ராஜசிம்ம பல்லவனின் மூளை குழம்பிவிடும் நிலையிலிருந்தது. 'ஸ்ரீராமபுண்யவல்லபர் என்ன மந்திரவாதியா நடந்ததையெல்லாம் அப்படியே சொல்ல? இரவில் ரங்கபதாகா தேவி கதவைத் திறந்தது அவருக்கு எப்படித் தெரியும்? ஒரு வேளை மாளிகையைச் சூழ்ந்த ஒற்றர்கள் வெகு அருகில் எங்காவது ஒளிந்து பார்த்திருப்பார்களா? அப்படி இருக்க முடியாது. வாயிலுக்கருகே ஒளிய இடம் இல்லையே? ஒரு வேளை மாளிகையிலிருந்து யாராவது செய்தி அனுப்பியிருப்பார்களா? அனுப்பியிருந்தால் இதை ஏன் சொல்ல வேண்டும் அவர்கள்? நான் இங்கு வந்திருப்பதை அறிவித்தாலே போதுமே, வீரர்கள் வந்து சிறை செய்து போவார்களே' என்று பலபடி எண்ணிப் பார்த்தும் ஏதும் விளங்கவில்லை அவனுக்கு. ஆகவே மைவிழியைப் பஞ்சணையில் உட்காரச் சொல்லி அவளையே விசாரிக்க நினைத்து, ''மைவிழி, வா, இப்படி உட்கார்'' என்று பஞ்சணையைச் சுட்டிக்காட்டினான்.

மைவிழி உட்கார மறுத்தாள். ''வேண்டாம். நிற்கிறேன். நான் கேவலம் ஒற்றன் மகள் தானே?''

ராஜசிம்மன் அவள் சுடுசொற்களைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. பஞ்சணையில் உட்காரும்படி வற்புறுத்தவும் இல்லை. ''வேறு என்ன சொன்னார் ஸ்ரீராமபுண்ய வல்லபர்?'' என்று வினவினான்.

''நீங்கள் அவளிடம்...''

''சொல்''

''காவியம் படித்ததைச் சொன்னார்.''

''பொய், பொய். அவளிடம் நான் காவியம் கற்பதாவது?''

''இல்லை. கற்கவில்லை. கேட்டீர்கள்.''

''என்ன கேட்டேன்?''

''எண்பத்து ஏழாவது சுலோகம்'' என்றாள் மைவிழி ஆத்திரத்துடன்.

மைவிழியின் பேச்சைக் கேட்டதும் உக்ராகாரமான கோபம் இளவரசன் இதயத்தில் எழுந்தது. அவன் மைவிழியைக் கையைப் பிடித்து இழுத்துப் பஞ்சணையில் தள்ளினான். ''ஸ்ரீராமபுண்ய வல்லபரின் மித்ர பேதம் பெண்களையும் பாதிக்கும் என்று தெரியாது எனக்கு. சீ, இவர் ஒரு மகானா! இப்பொழுதுதான் போனார் இங்கிருந்து. உடனே உன்னிடம் அற்ப விஷயங்களைச் சொல்லி உன் புத்தியைக்



கலைத்து அனுப்பியிருக்கிறார்'' என்று மைவிழியை நோக்கிக் கூறிய பல்லவ இளவல்,

''இருக்கட்டும் இருக்கட்டும்! ஸ்ரீராமபுண்ய வல்லபரே! இருக்கட்டும். உமது சதுரங்கத்தில் பெண் காய்கள் தான் அதிகம் போலிருக்கிறது? பல்லவ நாட்டுப் போர் முறையிலும் சதுரங்கம் உண்டு. அதன் தன்மையை வெகு சீக்கிரம் உணருவீர்' என்று இரைந்து கறுவிக் கூவினான்.

அவன் நிதானமிழந்ததைக் கவனித்தாள் மைவிழி. அதையும் அவள் லட்சியம் செய்யவில்லை. அவன் கோபக் கூச்சலுக்கும் மசியவில்லை. ''அவரைக் கோபித்துப் பயனில்லை. உங்கள் சபல சித்தத்தை எடுத்துரைத்தார். தவிர உங்களுக்கு இங்கு வேலை கிடைக்கப் போவதையும் எடுத்துரைத்தார்'' என்றாள் மைவிழி பஞ்சணையில் சாய்ந்த வண்ணம்.

''என்ன வேலையோ?'' என்று கேட்டான் பல்லவ இளவல்.

வேலையை எடுத்துச் சொன்னாள் மைவிழி. அதைக் கேட்ட ராஜசிம்ம பல்லவன் அசல் சிங்கமாகவே மாறினான். அவன் கண்கள் சிவந்தன. அசைந்த தலையில் கலைந்த குழல்கள் சிங்கத்தின் பிடரி மயிர்களைப் போல் காட்சியளித்தன. ''ஸ்ரீராமபுண்ய வல்லபரே! அடுத்த முறை உங்களைச் சந்திக்கும்போது உங்கள் கழுத்தைத் திருகி எறிந்து விடுகிறேன்'' என்று இரைந்து அந்த அறையே அதிரும்படியாகக் கூவினான். அப்பொழுது கதவு தட்டப்பட்டது. கதவைத் திறந்தான் பல்லவ இளவல் கோபத்துடன். வெளியே நின்றிருந்தாள் ஒரு பணிப்பெண். ''என்ன வேண்டும்?' என்று சீறினான் அவளை நோக்கி.

''இளவரசியார் உங்களை அழைத்து வரச் சொன்னார்கள்'' என்றாள் பணிப் பெண்.

''எதற்கு?''

''உங்களுக்கு மிகவும் பிரியமான எதையோ வைத்திருக்கிறார்களாம்.''

இதைச் சொல்லிவிட்டுத் தலை வணங்கிச் சென்றாள் பணிப் பெண். ''போங்கள் இளவரசரே! ஏன் நிற்கிறீர்கள்? ஓடுங்கள் இளவரசே, ஓடுங்கள். உங்களுக்குப் பிரியமான எதையோ வைத்துக் கொண்டிருக்கிறாள் அவள்'' என்ற மைவிழியின் ஏளனக் குரல் அவனுக்குப் பின்னால் ஒலித்தது.

# 28. அசையும் பரிசும் அசையாப் பரிசும்

இளவரசன் சித்தத்தில் பலப்பல புதிர்கள் எழுந்து விளையாடிக் கொண்டிருந்ததால் அவன் மைவிழியின் ஏளனச் சொல் வீச்சைப் பற்றியோ, திரும்பி நோக்கியதும் அவள் முகத்தில் தெரிந்த இகழ்ச்சியைப் பற்றியோ சிறிதும் கவலைப்படவில்லை. அவன் சிந்தனையெல்லாம் விக்கிரமாதித்தன் போர் மந்திரியின் நுண்ணிய அறிவிப்பைப் பற்றியும் ஒரே இரவுக்குள் தன் வாழ்க்கையில், தன் திட்டங்களில் ஏற்படுத்திவிட்ட சிக்கல்களைப் பற்றியுமே வலம் வந்து கொண்டிருந்ததால் அந்தக் கவலையில் சிக்கியிருந்தான் அவன் ஸ்ரீராமபுண்ய வல்லபர், எப்பொழுது மைவிழியிடம் காவ்யாதர்சத்தைப் பற்றியும் எண்பத்து ஏழாவது சுலோகத்தைப் பற்றியும் சொல்லியிருக்கிறாரோ அவர் பூஜைக்கு வெளியே நீண்ட நேரம் நின்று உள்ளே நடந்த உரையாடல்களைக் கேட்டிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தான். அந்த உரையாடல்களுக்கு ஊறு விளைவிக்காமல் காத்திருந்து பூஜை முடிந்த பின்பு அவர் நமஸ்கரிக்க வந்திருக்க வேண்டுமென்பதும் தெள்ளெனப் புலனாயிற்று அவன் சிந்தைக்கு. அதை அத்தனை அவசரமாக அவர் மைவிழிக்குச் சொல்லி அவள் பொறாமையைக் கிளப்பி விட்டதில் ஆழ்ந்த பொருளிருக்க வேண்டுமென்பதை அவன் உணர்ந்துகொண்டான். தான் அதுவரை உணராத ஒன்றையும் ஸ்ரீராமபுண்ய வல்லபர் மைவிழியிடம் சொல்லியனுப்பியிருந்ததையும் நினைத்துப் பெரும் சினமும் கொண்டான். தண்டிமகாகவியின் மாளிகையில் தனக்கு வேலை கிடைக்கப் போவதைப் பற்றி அவர் மைவிழியிடம் கூறியது பெரும் விசித்திரமாயிருந்தது அவனுக்கு. அந்த வேலையை விவரித்தபோதே அவன் சினம் தலைக்கேறியிருந்தது. ''என்ன வேலையோ'' என்று அவன் வினவியபோது மைவிழி சொன்ன பதில் அவனைத் தூக்கிவாரிப் போட்டது.

''ஆசான் வேலை'' என்று பதில் சொன்னாள் மைவிழி மிகுந்த இகழ்ச்சியுடன்.

''ஆசான் வேலையா?'' என்று கேட்டான் வியப்புடன்.

''ஆம்.'' இம்முறையும் ஏளனம் மண்டிக் கிடந்தது மைவிழியின் குரலில்.

''எதைச் சொல்லிக் கொடுக்கவோ?''

''சிற்பக் கலை சொல்லிக் கொடுக்க. தாங்கள் ராஜ சிற்பியல்லவா?''



''யாருக்குச் சொல்லிக் கொடுக்கவோ?''

''யாருக்குச் சொல்லிக் கொடுத்தால் உங்களுக்கு மிகவும் இன்பமாயிருக்குமோ அவர்களுக்கு!''

இந்த இடத்தில் சற்று நிதானம் தவறிவிட்ட பல்லவ இளவல் கேட்டான், ''ரங்கபதாகா தேவிக்கோ?'' என்று.

மைவிழியின் கண்கள் சினத்தால் சற்றே சிவந்தன. ''அவளுக்குத் தான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று சீறினாள் இந்திரவர்மன் மகள்.

''ஊகித்தேன்!''

''இன்பத்தை ஊகிக்கும் சக்தி உங்களுக்கு அதிகமாயிருக்கிறது இளவரசே?''

''மைவிழி!'' அதட்டலுடன் எழுந்தது பல்லவ இளவலின் குரல்.

''அதட்ட வேண்டாம். இளவரசே. இப்பேர்ப்பட்ட அழகி உங்களை ஆசானாக ஏற்க நீங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அதுவும் எதிரி மகள், அவள் இஷ்டப்பட்டால், அவளை நீங்கள் வளைத்துவிட்டால், போரிடாமலே உங்களுக்கு உங்கள் அரசின் ஏதாவது ஒரு பகுதி திரும்பக் கிடைத்தாலும் கிடைக்கும்'' என்ற மைவிழியின் சொல் ஒவ்வொன்றிலும் ஏளனம், விஷமம், விஷம் மூன்றும் தோய்ந்து கிடந்தன.

அந்தச் சுடுசொற்களை, அவற்றால் ஏற்பட்ட கொந்தளிப்பைச் சிரமப்பட்டுச் சகித்தான் பல்லவ இளவல். மைவிழி பொறாமையாலும் இல்லாத ஊகங்களாலும் தன்னைப்பற்றி ஏதோ தவறாக நினைக்கிறாளென்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொள்ளவும் நினைத்த சமயத்தில்தான் ரங்கபதாகாதேவியின் பணிப்பெண் வந்து மைவிழியின் எரிந்த சிந்தனையில் எண்ணெயை ஊற்றிவிட்டுச் சென்றாள். அதன் விளைவாகத் தன்னை ஒடச் சொன்ன மைவிழியின் சொற்களைப் பற்றிக் கவலைப் படாமல் அவளை நோக்கித் திரும்பிய பல்லவ இளவல் பஞ்சணையை நோக்கி வந்து அதன் முகப்பில் உட்கார்ந்து அவளை உற்று நோக்கினான். அவள் தோள்மீது கையொன்றையும் வைத்தான். அதைத் தனது கையால் தூக்கியெறிந்த மைவிழிச்செல்வி, ''தொட வேண்டாம் இளவரசே'' என்று எரிச்சலுடன் சொன்னாள்.

அவள் கோபத்தில் அவள் முகம் மிக அழகாயிருந்ததைக் கவனித்தான் பல்லவ இளவல். அவள் பஞ்சணையில் சாய்ந்திருந்த தோரணையில் அவள் அழகுகளெல்லாம் பலவாறு நெளிந்து தன்னை

அழைத்ததைப் பற்றிச் சிந்தையும் சிறிது குலைந்தான். மல்லைக் கடல் நீருக்குள் தான் தழுவிய அந்த இடையின் மஞ்சள் கலந்த வெளுப்பும் வழவழப்பும் இப்பொழுதும் அவனை வா வா வென்று அழைத்தன. ஆனால் முன்பு தொட்ட தைரியத்துடன் இப்பொழுது அவளைத் தீண்ட முடியவில்லை அவனால். கனி கையருகே இருந்தும் அதைச் சுவைக்க முடியாத நிலையும் உண்டு என்பதை அந்த சில விநாடிகளில் உணர்ந்து கொண்டான் ராஜசிம்ம பல்லவன். அந்தச் சமயத்தில் எல்லாவற்றுக்கும் மேலாக விக்கிரமாதித்தன் போர் மந்திரியின் செயல்களே அவன் சிந்தையை ஆட்டி வைத்ததால் அவன் கேட்டான் மைவிழியை நோக்கி, ''நீங்கள் மூவரும் எப்படிச் சிறைப்பட்டீர்கள்?'' என்று.

பல்லவ இளவல் அருகில் உட்கார்ந்த போதும், தோள்மீது கையை வைத்தபோதும் அவள் சினந்து கையை எடுத்தெறிந்தாலும், அவள் உணர்ச்சிகள் அவன் ஸ்பரிசத்தால் பெரிதும் சுழலவே செய்தன. அவன் கண்கள் அவள் இடையை உற்றுப் பார்த்தபோது அவள் எண்ணங்கள் கடலாடு காதையையே நினைத்தன. உள்ளூர மகிழவும் செய்தன. அடுத்து மீண்டும் அவன் அணைத்து மட்டுமிருந்தால் கதை திரும்பியிருக்கும். அப்பொழுது பகல் என்பதற்காக எதுவும் குறைந்திருக்காது.

ஆனால் அவன் கேள்வி வேறு திசையில் திரும்பிவிட்டதால் மறுபடியும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்ட கதையாகத் திரும்பியது மைவிழியின் மனநிலை. ''ஓகோ! உங்களுக்கு எங்களைப் பற்றியும் கவலையிருப்பதாகத் தெரிகிறது'' என்றாள் விஷமத்துடன்.

''கேட்பதற்குப் பதில் சொல்'' என்று அதட்டலுடன் சொன்ன இளவரசன், ''உங்களைச் சிறை செய்ய எத்தனை பேர் வந்தார்கள்? சத்திரத்துத் தலைவன் உங்களைக் காப்பாற்ற ஏதுமே செய்ய வில்லையா?'' என்று கேட்டான்.

பதிலுக்கு மைவிழி வெறுப்புடன் நகைத்தாள். ''எங்களைச் சிறை செய்ய வீரர்களே வரவில்லை'' என்றாள் அந்த நகைப்பின் ஊடே.

''அப்படியானால்?''

''ஆம். ஸ்ரீராமபுண்ய வல்லபரே வந்தார்.''

''விளக்கமாகச் சொல்.''

மைவிழி பஞ்சணையில் நன்றாகச் சாய்ந்து கொண்டு சொல்லத் துவங்கினாள். ''நீங்கள் எங்களைச் சத்திரத்துக்கருகில் விட்டுச் சென்றீர்களல்லவா...'' என்று ஆரம்பித்தாள் கதையை.

''ஆம்.''



''உங்கள் சொற்படி நாங்கள் சத்திரத்துக்குச் சென்றோம். எங்களுடன் வந்த பெருவணிகர் கதவைத் தட்டச் சத்திரத்தலைவனே கதவைத் திறந்து எங்களை உள்ளே அழைத்துச் சென்றான். சகல வசதிகளும் செய்து கொடுத்தான். எங்களுக்குத் தங்குவதற்கு விசாலமான தனியறை தரப்பட்டது. நாங்கள் சுமார் இரண்டு அல்லது மூன்று நாழிகைகள் படுத்திருப்போம் பிறகு எங்கள் அறைக் கதவு தட்டப்பட்டது என் தந்தை கதவைத் திறந்தார். பலபத்ரவர்மன் வாளை உருவிக் கொண்டார். ஆனால் வாளுக்குத் தேவையில்லாத போயிற்று. சத்திரக்காரன் என்னை மட்டும் ஒரு பெரியவர் பார்க்க விரும்புவதாகச் சொல்லி விலகி நின்றான். அவனுக்குப் பின்னால் அந்த மகான் நின்றிருந்தார். அவர் பலபத்ரவர்மர் வாளையோ என் தந்தையையோ லட்சியம் செய்யவில்லை என்னை நோக்கிக் கூறினார். 'அம்மா மைவிழி மங்கை! இளவரசர் சிறையிலிருக்கிறார். நீங்கள் என்னுடன் வரவேண்டும். பல்லவர் படைத் தலைவரும் உன் தந்தையும் மட்டும் சிறைக்குச் சென்றால் போதும்' என்று.

''அவர் அழைப்பில் மரியாதையும் பரிதாபமும் நிரம்பிக் கிடந்தன. நீங்கள் சிறைப்பட்டது எனக்கு நிரம்ப அதிர்ச்சியை தந்தது. அதை அவர் கவனித்திருக்க வேண்டும். ''அம்மா, கவலைப்படாதே. இளவரசனைச் சாதாரணச் சிறையில் தள்ளவில்லை அன்புச்சிறையில் வைத்திருக்கிறோம். தவிர அச்சிறைக்கு அவரே வலியச் சென்றிருக் கிறார். அவர் குருவின் மாளிகையில் அவர் இருக்கிறார். அவருக்கு அங்குள்ள சௌகரியம் சொல்லி முடியாது. அவருக்கு ஓர் இளவரசியே இரவில் கதவைத் திறந்திருக்கிறாள். நீ வா. உன்னையும் காலையில் அங்கு அனுப்பி வைக்கிறேன்'' என்று சொன்னார் ஸ்ரீராமபுண்ய வல்லபர்.

''எனக்கு எதுவுமே புரியவில்லை. பெண் மனமாகையால் மனம் உங்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தது. ஆனால் என் தந்தை கேட்டார். 'நீங்கள் யார்?' என்று. 'என்னை நீங்கள் நேரில் பார்த்ததில்லை. ஆனால் என் பெயர் அப்படியொன்றும் தெரியாத பெயர் அல்ல. என்னை ஸ்ரீராமபுண்ய வல்லபன் என்றழைப்பார்கள்'' என்றார் அம்மகான் சர்வ சாதாரணமாக.

இதைக் கேட்டதும் என் தந்தை அதிர்ச்சியடைந்தார். பலபத்ரவர்மர் வாளை ஓங்க முற்பட்டார். அப்பொழுதும் அவர் பதட்டமடையாமல் சொன்னார். ''பலபத்ரவர்மரே! நான் நிராயுதபாணியாயிருக்கிறேன். நிராயுதபாணிமீது பல்லவர் யாரும் இது வரை வாளை உருவியதாக நான் கேள்விப்பட்டது கிடையாது. உமக்குப் போர் வேண்டுமென்றால் சத்திரத்துக்கு வெளியே இருபது சாளுக்கிய

வீரர்கள் நிற்கிறார்கள். அவர்களை அனுப்புகிறேன்' என்ற அடுத்த விநாடி பலபத்ரவர்மர் வாள் உறைக்குள் சென்றது. நாங்கள் மூவரும் போர் மந்திரியைத் தொடர்ந்தோம். பெருவணிகரும் தொடர முற்பட்டார். அதைக் கண்ட போர் மந்திரி, 'வேண்டாம் பெருவணிகரே, நீர் உமது இல்லத்திற்குச் செல்லும்' என்று கூறிவிட்டு நடந்தார்.

''சத்திரத்துக்கு வெளியே ஒரு ரதம் நின்றிருந்தது மற்றுமொரு சாதாரண வண்டியும் நின்றிருந்தது. போர் மந்திரி கூறியபடி இருபது சாளுக்கிய வீரர்களும் நின்றிருந்தார்கள். ஸ்ரீராமபுண்ய வல்லபர் என்னை ரதத்தில் ஏற்றிக் கொண்டார். 'அவர்களிருவரையும் சிறைக்கு அழைத்துச் செல்லுங்கள்' என்று வீரர்களுக்கு உத்தரவிட்டார். எங்கள் ரதம் வேகமாக நகர்ந்தது. இந்த மாளிகைக்க நேர் எதிர் மாளிகையில் தான் ஸ்ரீராமபுண்ய வல்லபர் தங்கியிருக்கிறார். நாங்கள் வந்து அங்கு இறங்கும்போது சுக்ரன் முளைத்துவிட்டது. இறங்கும்போதே காட்டினார் இந்த மாளிகையை ஸ்ரீராமபுண்ய வல்லபர், 'எதிர் மாளிகையில் தான் இளவரசர் இருக்கிறார். நீ காலையில் அவரைச் சந்திக்கலாம்' என்று. நாங்கள் ஸ்ரீராமபுண்ய வல்லபர் மாளிகைக்குள் சென்றதும் எனக்குத் தனியறை கொடுக்கப் பட்டது. எனக்கு ஏவல் புரிய இரு பணிப் பெண்களும் இருந்தார்கள்.

காலையில் ஸ்ரீ ராமபுண்ய வல்லபர் என் அறைக்கு வந்தார். என்னை அன்புடன் விசாரித்துவிட்டுப் பிறகு சொன்னார்: 'மகளே! நீ எதிர் மாளிகையில் நுழையும்போது பெரும் அரசியல் சிக்கலில் நுழைகிறாய். அங்கிருப்பவள் கங்க மன்னன் மகள் ரங்கபதாகா தேவி. அழகில் உனக்குச் சமமானவள். அவளைக் கண்டு யாரும் மயங்காம லிருக்க முடியாது. காவியம் படித்தவள். தவிர வெகு நாட்களாக ஒரு கோவில் கட்டும் ஆசை கொண்டவள். பல்லவ இளவரசனிடம் சிற்பக்கலை பயில முயலுகிறாள். அதற்காகவே காஞ்சி வந்திருப்பாக என்னிடம் கூறியிருக்கிறாள். ஆகவே இளவரசனை அவள் அந்த மாளிகையைவிட்டு வெளியில் விடமாட்டாள். இளவரசன் அவளுக்கு ஆசானாவதைத் தவிர வேறு வழியில்லை. இந்த நிலையில் நீயும் அந்த மாளிகைக்குள் நுழைகிறாயென்பதை நினைவில் வைத்துக்கொள். இதில் சிற்பக் கலை மட்டும் சம்பந்தப்படவில்லை. கங்க நாடு. பல்லவர் நாடு, சாளுக்கிய நாடு ஆக மூன்று நாடுகளின் விவகாரமும் கலந்திருக்கிறது. எச்சரிக்கையுடன் நடந்துகொள் மகளே' என்று சொன்னார் அவர். தான்போய் வந்ததும் என்னை அனுப்புவதாகச் சொல்லிச் சென்றார்.

அவர் செய்திக்கு நான் தயாராகக் காத்திருந்தேன். சற்று முன்புதான் அவர் வந்தார். 'எதிர் மாளிகைக்குள் நீ போகலாம்' என்று உத்தரவு



கொடுத்தார். நான் ஓடோடி வந்தேன் உங்களைக் காண. காவலர் யாரும் என்னைத் தடை செய்யவில்லை. உங்களைக் கண்டேன். எப்படிக் கண்டேன்? எந்த நிலையில் கண்டேன்? என்பது உங்களுக்கே தெரியும்.''

இந்த விவரங்களைக் கேட்டுப் பஞ்சணையில் மலைத்து உட்கார்ந்து விட்டான் பல்லவ இளவல் நீண்ட நேரம். அப்பொழுது அவள் நினைவூட்டினாள், ''உங்களுக்குப் பிரியமானது காத்திருக் கிறதே, போகவில்லை நீங்கள்?'' என்று.

இளைய பல்லவன் விசையால் இயக்கப்பட்ட பாவைபோல் அறை வாயிற்படியை நோக்கி நடந்து கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றான். சித்தம் மயக்கமாயிருந்த அந்த நிலையிலேயே நடந்தான் தண்டி மகாகவியின் அறையை நோக்கி. அங்கு தயாராக இருந்த பணிப் பெண், ''தேவியின் அறை இங்கிருக்கிறது. வாருங்கள்'' என்று ஒரு பெரிய அறைக்கு அழைத்துச் சென்றாள். ''உள்ளே செல்லுங்கள்'' என்று கூறித் தலை வணங்கினாள்.

உள்ள நுழைந்தான் பல்லவ இளவல். அவன் கண்ணெதிரே தெரிந்தன இரண்டு பரிசுகள். ஒன்று அசைந்த பரிசு. இன்னொன்று அசையாத பரிசு. இரண்டும் அவன் சித்தத்தைப் பெரிதும் கவர்ந்தாலும் அசையாத பரிசு அவனை அடியோடு நிலைகுலையச் செய்து விட்டது. சிலைபோல் நின்றான் இளவரசன். அத்தகைய ஒரு பொக்கிஷத்தை எப்படிச் சிருஷ்டித்தாள் ரங்கபதாகாதேவி என்று நினைத்து நினைத்து வியந்தான். மலைத்தான். அவன் கண்ணைவிட்டு அசையும் அழகிகள் மறைந்தார்கள். அசையாத அப்பொருளே நின்றது.

## 29. அவள் கேட்ட வரம்

**அ**ப்படியொரு விசித்திரப் பொருளை ரங்கபதாகாதேவி சிருஷ்டிக்க முடியுமென்று கனவிலும் அவன் கருதாததால் அதை மிகுந்த வியப்புடனும், பிரமிப்புடனும் நீண்ட நேரம் உற்று நோக்கிக் கொண்டு சிலையென அறை முகப்பிலேயே நின்றான். அறையின் நட்ட நடுவிலிருந்த உயர்ந்த மஞ்சமொன்றில், அறையில் நுழையும் யார் கண்ணுக்கும் புலப்படும்படியான அந்தக் கலைப் பொக்கிஷத்தை வைத்திருந்தாள் கங்க மன்னன் மகள். அந்தப் பொக்கிஷம் ஒரு கோவில்! பூராவும் நெட்டியால் செய்யப் பட்ட ஓர் ஆலயம்!

அந்த ஆலயத்தின் நுணுக்கமான வேலைப்பாட்டையும், அதன் சுவர்களும், உள்ளடங்கிய பிராகாரங்களும். உயர எழுந்த கோபுரங்களும், முன்னாலிருந்த சின்னஞ்சிறு துணைச் சந்நிதிகளும்

அமைக்கப்பட்ட முறையையும் கண்டு அசந்தே போனான் பல்லவ இளவல். அந்தக் கோயில் கிட்டத்தட்டத் தான் கைலாசநாதருக்குக் கட்டத் திட்டமிட்டிருந்த கோவிலைப் போலவே காணப்பட்டதைக் கண்டு வியப்பின் உச்சநிலையை அடைந்தான். கோவில்களின் ஒவ்வொரு மண்டபமும் ஒவ்வொரு தூணும் ஒவ்வோர் உள்ளறையும் சிற்ப இலக்கணப் படி அமைந்திருந்ததைக் கண்ட இளவரசன், இத்தகைய நுட்ப வேலைப்பாட்டை நெட்டில் செய்து முடிக்க ரங்கபதாகாதேவிக்குக் குறைந்த பட்சம் ஆறு மாத காலம் ஆகியிருக்க வேண்டுமென நினைத்தான், அத்தனையிலும் அவனுக்குப் பொறாமையும் சிறிது சந்துஷ்டியுங்கூட இருந்தன. தான் கல்லால் சமைக்க நினைத்திருந்ததைக் கிட்டத் தட்ட நெட்டியால் காட்டி விட்டாளே கங்கன் மகள் என்ற நினைப்பால் எழுந்தது பொறாமை. ஆனால் அந்த அமைப்பில், தூண்களிலும், சுவர்களிலும் எந்தப் பிரதிமைகளோ, தெய்வ பிம்பங்களோ உருவாக்கப்படாம லிருந்ததால் ஏற்பட்டது மகிழ்ச்சி. 'இவளைவிட ஒரு பங்கு அதிகத்திறமையுடன் நான் கைலாசநாதர் கோவிலைக் கட்ட முடியும், தெய்வப் பிம்பங்களை வேறு யாரும் சிருஷ்டிக்க முடியாத அளவுக்கு சிருஷ்டிக்க முடியும்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் அவன்.

அவன் எண்ணங்களையெல்லாம் அறையில் எட்ட நின்றபடி அளந்து கொண்டிருந்தாள் ரங்கபதாகாதேவி. ஆகவே மெதுவாகச் சொன்னாள். அவள், ''எந்தக் கலையும் பூர்ணமானதல்ல. கலைத் துறையில் அபிவிருத்திக்கு எப்பொழுதும் இடமிருக்கிறது' என்று.

கடல் அலைகளின் குறுக்கே திடீரெனப் படகின் முகப்பொன்று பாய்ந்து கிழித்துக் கொண்டு முன்னேறியதைப் போல் அவன் சிந்தனை அலைகளைக் கிழித்த அந்தச் சொற்களால் சற்றுச் சுயநிலை அடைந்து திரும்பிய அந்த ராஜ சிற்பி, ''என்ன சொல்கிறீர்கள் இளவரசி?'' என்றான்.

''கலைக்குப் பூர்ணத்துவம் என்பது இல்லை, கலைஞனுக்குத் திருப்தி என்பது இல்லை.''

புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த இளவரசன், ''ஆம் இளவரசி! கலைக்குப் பூர்ணத்துவம் இருந்தால் அபிவிருத்தி என்ற சொல்லுக்கு இடமிருக்காது. கலைஞனுக்கு திருப்தி இருந்தால் கலை வளருவதற்கு வகையிருக்காது'' என்று கூறவும் செய்தான் உணர்ச்சியுடன்.

அவன் உணர்ச்சி வேகம் அவளையும் தொட்டிருக்க வேண்டும். ''ஆம் இளவரசே! அப்படி இல்லாவிட்டால் இந்த நெட்டிக் கோவிலை இப்படியே கற்களால் கெட்டிக் கோவிலாக நானே கட்டி விடுவேன். செப்பனிட உங்கள் கைகளுக்கு வேலை இருக்காது'' என்று கூறினாள்.



இளவரசன் அதற்குப் பதிலேதும் சொல்லாமல் அவளையும் பார்த்து அந்த அறையைச் சுற்றியும் கண்களை ஓடவிட்டான். அறை நல்ல விசாலமான அறையாய் இருந்ததன்றி ஏராளமான கலைப் பொருள்களே அறையெங்கணும் காட்சியளித்தன. அவள் பஞ்சணை முகப்பிலே கட்டிலின் ஒரு காலிலே காமன் கருப்பு வில்லேந்தி, பூங்கணைகளுடன் காணப்பட்டான். தூர இருந்த சாளரங்களில் அரி, அயன், துவாரபாலகர், முழுமுதற் கடவுள் இப்படிப் பல பிம்பங்கள் வெண்சாந்து பூசிய காரையால் செய்யப்பட்டுக் காட்சியளித்தன.

''தேவி! நீங்கள் இப்பேர்ப்பட்ட கலையரசி என்பது எனக்குத் தெரியாது'' என்று கூறினான், இளவரசன்.

ரங்கபதாகா தேவியின் விழிகள் நன்றாக மலர்ந்தன. அவனை ஏறெடுத்து நோக்கின. பவள இதழ்களும் மெல்ல விரிந்து கிள்ளை மொழிகளை உதிர்த்தன. ''பல்லவ நாட்டின் ராஜ சிற்பியின் பாராட்டு என் மனத்தை மகிழ்ச்சியாலும் பெருமையாலும் நிரப்புகிறது. மயிர்க் கூச்சமும் ஏற்படுகின்றது எனக்கு. ஆனால் இந்தப் பாராட்டுதலுக்கு நான் தகுந்தவளல்ல. கலையரசி என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டிருந் தால், பூரணத்துவத்தை எட்டி விட்ட மமதை என் மனத்தில் முளைத் திருந்தால், நான் இங்கு வந்திருக்க மாட்டேன். கைலாசநாதர் கோவிலை நான் சிருஷ்டித்திருக்கவும் மாட்டேன்'' என்றாள்.

பல்லவ இளவல் மேலும் அதிர்ச்சியே அடைந்தான். ''நான் கைலாச நாதருக்குக் கோவில் கட்ட நினைத்திருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று வினவினான்

''உங்கள் தந்தை ஒரு சிவன் கோவில் கட்டக் கட்டளை இட்டிருப்பதாகவும், சிவபிரான் கைசாலத்திலிருப்பதைவிட அழகான கோவிலமைத்து அதற்குக் கைலாசநாதர் கோவில் என்று பெயரிட நீங்கள் சபதம் செய்திருப்பதாகவும், எங்கள் நாட்டில் மக்கள் பேசிக் கொள்கிறார்கள்'' என்று தெரிவித்தாள் ரங்கபதாகாதேவி.

''அந்தச் செய்தி அத்தனை தூரம் பரவிவிட்டதா?'' என்று வினவினான் இளவரசன் வியப்புடன்.

''ஆம் பிரபு! கங்க நாடு, சாளுக்கிய நாடு, அவற்றையும் தாண்டி இன்னும் வடக்கில்கூட மக்கள் தங்களைப் பற்றிப் பேசிக் கொள்கிறார்கள். 'பரமேசுவரவர்மனுக்கு ராஜசிம்மன் என்ற ஒரு மகன் இருக்கிறான். அவன் சிற்ப சாஸ்திரத்தில் கை தேர்ந்தவன்.

ராஜகாரியங்களைக் கவனிக்காமல் சதா சிற்பங்களைச் சிருஷ்டிக்கிறான். சிற்பிகளுடன் சுற்றுகிறான். காஞ்சி கடிகையில் அரசு நூல், வாட் பயிற்சி, விற்பயிற்சி பெற்ற நேரங்கள் போக மீதி நேரங்களில் ஏதாவது சிற்பங்களைச் சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறான். அரசனும் மகனை மனம் போனபடிப் போகவிட்டு அரச காரியங்களில் அவனுக்குப் பரிச்சயமில்லாமல் அடிக்கிறான்' என்று இப்படியெல்லாம் பேசுகிறார்கள்...'' என்று சொல்லிக்கொண்டு போன ரங்கபதாகா தேவி திடீரென அதிர்ச்சியுற்றுப் பேச்சை நிறுத்தினாள்.

''ஏன் நிறுத்திவிட்டீர்கள்? சொல்லுங்கள் மேலே'' என்று ஊக்கினான் ராஜசிம்மன்.

அவள் தலை கவிழ்ந்தாள். பிறகு திடீரென அவனை நோக்கி வந்து மண்டியிட்டு அவன் காலடியில் தலைபட வணங்கினாள். மலர்க் கரங்களால் அவன் கடின பாதங்களைத் தொட்டுக் கண்களிலும் ஒற்றிக் கொண்டாள். இளவரசனுக்கு ஏதும் புரிய வில்லை. ''என்ன இது தேவி! எதற்காக இப்படி...'' என்று அறுந்த சொற்களை உதிரவிட்டான் அரசகுமாரன்.

''அபசாரப்பட்டு விட்டேன்'' என்றாள் அரசகுமாரி.

''என்ன அபசாரம் செய்தீர்கள்?''

''உணர்ச்சி வேகத்தில் குருநாதரை அவமரியாதையாகப் பேசிவிட்டேன்!''

''யார் குருநாதர்?''

''தாங்கள் தான்.''

''எதற்குக் குரு நான்?''

''சிற்ப சாஸ்திரம் சொல்லிக் கொடுக்க.''

''அதைப் பற்றி என்ன அவமரியாதை செய்துவிட்டீர்கள் இப்பொழுது?''

''உங்கள் கதையைச் சொல்லும்பொழுது உங்களை...'' என்ற அவள் நா தழுதழுத்தது.

''என்னை?''

''அவன் இவன் என்று பேசிவிட்டேன்.''

''உங்கள் நாட்டு மக்கள் பேசிக் கொள்வதைச் சொன்னீர்கள். அதில் மரியாதைக் குறைவு என்று ஏதும் இல்லை'' என்று சமாதானப்படுத்தினான் இளவரசன்.



''தவறு இளவரசே தவறு! மக்கள் சொன்னாலும் என் வாயால் அப்படி வருவது தவறு'' என்றாள் ரங்கபதாகா தேவி துயரம் தோய்ந்த குரலில்.

இப்படிச் சொன்ன அவள் அவன் காலடியை விட்டு எழுந்திருக்க வில்லை. திடீரென அவன் காலை உஷ்ணமான இரு நீர்த் துளிகள் நனைத்தன. அதுவரை நிதானத்தை கைவிடாத ராஜசிம்மன் சற்று மனம் நெகிழ்ந்தான். 'இப்படியும் ஒரு கலைப் பைத்தியம் இருக்குமா?' என்று எண்ணியபடி குனிந்து அவள் கைகளைப் பிடித்து மெல்லத் தூக்கினான். அவள் எழுந்த நிலையில் அவள் மோவாய்க் கட்டையை தன் கையொன்றால் உயரத் தூக்கி, ''கண்ணீருக்கு அவசியமில்லை பெண்ணே! உன் கலை உணர்ச்சியால் அனாவசிய மான குற்றச்சாட்டுக் களை உன்மீது சுமத்திக் கொள்கிறாய்'' என்று கூறிவிட்டு இன்னொரு கையால் அவள் கண்ணீரைத் துடைத்தான்.

அதுவரை அவன் 'நீங்கள் போங்கள்' என்று கூறிவந்த மரியாதையைக் கைவிட்டதைக் கண்டு அவள் உள்ளம் பூரித்தாள். அதை வெளிக்குக் காட்டாமல், ''இல்லை. நான் செய்தது அபசாரம்தான். அதைக் குருநாதர் பொறுக்க வேண்டும்'' என்று மெல்லச் சொற்களை உதிர்த்தாள்.

''நான் எப்பொழுதும் குருநாதரானேன்?'' என்று வினவினான் இளவரசன்.

''இரண்டு ஆண்டுகளுக்கு முன்பா?'' என்று கூறிய ரங்கபதாகா தேவி அவனைப் பார்த்துப் புன்முறுவல் கோட்டினாள்.

''இரண்டு ஆண்டுகளுக்கு முன்பா?'' வியப்புடன் எழுந்தது இளவலின் கேள்வி.

''ஆம்.''

''அப்பொழுது உன்னைத் தெரியாதே எனக்கு?''

''தெரியாவிட்டால் என்ன!''

''தெரியாவிட்டால் எப்படி குருநாதராக முடியும்? என்ன சொல்லிக் கொடுத்திருக்க முடியும்?''

''துரோணர் சொல்லிக் கொடுத்தா ஏகலைவன் வில்லாளி யானான்? மனத்திலே உங்களைக் குருநாதராக வரித்தேன். சிற்பங்களைச் சிருஷ்டித்தேன், நேரே பயில இங்கு வந்தேன். நான் வந்த போது என்னைத் தொடர்ந்து போரும் வந்தது. அப்படியும் நீங்கள் கிடைத்து விட்டீர்கள்.''

இதைக் கேட்டதும் அவளை உற்று நோக்கினான் ராஜ சிம்மன். அப்பொழுதும் அவள் அவனுக்குச் சமீபத்தில் நின்றிருந்தாள். அவள் மோகன உடல் எத்தனையோ கணைகளை வாரி இறைத்தன. ஆனால் அந்த வாளிகள் பயனற்றுப் போயின, அரசுகுமாரன் மனம் வேறு விஷயங்களில் லயித்திருந்ததால். ஏதோ சிந்தனையிலிருந்த இளவரசன் திடீரென அவள் தோளைப் பற்றினான். ''தேவி! நீ சிற்பத்தில் எதைக் கற்க விரும்புகிறாய்?'' என்று வினவினான்.

அவள் சொன்னாள் தன் விருப்பத்தை. அதைக் கேட்ட பல்லவ இளவல் பெருவியப்படைந்தான். ''இதை கேட்க யார் சொல்லிக் கொடுத்தது உனக்கு?'' என்று வினவினான் கோபம் கொந்தளித்த குரலில்.

''ஸ்ரீராம புண்ய வல்லபர்'' என்றாள் தேவி அவன் கோபத்தைப் பொருட்படுத்தாமல்.

பல்லவ இளவலின் கண்களில் கனல் பறந்தது. ''இதுவும் அவர் வேலைதானா?'' என்று இரைந்து கூவினான் இளவரசன். அவள் கேட்ட வரம் அத்தனை பெரிது. அவன் வாழ்வை, வாழ்வின் ரகசியத்தைப் பாதிக்க வல்லது. ஏன், பல்லவ சாம்ராஜ்யத்தைவிட அவன்எதை அதிகாகப் பாவித்திருந்தானோ, எந்த ரகசியத்தைக் கொண்டு வரலாற்று ஏடுகளில் நிரந்தர இடம் பெற நினைத் திருந்தானோ, அதையே பாதிக்க வல்லதாயிருந்தது அவள் செய்த விண்ணப்பம்.

## 30. குரு தட்சணை

கங்கன் செல்வி ரங்கபதாகா தேவி கேட்ட வரத்தைக் காதில் வாங்கியதும் பல்லவ இளவல் பெருவியப்படைந்தானென்றால், அதைக் கேட்கச் சொல்லிக் கொடுத்தவர் ஸ்ரீராமபுண்ய வல்லபர் என்பதை அறிந்ததும் சொல்லொண்ணாப் பிரமிப்பும் கோபமும் அவனைக் கௌவிக் கொள்ளவே, சிறிது நேரம் அவன் பேசும் சக்தியை அறவே இழந்தான். பல்லவர்களின் பரம்பரை ஓவியன் தனக்கு மட்டுமே சொல்லிக் கொடுத்த பெரும் ரகசியத்தை, பல்லவ வர்ண ஜாலங்களைக் கண்டு உலகம் வியந்த வித்தையின் சூட்சமத்தைக் கேட்கும்படி ஸ்ரீராமபுண்ய வல்லபர் உபதேசித்திருந்ததை எண்ண எண்ண அவரைக் கொன்றுவிடலாமா என்ற ஆத்திரம் ஏற்பட்டது ராஜசிம்ம பல்லவனுக்கு. சில சின்னஞ்சிறு பழங்கள், மூலிகைகள், இலைகள், வேர்கள் இவற்றைச் சாறு கூட்டிச் சிருஷ்டிக்கப்படும் வர்ணம், காலாந்தத்துக்கும் இருக்குமென்பது சாத்திரத்தில் கண்டதானாலும், அந்தக் கனிகள், இலைகள், வேர்கள் எவை எவை, அவற்றைப் பிழிந்தெடுத்து அரைத்துச் சேர்த்து மை கூட்டும் முறை எப்படி என்ற ரகசியங்கள் பல்லவ நாட்டு ஓவியர் பரம்பரைக்குச் சொந்தமாயிருக்க, அதை அறியும்படி ரங்கபதாகா தேவியை ஸ்ரீராமபுண்யவல்லபர் ஏவியதன் மர்மம் என்ன என்பதை அறியமுடியாததால் ஆத்திரத்துடன் குழப்பமும் ஓரளவு ஏற்பட்டது ராஜசிம்ம பல்லவனுக்கு. அதனால் நின்ற நிலையில் சிறிது சங்கடத்துடன் அசைந்தான் அவன்.



அவன் குழப்பம், சீற்றம் இரண்டையும் அறியவே செய்தாள் ரங்கபதாகாதேவி. அவள் தோளைப் பிடித்திருந்த அவனது ஒரு கை அழுந்திய தினுசிலிருந்து அவன் உள்ளுக்குள் குமைந்த ஆத்திரமும் அவன் கால்கள் திடமாயில்லாமல் அப்படியும் இப்படியும் திரும்பியதிலிருந்து அவன் அடைந்த குழப்பமும் தெள்ளென விளங்கியது அவள் சிந்தைக்கு. அந்த நிலையிலிருந்து அவனை மீட்க ரங்கபதாகாதேவி அவனுடன் சற்று நெருங்கினாள். அவள் பாதத்தின் கட்டை விரலொன்று அவன் பாதமொன்றைலேசாகத் தொட்டுத் தடவியது. அதன் விளைவாக அவளைத் திரும்பி நோக்கிய பல்லவ இளவல் அவள் பவள இதழ்களில் அரும்பிய புன்னகையைக் கவனித்தான்.

அந்தப் புன்னகை அவள் முகம் பூராவுக்கும் ஒரு பொலிவைக் கொடுத்திருந்தது. சாதாரணமாகவே மயக்கம் தரும் விழிகள் அந்தச் சமயத்தில் அதிக மயக்கத்தைத் தந்தன. அவள் தலை சற்றே நிமிர்ந்திருந்ததால் அந்தச் செவ்விய இதழ்கள் எதையோ எதிர்பார்ப்பன போல் தெரிந்தது பல்லவ இளவலின் சீற்றம் மிகுந்த விழிகளுக்கு. ஆனால் அவன் சீற்றம் மெள்ள மெள்ள மந்தப்பட்டது. அவன் விழிகளில் சீற்றம் இருந்த இடத்தைச் துயரம் கைப்பற்றிக் கொண்டது. வேறு சந்தர்ப்பமாயிருந்தால், வேறு நிலையில் அவன் மனம் மட்டும் இருந்திருந்தால், அவன் கண்ணெதிரே அவள் தூக்கிய தலையின் விளைவாகப் பெரிதாகத் தெரிந்த அவள் உதடுகளின் சிரிப்புக்கும் பதில் எப்பொழுதோ கிடைத்திருக்கும், எப்படியோ கிடைத்திருக் கும். ஆனால் அவள் கேட்ட வரம் அவனை உலுக்கியிருந்ததால் அவன் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அவள் தோளிலிருந்த ஒரு கையையும் எடுத்தான். பிறகு மெல்லக் கூறினான், ''தேவி! கலை பயிலும் முறை இதுவல்ல'' என்று.

ரங்கபதாகா தேவியின் கண்கள் அவன் கண்களுடன் நன்றாகவே கலந்தன. அவற்றில் எந்தவித அச்சமோ கல்மிஷமோ இல்லை. அவள் கேள்வியும் திட்டமாக எழுந்தது. ''இந்த முறையில் தவறு என்ன?'' என்று.

''பல்லவ நாட்டு ஓவியக் கலை பற்றி, அவற்றில் தீட்டப்படும் வர்ண ஜாலங்களைப் பற்றி நீயாகக் கேட்கவில்லை. வேறொருவர் தூண்டி நீ கேட்கிறாய்'' என்று சுட்டிக் காட்டினான் ராஜசிம்மன்.

''அதனாலென்ன தவறோ?''

''பிறர் சொல்லிக் கேட்பது சுய ஊக்கத்தையோ, வேட்கையையோ குறிக்காது. கலைக்குச் சுயவேட்கை தேவை.''

''சுய வேட்கை இல்லாமலா இத்தகைய கலைப் பொருள்களை நான் சிருஷ்டித்திருக்கிறேன்?'' என்று அந்த அறை முழுவதையும் தனது கையால் ஒருமுறை சுட்டிய ரங்கபதாகாதேவி, ''அதுவும் இந்தக் கோயிலைச் சுயவேட்கை இல்லாமல், ஊக்கமில்லாமல், உணர்ச்சியில்லாமல் தயாரித்து விட முடியுமா?'' என்று நெட்டிக் கோயிலையும் சுட்டிக் காட்டினாள்.

அவள் சொல்வது உண்மையென்பதைப் பல்லவ இளவல் உணர்ந்திருந்தாலும் உணராததுபோல் கேட்டான், ''அப்படியானால் மேலும் சிற்ப சிருஷ்டிகளை என்னிடம் கற்கலாமே? வர்ணஜாலங் களைப் பற்றி ஏன் கேட்கிறாய்?'' என்று.

ரங்கபதாகா தேவி உடனடியாகப் பதில் சொல்லவில்லை, சரேலெனத் திரும்பி ஒய்யாரநடை நடந்து கட்டிலுக்குச் சென்று அதில் உட்கார்ந்து இரு கைகளையும் மடியில் பின்னிக் குவித்துக் கொண்டாள். அந்த நிலையில் அவனை ஏறிட்டு நோக்கி, ''இளவரசரே! என்னை நன்றாகப் பாருங்கள் என்று மிக மிருதுவான குரலில் அழைப்பு விடுத்தாள்.

ஆனால் பார்க்கவும் அஞ்சினான் அப்பணையினும் உயர்ந்த தோளான். அவள் மோகன உருவத்தைப் பார்த்தால் தன் மன பலம் சுக்கு நூறாக வெடித்துவிடும் என்பது அவனுக்குச் சந்தேகமறத் தெரிந்திருந்தது. இருப்பினும் அவள் அழைப்புக்கிணங்கி, கண்களை அவள்மீது செலுத்தினான். அகண்ட கண்களும், திரண்ட மார்பும் குழிவிழும் செழித்த கன்னங்களும் சிறுத்த இடையும் உட்கார்ந்த நிலையில் இணைந்து கிடந்த வாழைக் கால்களும், அவற்றின் கூடுதலால் மறைந்துவிட்ட இன்ப ஜாலமும் இளவலைக் கதிகலங்க அடித்தாலும் அவன் அந்தச் சக்தியிலிருந்து மீளவே பார்த்தான். ''உம்... பார்த்தேன்...'' என்று வீம்புக்கு உறுமவும் செய்தான்.

''பார்த்து என்ன கண்டீர்கள்?'' என்று கேட்டாள் ரங்கபதாகாதேவி மெல்ல நகைத்து.

''உன் சேலை பச்சை வர்ணம், தலைப்பு மஞ்சள், கால்களில் செம்பஞ்சுக் குழம்பு, சிவந்த மருதாணி'' என்று சொல்லிப் பல்லவ இளவலும் நகைத்தான்.



''நகைக்காதீர்கள். மேலே சொல்லுங்கள்...'' என்றாள் தேவி.

''நகைகளில் சிவப்பு, நீலம், மஞ்சள், ஊதா இப்படிப் பல நிறக் கற்கள்...''என்றான் பல்லவ இளவல்,

ரங்கபதாகா தேவி அவன் வர்ணனையைக் கேட்டதும் மீண்டும் மெல்ல நகைத்தாள். ''இப்பொழுது புரிகிறதா உங்களுக்கு?'' என்றும் வினவினாள்.

''எது?''

''விதவித வர்ணங்களைப் பெண்கள் விரும்புகிறார்கள் என்பது.''

''ஆடை ஆபரணங்களைச் சொல்கிறாயா?''

''ஆம்''

''அது சகஜந்தானே?''

''இப்படிப் பலப்பல வர்ணங்களில் ஆடை ஆபரணங்களை நீங்கள் அணிவீர்களா?''

''சேச்சே! ஆண் மகன் எப்படி அணிவான் பல வர்ண ஆடைகளை?''

இதைக் கேட்ட ரங்கபதாகாதேவி, கட்டிலைவிட்டு இறங்கி அவனை நோக்கி நடந்து வந்தாள். அவன் இருந்த இடத்திற்கும் கட்டிலுக்கும் நாலைந்து அடிகள்தானிருக்குமென்றாலும் அந்த நாலைந்து அடிகளை அவள் நடந்து வந்ததில் கூடப் பலப்பல ஒய்யாரங்கள் உதிர்ந்தன. அவள் அசைவுகளில் காமன் கணைகள் நாற்புறமும் சிதறின. அவனருகில் வந்ததும் அவள் மீண்டும் அவனை ஏறெடுத்து நோக்கினாள். ''பல்லவர் குலத் தோன்றலே! இப்பொழுது புரிகிறதா? பெண்களுக்கு அலங்காரம் உயிர்நாடி. ஆகவே வர்ணங்களை அவர்கள் விரும்புமளவுக்கு ஆண்கள் விரும்பு வதில்லை. எங்கள் உள்ளுணர்விலேயே ஆயிரம் வான விற்கள் உண்டு. ஆகையால் வர்ணஜாலங்களின் சூட்சுமத்தை அறிய நான் விரும்புவதில் என்ன விந்தை? அதுவும் பல்லவ ராஜ சிற்பியான உங்களிடம் நான் சிற்பமும், சிற்பத்துக்கு அழகுகூட்டும் வர்ணமும் கற்க இஷ்டப்பட்டால் அது பிறர் சொல்லிக் கொடுத்துத்தான் எனக்குத் தெரிய வேண்டுமென்பதில்லை. ஸ்ரீராமபுண்ய வல்லபர் என் உள்ளக்கருத்தை அறிந்தே எனக்கு யோசனை சொன்னார்'' என்றாள் ரங்கபதாகாதேவி.

அவள் சமீபம் பெரும் வேதனையை அளித்தது அவனுக்கு. அவள் துணிவுடன் உராய்ந்த அவள் சேலைப்பகுதி உன்மத்தத்தை அளித்தது. அந்த நிலையில் அவள் மேலும் சொன்னாள்: ''பல்லவ இளவரசே! எனக்கு நினைவு தெரிந்த நாளாய் இரண்டு விஷயங்களை

எங்கள் நாட்டில் பிறர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். ஆசார்ய தண்டி மகாகவியின் கவிதா ஞானம், பல்லவ இளவரசரின் சிற்ப சிருஷ்டிப் பெருமை இவைஇரண்டும் மற்ற நாடுகளைப் போலவே எங்கள் நாட்டிலும் பிரசித்தி பெற்றிருந்தன. பெரிய வித்வத் ஸதஸ்களில் இவற்றைப் பற்றிப் பேசாதவர் கிடையாது எனது தந்தைகூட இதைப் பற்றி அடிக்கடி பேசுவார். மற்றவர்களால் செய்யப்பட்ட உங்கள் நாட்டுப் பிரதிமைகள் எங்கள் நாட்டில் விற்பனைக்கு வந்தால், 'உம்... இதென்ன பிரமாதம்! பல்லவ இளவலின் கைத்திறனைப் பார்க்க வேண்டும்!' என்று கூறுவார்கள். சிறு வயது முதலே சின்னஞ்சிறு பொம்மைகளை நீங்கள் சிருஷ்டிப்பீர்களாம். இப்பொழுது தங்களுக்கு நிகரே உலகில் இல்லையாம். நீங்கள் தீட்டிய ஓவியங்கள் நீர் பட்டாலும், எண்ணெய் ஊற்றி வழித்தாலும் போவதில்லையாம். இப்படியெல்லாம் கேள்விப் பட்டேன். சிற்பக் கலை, ஓவியக் கலை பயின்றேன். ஆகையால் உங்களைப் பார்க்க ஆசை கொண்டேன்; முடிந்தால் உங்களிடம் கலை பயிலவும் ஆசைப்பட்டேன். அந்த ஆசையைத்தான் ஸ்ரீராமபுண்ய வல்லபரும் வலியுறுத்தினார்...''

இங்கு அவள் பேச்சை நிறுத்தினாள். அவள் சொற்களைக் கேட்டு, சொற்களில் தொனித்த உணர்ச்சியைக் கேட்டுப் பிரமித்து நின்றான் பல்லவ இளவல். பிறகு அவன் கைகளிரண்டும் அவள் இடையில் பதிந்தன. ''தேவி! உன் சிற்பக் கலை உணர்ச்சியோ நீ கேட்ட வரமோ சாளுக்கியப் போர் மந்திரியின் தூண்டுதலால் வரவில்லையானாலும் அவர் உன்னைத் தன் சதுரங்கக்காயாக நகர்த்த முயலுகிறார். உன்னை என்ன, என்னையும் மைவிழியையும் எல்லோரையுமே நகர்த்த இஷ்டப்படுகிறார். அதை மறந்துவிடு வோம். நீயாகத்தான் கேட்கிறாய் என்று வைத்துக் கொண்டாலும் வர்ணங்களின் ரகசியத்தை நான் உனக்குப் போதிக்க முடியாது.'' என்று கூறினான் அவன் இடையில் அழுந்திய கை மேலும் அழுந்த.

''ஏன்?'' இதை கேட்ட ரங்கபதாகா தேவி நன்றாக அவனை நெருங்கினாள்.

வாழ்க்கையில் ஒருவருக்குத் தவிரவேறு யாருக்கும் அந்த ரகசியத்தைச் சொல்வதில்லையென எனது குருநாதருக்கு நான் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன்.''

''அந்த ஒருவர் யார்?''

''யாரென்பதில் நிபந்தனைகளிருக்கின்றன!''

''என்ன நிபந்தனைகள்?''

''வர்ண ரகசியம் கற்க விரும்புபவன் சிற்பியாயிருக்க வேண்டும், ஓவியனாகவும் இருக்க வேண்டும்.''



''அப்படி நானில்லையா?''

''இருக்கிறாய். ஆனால் அது மட்டும் போதாது.''

''வேறு என்ன?''

''நான் உயிருக்கு உயிராக நேசிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.''

இந்த நிபந்தனையைக் கேட்டதும் தலைகுனிந்தாள் ரங்கபதாகாதேவி. ''நல்ல கெட்டிக்காரர் நீங்கள்'' என்றாள், நாணம் ஊடுருவி ஒலிக்க.

''தவறாக நினைக்காதேதேவி!'' என்ற இளவரசனை இடையில் மடக்கிய தேவி, ''இல்லை இல்லை. சரியாகத்தான் உணருகிறேன்'' என்ற தேவி பூமியை நோக்கிப் புன்முறுவல் கோட்டினாள்.

''தேவி!''

''உம்...''

''என் குருநாதர் சொன்னதைத்தான் சொன்னேன்.'

''புரிகிறது.''

''வர்ணம் குழைக்கும் ரகசியம் யாருக்கும் தெரியக்கூடாது என்றார்.''

''ஆம், ஆம்.

''உன்னை அந்தரங்கமாக நேசித்து நீ என் ஆணைக்குக் கட்டுப்படுவது போல் உன் ஆணைக்குக் கட்டுப்படுபவருக்கு மட்டுமே உன் ரகசியம் தெரியட்டும் என்றார். இப்படியிருக்க காலமுள்ளவும் இருக்கும் வர்ண ஜாலங்களைப் பற்றி உனக்கு எப்படிச் சொல்லிக் கொடுக்க முடியும்?''

இதை அவன் கேட்ட பின்பு வேறு கேள்விகள் அவள் கேட்கவில்லை. ஒன்று மட்டும் சொன்னாள்: ''நான் பதில் கேள்விகள் கேட்பதில் சங்கடமிருக்கிறது. ஆனால் ஒன்று செய்ய முடியும்'' என்று.

இளவரசன் கைகள் அவள் இடைக்குப் பின்னாலும் சென்றன. ''என்ன அது தேவி?'' என்று வினவினான்.

''குருதட்சிணை கொடுக்க முடியும்'' என்றான் ரங்கபதாகா தேவி.

''என்ன தட்சிணை அது?'' என்று கேட்டான் பல்லவ இளவல்.

கங்கன் மகள் தனது கமல முகத்தைத் தூக்கி அவன் விழிகளுடன் தன் விழிகளைக் கலந்தாள். தட்சிணை என்னவென்பது புரிந்து விட்டது பல்லவ இளவலுக்கு.

# 31. விடி மோட்சம்

கங்கன் மகளின் கண்கள் இளவரசனைக் காந்தமெனக் கவர்ந்து நின்றன. அந்த அழகிய விழிகளில் வழிந்தோடிய காதலிலிருந்து அவள் கொடுக்க வந்த குரு தட்சிணை என்ன என்பதைச் சந்தேகமறப் புரிந்து கொண்டான் ராஜசிம்ம பல்லவன். அவள் தன்னையே குருதட்சிணையாக அர்ப்பணிக்கிறாளென்பதை உணர்ந்து கொண்ட பல்லவ இளவலின் மனத்தில் உணர்ச்சி அலைகள் பெரிதாகக் கொந்தளித்து எழுந்தன. பெரும் பெரும் புஷ்ப ஜாலங்களைத் தாங்கி நிற்கும் செழித்த கொடிபோல் பூத்துக் குலுங்கி நின்ற ரங்கபதாகா தேவியை அவன் நன்றாகக் கூர்ந்து நோக்கினான் ஒரு முறை. அந்த நோக்கு அவன் இதயத்தைக் காமன் கணைகளால் சுக்குநூறாக உடைக்க முற்பட்டதால் பார்வையை வேறு திசையில் திருப்பிக் கொண்டு பெருமூச்சும் விட்டான்.

அவன் தன்னை நோக்கியதையும் தன் எழிலைக் கண்டும் ஏதும் சொல்லவோ செய்யவோ துணிவில்லாமல் திண்டாடுவதையும் கண்ட ரங்கபதாகாதேவி அவனை நெருங்கி, ''ஏன், என்னைப் பார்க்கப் பிடிக்கவில்லையா உங்களுக்கு?'' என்று குரலில் விஷமம் ஒலிக்க வினவினாள்.

வேறு புறம் முகத்தைத் திருப்பி நின்ற நிலையிலும் அவள் சரீரம் காரணமாகவோ காரணமில்லாமல் அசப்பிலோ, அவன் மீது இரண்டொருமுறை பட்ட காரணத்தால் அவன் பெரிதும் நிலை குலைந்தான். அதன் விளைவாக அவன் உள்ளமும் உணர்ச்சிகளும் பேரலைகளாக எழுந்து அவனை எரித்ததால், ''பிடிக்காமலென்ன?'' என்று காரணமின்றிச் சீறினான்.

ரங்கபதாகாதேவி அவனை மேலும் சீண்ட முற்பட்டு, ''அப்படியானால் குருதட்சிணை என்னவென்ற புரியவில்லையா?'' என்று கேட்டாள்.

''புரிகிறது. நன்றாகப் புரிகிறது'' என்றான் பல்லவ இளவல் சங்கடத்துடன்.

''அப்படியானால் போதாதா?'' என்று கேட்டு மெல்லச் சிரித்தாள் ரங்கபதாகாதேவி.

''போதும். போதும் ஏன் போதாது?''

''அப்படியானால் ஏற்க என்ன தடை?''

''எதை?''



''திட்டமாகச் சொல்ல வேண்டுமா?''

''ஆம்.''

''என்னை.''

இந்தச் சொல்லை மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் சொன்னாள் ரங்கபதாகாதேவி. அந்த ஒரு சொல்லால் பெரும் அதிர்ச்சியடைந்த பல்லவ இளவல் சரேலெனத் திரும்பினான் அவளை நோக்கி, ''தேவி! நீ என்ன சொல்கிறாயென்பதைப் புரிந்து தான் சொல்கிறாயா?'' என்று வினவினான் பெரும் பொறுப்பை, சுமையைத் தாங்க முயல்பவனின் குரலில்.

ரங்கபதாகாதேவி அவனை அதிகமாக நெருங்கினாள். அவன் கையொன்றை எடுத்துத் தன் கையை அதில் வைத்துப் பற்றினாள். உள்ளங்கை உள்ளங்கையுடன் பதியும்படியாக, ஆனால் முகத்தை நிமிராமலும் கண்களைத் தரையில் சாய்த்தபடியும் கூறினாள் அவள், ''நன்றாகப் புரிந்து கொண்டேதான் பேசினேன். என்னையே உங்களுக்குக் குருதட்சிணையாகக் கொடுக்கிறேன். இன்று கொடுப்பதல்ல அது இளவரசே. நான் உங்களுக்கு அடிமைப்பட்டு ஆண்டுகள் பல ஆகின்றன. என்று உங்கள் புகழ் மாலைகள் கங்க நாட்டுக் கவிஞர்களால் பாடப்பட்டனவோ, என்று உங்கள் சிற்பத் திறனையும் வர்ணஜாலங்களைச் சிருஷ்டிக்கும் அபூர்வத்தையும் பற்றி எங்கள் நாட்டுத் தெருப் பாடகர் வீதிகளிலும் பாட முற்பட்டார்களோ, என்று உங்கள் வாள் வலிமையையும் தோள் வலிமையையும் பற்றி வீரர்கள் கூடுமிடங்களில் எல்லாம் பேசப்பட்டனவோ, என்று எங்கள் நாட்டுப் பெண்கள் நால்வர் சேரும்போது உங்கள் கம்பீரத்தையும் அழகையும் வர்ணித்தார்களோ, அன்றே நான் உங்களுக்கு அடிமையாகி விட்டேன்; ஆகவே இப்போது குரு தட்சிணை கொடுப்பதென்பது பெயருக்குத்தான். குருதட்சிணை என்பது என்றோ கொடுத்தாகி விட்டது'' என்று.

இதற்கு மேல் அவள் ஏதும் சொல்லவில்லை. சொல்ல ஏதும் இல்லை. இளவரசன் மனம், ஆணையிடுவதுபோல் தன் கையைப் பற்றி இருந்த அவள் கையின்மேல் நிலைத்தது. அவளுடைய உள்ளங்கை தன் உள்ளங்கையின்மீது நன்றாக அழுந்தியிருப்பதைக் கவனித்தான். அது அடிக்கடி அசைந்ததிலும் விரல்கள் தன் விரல்களை நாடியதிலும் பல அர்த்தங்கள் தொனிப்பதையும் உணர்ந்தான். சென்ற சில விநாடிகளில் எந்தச் செய்கையிலும் ஈடுபடாதிருந்த அவன் கையொன்று எழுந்து அவள் இடையில் பதிந்தது. அந்த நிலையில் அவளை அழைத்துச் சென்று கட்டிலில் உட்கார வைத்த பல்லவ இளவல் அவள் எதிரில்

சிறிது நேரம் நின்றான். பிறகு அவளை நோக்கிக் கூறினான், ''தேவி! அந்தக் குருதட்சிணையை ஏற்பதற்கு நான் தவம் செய்திருக்க வேண்டும். ஆனால் ஏற்கத் தகாத நிலையில் தற்சமயம் இருக்கிறேன்'' என்று.

''என்ன நிலை அது?''ரங்கபதாகாதேவியின் கேள்வியில் அச்சமிருந்தது, சிறிது ஏமாற்றமுமிருந்தது.

''நாட்டின் நிலை'' என்று கூறினான் பல்லவ இளவல் வருத்தம் தோய்ந்த குரலில்.

அதற்கும் நான் ஓவியக் கலை பயில்வதற்கும், உங்களுக்கு என்னை அர்ப்பணிப்பதற்கும் என்ன சம்பந்தமிருக்கிறது?''

''நிரம்ப இருக்கிறது தேவி. நீ எதிரியின் மகள். என்ன இருந்தாலும் பெண். உன்னை நான் ஏற்றுக் கொண்டால் அதன் விளைவாக உன் தந்தை என் தந்தையுடன் செய்யவிருக்கும் போரைக் கைவிட வேண்டியிருக்கும். இந்த இரண்டில் எது நேரிட்டாலும் போரில் வெற்றி கொள்ள முடியாது. பல்லவன் ஒரு பெண்ணை உபயோகப்படுத்தி தனது நிலையைச் சீர்படுத்திக் கொண்டான் என்று உலகம் தூற்றும். அதுவும் தண்டி மகாகவியின் மாளிகையில் அந்தப் பெண் இருந்த காலத்தில், அங்கு எதிரிக்குப் பயந்து தப்பி வந்து அடைக்கலம் புகுந்த பல்லவன் நிராதரவாக இருந்த ஒரு அபலையைக் கைப்பற்றினான் என்ற அவதூறு ஏற்படும். எனக்கு மட்டுமல்ல ஆசார்யருக்கும் ஏற்படும் அந்த அவதூறு. ஆசார்ய தண்டி பல்லவர்களிடத்திலுள்ள அன்பால் தன்னிடம் கல்வி பயில வந்த அரசகுல மங்கையைப் பல்லவ இளவலுக்கு அடிமைப்படுத்தி விட்டார் என்று அவரையும் தூற்றுவார்கள்'' என்ற இளவரசன் மிகுந்த உணர்ச்சியுடன் பேசினான்.

ரங்கபதாகாதேவி அவனைத் தைரியமாக ஏறெடுத்து நோக்கினாள். ''உலகத்தின் ஒவ்வொரு சொல்லுக்கும் அஞ்சினால், வாழ்க்கையை நடத்த முடியுமா'' என்று வினவினாள்.

பல்லவ இளவல் பஞ்சணையில் உட்கார்ந்த அவளை நெருங்கி, ''சாதாரண மனிதர்கள் அஞ்ச வேண்டியதில்லை. அரச குலத்தார் அஞ்ச வேண்டும்'' என்று கூறி அவன் கன்னத்தில் ஒரு கையையும் வைத்தான்.

ஒரு கன்னத்தில் வைத்த அவன் கை அவள் உள்ளத்தில் மீண்டும் ஆசைக் கனலை மூட்டத் துவங்கியது. 'இன்னொரு கன்னம் என்ன பாவம் செய்தது?'' என்று உள்ளூரக் கேட்டுக் கொண்டாள் அவள். பிறகு இளவரசனைப் பார்த்து, ''சாதாரண மனிதருக்கும் அரச குலத்தாருக்கும் என்ன வித்தியாசம்?'' என்று வினவினாள்.



அவள் வலது கன்னத்தில் பதிந்திருந்த தனது இடது கையைச் சிறிது தாழ்த்தி இரு கன்னங்களையும் அழுந்தப் பிடித்தான் இளவரசன். அப்படியே அவள் முகவாய்க் கட்டையைத் தூக்கி அவள் கண்களை உற்று நோக்கினான். ''தேவி, சாதாரண மக்களுக்கு இல்லாத பல போக போக்கியங்கள் அரச குலத்தாருக்கு இருக்கின்றன. அப்படி வசதிகள் அதிகமாகும் போது கடமைகளும் அதிகமாகின்றன. அரசன் எவ்வழி அவ்வழி குடிகள் என்றிருப்பதால் அரசன் வழி மாசு மறுவின்றி, தூஷணைக்கு இடமின்றி உயர்ந்ததாயிருக்க வேண்டும். அவன் அடையும் போகத்துக்குச் சமதையான தியாகத்துக்கும் அவன் தயாராகயிருக்க வேண்டும். இப்பொழுது எதிரியின் பிடியில் இந்த நாடு சிக்கி கிடக்கிறது. ஆகவே இன்னோர் எதிரி மகளை நான் ஏற்பதற்கில்லை. ஆனால் அதற்கும் ஒரு காலம் வரும். பல்லவ நாடு பல்லவர்களுக்கு மீண்டும் சொந்தமாகும். அப்பொழுது வர்ண ஜாலங்களின் ரகசியத்தைச் சொல்கிறேன் உனக்கு. அப்பொழுது உன்னைச் சரிசமமான தோரணையில் நான் ஏற்க முடியும்...'என்று சொன்ன பல்லவ இளவல் சிறிது நகைத்தான்.

''ஏன் நகைக்கிறீர்கள்?'' என்று கேட்டாள் தேவி.

''சரி சமானம் என்பது ஏது என்று நினைத்தேன்.''

''இல்லாமலென்ன?''

''அப்பொழுதும் உனக்கு நான் அடிமையாகத்தானே இருப் பேன்'' என்று கூறிய இளவரசன், ''அதுவரை பொறுத்திருப்பேன்'' என்று கூறிய இளவரசன், ''அதுவரை பொறுத்திரு தேவி'' என்று சொல்லிவிட்டுச் சரேலென்று திரும்பி அந்த அறையின் வாயிற்படியை நோக்கி நடந்தான்.

அறைவாயிற்படியைக் கடந்து ஏதோ உணர்ச்சிகள் உள்ளத்தில் ஊசலாட மீண்டும் தனது அறையை நோக்கிச் சென்ற பல்லவ இளவல் அங்கும் மற்றுமொரு போர் தயாராவதற்கு அறிகுறிகள் இருப்பதைக் கவனித்தான். அறையில் அவன் பஞ்சணையில் சாய்ந்து கிடந்தாள் மைவிழி. அவள் முகத்தில் வெறுப்பு மண்டிக் கிடந்தது. இதழ்களில் ஒரு போலிப் புன்னகை தெரிந்தது. அவனை ஏறெடுத்து நோக்கிய கண்களில் இகழ்ச்சி வழிந்து கொண்டிருந்தது. இவற்றை யெல்லாம் கவனித்தும் கவனிக்காதவன் போல் அறைக்குள் நுழைந்து அதன் மூலைக்குச் சென்ற பல்லவ இளவல் அங்கிருந்து தனது வாளை எடுத்து உறையிலிருந்து அதை ஒருமுறை உருவி மீண்டும் உறைக்குள் செலுத்தினான்.